# நவீன இராசதந்திரம்

# MODERN DIPLOMACY

III

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அனைத்துலகத் தொடர்பகம்

# நவீன இராசதந்திரம்

பாகம் -III

# MODERN DIPLOMACY

PART-III

அனைத்துலகத் தொடர்பகம்

# நுழைவாயில்



"நாம் பலமான நிலையில் உறுதியாக நின்று பேசுகிறோம். இராசதந்திர முன்னெடுப்புக்களின் வெற்றியை பலம் தீர்மானிக்கின்றது. பலத்திற்கு முன்னுரிமையும் வலுவான அந்தஸ்தும் உண்டு. களமுனையில் நாம் பெற்ற வெற்றிகள் எமது பலத்தை நிரூபிக்கின்றன. எமது கோரிக்கைகளின் நியாயப்பாடுகளை எமது பலம் வெளிப்படுத்துகின்றது."

-தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன் அவர்கள்-

# முகவுரை

நாம் முன்னர் வெளியிட்ட 'அனைத்துலக ஒழுங்கமைப்பும் வெளியுறவுக் கொள்கையும்' என்ற நூலின் மறுபதிப்பாக 'இராசதந்திரம் பாகம் – III' என்ற பெயரில் இந்த நூல் வெளிவருகின்றது. திருத்தப் பதிப்பான இதில் பல புதிய செய்திகள் இணைக்கப்பட்டுள்ளன. பழைய நூல்களின் புதிய பதிப்புக்கள் புத்தம் புதிய நூல்களாக அமைகின்றன என்ற கூற்றிற்கு உதாரணமாக இந்நூல் இடம்பெறுகின்றது.

வெளியுறவுக் கொள்கையின் பல்வேறு பரிமானங்களை எடுத்துக் கூறுவது இந்த நூலின் முக்கிய குறிக்கோளாகும். போர், மற்றும் அமைதி, அனைத்துலக மற்றும் பிராந்திய மேலாதிக்கம், செல்வப் பெருக்கம், வர்த்தகம் போன்றவற்றை முன்னெடுப்பதற்குப் பொருத்தமான வெளி யுறவுக் கொள்கையை நாடுகள் நடைமுறைப்படுத்துகின்றன. உள் நாட்டுத் தேவைகளுக்கு உகந்ததாக அமைவது வெளியுறவுக் கொள் கையின் இயல்பு.

இன்றைய உலகில் உள்நாட்டு, வெளிநாட்டு விவ்காரப் பாகுபாடு அர்த்தமற்றதாகின்றது. உள்நாட்டுப் போர் அனைத்துலக விவகாரமாக மாறிவிட்டது. உள்நாட்டுப் போரை அனைத்துலக விவகாரமாக்கிய பெருமை நாம் வாழும் இக்காலப்பகுதிக்கு உண்டு. ஆனால் எப்போ தும்போல் தேசிய நலனை முன்னெடுப்பதுதான் வெளியுறவுக் கொள்கை யின் பிரதான நோக்கமாக இருக்கின்றது.

போர் இருக்கும்வரை ஆயுத விற்பனை இருக்கும். ஆயுத விற்பனையால் கிடைக்கும் இலாபம் தேசிய வருமானத்தில் பெரும்பங்கு வகிக்கின்றது. ஆயுதம் தயாரிக்கும் நாடுகள் போரை ஊக்குவிக்கும் நிலையில் இருக்கின்றன. மேற்கு நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பில் ஆயுதத் தயாரிப்பும் விற்பனையும் மேலிடம் வகிக்கின்றன. தேசிய வலுவுக்கும் ஆயுத பலத்திற்கும் வேறுபாடு கிடையாது. இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க இயலாது.

எமது முன்னைய நூலுக்கு வழங்கிய முகப்புரையில் எமது தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின், "இன்றையை உலக ஒழுங்கை பலம்தான் நிர்ணயிக்கின்றது" என்ற கோட்பாட்டை மேற்கோள் காட்டியிருந்தோம். இது முக்காலத்திற்கும் பொருத்தமான பொய்யாமொழி என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

15 மார்ச் , 2003

அனைத்துலகத் தொடர்பகம்<br>
தமிழீழ விடுதலைப் புலிகள்<br>
தமிழீழம்.

# பொருளடக்கம்
# CONTENTS


வல்லாண்மைச் சமநிலை - BALANCE OF POWER -01

பல நாடுகளில் வாழும் ஒரே இனத்தவர் - DIASPORA -03

தொடர்பாடல் - COMMUNICATION -03

சமாந்திர அரசுகள் - PARALLEL GOVERNMENTS -04

இரு தலைவர்களும் ஒரு நாடும் - COHABITATION -05

பல எண்ணிக்கைச் சக்தி மையங்கள் - POLYCENTRISM -06

பொருளாதார அபிவிருத்தி - ECONOMIC DEVELOPMENT -07

வாழ்க்கைத் தரம் - STANDARD OF LIVING -08

வறுமை - POVERTY -09

பொருளாதாரத் தடைகள் - ECONOMIC SANCTIONS -10

வங்கிகள் - BANKS -13

பணச் சலவை - MONEY - LAUNDERING -15

இஸ்லாமிய வங்கிகள் - ISLAMIC BANKS -18


Scanned by CamScanner

வெளிவிவகார அலுவலகம் - FOREIGN OFFICE -20

வெளிவிவகார அமைச்சகக் கருமங்கள் விரிவடைகின்றன -
INCREASE IN FUNCTIONS FOREIGN POLICY -21

வெளிவிவகாரக் கொள்கை - FOREIGN OFFICE -22

ஐந்துவகை வெளிவிவகாரக் கொள்கைகள் - 5 FOREIGN POLICY TYPES -23

கொள்கை முன்னெடுப்புக்கள் - POLICY IN ACTION -25

தேசியவலுவும் தேசியநலனும் - POWER & NATIONAL INTEREST -27

மேற்கு நாடுகளின் வெளிவிவகாரக் கொள்கையில் இஸ்லாம் மதத்தினருக்கு எதிரான நிலைப்பாடு -
THE DEMONISING OF ISLAM -30

வெளிவிவகாரக் கொள்கையில் தேசியமரபு - TRADITION IN FOREIGN POLICY -31

வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்திற்கு உதவும் நபர்களும் நிறுவனங்களும் -
FOREIGN POLICY FORMULATION, THE INDIVIDUALS AND INSTITUTIONS -32

வெளிவிவகார இரகசியங்களை வெளியிடுதல் - DECLASSIFIED INFORMATION -37

வெளிவிவகாரக் கொள்கையும் வர்த்தகமும் - TRADE AND FOREIGN POLICY -41

ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டு வெளிவிவகாரக் கொள்கை -
JOINT FOREIGN POLICY OF THE EUROPEAN UNION -42

ஆயுத விற்பனையும் வெளிவிவகாரக் கொள்கையும் -
ARMS SALES AND FOREIGN POLICY -44

கொள்வனவு செய்பவரே இறுதிப் பாவனையாளர் என்பதை உறுதிசெய்யும் ஆவணம் -
END USER CERTIFICATE -48

இராணுவ-தொழிற்துறை-அரசயந்திர இணைப்பு -
THE MILITARY – MILITARY & INDUSTRIAL COMPLEX -49

கூலிப்படைகள் - MERCENARIES -50

Scanned by CamScanner

ஒருசில நபர்களால் தமது சொந்த நன்மைக்காக நடத்தப்படும் ஆட்சி - OLIGARCHY -54

தீர்மானம் எடுப்போர் - THE DECISION MAKERS -56

சுய மதிப்பீடு - SELF-ESTIMATE -59

சிந்தனையாளர்களின் ஆலோசனைக் குழுக்கள் - THINK TANKS -60

"நேஷன்" எனப்படும் தேசம் - THE NATION -67

குடிமக்கள்-குடியுரிமை - CITIZEN- CITIZENSHIP -71

வேற்று நாட்டவன் - ALIEN -73

இரட்டைக் குடியுரிமை - DUAL CITIZENSHIP -73

குடியுரிமையைக் கைவிடுதல் - EXPATRIATION -74

கடவுச் சீட்டு - PASSPORT -75

நுழைவு அனுமதி - VISA -76

Scanned by CamScanner

தடுத்து வைத்தல் - DETENTION -76
நெருக்கமாக அடைப்பதற்கு உதவும் கைதி முகாம்கள் - CONCENTRATION CAMPS -79
போர் நடவடிக்கையின்போது பொதுமக்கள் உயிரிழப்பு - COLLATERAL DAMAGE -80
கூட்டுத் தண்டனை - COLLECTIVE PUNISHMENT -81
இனத் துவேஷம் - RACIAL PREJUDICE -86
போர் - WAR -88
பிரகடனப்படுத்தப்படாத போர் - UNDECLARED WAR -90
போர் பிரகடனம் - DECLARATION OF WAR -91
உள்நாட்டுப் போர் - INTERNAL CONFLICTS -91
போரைத் தீவிரப்படுத்துதல் - ESCALATION -92
இராணுவச் சட்டம் - MARTIAL LAW -93
இராணுவப் பாவனையிலுள்ள பொருள்கள் மீதான தடை - CONTRABAND -94
கடற்படை முற்றுகை - NAVAL BLOCKADE -95
தலையீடு - INTERVENTION -96
போருக்குத் தயார்படுத்தல் - MOBILIZATION -97
ஊரடங்கு உத்தரவு - CURFEW -99

Scanned by CamScanner

இராசதந்திரம் - DIPLOMACY -100

இராசதந்திர சம்பிரதாயங்கள் - DIPLOMATIC GESTURES -102

உளவுச் சேவைகள் - THE SECRET SERVICE -105

சிறிலங்கா உளவுச் சேவை - SRI LANKA INTELLIGENCE SERVICE -110

இரகசிய நடவடிக்கை - COVERT ACTION -111

இறைபணி-கத்தோலிக்க மத அமைப்பிற்குள் ஒரு இரகசியப் பிரிவு - OPUS DEI (THE WORK OF GOD) -114

வத்திக்கான் நிர்வாக அமைப்பு - THE CURIA -116

விடுதலை இறையியல் - LIBERATION THEOLOGY -117

ஆயுதக் கிளர்ச்சி - INSURGENCY -120

இன்திபாடா எனப்படும் வெகுசனக் கிளர்ச்சி - INTIFADA -121

மக்கள் போர்முறையில் கெரில்லாப் போர் - PEOPLE'S WAR AND GUERILLAS -122

அரச பயங்கரவாதம் - STATE TERRORISM -123

இனக்கலப்பு- ASSIMILATION -125

இன அழிப்பு - GENOCIDE -128

அவுஸ்திரேலியப் பழங்குடியினரின் துயர் பற்றிய புதிய தகவல்கள் - NEW LIGHT ON THE SORROWS OF AUSTRALIA'S ABORIGINES -131

புவிசார் அரசியல் - GEOPOLITICS -136

புவிசார் அரசியல், இந்தியா, சீனா - GEOPOLITICS,INDIA,CHINA -138

சீனாவின் விரிவடையும் கடலாதிக்கம் - EXPANDING CHINESE NAVAL PRESENCE -142

திருகோணமலை - TRINCOMALEE -143

சிறிலங்கா-அமெரிக்கா கொள்வனவு மற்றும் பரஸ்பர சேவை ஒப்பந்தம் -
ACQUISITION AND CROSS-SERVICING AGREEMENT-ACSA -147

செலுத்தவேண்டிய கடன்தொகைக்குப் பதிலாக இயற்கை வளங்களை நிர்வகிக்கும் திட்டம் -
NATURAL RESOURCES IN LIEU OF LOAN REPAYMENT -148

மேலாதிக்கம் - HEGEMONY -149

பிரிந்து போதல் - SECESSION -150

சுயநிர்ணய உரிமை - THE RIGHT OF SELF DETERMINATION -151

பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் - MULTINATIONAL CORPORATIONS -153

அரச சார்பற்ற நிறுவனங்களை வகைப்படுத்தல் - NGO CLASSIFICATION -156

சமுதாய ஆராய்ச்சியும் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பும் -
SOCIAL RESEARCH &OPINION POLLS -158

ஆசியப் பெறுமானங்கள் - ASIAN VALUES -159

Scanned by CamScanner

# வல்லாண்மைச் சமநிலை
## BALANCE OF POWER

தமது பலத்தையும் பாதுகாப்பையும் உயர்த்துவதற்காக உலக நாடுகள் கைக்கொள்ளும் உபாயங்களில் பிறநாடுகளுடன் செய்யும் நட்புறவு ஒப்பந்தங்கள் மிக முக்கியமானவை. தேசிய பாதுகாப்பு நலனைக் குறியாகக் கொண்டு உலக நாடுகள் செய்யும் நட்புறவு ஒப்பந்தங்கள் மூலம் சமபலம் பேணப்படுகின்றது. நட்புறவு ஒப்பந்தங்கள் ALLIANCE என்று அழைக்கப்படுகின்றன. இந்தவகை பாதுகாப்பு ஒப்பந்தங்கள் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நாடுகளுக் கிடையில் உருவாகின்றன. இன்னுமொரு நாடு அல்லது நாடுகளின் வலுவுக்குச் சமனான அல்லது மேலான நிலையை அடைவதற்காக இவ்வகை ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன.

நட்புறவு ஒப்பந்தங்கள் மூலம் ஒன்றிணையும் நாடுகள் ALLIES என்று அழைக்கப்படுகின்றன. நண்பர்கள் என்பது இதன்பொருள். இந்தரக ஒப்பந்தங்கள் உருவாவதற்கு அதில் இணையும் நாடுகளுக்குப் பொதுவாக அமையும் தேசியநலன் கருவாக அமைகின்றது. பொது எதிரியான நாட்டிற்கு எதிராகப் பெரும்பாலான நட்புறவு ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. ஒரு தராசின் இரு பக்கமும் சமநிலையில் நிற்கும்போது சமபலக் காட்சி தென்படுகின்றது. ஒரு பக்கம் தாழ்ந்தும் மறுபக்கம் உயர்ந்தும் காணப்படும்போது சமபலப் பிறழ்ச்சி தோன்றுகின்றது. வல்லாண்மைச் சமநிலை இதற்கு ஒப்பானது.

ஒரு நாட்டின் நலனுக்குப் புறம்பான நடவடிக்கையைப் பிறிதோர் நாடு எடுக்கும்போது பாதிக்கப்பட்ட நாடு தனக்கு உதவும் நாட்டுடன் நல்லுறவு ஒப்பந்தம் செய்துகொள்ளும். இதனால் வரவிருந்த அபாயத்தை எதிர்கொள்ளும் பலம் கிடைக்கும். உலக வரலாற்றில் உறவுகள் நிரந்தரமானவை அல்ல. ஆனால் தேசிய நலன் மாறுவதில்லை. தமது தேசிய நலனுக்குப் பொருத்தமான ஒப்பந்தங்களை நாடுகள் செய்து கொண்டிருக்கின்றன. தமது பலத்தை உயர்த்து வதற்கு மிகவும் உகந்த உபாயமாக இவை கருதப்படுகின்றன.

19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியா வல்லாண்மைச் சமநிலைக் கோட்பாட்டை மிகவும் வெளிப்படையாகவும் தீவிரமாகவும் நடைமுறைப் படுத்தியது. தனது உலகமட்ட ஆதிக்கத்தை நிலைபெறச் செய்ய பிரித்தானியா நெப்போலியனுடன் போரிட்ட காலந்தொட்டு முதலாம் உலகப் போரின் காலம்வரை வல்லாண்மைச் சமநிலையை நிலைநிறுத்தியது. பலம் வாய்ந்த நாட்டிற்கு எதிராகப் பலம் குறைந்த நாட்டுடன் அணிசேர்ந்தபடி பிரித்தானியா தனது ஆதிக்க நலனைப் பேணியது. இதனால் பலம்கூடிய நாட்டின் பலம் மட்டுப்படுத்தப்பட்டது. பலம் குறைந்த நாடுகள் பிரித்தானியாவுடன் இணைந்தபின் தாமும் பலம்பெற்றதோடு பிரித்தானியாவின் பலத்தையும் உறுதிப்படுத்தின.



Scanned by CamScanner

சர்வதேச அரசியலின் அடித்தளமாக வல்லாண்மைச் சமநிலைக் கோட்பாடு காணப்படுகின்றது. இரு வல்லரசுப் போட்டி நிலவிய 20ஆம் நூற்றாண்டில் வல்லாண்மைச் சமநிலைக் கோட்பாட்டின் ஆதிக்கம் உணரப்பட்டது. இக்காலப்பகுதி அரசியலின் முழுஅளவு விளக்கமாக இக்கோட்பாட்டைக் கருதமுடியாது. கணிதச் சமன்பாடுபோல் இக்கோட்பாட்டின் செயற்பாடு துல்லியமானதல்ல, அதனுடைய பாதையைக் கணிப்பிடுவது எளிதல்ல. ஆனால் உலக நாடுகளின் உறவு அடிப்படையாக வல்லாண்மைச் சமநிலைக் கோட்பாட்டை மதிப்பிடுவதில் தவறில்லை.

பனிப்போர் நிலவிய காலப்பகுதியில் சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவும் வல்லாண்மைச் சமநிலையைப் பேணுவதில் பெரும் அக்கறை காட்டின. ஆயுதப் போட்டியும் இதில் ஒரு அம்சமாகும். இரு வல்லரசுகளும் நேரடி மோதலில் ஈடுபடுவதைத் தவிர்த்தன. அதே சமயம் உலகின் பால பாகங்களில் எதிரியின் நட்பு நாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் மட்டுப்படுத்தப்பட்ட போர்களைத் தூண்டுவதிலும் அதற்கான உதவிகளை வழங்குவதிலும் முனைப்பாக ஈடுபட்டன. வியற்நாம் போர், அப்கானிஸ்தான் போர் ஆகியவற்றில் இதை அவதானிக்க முடிகின்றது. ஆபிரிக்கக் கண்டத்தில் இன்றுவரை நடைபெறும் போர் நிழச்சிகள் மேற்கூறியவற்றின் தொடர்ச்சியாகும்.

20ஆம் நூற்றாண்டில் காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்ட தன்னாட்சி நாடுகள் வல்லாண்மைச் சமநிலை கோட்பாட்டின் வழிநடத்தலில் இயங்கின. தமது பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக இவை இரண்டிலொரு வல்லரசுடன் இணைந்துகொண்டன. அமைதிக்குரல் நன்றாக எடுபட்டாலும் பாதுகாப்பு ஒப்பந்தம் போன்றளவு பயன் தருவதில்லை. வல்லாண்மைச் சமநிலைக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தும் அல்லது கண்காணிக்கும் மைய நிறுவனம் உலகில் கிடையாது. தமது தேவைகளின் பொருட்டு நாடுகள் இணைகின்றன, பிரிந்து சென்று புதிய உறவுகளைத் தேடுகின்றன. நட்புறவு நெடுங்காலம் நிலவலாம் அல்லது குற்றுயிராய் மடியலாம்.

நட்புறவு ஒப்பந்தங்கள் ஒரு குறிப்பிட்ட தேவைக்கு மாத்திரமாகவோ அல்லது பல்தேவைக்காகவோ செய்யப்படலாம். பக்கம் மாறுதல் அசாதாரண நிகழ்வு அல்ல. பனிப்போர் முடிந்த இக்காலப்பகுதியில் வல்லாண்மைச் சமநிலைக் கோட்பாட்டின் தீவிரமான தாக்கம் ஓய்ந்துள்ளது. ஒற்றை வல்லரசுடன் இணைவதற்குப் பல நாடுகள் முண்டியடித்துக் கொண்டு நிற்கின்றன. உலகின் முன்னணி அமைதி காக்கும் அமைப்பான ஐநாவும் ஒற்றை வல்லரசின் பிடியில் சிக்கியுள்ளது. இந்த நிலையில் பிராந்திய மற்றும் அனைத்துலக சமபல ஒழுங்கு அவசியமாகப்படுகின்றது. வல்லாண்மைச் சமநிலைக் கோட்பாட்டின் தாக்கம் குறைந்த இக்காலகட்டத்தில் 'என்னோடு நிற்பவன் எனது நண்பன், நில்லாதவன் எனது எதிரி' என்ற குதர்க்கமான கோட்பாட்டை அமெரிக்கா முன்வைத்துள்ளது.



Scanned by CamScanner

# பல நாடுகளில் வாழும் ஒரே இனத்தவர்
## DIASPORA

நாடற்ற நிலையில் பல நாடுகளில் சிதறுண்டு வாழ்ந்த யூத இன மக்களைக் குறிக்கும் சொல்லாக 'டயஸ்போறா' முன்பு பயன்படுத்தப்பட்டது. அவர்களுக்கென்று தனிநாடு உருவாகியபின் யூத மக்களுடன் தொடர்புபடும் இச்சொல்லின் வழமை நின்றுவிட்டது. இன்று நாடு இல்லாத நிலையில் வேறு நாடுகளில் வாழ்வோரை டயஸ்போறா என்ற சொல்லுடன் இணைத்துக் குறிப்பிடுவார்கள். உதாரணத்திற்கு இன்று 'தமிழ் டயஸ் போறா' -THE TAMIL DIASPORA- என்ற சொற்பாவனை நடைமுறைக்கு வந்துள்ளது. ஏறத்தாழ 8 கோடி தமிழர்கள் 80 தொடக்கம் 110 வரையிலான நாடுகளில் காணப்படுகின்றனர். அனேகமானோர் தமிழ்மொழி பேசுவதில்லை என்பது வருத்தத்திற்குரியது. வசதிக்குறைவு, மொழிப்பற்றின்மை, பிறமொழிமோகம் என்பன இதற்குக் காரணங்களாகக் கூறப்படுகின்றது.

# தொடர்பாடல்
## COMMUNICATION

கொமியூனிக்கேஷன் என்ற ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழியின் கொமியூனிஸ் (COMMUNIS) என்பதிலிருந்து பிறந்தது. கொமியூனிஸ் என்ற சொல்லின் தமிழ் அர்த்தம் 'பொதுவான' என்பதாகும். எமது கருத்தைப் பிறருடன் பகிரும்போது அது இரு பகுதிக்கும் பொதுவானதாக மாறுகின்றது. தொடர் பாடலின் இலக்கு இதுதான். மனிதர்களும், நாடுகளும், அமைப்புக்களும் நாளாந் திரம் தொடர்பாடலில் ஈடுபடுகின்றன. மனிதனின் தொன்மை தொடர்பாடலுக்கு உண்டு என்பார்கள் - COMMUNICATION IS AS OLD AS MAN.

**தொடர்பாடலுக்கு மூன்று குறிக்கோள்கள் உண்டு:**

1. தனி மனிதர்கள், நாடுகள், நாடு அல்லாத அமைப்புக்கள், நிறுவனங்கள் என்பன வற்றிற்கிடையில் தொடர்பை ஏற்படுத்தல்.
2. தொடர்பாடல் தகவல் பரிமாற்றத்தின் கருவி. தகவல் ஒரு பக்கமாக (ONE WAY) இருக்கும்போது அதைப் பெறுபவர் பயனடைகிறார். இரு பக்கமாக (TWO WAY) இருக்கும்போது தகவல் பரிமாற்றம் நடைபெறுகின்றது.
3. தகவலைப் பெறுபவர் அனுப்புவோரின் நோக்கத்தை முற்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இதற்காக அனுப்பும் தகவல் துல்லியமாகவும் அர்த்த வேறுபாடு களுக்கு இடமளிக்காமலும் இருத்தல் வேண்டும்.

**தொடர்பாடல் செய்முறைகள் எதிர்நோக்கும் மூன்று பிரச்சனைகள்:**

1. தகவலை அனுப்பும் மற்றும் பெற்றுக்கொள்ளும் தொழில்நுட்பப் பிரச்சனை.
2. அனுப்பப்படும் தகவல் அனுப்புவரின் கருத்தை சரிவர வெளிப்படுத்தவேண்டும்.
3. அனுப்புவரின் எதிர்பார்ப்புக்கு அமைவாக தகவலைப் பெறுபவரின் நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும். இதை உறுதிப்படுத்தும் விதத்தில் தகவல் வழங்கப்படவேண்டும்.

இராசதந்திர உலகில் தொடர்பாடல் முதலிடம் வகிக்கின்றது. தொடர்பாடல் சம்பந்தமான பிரச்சனைகள் தோன்றும்போது முரண்பாடுகளும், புரிந்துணர்வுக் குறைபாடுகளும் தோன்றுகின்றன.



Scanned by CamScanner

# சமாந்திர அரசுகள்
## PARALLEL GOVERNMENTS

ஒரே ஆள்புலத்தில் இருவகை அரச நிர்வாகம் இருப்பதை சமாந்திர அரசுகள் என்று சொற்களால் குறிப்பிடுகிறார்கள். மிகவும் விரிவான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி அரசுக்கு நிகரான திறமையுடன் புலிகள் செயற்படுகின்றனர். சட்டம், ஒழுங்கை பேணுவதற்குப் பொருத்தமான நீதி நிர்வாகக் கட்டமைப்பையும், குற்றத்தடுப்புக்கான காவல்துறை நடவடிக்கை களையும் மேற்கொள்கின்றனர். இதற்குரிய செலவை ஈடுசெய்வ தற்காக வரிவிதிப்பும் நடைமுறையில் உள்ளது. சாமந்திர அரசின் நோக்கம் தனி அரசாக காலப்போக்கில் உருவாவதாகும். சமாந்திர அரசைப் போட்டி அரசு என்று கூறுவது தவறான கருத்தை உருவாக்கும். சமாந்திர அரசுக்குத் தேவை இருக்கும்போது அது உருவாகின்றது. வெறுமையை இட்டு நிரப்புவது அதனுடைய ஆரம்ப நோக்கம்.

சமாந்திர அரசுக்கான முன்னுதாரணங்கள் பலவுள. கொசோவா இனமக்களை இரும்புக் கரம் கொண்டு சேர்பியர்கள் நசுக்கியபோது அவர்களைப் பிரதிநிதிப்படுத்திய கொசோவோ விடுதலை இயக்கம் சமூக சேவைகள், சுகாதாரம், கல்வி போன்ற பணிகளை முன்னெடுப்பதற்காக சமாந்திர அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது மிகவும் இரகசியமாக நடத்தப்பட்டது. புலிகளின் சமாந்திர அரசு மிகவும் வெளிப்படையானது, ஒளிவுமறைவு அற்றது. இன்னுமொருவிதத்தில் கொசோவோ நிலவரம் வித்தியாசமானது : சீரான ஆட்சி அலகுகளை அவர்களால் உருவாக்க முடியவில்லை.

எரித்திரியாவின் நீண்டகால விடுதலைப்போர் ஒரு சமாந்திர அரசை உருவாக்கவேண்டிய கட்டாயத் தேவையை போரை முன்னெடுத்தவர்களுக்கு உணர்த்தியது. எரித்திரியா விடுதலை பெற்றபின் ஏற்கனவே உருவாக்கப்பட்ட சமாந்திர அரசு தனி அரசாக இடம்பெற்றது. இந்தியாவின் வட-கிழக்கு மாநிலமான மணிப்பூரில் இன்று சமாந்திர அரசு நடைமுறை காணப்படுகின்றது. ஒன்றிணைந்த தேசிய விடுதலை முன்னணி -UNITED NATIONAL LIBERATION FRONT- ஒரு அரசையும் புதுடில்லி இன்னுமோர் அரசையும் நடத்துகின்றன. வர்த்தக நிலையங்களும் மாதாந்திர ஊதியம் பெறுவோரும் தங்கள் வருவாயில் 5-10 வீதத்தை முன்னணிக்கு வரியாகச் செலுத்துகின்றனர்.

மக்கள் நீதிமன்றங்களை -PEOPLE'S COURT முன்னணி நிறுவியுள்ளது. காணி நிலம் சம்பந்தமான பிணக்குகள் இங்கு தீர்த்து வைக்கப்படுகின்றன. பகலில் இந்திய இராணுவம் இரவில் தேசிய விடுதலை முன்னணி என்ற ஆட்சிப் பங்கீடு நிலவுகின்றது. இது தன்னாட்சிப் பாதையின் படிக்கட்டுகளாக அடையாளம் காணப்படுகின்றன.



Scanned by CamScanner

# இரு தலைவர்களும் ஒரு நாடும்
## COHABITATION

'கோஹபிற்ரேசன்' என்ற சொல்லிற்கு விசேட அர்த்தம் உண்டு. வழமையாக இச்சொல் ஆண் - பெண் இணைந்து குடும்பம் நடத்துவதைக் குறிக்கும். அரசியல் விஞ்ஞானத்தில் அர்த்தம் வேறு. 1986 - 1998 காலப்பகுதியில் சோசாலிசக் கட்சியினரான பிரெஞ்சு ஜனாதிபதி பொன்சுவா மித்தறங்-FRANCOIS MITTERAND-,மைய வலதுசாரிக் கட்சியினரான பிரதமர் ஷக்ஸ் சிறாக்-JACQUES CHIRAC- ஆகியோர் கூட்டாக ஆட்சி செய்யவேண்டிய நிலை தோன்றியது. பிரான்சின் அரசியல் சாசனத்திலுள்ள ஒழுங்கின் காரணமாக இந்நிலை ஏற்பட்டது. சமரசத்திற்கு வந்தபின் இவர்கள் நடத்திய ஆட்சி கோஹபிற்ரேசன் என்று குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலை பிரான்சிற்கு மாத்திரம் தனித்துவமானதல்ல. அலங்காரப் பொம்மையாக இல்லாமல் நிஜ ஆட்சி அதிகாரங்கள் பொருந்திய ஜனாதிபதியும், அதேயளவு அதிகாரங்கள் இல்லாத குறைந்த அரசியல் வலுவுள்ள பிரதமரும் வித்தியாசமான காலப்பகுதிகளில் மக்களால் தெரிவு செய்யப்படும்போது பிரான்சின் 1986 - 1988 நிலை தோன்ற வாய்ப்புண்டு. அமெரிக்காவில் இந்த நிலை காணப்படுகின்றது. ஜனாதிபதி குடியரசுக் கட்சியினராகவும் காங்கிரஸ் பெரும்பான்மையினர் ஜனநாயகக் கட்சியினராகவும் பன்முறை தெரிவாகியுள்ளனர். மறுவளமாகவும், அதாவது அதிபர் ஜனநாயகக் கட்சியினராகவும் காங்கிரஸ் பெரும்பான்மையினர் குடியரசுக் கட்சியினராகவும் அமைவதுண்டு.

மோதல் நிலையைத் தவிர்க்கும் நடைமுறைகள் மரபுரீதியாக பிரான்சிலும் அமெரிக்காவிலும் உருவாக்கப்பட்டுள்ளன. பிரான்சின் அரசியல் சாசனத்தைப் போன்ற அரசியல் சாசனமுள்ள சிறிலங்காவில் சமரசத்திலும் பார்க்க சண்டைதான் மேலோங்கி நிற்கின்றது.



Scanned by CamScanner

# பல் எண்ணிக்கைச் சக்தி மையங்கள்

## POLYCENTRISM

இரண்டிற்கு மேற்பட்ட ஆதிக்க நாடுகள் சமகாலத்தில் இடம்பெறும்போது பல் எண்ணிக்கைச் சக்தி மையங்கள் உலகில் காணப்படும். 19ஆம் நூற்றாண்டில் இந்தநிலை காணப்பட்டது. உலக நாடுகள் இறுக்கமான இரு முகாம்களாக அமையும்போது இருதுருவ நிலைப்பாடு காணப்படும். இந்த நிலை BIPOLARITY எனப்படும், அதாவது இருதுருவ நிலைப்பாடு என்று பொருள். இது 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி தொட்டு அதே நூற்றாண்டின் இறுதிப்பகுதி வரை நிலவியது. பெரும்பாலும் சித்தாந்த அடிப்படையில் இந்த இருதுருவப் பிளவு தோன்றியது. அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் ஆகிய நாடுகள் இரு துருவங்களுக்கும் தலைமை தாங்கின. சோவியத் ஒன்றிய உடைவும் வீழ்ச்சியும் ஏற்பட்டு ஒற்றைத் துருவம் தோன்றியது. ஒற்றைத் துருவ நிலைப்பாடு UNIPOLARITY எனப்படும். இன்றைய உலக ஒழுங்கை UNIPOLAR WORLD என்பார்கள்.

பல எண்ணிக்கைச் சக்தி மையங்கள் நிலவும் உலக நாடுகள் தமது விருப்பிற்கேற்ப, அதாவது தமது தேசியநலன் நோக்கில் பிற நாடுகளுடன் இணையும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இருதுருவ உலகில் இரண்டில் ஒருவருடன் மாத்திரம் இணையமுடியும். அல்லது அணிசேரா நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெறமுடியும். பல எண்ணிக்கைச் சக்தி மையங்கள், இன்றைய தனியொரு சக்திமைய உலகில் தோன்றும் வாய்ப்பு உண்டு. இதற்குச் சிறிது காலம் பிடிக்கும். பல எண்ணிக்கைச் சக்தி மையங்கள் தோன்றத்தான் போகின்றன என்று அரசியல் விஞ்ஞானிகள் அடித்துக் கூறுகின்றனர். ஒற்றைத் துருவ அமைப்பை உலகம் பொறுத்துக்கொள்ள மாட்டாது என்பது அவர்கள் வாதம். ஐரோப்பிய ஒன்றியம், சீனா, இந்தியா, ருஷ்யா என்று பலவற்றை அவர்கள் எதிர்காலச் சக்தி மையங்களாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

**இதற்கான விளக்கமாகப் பின்வருவன முன்வைக்கப்படுகின்றன.**

1. பல நாடுகளின் கூட்டமைப்பு சமத்துவ அடிப்படையில் தோன்றுவது வரலாற்று நியதியாகக் கருதப்படுகின்றது. ஒற்றை நாட்டின் ஆதிக்கம் செயற்கையானது. நீடிக்க வாய்ப்பில்லை தேசிய எழுச்சியைப் புறந்தள்ள ஒற்றை வல்லரசால் இயலாது.

2. மக்கள் தொகை, தொழில்நுட்ப வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம், விஞ்ஞான அடிப்படையிலான கல்வி என்பனற்றுடன் போருக்குச் சமமான வர்த்தகப் போட்டியும் இணைந்து சக்தி மையங்களின் பரவலைத் தூண்டும். பொருளாதார பலம் சக்தி மையத்தின் முக்கிய அளவீடாக அமைவது நிட்சயம்.



Scanned by CamScanner

பல எண்ணிக்கைச் சக்தி மையக் கோட்பாட்டின் அடிப்படை என்ன ? புற அழுத்தங்களை உதாசீனம் செய்தபடி, தனிநாடுகள் தமது நாட்டு நலனுக்குப் பொருத்தமான தீர்மானங்களை எடுக்கும்போது பல சக்திமையங்கள் பல்கிப் பெருகுகின்றன. புதிய சக்தி மையங்களாக அமையும் நாடுகள் தமது நலனே குறியாக இயங்கும்போது உலக அமைதிக்குப் பங்கம் ஏற்படலாம் என்று வாதிடப்படுகின்றது. குழப்பம் நிறைந்த உலகம் பிறக்கலாம் என்றும் கூறுகிறார்கள். பலமான ஐநா அமைப்பு பரிகாரமாக அமையக்கூடும்.

# பொருளாதார அபிவிருத்தி
## ECONOMIC DEVELOPMENT

பொருளாதார அபிவிருத்தி ஒரு முக்கிய உலக கரிசனையாக இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த காலப்பகுதியில் தோன்றியது. ஐரோப்பிய நாடுகளின் பிடியிலிருந்து விடுபட்ட முன்னாள் காலனித்துவ நாடுகள் மேம்பாடு அடையாத நாடுகள் என்று தரப்படுத்தப்பட்டன. பொருளாதார மேம்பாடடைந்த நாடுகளாகக் காலப்போக்கில் பின்வரும் நாடுகள் பட்டியலிடப்பட்டன :- அமெரிக்கா, கனடா, மேற்கு ஐரோப்பிய நாடுகள், சோவியத் ஒன்றியம், தென் ஆபிரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து.

ஏழை நாட்டு மக்கள் வாழ்க்கைத் தரம் அவர்களுடைய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நிகராக உயர்ந்தபோது அந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டன. கடைநிலையில் பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகள் காணப்படுகின்றன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை அளவீடு செய்வதற்கு திருப்திகரமான, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய 'அளவுகோல்' இதுவரையில் உருவாக்கப்படவில்லை. நிபுணர்கள் மத்தியில் இதுபற்றிய கருத்து மோதல்கள் நடைபெறுகின்றன.

தனிமனிதர் வருமான விகிதத்தின் அடிப்படையில் -PER CAPITA INCOME பெரும்பாலும் வளர்ச்சி அளவிடப்படுகின்றது. தனிமனிதர் வருமான உயர்வு சம்பந்தப்பட்ட நாட்டின் பொருளாதார வளர்ச்சியைச் சுட்டுவதாகக் கணிப்பிடப்படுகின்றது. பொருளாதார கட்டுமானங்களும், கோட்பாடுகளும் 21ஆம் நூற்றாண்டில் பாரிய மாற்றம் அடையும் என்பதில் ஐயமில்லை. தொழில்நுட்ப முன்னேற்றம் பொருளாதார வரம்புகளையும் வகைப்படுத்தல்களையும் தகர்க்க நிட்சயம் உதவும். உலகின் பொருளாதார மையம் அத்திலாந்திக் மாகடலோரத்தில் இருந்து பசுபிக் மாகடலோரத்திற்கு இடம்பெயரும். இப்போதே இது ஆரம்பித்துவிட்டது.

மிகவும் முற்போக்கான தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய தொழிற்சாலைகள், குறைந்த ஊதியத்திற்குப் பணியாற்றும் தொழிலாளர்கள் நிறைந்த தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா, இலத்தீன் அமெரிக்கா, தென் ஆபிரிக்கா ஆகியவற்றில் நிறுவப்படும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின்



Scanned by CamScanner

செயற்பாடுகள், நினைத்த மாத்திரத்தில் அதிவேகமாக பணத்தை இடம்மாற்றும் வசதிகள் என்பன வழமையான நிலைப்பாடுகளை மாற்றுகின்றன. பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் மாபெரும் அரசியல் மற்றும் இராசதந்திரச் சக்தியாக மாறுவதையும் தவிர்க்கமுடியாது,

## வாழ்க்கைத் தரம்
## STANDARD OF LIVING

ஒரு நாட்டின் அல்லது மக்கள் குழுவின் உறுப்பினர்களான தனிமனிதர்கள் பயன்படுத்தும் நுகர்ச்சிப் பொருள்கள் மற்றும் சேவைகளின் சராசரி அளவு வாழ்க்கைத் தரமாக கணிப்பிடப்படுகின்றது. சராசரி நுகர்ச்சி அளவு வேறு, எட்டப்படவேண்டிய நுகர்ச்சி மட்டம் வேறு. ஒன்று நடப்பில் இருப்பதையும் அடுத்தது இலக்கையும் குறிக்கும். அரசியல் மற்றும் பொருளாதார விஞ்ஞானத்தில் எட்டப்படவேண்டிய இலக்கைத்தான் வாழ்க்கைத்தர அளவீடாக மதிப்பிடுகிறார்கள். இவ்வகை அளவீடு நாட்டிற்கு நாடு வித்தியாசப்படுகின்றது.

ஒரு தனிமனிதரோ குடும்பமோ பயன்படுத்தும் நுகர்ச்சிப் பொருள்களோடு சுகாதார சேவைகள், கல்வி, பொழுதுபோக்கு வசதிகள் என்பனவும் வாழ்க்கைத்தர மதிப்பீட்டில் உள்ளடங்குகின்றன. ஒரு திருப்திகரமான வாழ்க்கைத் தரம் எவ்வாறு அமையவேண்டும் என்பதுபற்றி நிபுணர்கள் மத்தியில் ஒருமுகப்பாடு அரிது. இத்துறைசார் சமூக விஞ்ஞானிகள் வாழ்க்கைத்தர வரைவுகள், தரவுகள் என்பனவற்றை வெளியிட்டுள்ளனர். உழைப்பு, உணவு, உறைவிடம், ஊதியம் இவைக்கேற்ற நுகர்ச்சிப் பொருள்களும் சேவைகளும் என்ற அடிப்படையில் அவை அமைகின்றன. எல்லா நாடுகளிலும் இவை ஒரே சீராக அமைவதில்லை.

ஒரு நாட்டின் மக்களுக்கிடையில் வாழ்க்கைத்தர வித்தியாசங்கள் பாரியளவில் நிகழும்போது அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகள் தோன்றுகின்றன. அதேபோல் நாடுகளுக்கிடையில் வாழ்க்கைத்தர ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும்போது தாழ்ந்த நாடுகளில் வாழ்வோர் மேம்பட்ட நாடுகளை நோக்கி இடம் பெயருகின்றனர். இது சர்வதேச அரசியலில் அமைதியின்மையைத் தோற்று வித்துள்ளது. உள்வருவோரைத் தடுக்கும் விசேட சட்டங்களும், தடுப்பு நடை முறைகளும் உருவாக்கப்படுவதற்கு இது காரணமாக அமைகின்றது. கடந்த ஐம்பது வருடகாலத்தில் நாடுவிட்டு நாடு தாவும்போக்கு அதிகரித்துள்ளது. இதற்கு போக்குவரத்து, தொடர்புசாதன வளர்ச்சி துணைபுரிகின்றது.

மேம்பாடு அடையாத நாட்டு மக்கள் மேம்பாடு அடைந்த நாடுகளை நோக்கிப் படையெடுப்பதைத் தடுப்பதற்கு இராசதந்திர மட்டத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. மேம்பாடு அடைந்த நாடுகளின் இராசதந்திரிகள் இதில் கவனமெடுக்கின்றனர். நாட்டில் அமைதிச் சூழல்



Scanned by CamScanner

ஏற்பட்டால் வாழ்க்கைத் தரம் உயரும். வாழ்க்கைத் தரம் உயர்ந்தால் இடம்பெயர்வு கணிசமானளவு குறையும். ஆகையால் மேற்கு நாட்டு இராசதந்திரிகள் மேம்பாடு அடையாத நாடுகளில் நடக்கும் உள்நாட்டு போர் போன்ற நிகழ்ச்சிகளை முடிவுக்குக் கொண்டுவர முயலகின்றனர்.

மேம்பாடு அடைந்த நாடுகள் மேம்பாடு அடையாத நாடுகளுக்கு வழங்கும் நிதி உதவிகள் இடம்பெயர்வைத் தடுக்கும் நோக்கு உடையவையாகவும் காணப்படுகின்றன. வளர்ச்சிப் பணிகளில் உதவிப் பணம் ஈடுபடுத்தப்பட்டால் வாழ்க்கைத் தரம் உயரும் என்று நிதியுதவி வழங்கும் நாடுகள் எதிர்பார்க்கின்றன. வாழ்க்கைத்தர ஏற்றத்தாழ்வுகள் உலக அரசியலிலும் அதன் அங்கமான இராசதந்திரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

## வறுமை
## POVERTY

வறுமை ஒரு உலகளாவிய பிரச்சனை இது பொருளாதார வளர்ச்சியில் பெரும் முன்னேற்றம் அடைந்த நாடுகளிலும், முன்னேற்றம் அடையாத நாடுகளிலும் காணப்படுகின்றது. வறுமை, மக்கள்தொகை அதிகரிப்பு, சூழல் மாசுபடுதல் என்பன 21ஆம் நூற்றாண்டின் மூன்று தலையாய பிரச்சனைகள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. வறுமை ஒழிப்பு தனியொரு நாட்டின் எல்லைகளுக்குட்பட்ட விடயமல்ல, அது சர்வதேச விவகாரமாகிவிட்டது.

உலகமயமாக்கலின் அடிப்படையான உலக நாடுகள் யாவற்றையும் உள்ளடக்கிய சந்தைப் பொருளாதாரம், ஒரு பக்கத்தில் செல்வப் பெருக்கத்தையும் மறுபக்கத்தில் கொடிய வறுமையையும் ஏற்படுத்தியுள்ளது. செல்வந்தர்கள் பெருஞ் செல்வந்தர்களாகவும் ஏழைகள் பரம ஏழைகளாகவும் மாறுகின்றனர். உலக மயமாக்கல் மூலம் இலாபம் ஈட்டுவோர் ஏழைகளின் வறுமையைப் போக்கவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். குறைந்த ஊதியத்திற்கு பணியாற்றுவதற்கு மூன்றாம் உலகின் ஏழைத் தொழிலாளர்கள் தயாராக உள்ளனர். இவர்களைப் பயன்படுத்தும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் தாம் ஈட்டும் இலாபத்தில் ஒரு பங்கை வறுமை ஒழிப்பிற்கு ஒதுக்கவேண்டுமென சமூக விஞ்ஞானிகள் அறைகூவல் விடுக்கின்றனர்.

வறுமையை அடையாளம் காண உதவும் வரைவிலக்கணம் கிடையாது. ஒப்பீட்டில் மாத்திரமே அதைச் சுட்டமுடியும். நாட்டிற்கு நாடு வறுமையின் தன்மை வித்தியாசப்படும். சோற்றுக்கு உப்பில்லை என்று அழுவோர் ஒருபுறம், தின்னச் சோறே இல்லை என்று அழுவோர் மறுபுறம். வறுமை பற்றிய கணிப்பீடுகளுக்கு உதவும் வகையில் வறுமைக் கோடு POVERTY LINE என்ற எல்லைக்கோடு வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி நாளொன்றுக்கு ஒரு டொலரிலும் குறைந்த வருமானம் பெறுவோர் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்பவர்களாகக் கருதப்படுகின்றனர்.



Scanned by CamScanner

ஒவ்வொரு வருடமும் ஏப்பிறில் மாதத்தில் பூமிநாள் EARTH DAY கொண்டாடப்படுகின்றது. ஏப்பறில் 22,1970இல் முதலாவது பூமி நாள் உலக மட்ட ஆரசியல் மற்றும் இராசதந்திரத் தலைவர்களின் பிரசன்னத்துடன் நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து ஐநா ஆதரவில் மனிதச்சூழல் மாநாடு UN CONFERENCE ON THE HUMAN ENVIRONMENT சுவீடன் நாட்டின் தலைநகரில் நடத்தப்பட்டது. இதில் பேசிய இந்திராகாந்தி "வறுமைதான் சூழலை மாசுபடுத்தும் மிகப்பெரிய காரணி" என்று மிகவும் புரட்சிகரமான கருத்தை முன்வைத்தார்.

POVERTY IS THE GREATEST POLLUTER என்று இந்தியப் பிரதமர் கூறிய கருத்து வறுமை பற்றிய உலகளாவிய கருத்தாக்கங்களை மாற்றியமைத்தது. சூழலுக்கு ஏற்படும் அழிவுக்கு வறியமக்கள் பெரும் பொறுப்பேற்கின்றனர் என்றார் இந்திரா. தமது விறகுத் தேவைக்கும், விற்றுப் பணமாக்குவதற்கும் வறிய மக்கள் காடுகளை அழிக்கின்றனர் என்று கூறிய அவர் வறுமை தனியொரு நாட்டிற்குச் சொந்தமான விவகாரமல்ல என்று சுட்டிக்காட்டினார். வறுமை முழு உலகிற்கும் விடப்பட்ட சவால் என்றார் இந்திரா. வறுமையைப் பிரித்துப் பார்க்கமுடியாது. ஏழையும் பணக்காரனும், சூழலும் உலகப் பொருளாதாரமும் இணைந்து காணப்படுகின்றன, உணவு நெருக்கடி ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பரவலாகக் காணப்படுகின்றது. பொறுப்புணர்வுள்ள அரசுகள் இப்பகுதி நாடுகளில் இருக்குமாயின் வறுமையைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர இயலும் என்று அவர் இந்த மாநாட்டில் வலியுறுத்தினார்.

## பொருளாதாரத் தடைகள்
## ECONOMIC SANCTIONS

பொருளாதாரத் தடைகள் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்கள் ஆனால் இவை இராணுவ ஆயுதங்கள் அல்ல. ஐநாவின் சாசனம் தனது 41ஆம் இலக்கச் சரத்தின்படி பொருளாதாரத் தடைகள் "இராணுவம் அல்லாத, எதிர் விளைவுடைய, பலதரப்பினரைக் கொண்ட, ஒன்றிணைந்த, எல்லாவற்றையும் உள்ளடக்கிய தடைகளாகும்" என்று கூறுகின்றது. (NON-MILITARY, NEGATIVE, MULTILATERAL, COLLECTIVE AND UNIVERSAL RESTRICTIONS) ஐநா சாசனத்தின் தொடக்கவுரையில் (PREAMBLE) கூறப்பட்ட உன்னத நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பொருளாதாரத் தடைகள் உதவுவதாகக் கருதப்படுகின்றது.

"அடிப்படை மனித உரிமைகள், ஆண் பெண் சமுத்துவம், சிறிய பெரிய நாடுகள் சமத்துவம், நல்ல அயலவர்களாக ஒன்றிணைந்த அமைதியான வாழ்வு, பொதுநலனுக்கு அல்லாத ஆயுத பலப்பிரயோகம் சம்பந்தமான கட்டுப்பாடு, எல்லா மக்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு சர்வதேச மட்டத்தில் ஊக்குவிப்பு ஆகியவற்றில் நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக" பொருளாதார தடைகள் விதிக்கப்படுவதாக சாசனம் கூறுகின்றது.



Scanned by CamScanner

பொதுநலனுக்கு மாறாக நடப்பவற்றை பொருளாதாரத் தடைகள் சரிசெய்யும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. உலக அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது. மனித உரிமைகள் மறுக்கப்படும்போது. இயற்கைச் சூழலுக்குப் பங்கம் விளையும்போது, பொருளாதாரத் தடைகள் சிறந்த நிவாரணமாக அமயுமென்று எடுத்துக்கூறுகின்றனர்.

லிபியா நாட்டுடனான விமானப் போக்குவரத்து, அதற்கு ஆயுத விற்பனை, எண்ணை தோண்டும் தொழில்நுட்பக் கருவிகள் விற்பனை என்பனவற்றை ஐநா தடைசெய்தது. 1998 இல் அமெரிக்காவுக்குச் சொந்தமான பான்-ஆம் (PAN-AM) பயணிகள் விமானம் 270 பயணிகளுடன் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இரு லிபியர்கள் சந்தேகிக்கப்பட்டனர். இவர்களை நீதி விசாரணைக்கு ஒப்படைக்கும்படி நிர்ப்பந்திப்பதற்காக மேற்கூறிய தடைகள் கொண்டுவரப்பட்டன. அதன்பின் லிபியத் தலைவர் முவாமர் கடாபி இருவரையும் ஒப்படைத்தார்.

"நாம் விரும்பிய முடிவை இராசதந்திரமும் தடைகளும் உண்டாக்கியுள்ளன" என்று அமெரிக்க அதிபர் கிளின்ரன் அப்போது கூறினார். (DIPLOMACY AND SANCTIONS HAVE PRODUCED THE RESULT WE WANTED). ஆகஸ்து 1995இல் டெய்ரோன் ஒப்பந்தத்தை (DAYTON AGREEMENT) சேர்பியர்கள் ஏற்கச் செய்வதில் பொருளாதாரத் தடைகள் பெரும்பங்கு வகித்தன.

கேந்திர மற்றும் அனைத்துலகக் கல்வி மையத்தின் கூற்றுப்படி (THE CENTRE FOR STRATEGIC AND INTERNATIONAL STUDIES) ருஷ்யா ஜூலை 1993இல் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யவிருந்த 'கிரியோஜெனிக் றொக்கெற்' (CRYOGENIC ROCKET ENGINES) எந்திரங்களை தடுத்து நிறுத்த பொருளாதாரத் தடைமிரட்டல் உதவியது.

எல்லா வகையான பொருளாதார உறவுகள் மீதான முற்றுமுழுதான தடை தென் ஆபிரிக்காவின் வெள்ளை நிறவெறி ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர உதவியது. சில குறிப்பிட்ட இலக்குகள் மீதான தடைகளால் சீனாவின் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுத ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன. ஈராக், சூடான் போன்ற நாடுகள் மீதான பொருளாதாரத் தடைகளை ஐநா மிகவும் இறுக்கமாக அமுல்படுத்துகின்றது. ஈராக் மீது விதிக்கப்பட்டுள்ள மருந்துகள், குழந்தைகள் உணவு போன்றவற்றின் தடைகளால் பெருமளவு உயிரிழப்புக்கள் நடந்தவண்ணம் உள்ளன.

அமெரிக்காவும் பிரித்தானியாவும் கூட்டாக சர்வதேச சமூகத்தின் பெயரில் நடத்தும் ஈராக்கிற்கு எதிரான பொருளாதாரத் தடைகள் கேள்விக்குரியதாக இடம்பெறுகின்றன. இரு நாடுகளின் வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதியாக ஐநா பாதுகாப்பு சபை முன்னெடுக்கும் இப்பொருளாதாரத் தடை அமைகின்றது. அது அரசியல் மற்றும் இராசதந்திர முன்னெடுப்பின் ஒரு அங்கமாகப்



Scanned by CamScanner

பார்க்கப்படுவதற்கு ஆதாரம் அளிக்கின்றது. நேர்மையான இதய சுத்தியுடன் பொருளாதாரத் தடைகளை பாதுகாப்புசபை விதிக்கவில்லை என்று கூறுவதில் அர்த்தமுண்டு.

ஜூன் 1998இல் இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தியதைத் தொடர்ந்து அமெரிக்காவும் அதனுடைய நட்பு நாடுகளும் இவ்விரு நாடுகளுக்கும் எதிராகப் பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவரப்போவதாகக் கூறின. இதைப் பிரித்தானியா கடுமையாக ஆட்சேபித்தது. பொதுமக்கள்மீது பெரும் சுமைகளை ஏற்றுவதற்கு பொருளாதாரத் தடைகள் காரணமாகும் என்று பிரித்தானியாவின் வெளிநாடுகள் மேம்பாட்டு அமைச்சர் கிளேயர் ஷோட் (CLARE SHORT, MINISTER FOR OVERSEAS DEVELOPMENT) பிரகடனம் செய்தார்.

இதே அமைச்சர் ஈராக் மக்களுக்குப் பரிவுகாட்ட மறுத்து வருகின்றார். பிரித்தானியாவின் வெளியுறவுக் கொள்கை தார்மீக அடிப்படையிலானது என்று கூறுவதற்கு மாத்திரம் இவர் தவறுவதில்லை. ஈராக்கின் வான்பரப்பின் ஒரு பகுதிமீது ஈராக்கின் வான்கலங்கள் பறப்பதற்கு அமெரிக்காவும் பிரித்தானியாவும் தடை விதித்துள்ளன. பறப்புக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள பகுதியை NO-FLY ZONE என்று இரு நாடுகளும் அழைக்கின்றன. இதை அமுலாக்குவதற்காக இரு நாட்டுப் போர் விமானங்களும் குண்டுவீச்சு நடத்துகின்றன.

பறப்பைத் தடைசெய்யும் அனுமதியை ஐநா பாதுகாப்புச்சபை வழங்கவில்லை. சட்டத்திற்குப் புறம்பான விதத்தில் இவ்விரு நாடுகளும் பறப்புத் தடையை அமுலாக்குகின்றன. இப்படிப் பல நிகழ்ச்சிகள் உலகமட்ட அரசியலிலும் இராசதந்திரத்திலும் நடைபெறுகின்றன. தட்டிக்கேட்ட யாருமில்லை. உள்நாட்டு விவகாரங்களில் மனிதாபிமான அடிப்படையில் வெளிநாடுகள் தலையிடலாம் என்ற சர்வதேச நியதி இன்று நடைமுறைக்கு வந்துள்ளது. இது ஐநா தடைவிதிக்காமலே தடைவிதிப்பதற்கும் தலையிடுவதற்கும் வழிசமைத்துள்ளது.

இஸ்ரேல் நாட்டின் பாதுகாவலனும் நண்பனுமான அமெரிக்கா, பாலஸ்தீன் ஆக்கிரமிப்புக்கு மறைமுக ஆதரவு வழங்குகின்றது. இஸ்ரேயில் மீது விதிக்கப்பட்ட ஐநா பொதுச்சபையின் கண்டனத் தீர்மானங்களை அமுலாக்க மறுக்கின்றது. மறுவளத்தில் ஈராக் போன்ற இஸ்லாமிய நாடுகளுக்கு எதிரான தீர்மானங்களை மிகவும் வேகமாகவும் இறுக்கமாகவும் அமுலாக்குகின்றது.

பொருளாதாரத் தடைகள் பற்றி அரசியல் விஞ்ஞானி அக்ஸ்வேர்தி பிரபு (LORD AXWORTHY) இப்படிச் சொல்கிறார். “பொருளாதாரத் தடைகள் ஒரு செய்தியைக் காவிச் செல்கின்றன. அது பொருளாதார இராசதந்திரத்தின் முழுவடிவம். நாம் ஆயுதம் தூக்காமல் தடைகள் மூலம் குற்றம் செய்யும் நாடுகளுடன் போரிடுகிறோம். பொருளாதாரத் தடைகளின் தாக்கத்தை தடைக்கு உட்பட்ட நாடுகள் நன்றாக உணர்கின்றன.”



Scanned by CamScanner

நன்கு பதிவுசெய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட ஒரு பொருளாதாரத் தடை சம்பந்தமான நிகழ்ச்சியைக் கிரேக்க வரலாற்றில் காணலாம். கி.மு 432இல் மெகாரா (MEGARA) பெருநகரைச் சேர்ந்த ஹெக்ரர் (HECTOR) என்ற உயர்குடிப்பிறந்த வணிகன் தனது பொருள்களுடன் ஆதன்ஸ் (ATHENS) பெருநகரின் துறைமுகத்திற்கு வருகிறான். லாசரஸ் (LAZARUS) என்ற பெயருடைய ஆதன்ஸ் துறைமுக அதிகாரி பின்வருமாறு ஹெக்ரருக்குக் கூறுகிறான், "எனது நாட்டின் வாயில் கதவுகள் மெகாரா நாட்டு வர்த்தகர்களுக்கு மூடப்பட்டுள்ளன. இது சட்டம்"

## வங்கிகள்

## BANKS

நிதிச்சேவைகளை வழங்கும் நிறுவனம் என்று வங்கிகள் வகைப்படுத்தப்படுகின்றன. வாடிக்கையாளர்களின் பணத்தை பாதுகாப்பாக வைத்திருந்தபின் கேட்ட நேரம் அதைத் திருப்பிக் கொடுப்பதற்காகவே வங்கிகள் தோன்றின. அவை கடன் வழங்கும் நிறுவனங்களாகவும் செயற்பட்டன. வாடிக்கையாளர்களின் பணத்தை இலாபகரமான முதலீடுகளில் செலுத்தி அதனால் கிடைக்கும் இலாபத்தில் வங்கிகள் தமது நிர்வாகச் செலவுகளைப் பெற்றன. பெறுமதியுள்ள வாடிக்கையாளர்களுக்கு வட்டிக்குக் கடன் கொடுப்பதுவும் வங்கிகளின் முக்கிய முதலீடுகளில் ஒன்று. இதில் கூறப்பட்டவை வங்கிகளின் ஆரம்பகாலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளாகும். இன்னும் இவை தொடர்ந்தாலும், வங்கிகளின் செயற்பாடுகளில் ஒரு பகுதியாகவே அவை காணப்படுகின்றன. இன்றைய வங்கிகள் பல்-பொருள் அங்காடிகளுக்கு ஒப்பிடப்படுகின்றன.

பாரிய வர்த்தக நிறுவனங்களில் தமது பணத்தின் பெரும்பகுதியை வங்கிகள் முதலீடு செய்வதால் அவை முதலீட்டு நிறுவனங்கள் என்றாகிவிட்டன. முதலீட்டு ஆலோசனைகளையும் வங்கிகள் வழங்குகின்றன. இதனால் வங்கிகள் முதலீட்டு ஆலோசனை நிறுவனங்களாகக் கணிப்பிடப்படுகின்றன. வங்கிகள் முகாமைத்துவச் சேவைகளை வழங்குவதால் அவை முகாமைத்துவ நிறுவனங்களாகவும் மதிப்பிடப்படுகின்றன. முகாமைத்துவ சேவையைப் பெறும் வாடிக்கையாளர்கள் பங்குச்சந்தை, அரசு கடன்பெறும் நோக்கில் விற்பனை செய்யும் கடன்பத்திரங்கள் (BONDS) போன்றவை சம்பந்தமான தேவைகளுக்காக வங்கிகளை அணுகுகின்றனர்.

ஒரு நாட்டின் பொருளாதார ஆரோக்கியத்தை நாடிபிடித்துப் பார்ப்பதற்கு பங்கு சந்தையின் நிலமையை அவதானித்தால் போதும். பங்கு சந்தை வீழ்ச்சி ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார வீழ்ச்சியின் எதிரொலியாக அமையும். பெருமளவு பங்குகளை வங்கிகளே கொள்வனவு செய்கின்றன. பங்குச் சந்தையின் பாதுகாவலனாகவும் வங்கிகள் செயற்படவேண்டிய கட்டாயம் இருக்கிறது. வங்கிகள் தமக்கிடையில் கடன் வாங்குகின்றன கடன் கொடுக்கின்றன. இதனுடைய தாக்கம் ஒரு நாட்டின் பல மட்டங்களில் தென்படுகின்றது.



Scanned by CamScanner

பொருளாதாரமும் அரசியலும் ஒன்றிணைந்தவை. வங்கிதான் இன்றைய பொருளாதார அமைப்பின் அடித்தளம். வங்கிகள் திறம்பட இயங்குவதற்கு ஏதுவான சட்டங்களை அரசுகள் இயற்றுகின்றன. அதே சமயத்தில் அரசின் பொருளாதார நடப்புக்கள் பற்றிய கணிப்பீடுகளை வங்கிகள் இடைவிடாது செய்கின்றன. அரசின் பொருளாதார நகர்வுகள் வங்கியில் பணியாற்றும் நிபுணர்களால் விமர்சிக்கப்படுகின்றன. இவை அரசின் நிதிக் கொள்கையைத் தீர்மானிக்கின்றன.

உலகமயமாக்கல் சூழலில் சர்வதேச வர்த்தகம் சம்பந்தமான கொடுப்பனவுகளும் பிறநிதிச் சேவைகளும் வங்கிகள் மூலமாகவே நடைபெறுகின்றன. இதனால் வங்கிகளின் முக்கியத்துவம் மேலும் பெருகிவிட்டது. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FOREIGN DIRECT INVESTMENTS) உள்நாட்டு வங்கிகள் ஊடாகவே உள்வருகின்றன. இதனால் வங்கிச் சேவைகள் மிகவும் நேர்த்தியாக இயங்கவேண்டிய கட்டாயம் உண்டு. நாட்டின் செல்வச்செழிப்பு இந்தவகையில் அந்த நாட்டின் வங்கிகளில் தங்கியுள்ளன. வெளியார் செய்யும் பங்குச்சந்தை முதலீடுகளும் (STOCK MARKET INVESTMENTS) அதைப்போல வங்கிகள் மூலம் வந்துசேருகின்றன. சர்வதேச வர்த்தகமும் வங்கிகள் ஊடாகவே செய்யப் படுகின்றன.

ஒரு நாட்டின் உயிர்ப்பை நிர்ணயிக்கும் குருதி வர்த்தகத்தில் இருப்பதாக துறைசார் நிபுணர்கள் கூறுவர். வர்த்தகம் வீழ்ந்தால் நாடு வீழ்ச்சியுறும். உலக நாடுகளின் பெரும்பாலான இராசதந்திர முயற்சிகளும் முன்னெடுப்புக்களும் வர்த்தகத்தைப் பெருக்குவதிலேயே ஈடுபடுகின்றன.

ஒவ்வொரு முக்கிய நாட்டின் தலைநகரிலும் மேற்கு நாட்டு வங்கிகளின் கிளைகள் காணப்படுகின்றன. இக்கிளை வங்கிகள் சம்பந்தப்பட்ட நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றன. இக்கிளை அமைப்புக்களின் முகாமையாளர்கள் RESIDENT BANKERS, அதாவது தங்கியிருக்கும் வங்கி அதிகாரிகள் என்று அழைக்கப்படுகின்றனர். வங்கிச் சேவைகளை நெறிப்படுத்து வதோடு இவர்கள் தமது தலைமையகத்திற்கு பெருமளவு தகவல்களையும் அனுப்புகின்றனர். ஒரு இராசதந்திரத் தூதுவனின் முக்கிய கடமை, தான் பணியாற்றும் நாடு சம்பந்தமான சகல தகவல்களையும் தன்னை அனுப்பும் நாட்டிற்கு அனுப்புவதாகும்.

அரசின் ஒவ்வொரு பொருளாதார நகர்வுகளையும் மேற்கூறிய முகாமையாளர்கள் அவதானிக்கிறார்கள், பகுப்பாய்வு செய்கிறார்கள், தமது அறிக்கையோடு தலைமை வங்கிக்கு கோப்பு அனுப்புகிறார்கள். இவர்கள் அனுப்பும் கோப்பின் அடிப்படையில் தலைமை வங்கி நடவடிக்கை எடுக்கின்றது. ஆகையால் இன்று வங்கிகள் தமது செயற்பாடுகளைப்



Scanned by CamScanner

பன்முகப்படுத்தியயோடு அரசியல் இராசதந்திர மட்டத்திற்கும் உயர்ந்துள்ளன என்று அறுதியிட்டுக் கூறலாம். தொலைத்தொடர்பு வசதிகள் பாரிய மேற்குலக வர்த்தக வங்கிகளின் வேகத்திற்கும் செயற்பாட்டுத் திறனுக்கும் துணை நிற்கின்றன.

முதலீடு செய்வதற்கு வங்கிகள் தயக்கம் காட்டினால் அது வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும். முதலீடு செய்யப்பட்ட பணத்தை இனிமேலும் விட்டுவைப்பதால் இலாபம் கிடைக்கப்போவதில்லை என்று வங்கிகள் உணருமாயின் அது பேராபத்தை விளைவிக்கும். கண்மூடி முளிப்பதற்குள் அவர்கள் தமது முதலீடுகளைப் பணமாக்கி நாட்டிலிருந்து வெளியேற்றி விடுவார்கள் நாடுகள் சிலவற்றின் திடீர் வீழ்ச்சிக்கு வங்கிகள் எடுத்த முடிவு காரணமாக அமைகின்றது.

## பணச் சலவை

## MONEY-LAUNDERING

தீயவழிகளில் பெறப்பட்ட பணத்தை வங்கி போன்றவற்றில் இடுவதன் மூலம் அதை சட்டபூர்வமான வழிகளில் பெற்ற பணத்திற்கு நிகரானதாகச் செய்யும் நடைமுறை பணச்சலவை எனப்படும். கறுப்புப் பணத்தை வெள்ளை ஆக்குதல் என்றும் இந்தவகைச் சலவையைக் குறிப்பிடலாம். போதைவஸ்து விற்பனை, இலஞ்சம், ஆள்கடத்தல், வழிப்பறி, கொள்ளை, மிரட்டிப் பறித்தல், கள்ளநோட்டு அடித்தல் போன்றவற்றால் பெறப்படும் பணம் பொதுவாகக் கறுப்புப்பணம் எனப்படுகின்றது. சர்வதேச நிதி ஒழுங்கமைப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாகக் கறுப்புப்பணம் விளங்குகின்றது. பணச் சலவைக்குச் சில நேர்மையற்ற நாடுகளும் வங்கிகளும் துணைபோகின்றன. இதைத் தடுப்பதற்கு இராசதந்திர அதிகாரிகளும் சர்வதேசப் பொலிசாரும் பெருமுயற்சி எடுக்கின்றனர்.

கறுப்புப் பணம் வெள்ளையாக மாறும்போது நான்கு கட்டங்களைத் தாண்டிச் செல்கின்றது.

1. குற்றச்செயலும் அதனால் பெற்ற வருவாயும்.
2. வருவாய்ப் பணத்தை வைப்பிலிடுதல்.
3. குற்றச் செயலுக்கும் வைப்பிலிடப்பட்ட பணத்திற்கும் இடையிலுள்ள நெருங்கிய தொடர்பை மறைத்தல்.
4. வைப்பிலிடப்பட்ட பணத்தை முதலீடாக மாற்றி அதை நிதி நீரோட்டத்தில் கலத்தல்.

இன்று சலவையைத் தடுக்கும் நோக்கில் சில அடிப்படைப் பாதுகாப்பு விதிமுறைகளை வங்கிகள் உருவாக்கியுள்ளன. கற்பனைப் பெயர் முகவரியுடன் பணத்தை வைப்பிலிடுவதைத் தடுத்தல், பாதுகாப்பு விதிமுறைகளில் முதலிடம் பெறுகின்றது. வைப்பிலிடுபவருடைய அடையாளம் மிகவும் துல்லியமாக ஆய்வு செய்யப்படுகின்றது. அத்துடன் இவர் வைப்பிலிடும் பணத்தை எப்படிப் பெற்றார், அதற்குரிய ஆவணங்கள் அவரிடம் இருக்கிறதா, அவை உண்மையானவை



Scanned by CamScanner

தானா என்பதையும் சம்பந்தப்பட்ட வங்கி உறுதிப்படுத்தவேண்டும். இதற்கான விசேட பயிற்சிகள் வங்கி அலுவலர்களுக்கு வழங்கப்படுகின்றது. அமெரிக்காவும் பிரித்தானியாவும் பணச்சலவைக்கு எதிரான மிகவும் இறுக்கமான சட்டங்களை உருவாக்கி அமுல்படுத்துகின்றன.

உலகின் அதியுச்ச செல்வந்த நாடுகள் அமைப்பான ஜீ7 (GROUP OF SEVEN) ஜுன் 22,2000ஆம் ஆண்டில் நிதி நடவடிக்கைக்கான அதிரடிப் படையை (FINANCIAL ACTION TASK FORCE) பணச் சலவையை கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கியுள்ளது. பணச் சலவையை சர்வதேச மட்டத்தில் ஒழிப்பதற்கு அல்லது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்கும் பதினைந்து நாடுகளின் பட்டியலை மேற்கூறிய அதிரடிப்படை வெளியிட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய முதலீட்டு ஆலோசனையும் நிதி உதவியும் வழங்கும் முதலீட்டு வங்கிகளில் ஒன்றான (INVESTMENT BANK) அமெரிக்காவின் மெறில் லின்ச் (MERRIL LYNCH) வெளியிட்ட அறிக்கையின்படி உலகின் மொத்த கறுப்புப் பணம் 15 டிரில்லியனாகும். (15 TRILLION). கறுப்புப்பண வைப்பிற்கு உதவும் நாடுகள் பட்டியலில் ஐரோப்பாவின் மிகச்சிறிய நாடுகளில் ஒன்றான லீச்ரென்ஸ்ரைன் (LIECHTENSTEIN) முதலிடம் வகிக்கின்றது. சுவிற்சர்லாந்தின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள இந்த நாடு வங்கிகள் நிரம்பிய நாடாக அமைகின்றது. இதற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகள் ஐநாவால் விதிக்கப்படலாம் என்ற பேச்சுக்கள் அடிபடுகின்றன.

பிரான்சின் பாதுகாப்பில் இயங்கும் சிறுநாடான மொனாக்கோ (MONACO) 49 வங்கிகளையும் 70 நிதி நிறுவனங்களையும் கொண்டுள்ளது. வரி ஏய்ப்பில் ஈடுபடும் சினிமா நட்சத்திரங்களும் விளையாட்டு வீரர்களும் ஒரு தொகைப்பணத்திற்கு இங்கு குடியுரிமை பெறுகின்றனர். இவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகின்றது. ஐரோப்பாவின் சூதாட்ட மையங்களில் ஒன்றாக இந்த இடம் பிரசித்தி பெற்றுள்ளது. இங்குள்ள வங்கிகளும், சூதாட்ட நிறுவனங்களும் கறுப்பு பணத்தை வெள்ளையாக்க உதவுகின்றன.

பெயர் குறிப்பிடாமல் சேமிப்பு கணக்குகளை தபாலகங்களில் திறக்கும் வசதியை 2000ஆம் ஆண்டுவரை அவுஸ்திரியா (AUSTRIA) வழங்கியது. அவுஸ்திரியாவின் மக்கள் தொகையிலும் பார்க்க மூன்று தடவை கூடிய அளவில் தபாலகச் சேமிப்புப் புத்தகங்கள் இங்கு காணப்படுகின்றன. 2000ஆம் ஆண்டின் கணக்குப்படி சேமிப்புப் புத்தகங்களின் எண்ணிக்கை 24 மில்லியன். இப்போது புத்தகங்களை வைத்திருப்போரின் பெயர், அடையாளம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். என்ற சட்டம் அவுஸ்திரியாவில் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கான அழுத்தங்களை இராசதந்திர மட்டத்தில் ஜீ7 நாடுகள் கொண்டுவந்தன.



Scanned by CamScanner

இரகசிய வைப்பிற்கு இலக்கணம் வகுத்த நாடு சுவிற்சர்லாந்து. படிப்படியாக அதனுடைய நடவடிக்கைகள் இப்போது கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படுகின்றன. குற்றச் செயல்கள் மூலம் பெறப்பட்டதாக நிரூபிக்கப்பட்ட வைப்புக்கள் பற்றிய விவரங்களை சுவிற்சர்லாந்து வங்கிகள் வெளியிடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நைஜீரியாவின் முன்னாள் சர்வாதிகாரி சானி அபாச்சா 17 சுவிஸ் வங்கிகளில் 500 மில்லியன் டாலரை வைப்பில் இட்டுள்ளார். ஜீ7 நாடுகள் தமது அதிரடிப்படை ஊடாக சுவிற்சர்லாந்தில் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியபின் 2000ஆம் ஆண்டில் மாத்திரம் அபாச்சாவைப் போன்ற 370 குற்றவாளிகள் பிடிபட்டுள்ளனர். சூறையாடப்பட்ட நாடுகளிடம் இப்பணத்தை திருப்பி ஒப்படைப்பதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிரேக்க இனத்தவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள சைப்பிரஸ் தீவுப் பகுதி ருஷ்ய நாட்டு மாபியாக் கும்பல்களுக்கு சலுகைகள் வழங்குகின்றது. சகலவிதமான சலவைக்கும் சைப்பிரஸ் வங்கிகள் உதவுகின்றன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மாபியாக்களும் இத்தீவின் வங்கிச் சேவைகளைப் பயன்படுத்துகின்றன. வங்கிகளைக் கட்டுப்படுத்தும் இறுக்கமான சட்டங்களை இயற்றாமலும் வங்கிகளை தீவிரமாக மேற்பார்வை செய்யாமலும் விடுவதால் இஸ்ரேயில் மறைமுகமாக பணச் சலவையை ஊக்குவிக்கின்றது. தனது இலாபமே குறியாக இந்த நாடு செயற்படுகின்றது.

உலகில் மிகவும் வறிய நாடுகளில் ஒன்றான பசுபிக் தீவு, நவுறு (NAURU) 400 வரையிலான வங்கிகளை தனது சின்னஞ்சிறிய நிலப்பரப்புக்குள் இயங்க அனுமதித்துள்ளது. இத்தீவில் வங்கிச் சட்டங்கள் கிடையாது. கறுப்புப் பணத்தை வெள்ளை ஆக்கும் தொழில் இங்கு அமோகமாக நடைபெறுகின்றது. ஜீ7 வெளியிட்ட பட்டியலில் 15 நாடுகளின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. சில நாடுகளின் விவரங்களை இதன்மேல் குறிப்பிட்டுள்ளோம். சிறிலங்காவின் பெயர் இதில் அடங்காவிட்டாலும் தெற்கு ஆசியாவின் பணச் சலவை மையமாக அது உருவாவதை அவதானிக்க முடிகின்றது. உள்வரும் பண முதலீடுகளின் வரலாற்றைப் புலனாய்வு செய்யும் திறமையும் கட்டுப்பாட்டுச் சட்டங்களை உருவாக்கி அமுலாக்கும் வலுவும் சிறிலங்காவிடம் இல்லை.

கறுப்புப்பணச் சலவையை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலில் இவை இடம்பெறுகின்றன : பகாமஸ் (BAHAMAS), கேமன் தீவுகள் (CAYMAN ISLANDS), இஸ்ரேயில், லெபனோன் லீச்ரென்ஸ்ரைன், நவுறு, நியூவே (NIEUE), பனாமா, பிலிப்பீன்ஸ், ருஷ்யா, மார்ஷல் தீவுகள், செயின்ற் கிற்ஸ் (ST.KITTS) நெவிஸ் (NEVIS), செயின்ற் வின்சென்ற் (ST.VINCENT) கிரெனடைன்ஸ் (GRENADINES). ஜீ, நாடுகளின் இராசதந்திரம் கறுப்புப் பணச்சலவையை ஒழிப்பதில் மிகவும் தீவிரமாக ஈடுபடுகின்றது.



Scanned by CamScanner

வங்கிகள் ஊடாக அல்லாமல் வேறு மார்க்கமாகப் பணம் அனுப்பும் வழிமுறைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டில் பெற்ற ஊதியத்தையோ, பிறவருவாயையோ இன்னுமோர் நாட்டிற்கு அனுப்பும் பல்வேறு உத்திகளை சம்பந்தப்பட்டவர்கள் கைக்கொள்கின்றனர். பணச்சலவையின் பிறிதோர் வடிவமாக இவை கணிப்பிடப்படுகின்றன, மத்திய கிழக்கு மற்றும் இந்திய உபகண்ட நாடுகளில் இவ்வகைப் பணக் கொடுக்கல் வாங்கல் ஹவாலா -HAWALA- என்று அழைக்கப்படுகின்றது.

## இஸ்லாமிய வங்கிகள்
## ISLAMIC BANKS

இஸ்லாமிய வங்கிகள் உலகின் பல பாகங்களில் இயங்கத் தொடங்கி இரு தசாப்தங்காளகின்றன. அரசியல் மற்றும் இராசதந்திரப் பரப்பில் மதக் கோட்பாடுகளின் அடிப்படையில் தோன்றிய இந்த வங்கிகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துதியுள்ளன. வழமையான வர்த்தக வங்கிகளின் அளவுக்கு இஸ்லாமிய வங்கிகள் வளர்ச்சியடைந்துள்ளன. மொத்தம் 120 பில்லியன் அமெரிக்கா டாலர் பெறுமதியான வைப்புக்களும் முதலீடுகளும் இவ்வங்கிகள் ஊடாக வருடாவருடம் நடைபெறுகின்றன, 21ஆம் நூற்றாண்டின் அனைத்துலக மட்ட வங்கிச் செயற்பாடுகளில் இஸ்லாமிய வங்கிகள் பெரும்பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஐரோப்பிய, ஆசிய ஆபிரிக்க நாடுகளில் சிறுபான்மைச் சமூகங்களாக வாழும் முஸ்லீம்கள் இஸ்லாமிய வங்கிகள் வழங்கும் சேவைகளை விரும்பிப் பயன்படுத்துகின்றனர். இஸ்லாமிய வங்கிகள், இஸ்லாமிய நிதிச்சேவை நிறுவனங்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை இன்று 250 வரையிலாக உள்ளன. இந்த எண்ணிக்கை இன்னும் வளர்ச்சியுற வாய்ப்பு நிறைய உண்டு.

வர்த்தக வங்கிகள் வட்டியை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. வைப்பிலிடும் பணத்திற்கு வட்டி வழங்குகின்றன, கடன் வழங்கும் தொகைக்கு வட்டி அறவிடுகின்றன. ஒவ்வொரு நகர்வையும் வட்டியை அடிப்படையாகக் கொண்டு வர்த்தக வங்கிகள் இயங்குகின்றன.. இஸ்லாமிய வங்கிகள் அப்படியல்ல. வட்டிக்குப் பணம் கொடுப்பதையும், வாங்குவதையும் அல் குரான் தடுக்கின்றது. வட்டியை அடிப்படையாகக் கொண்ட நிதி ஒழுங்கிற்கு ஒரு மாற்றீடாக இஸ்லாமிய வங்கிகள் அமைகின்றன.

இஸ்லாமிய வங்கிகள் வைப்பிலிடப்படும் பணத்திற்கு வட்டி வழங்குவதில்லை. வைப்பிலிடப்படும் பணம் முதலீடு செய்யப்படும்போது கிடைக்கும் இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கு வைப்பில் இடுபவருக்கு வழங்கப்படுகின்றது. இஸ்லாமிய வங்கிகள் விநியோகிக்கும் பங்குகள் சம உரிமைகள் உள்ள பங்குகளாக அமைகின்றன. இப்பங்குகளுக்கு முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதம் செலுத்தப்படுவதில்லை. இந்த முறைமை EQUITY என்று அழைக்கப்படுகின்றன. முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட வட்டி அல்லது இலாபத்தை வழங்கும் முறைமை இக்குயிற்றி (EQUITY) என்ற பெயரால் சுட்டப்படுகின்றது.



Scanned by CamScanner

இலாபத்தில் ஒரு பங்கு தருவதாக உத்தரவாதம் வழங்குவதால் இஸ்லாமிய வங்கிகள் மிகவும் நேர்த்தியாக இயங்கவேண்டிய கட்டாயம் இருக்கிறது. வைப்பில் இடுபவருக்கு இலாபம் ஒன்றை மாத்திரம்தான் கொடுப்பதால் இஸ்லாமிய வங்கிமீது பெரும் பொறுப்புச் சுமத்தப்படுகின்றது. பணத்திற்கு ஈடான பொறுப்பில் (COLLATERAL) வர்த்தக வங்கிகள் கடன் வழங்கும்போது கவனம் செலுத்துகின்றன. கடன் பெறும் நிறுவனம் இலாபம் ஈட்டுமா என்பதில் இஸ்லாமிய வங்கிகள் கவனம் செலுத்துகின்றன.

உலகின் நிதிக்கொடுக்கல் வாங்கல்கள் வங்கிகள் ஊடாக நடைபெறுவதை முன்பு சுட்டிக்காட்டினோம். இஸ்லாமிய வங்கிகள் புதியதோர் நடைமுறையை புகுத்தியுள்ளதை நாம் கவனத்தில் எடுக்கிறோம். சில குறிப்பிட்ட துறைகளில் இஸ்லாமிய வங்கிகள் நேரிடையாக ஈடுபடவோ, கடன் வழங்கி ஊக்குவிக்கவோ இயலாது. மதுபானம் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி வழங்குதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. வட்டிக்குப் பணம் கொடுக்கும் நிறுவனங்களுக்கு உதவ இயலாது. ஷரியா சட்டங்களுக்கு அமைவாக இஸ்லாமிய வங்கிகள் இயங்குகின்றன. ஷரியா சட்டங்களை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிப்பதுதான் இஸ்லாமிய வங்கிகளின் முக்கிய நிதிக்கொள்கை. வட்டிக்குப் பணம் கொடுப்பதை அரபு மொழியில் 'றிபா' RIBA என்பார்கள். றிபாவில் ஈடுபடக்கூடாது என்பதில் இஸ்லாமிய வங்கிகள் மிகவும் உறுதியாக இருக்கின்றன.

உலகின் மிகப்பெரிய இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றான BANK ISLAM MALAYSIA BERHAD மலேசியா நாட்டின் நிதிச் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் உதவியோடு சிறிலங்கா தலைநகரில் அமனா முதலீட்டு வங்கி AMANA INVESTMENTS LIMITED என்ற பெயரில் 1997 இல் இஸ்லாமிய வங்கி தொடங்கப்பட்டுள்ளது. ஒரு பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட சிறிலங்கா பணம் இந்த வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. மலேசியாவின் மேற்கூறிய வங்கி பத்து வீதம் பங்குகளை அமனாவில் கொள்வனவு செய்துள்ளது. காப்புறுதித் துறையிலும் இந்த வங்கி SRI LANKA AMANA TAKAFUL என்ற பெயரில் கால்பதித்துள்ளது. மலேசியாவின் TAKAFUL காப்புறுதி நிறுவனத்துடன் அமனா காப்புறுதி நிறுவனம் கூட்டுச் சேர்ந்துள்ளது.

ஏற்றுமதி இறக்குமதிக்கு நிதி உதவி வழங்கல், உள்நாட்டு வர்த்தகம், வாடகைக்கு விடுதல் (LEASING) போன்ற துறைகளில் இப்போது அமனா வங்கி ஈடுபடுகின்றது. ஷரியா சட்டங்கள் பற்றிய ஆலோசனைகளை உலகின் தலைசிறந்த இஸ்லாமியச் சட்டநிபுணர்கள், ஷரியா வல்லுநர்கள் போன்றோரிடம் இருந்து அமனா வங்கி பெற்றுள்ளது. இஸ்லாமிய உலகின் மிகப்பெரிய காப்புறுதி நிறுவனம் மலேசியாவின் தக்காபுல் என்பதால் அமனாவின் காப்புறுதி நடவடிக்கைகள் மலேசிய நிறுவனத்தின் வழிநடத்தலில் நடைபெறுகின்றன.



Scanned by CamScanner

அனைத்துலக மட்டத்திலான அரசியல் மற்றும் இராசதந்திர ஒழுங்குகள் சீராக இயங்குவதற்கு நிதி நிறுவனங்கள் உதவுகின்றன. இஸ்லாமியர்கள் உலகமட்டத்தில் ஒரு சக்தியாக வரவேண்டுமாயின் அவர்களுக்கே உரித்தான வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. இத்தேவை தமிழர்களாகிய எமக்கும் இருக்கிறது.

## வெளிவிவகார அலுவலகம்
## FOREIGN OFFICE

(அ). வெளிவிவகாரக் கொள்கையை உருவாக்குதல்.
(ஆ). உருவாக்கப்பட்ட வெளிவிவகாரக் கொள்கையை வெளிப்படுத்துதல்.
(இ). வெளிவிவகாரக் கொள்கையை நிறைவேற்றுதல்.

என்று வெளிவிவகார அலுவலகத்தின் தொழிற்பாடுகளை வகைப்படுத்தலாம். வெளிவிவகார அலுவலகம் வேறுபல பெயர்கள் மூலம் அழைக்கப்பட்டாலும் அதனுடைய முக்கிய நடவடிக்கைகள் மேற்கூறிய மூன்றிற்குள் அடங்கும். வெளிவிவகாரஅமைச்சகம், வெளிவிவகாரத் திணைக்களம், இராஜாங்கசெயலகம், வெளிவிவகாரங்களுக்கான அமைச்சு அதன் பிறபெயர்களாகும். இவ்வலுவலகம் வெளிவிவகார அமைச்சர். வெளிவிவகாரத் திணைக்களத் தலைவர், இராஜாங்க செயலர், வெளிவிவகாரப் பணிப்பாளர் போன்றோர் தலைமையில் இயங்கும். பெயர்கள் வித்தியாசப்பட்டாலும் கடமைகளும் பொறுப்புக்களும் வித்தியாசப்பட மாட்டாது.

ஒரு நாட்டின் வெளிநாடுகளுடனான உறவுகள் பெரும்பாலும் வெளிவிவகார அமைச்சகத்தின் ஊடாக நடைபெறுகின்றன. வெளிநாடுகளில் வதியும் இராசதந்திரிகள் தமது தகவல் தொகுப்புக்களையும் பிற அறிக்கைகளையும் வெளிவிவகார அமைச்சகத்திற்கு அனுப்புகின்றனர். இவ்வாறான தகவல் தொகுப்புக்களும் பிற அறிக்கைகளும் வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்திற்கு உதவுகின்றன.

வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்தில் புலனாய்வுச் சேவைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. இச்சேவைகள் சேகரித்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில் கொள்கை உருவாக்கம் நடைபெறுகின்றது. வெளிவிவகார அமைச்சகம் புலனாய்வுச் சேவைகளின் வழிநடத்தலில் இயங்குவதாகவும் விடயம் அறிந்தோர் கூறுகின்றனர். தகவல் திரட்டிலில் புலனாய்வுச் சேவைகள் இடைவிடாது ஈடுபடுகின்றன. புலனாய்வு அதிகாரிகள் தூதரகங்களிலும் பணியாற்றுகின்றனர். வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்திற்கு புலனாய்வுத் துறையினர் வழங்கும் தகவல்கள் கூடிய பங்களிப்புச் செய்கின்றன.



Scanned by CamScanner

தூதுவர்களின் நியமனம், இடமாற்றம், சேவைநிறுத்தம் என்பன வெளிவிவகார அமைச்சகத்தின் முக்கிய பணிகளாகும். புதிய தூதரகம் திறத்தல், ஏற்கனவே இயங்கும் தூதரகத்தை மூடுதல், தரம்குறைத்தல், பணியாளர்கள் எண்ணிக்கையில் மாற்றம் கொண்டுவருதல் போன்ற செயற்பாடுகளும் இந்த அமைச்சகத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் வதியும் தூதுவர்களும் தூதரக அதிகாரிகளும் அமைச்சகம் செய்யும் கொள்கை அறிவிப் புக்களின்படி பத்திரிகை அறிக்கைகள், மேடைப்பேச்சுகள், விருந்துபசாரங்களில் செய்யும் சிற்றுரைகள், உள்நாட்டு தலைவர்களைச் சந்தித்து உரையாடல் நடத்துதல் போன்றவற்றைச் செய்கின்றனர். தூதுவர்கள் சுயமாக இயங்குவதைத் தவிர்த்து அமைச்சக நெறியாழ்கையில் இயங்குகின்றனர்.

## வெளிவிவகார அமைச்சகக் கருமங்கள் விரிவடைகின்றன
## INCREASE IN FUNCTIONS

வெளிவிவகார அமைச்சகம் பற்றிய பாரம்பரியமான கருத்துக்களைக் கைவிட வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. இந்த அமைச்சகம் ஆற்றும் கருமங்கள் பெருமளவில் விரிவடைந்த காரணத்தால் வெளிவிவகார அமைச்சகத்தை ஒரு ஒருங்கிணைப்புத் திணைக்களம் என்று அழைப்பது மிகவும் பொருத்தம். பரந்த அடித்தளத்தைக் கொண்ட ஒரு பிரமிட் கோபுரத்தின் உச்சியில் இந்த அமைச்சகம் அமர்ந்திருப்பதாகவும் இதுபற்றிய இன்றைய பாடநூல்கள் தெரிவிக்கின்றன. (IT IS A COORDINATING MINISTRY PERCHED AT THE TOP OF AN ADMINISTRATIVE PYRAMID)

இதன்கீழ் பட்டியலிடப்பட்ட அமைச்சகங்களையும் திணைக்களங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு தனக்கென ஒதுக்கப்பட்ட செய்கருமங்களையும் இன்றைய வெளிவிவகார அமைச்சகம் செய்கின்றது. எனவே நன்கு வளர்ச்சி அடைந்த ஒரு நாட்டின் வெளிவிவகார அமைச்சகம் பின்வரும் விவகாரங் களையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

1. வெளிவிவகார அமைச்சகம்.
   THE MINISTRY OF FOREIGN AFFAIRS.
2. வர்த்தக அமைச்சகம்.
   THE MINISTRY OF TRADE.
3. நிதி அமைச்சு.
   THE MINISTRY OF FINANCE.
4. பாதுகாப்பு அமைச்சு.
   THE MINISTRY OF DEFENCE.
5. தொழில்வள மேம்பாடு மற்றும் ஏற்றுமதி அமைச்சு.
   THE MINISTRY OF INDUSTRIAL DEVELOPMENT & EXPORT.
6. வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.
   THE MINISTRY OF FOREIGN EMPLOYMENT.



Scanned by CamScanner

7. மூலப்பொருட்கள் மற்றும் தயாரிப்புக்கள் இறக்குமதி அமைச்சு.
THE MINISTRY FOR IMPORTING RESOURCES & PRODUCTS.
8. முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு.
THE MINISTRY OF INVESTMENT PROMOTION.
9. பிரசார முன்னெடுப்பு அமைச்சு.
THE MINISTRY OF PROPAGANDA.
10. அமைதி நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைச்சு.
THE MINISTRY FOR CONFLICT RESOLUTION.
11. சுற்றுலாத்துறை அமைச்சு.
THE MINISTRY OF TOURISM.

வெளிவிவகார கொள்கை முன்னெடுப்பு மேற்கூறிய அமைச்சகப் பொறுப்புக்களின் நலனையும் தழுவிச் செல்லவேண்டும். இத்தனை அமைச்சகங்களின் இலக்குகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு வெளிவிவகார அமைச்சகத்திடம் விடப்பட்டுள்ளது. ஆகையால் ஒரு ஒருங்கிணைப்பு அமைச்சகம் (COORDINATING MINISTRY) என்று வெளிவிவகார அமைச்சு அழைக்கப்படுவதில் வியப்பில்லை.

## வெளிவிவகாரக் கொள்கை
## FOREIGN POLICY

ஒரு நாடு வெளிநாடுகளுடன் அல்லது அமைப்புடன் மேற்கொள்ளும் நடைமுறை என்று வெளிவிவகாரக் கொள்கைபற்றிக் கூறலாம். ஒரு நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை அந்த நாட்டின் தேசிய நலனின் வெளிப்பாடாக அமையும். வெளிவிவகாரக் கொள்கைமாற்றம் அந்த நாட்டின் தேசியநலன் குறிக்கோள்களில் ஏற்படும் மாற்றமாக அமையும். அசையாத சேதியநலன் குறிக்கோளை இலக்காக வைத்து மாறிவரும் உலக நிகழ்வுகளுக்கு ஏற்றவிதமாக ஒரு நாடு தனது வெளிவிவகாரக் கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்தும்.

வெளிவிவகாரக் கொள்கை சம்பந்தமாகப் பின்வரும் தரவுகள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

1. தேசிய நலனை முன்னெடுத்தல்.
2. அனைத்துலக மற்றும் உள்நாட்டு நிகழ்வுகளுக்குப் பொருத்தமானதாக அமையும்.
3. நாட்டின் தேசிய நலனை அடைவதற்குச் சிறந்த உபாயமாக வெளிவிவகாரக் கொள்கை இடம்பெறும்.
4. நாட்டின் வலுவுக்கு மிஞ்சியதாக அது இருக்கக்கூடாது. வலுவுக்கு நிகரானதாகச் சிறந்த வெளியுறவுக் கொள்கை அமைதல் வேண்டும்.
5. வெளியுறவு கொள்கை எதிர்பார்த்த பலனை அளித்தால் தொடரலாம், அளிக்காவிடின் தேவையான மாற்றம் செய்தல் வேண்டும்.



Scanned by CamScanner

நாடொன்றின் உள்நாட்டுக் கொள்கைக்கும் வெளிவிவகாரத்துக்கும் இடையில் வேறுபாடு கிடையாது. நாளாந்திர வெளி உலக உறவுகளில் வெளிவிவகார அமைச்சகம் ஈடுபட்டாலும் அது உள்நாட்டு தேவைகளுக்கும் பொருத்தமானதாகவே அமையும். நாட்டின் சகல வெளியுலக விவகாரங்களையும் கவனிப்பதால், இந்த அமைச்சகம் பிற அமைச்சகங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், போன்றவற்றின் பிரதிநிதியாகவும் செயற்படவேண்டிய கட்டாயம் எழுகின்றது. இன்றைய சூழலில் வெளிவிவகாரக் கொள்கை நாட்டின் முழுத் தேசிய நலனையும் உள்ளடக்கியதாக அமைகின்றது.

# ஐந்துவகை வெளிவிவகாரக் கொள்கைகள்

## 5 FOREIGN POLICY TYPES

### 1). தாராளப்பான்மை -LIBERALISM

வெளிவிவகாரக் கொள்கை பற்றிய மிதவாத நிலைப்பாடு உடையோர் தாராளப்பான்மையர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களது கருத்துப்படி பொருளாதார, நிதிய, தொழில்நுட்ப, அரசியல் விவகாரங்களுக்கு நிகராக இராணுவ விவகாரங்களால் ஈடுகொடுக்கமுடியாது. அதாவது வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்தில் இராணுவம் பற்றிய விடயங்கள் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்படுகின்றன என்பது இவர்களுடைய நிலைப்பாடு. மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு உலக மட்டத்தில் இடம்பெறும் பொதுப் பிரச்சனைகளான வறுமை, மக்கள்தொகைப் பெருக்கம், சூழல் மாசுபடுதல் போன்றவற்றை ஒழித்தல் என்பனதான் முக்கியம், இராணுவ விவகாரங்களுக்கு இந்த நிலைப்பாடு உடையோர் முக்கியத்துவம் கொடுக்க மறுக்கின்றனர்.

### 2). உண்மை நடப்பு -REALISM

உண்மை நடப்பு நிலைப்பாட்டின் ஆதரவாளர்கள் இராணுவ விவகாரங்களுக்கு முதலிடம் கொடுக்கின்றனர். இராணுவபலம் வரலாற்றின் போக்கைத் தீர்மானிக்கின்றது என்பது இவர்கள் நிலைப்பாடு. ஒரு நாட்டின் மேலாண்மைக்கு இராணுவ பலம் துணைபோகின்றது. ஒரு நாட்டின் ஆளுமைக்கு இராணுவ பலம் அத்தியாவசியம். நாடுகளுக்கிடையிலான போட்டி பூசல்களில் வெற்றி தோல்வியை இராணுவபலம் தீர்மானிக்கின்றது. இவர்களுடைய 'எல்லாம் இராணுவம்' என்ற வாதத்தை நிராகரிப்போர் இராணுவ பலத்தை எட்டிப்பிடிக்கும் நோக்கில் உருவாக்கிய ஆயுதப் போட்டிகளால் அனைத்துலக மட்டத்தில் பொருளாதார நலிவும் குழப்பமும் தோன்றியுள்ளன என்கின்றனர். நாட்டின் பாதுகாப்பிற்கு இராணுவ பலம் அவசியம் ஆனால் வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்தின் நோக்கம் முற்றுமுழுதாக இராணுவ பலத்தை பெருக்குவதல்ல என்று எதிரணியினர் கூறுகின்றனர்.



Scanned by CamScanner

### 3). உண்மை நடப்பும் இலட்சியவாதமும் கலந்த இரட்டை நோக்கு- REALIST IDEALIST DICHOTOMY

உண்மை நடப்பு பலத்தை ஆதாரமாகக் கொண்டது இது வரலாறு கூறும் செய்தி. ஆனால் நீதி, நியாயம், தர்மம், மனச்சாட்சி போன்ற இலட்சிய நோக்கங்களும் உண்மை நடப்புடன் கலந்திருப்பதாக இந்த நிலைப்பாட்டை எடுப்போர் நம்புகின்றனர். இரண்டும் கலந்த நிலைப்பாட்டை எடுப்போர் இன்று வழக்கிலுள்ள பிறநாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதை நியாயப்படுத்தும் THE DOCTRINE OF INTERFERENCE ஐத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். தலையிடும் கோட்பாடு என்ன செல்கிறது என்றால், ஒரு குறிப்பிட்ட நாட்டில் மனித உரிமை மீறல்களும் வன்செயல்களும் பெருமளவில் நடக்கும்போது இராணுவத் தலையீடு அனுமதிக்கப்படுகின்றது. அதாவது தார்மீகக் காரணங்களுக்காக இராணுவத் தலையீடு என்கிறார்கள். இதில் ஒரு முக்கிய வினா எழுகின்றது. மனித உரிமை மீறல்களும் வன்செயல்களும் நடக்கும் எல்லா நாடுகளிலுமா இராணுவ ரீதியாகத் தலையிடுகிறார்கள்? தமது தேசிய நலனுக்குச் சாதகம் என்றால்தான் தலையிடுகிறார்கள். இது இலட்சியவாதத்தை முற்றாக நிராகரிக்கின்றது. இலட்சியக் கனவைத் தள்ளிவைக்க முடியவில்லை. இலைமறை காயாக அது இருக்கின்றது. என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும்.

### 4). திருத்தவாதம் -REVISIONISM

பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்தவகை வெளியுறவுக் கொள்கை பயன்படுகின்றது. இழந்ததை மீளப்பெறுவதற்காக, குறிப்பாக நிலப்பரப்பு; கொடுத்த வாக்குறுதி, எழுத்துமூல உத்தரவாதம் போன்றவற்றில் இருந்து விலகிச் செல்வதற்காக; வழங்கப்பட்ட உரிமைகள், சலுகைகள் போன்றவற்றை மிளப்பெறுவதற்காக உலகின் ஆதிக்க நாடுகள் ஏதோவொரு வகையில் திருத்தவாத இராசதந்திரத்தைக் கடைப்பிடிக்கின்றன என்பதில் ஐயமில்லை. சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலான முரண்பாடு என்று சொல்வதைவிட இதை நன்கு திட்டமிட்டுச் செய்யப்படும் நடவடிக்கையாகக் கொள்ளல் வேண்டும். அடொல்ப் ஹிற்லர் சொன்னார். "நான் எந்த உடன்படிக்கையிலும் கைச்சாத்திட எப்போதும் தயாராக உள்ளேன். அதை முறிக்காமல் விலக எனக்குத் தெரியும்" திருத்தவாதத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றை இது படம்பிடித்துக் காட்டுகின்றது. திருத்தவாத அணுகுமுறையைக் கைக்கொள்ளும் நாடுகள் சர்வதேச ஒப்பந்தங்கள், நட்புறவுகள், சர்வதேச அமைப்புக்கள் என்பனவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதிலேயே குறியாகவுள்ளன.

Scanned by CamScanner

5). **உள்ளதை மாறவிடாமல் நிலைநிறுத்தும் வாதம் - STATUS QUO**

தாம்பெற்ற மோலாதிக்க நிலையை உலக நாடுகள் இழக்க விரும்புவதில்லை. இந்த நாடுகள் தமது மேலாதிக்கம் தொடரவேண்டும் என்ற நோக்கில் தமது இராசதந்திர நகர்வுகளை மேற்கொள்கின்றன. இந்த நோக்கில் வடிவமைக்கப்பட்ட வெளியுறவுக்கொள்கை ஆதிக்க இழப்பைத் தடுக்கும் குறிக்கோளைக் கொண்டுள்ளது. தான் மேலாதிக்கம் வகிக்கும் அல்லது வகிக்க அனுமதிக்கும் உலக ஒழுங்கை நீடிக்கச் செய்வதற்காக இந்த நாடு பல தந்திரோபாயங்களை மேற்கொள்கின்றது. நிலப்பரப்பு, நிதிவளம், தொழில்நுட்பம் போன்ற வசதிகளோடு இராணுவ பலத்தையும் பெருமளவில் கொண்டுள்ள நாடு இந்தவகை வெளிவிவகாரக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்றது. நிலப்பரப்பு நிதிவளம் தொழில்நுட்பம் ஆகிய அம்சங்களில் குறைபாடு உள்ள நாடுகள் திருத்தவாதத்தைக் கைக்கொள்ளலாம். ஆனால் இதே அம்சங்களில் உயர்நிலையில உள்ள நாடு உள்ளதை மாறவிடாமல் நிலைநிறுத்தும் அடிப்படையில் செயற்படுவது இயற்கையே. இரு நிலைப்பாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றும்போது போர் போன்ற அனர்த்தங்கள் நிகழ்கின்றன. இது வரலாற்று நியதி. ஆதிக்கத்தை மாறவிடாது நிலைநிறுத்தத் திட்டமிடும் நாடு அந்தளவோடு நிற்பதில்லை. தனது மேலாதிக்கத்தை மென்மேலும் வளர்ப்பதற்காக அது தனது வெளிவிவகாரக் கொள்கையை விரிவாக்குகின்றது. ஐநா அமைப்பை தனது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், உலக வர்த்தக ஸ்தாபானம் (WORLD TRADE ORGANIZATION) போன்ற தனது ஆதிக்க நலனுக்கு உகந்த அமைப்பை உருவாக்கி அதற்கு தலைமை தாங்குதல், உலகின் பொலிஸ்காரனாக தன்னைத்தானே நியமித்தல் போன்ற முன்னெடுப்புக்கள் விரிவாக்கத் திட்டத்தின் அங்கங்களாகும்.

## கொள்கை முன்னெடுப்புக்கள்

## POLICY IN ACTION

1.) **போரின் விளிம்புக்கே சென்றபின் போர் தொடுக்காமல் திரும்புதல் - BRINKMANSHIP**

போருக்குரிய சகல ஆயத்தங்கள், பிரகடனங்கள், நகர்வுகள், தயார்படுத்தல்கள் போன்ற யாவற்றையும் ஒருங்கிணைத்தபின் போரிடாமல் கைவிடும் உத்தியை இவ்வாறு அழைப்பார்கள். இதோ போர் தொடங்கிவிட்டது என்ற அளவுக்கு நிலைமை மோசமடையும் பின்பு தணிந்து சகச நிலைக்குத் திரும்பும். BRINK என்ற ஆங்கில மொழிச் சொல்லின் அர்த்தம் 'விளிம்பு' போரின் விளிம்புவரை செல்லுதல் என்பது இந்த உத்தியின் முதற்பாகம், போரிடாமல் திரும்புதல் இதன் இரண்டாம் பாகம் 1953-1959 காலப்பகுதியில் அமெரிக்க இராஜங்க செயலராகப் பதவிவகித்த ஜோன் பொஸ்ரர் டல்லஸ் (JOHN FOSTER DULLES) விளிம்புவரை சென்று திரும்பும் உத்தியை பெருமளவில் பயன்படுத்தினார். அவர் தனது பதவிக்காலத்தில் உலக விவகாரங்களில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார். சோவியத் ஒன்றிய விரிவாக்கத்தை



Scanned by CamScanner

மிகவும் பலமாக எதிர்த்த இவர் எந்த நேரமும் போர் வெடிக்கலாம் என்ற கொதிநிலையை அப்போதைய உலகில் ஏற்படுத்தினார். சோவியத் ஒன்றியத்திற்கு எதிராக அணுகுண்டுத் தாக்குதல் நடத்தவேண்டும் என்று ஜோன் பொஸ்ரர் டல்லஸ் பகிரங்கமாகக் கூறினார்.

இந்திய - பாகிஸ்தான் படைகள் காஷ்மீர் எல்லைக் கோட்டில் இருபுறமும் குவிக்கப்பட்டிருப்பதையும், எந்தநேரமும் போர் வெடிக்கலாம் என்று உலகம் அஞ்சுவதையும் இவ்விடத்தில் நினைவு கூரலாம். போரின் விளிம்புக்கே சென்றபின் ஆபத்தின்றித் திரும்புவது மிகவும் நுட்பமான கலை. ஏதேனும் விபத்து நடந்தால் உண்மையில் போர் தொடங்கிவிடும்.

### 2.) அரசியல் நகர்வு அல்லது நடவடிக்கையில் புதிய திருப்பமாக அமையும் கொள்கை முன்னெடுப்பு- DEMARCHE (பிரெஞ்சு மொழிச் சொல், உச்சரிப்பு டெமார்ஷ்)

இதற்குச் சிறந்த உதாரணமாக 1989 - 1990இல் நடைபெற்ற எல்ரிரிஈ பிரேமதாசா பேச்சுக்களைக் குறிப்பிடலாம். போர்நிறுத்தப் பிரகடனத்தையும் பேச்சுக்களுக்கான உடன்பாட்டையும் இரு பக்கமும் வெளியிட்டவுடன் இந்திய அரசும் படைகளும் புறம் தள்ளப்பட்டன. தமிழர்களுடைய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக சிறிலங்காவின் சார்பாக நுழைந்தவர்கள் தேவையற்றவர்களாயினர். பிறேமதாசாவுடன் பேச்சுக்கு சென்றபோது புலிகள் தமது கொள்கையில், தற்காலிகமாகவேனும் ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்தனர். ஏப்பிறில் 21,1989 இந்து பத்திரிகை புலிகள் "தமது பிரசித்தமான பிடிவாதக் கொள்கையில் இருந்து மாறுபட்ட நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்" என்று குற்றம் சுமத்தியது. டெமார்ஷ் என்பது முற்றிலும் புதிய கொள்கை முன்னெடுப்பைக் குறிக்கும். எல்.ரி.ரி.ஈ பேச்சுக்குச் சென்றபோது டெமார்ஷ் நடைபெற்றது.

### 3.) திடீர் திருப்பம் - VOLTE FACE (பிரெஞ்சு மொழிச்சொல் உச்சரிப்பு வொல்ரேபாஸ்)

'குத்துக்கரணம்' என்று இந்தவகை நடவடிக்கையை அழைப்பார்கள். 'பல்டி' அடித்தல் என்றும் கூறுவார்கள் வாதாடுமன்றங்களில் சிலர் திட்டமிட்படியோ அல்லது வாய் தவறியோ தமது அணிக்கு எதிரான கருத்தை வெளியிடுவதுண்டு. இது அரசியலிலும் நடப்பதுண்டு. அரசியல் கட்சிகளின் கொள்கைப் பிரகடனங்களில் இதை அவதானிக்கலாம். மொழிச் சமத்துவம் பேசிவந்த இலங்கை இடதுசாரிகள் திடீரென்று தனிச் சிங்கள நிலைப்பாட்டிற்குத் தாவியதை நினைவுகூரலாம். நாடக மேடைகளிலும் இந்த உத்தி கையாளப்படுகின்றது. நண்பனாக நாடாக முற்பகுதியில் தோன்றிய கதாபாத்திரம் இடைநடுவே முழு எதிரியாக மாறுவதை அரங்கில் காணமுடியும். முற்றிலும் மாறுபட்ட இடையில் தோன்றும் நிலைப்பாடு - பேச்சில், நடிப்பில், அரசியலில் - வொவல்ரேபாஸ் என்று அழைக்கப்படும்.



Scanned by CamScanner

1926 தொடக்கம் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயகா சமஷ்டிக்கு ஆதரவு தெரிவித்தார். 1930 இல் முதன்முறையாக யாழ்ப்பாணம் வந்தபோது யாழ் மத்திய கல்லூரி மேடையில் நின்று, 'பல்லின நாடுகளுக்கு சமஷ்டி அரசியல் அமைப்பு உகந்தது' என்று கூறினார். தனிச்சிங்களம் இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1943 நவம்பர் 30ஆம் நாள் ஸ்ரேற் கவுன்சில் (STATE COUNCIL) சபையில் கொண்டுவந்தார். தமிழுக்கும் உரிய இடம் தரப்படவேண்டும் என்ற திருத்தப் பிரேரணையை வீ.நல்லையா சபையில் முன்மொழிந்தார். இதுபற்றிப் பேசிய பண்டாரநாயகா, "தமிழுக்கு உத்தியோகபூர்வ சம அந்தஸ்து வழங்குவதில் ஒரு தீங்கையும் நான் காணவில்லை" என்று கூறினார். இதே பண்டாரநாயகா 1956 இல் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தார். இலங்கை அரசியலில் மிகப்பெரிய தாக்கத்தை விளைவித்த வோல்ரேர்பாஸ் குத்துக்கரணத்தை நிகழ்த்தியவர் இந்த மனிதர்தான்.

## தேசியவலுவும் தேசிய நலனும்
## POWER & NATIONAL INTEREST

தேசிய நலனை முன்னெடுப்பதே வெளிவிவகாரக் கொள்கையின் முழு நோக்கம். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பும் இக்கொள்கைக்கு உண்டு. தேசிய பாதுகாப்பு மூவகை அங்கத்தை உள்ளடக்கியது. நாட்டின் தரை, வான் கடல் பாதுகாப்பு; அரசியல் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு என்பன. இந்தவகைப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் தேசிய நலனை முன்னெடுப்பதற்கும் வலு அடிப்படைத் தேவையாக அமைகின்றது.

வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்தின்போது தேசிய நலன் முன்னுரிமை பெறுகின்றது. தேசியநலன் என்றால் என்ன என்ற வினாவுக்கு விடையாக, ஒரு நாட்டின் உயர்வுக்கு உதவும் அம்சங்கள் யாவும் தேசிய நலனாக அமையும் என்று விடையளிக்கப்படுகின்றது. தற்பாதுகாப்பு, இறையாண்மை, பொருளதார மேம்பாடு, பிராந்திய அல்லது உலகமட்ட மேலாதிக்கம் என்பன தேசிய நலனின் முக்கிய கூறுகளாகும். ஒரு நாட்டின் உயர்வு, பலத்தில் தங்கியுள்ளது. பலத்தை தங்கவைப்பது தேசிய நலனின் முக்கிய குறிக்கோள்.

ஒரு நாட்டின் பலம் எனப்படும் வலு அதனுடைய அமைவிடத்தில் பெரிதும் தங்கியுள்ளது. அந்த நாட்டில் வாழும் மக்களின் தொழில்வளம், செல்வத் தேடல், பிற நிலங்களைத் தமதாக்கும் ஆர்வம் என்பவற்றால் பலம் பெருகும். ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாக நிலவிய பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் வளர்ச்சிக்கு மேற்கூறியவற்றுடன் அந்த நாட்டின் கடலாதிக்கமும் பெரும் பங்களிப்புச் செய்தது.



Scanned by CamScanner

வலு விரிவுக்கு உதவும் காரணிகளை இவ்வாறு பட்டியலிடலாம்.

1. அமைவிடம், நாட்டின் பரப்பரளவு, இயற்கை வளங்கள், உதாரணம் எண்ணை, நிலக்கரி, கனியங்கள், மலை, நதி என்பன.
2. விவசாயத்திற்கு உதகந்த மண்வளம்.
3. மக்கள் தொகையும் அவர்களுடைய தொழிலார்வமும், கடல்கடந்து சென்று வர்த்தகம் செய்யும் சிறப்பும், தேசப் பற்றும்.
4. உயர்ந்த தேசிய வருமானம்.
5. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், அவற்றை இயக்கும் முற்போக்கான தொழில்நுட்பமும்.
6. கல்வி வசதிகள், விஞ்ஞானப் பாரம்பரியம், ஆராய்ச்சிக்கான அரசு மற்றும் தனியார் நிறுவன ஊக்குவிப்பு.
7. இராணுவ பலம், இராணுவப் பாரம்பரியம், இராணுவத்திற்கு ஒதுக்கப்படும் நிதி.
8. நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக அமைப்பு.
9. மேம்பட்ட இராசதந்திர செயற்பாடுகள்.
10. நாட்டைத் தலைமை தாங்குவோரின் சிறப்பும், நிர்வாகத்தினரின் ஈடுபாடும் அர்ப்பணிப்பும்.

காலம் இடம் என்பனவற்றிற்கு ஏற்றவிதத்தில் பலம் மாற்றமடையும் தன்மை வாய்ந்தது. உலக வரலாற்றில் பல சாம்ராச்சியங்கள் தோன்றி மறைந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குமேல் அவற்றால் தாக்குப்பிடிக்க முடியவில்லை முழு உலகையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சாம்ராச்சியம் இதுவரை தோன்றவில்லை. பிளினி என்ற கிரேக்க தத்துவஞானி தனது இயற்கை வரலாறு என்ற நூலில் (PLINY:NATURAL HISTORY) "ஒன்றும் நிட்சயம் இல்லை என்பது தான் நிட்சயம்" என்கிறார். வரலாற்றிற்கு முடிவில்லை, சாம்ராச்சியங்களும் மேலாதிக்க சக்திகளும் மறையவேண்டியது காலத்தின் கட்டளை என்கிறார் பிளினி

உலக நாடுகள் யாவும் தமது வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்தில் தேசிய நலனை மிக முக்கியமாகக் கருத்தில் எடுக்கின்றன. உலக நாடுகள் யாவற்றிற்கும் இது பொதுவான அம்சம். இரு அல்லது அதிலும் கூடிய எண்ணிக்கையிலான நாடுகளின் தேசிய நலன் குறிக்கோள்கள் ஒத்துப்போகும்போது அவை தமக்கிடையில் புரிந்துணர்வையும் சுமூகமான உறவுகளையும் ஏற்படுத்துகின்றன.

தேசிய நலனைத் திடமான வெளிவிவகாரக் கொள்கையாக உருவாக்குவதே வெளிவிவகார அமைச்சக அதிகாரிகளின் முதற்பணியாகும். தேசிய நலன் பெரும்பாலும் அந்த நாட்டு மக்களின் கருத்தை ஒத்ததாக இருக்கும். மக்கள் விருப்புக்கு முரணான தேசியநலன் தோன்ற வாய்ப்பில்லை.



Scanned by CamScanner

தனது பலத்தை ஆதாரமாகக் கொண்டு பிராந்திய மற்றும் அனைத்துலக மட்டத்தில் தேசிய நலனை முன்னெடுப்பதற்குப் பொருத்தமான வெளியுறவுக் கொள்கைகளை நாடுகள் வகுக்கின்றன. வெளிவிவகாரக் கொள்கை இலக்குகளை தலைவர்கள் நிர்ணயம் செய்கின்றனர். சர்வதேச நிலவரத்திற்கு அமைவாக இலக்குகள் மாற்றம் அடைகின்றன. ஆகையால் வெளிவிவகாரக் கொள்கை சர்வதேச நிலவரத்தோடு ஒத்துப் போகவேண்டியதாக இருக்கின்றது. தவறான வெளிவிவகாரக் கொள்கை அதை முன்னெடுக்கும் நாட்டை ஆபத்தான பாதையில் இட்டுச் செல்லும். அதே நாடு தனிமைப்படுத்தப்படும் ஆபத்தையும் பிற நெருக்குதல்களையும் எதிர்நோக்கவேண்டி வரும்.

ஒரு நாடாவது தனது வெளிவிவகாரக் கொள்கையை நிரந்தரமாக வைத்திருப்பதில்லை. அதாவது தேசிய நலன் தேவைகளுக்காக இக்கொள்கை மாற்றப்படுகின்றது. கல்லிலோ, உலோகத்திலோ வெளிவிவகாரக் கொள்கைச் செய்திகள் பொறிக்கப்படுவதில்லை. மிகவும் எளிதாகவும், லாவகமாகவும் மாற்றக்கூடிய விதத்தில் அவை வடிவமைக்கப்படுகின்றன. இது சிறிய, பெரிய எல்லாவகை நாடுகளுக்கும் பொருந்தும்.

உள்விவகாரத்தின் நீட்சி என்று வெளிவிவகாரக் கொள்கை வர்ணிக்கப்படுவதுண்டு. ஒரு நாட்டின் வெளியுறவுகள் உள்நாட்டுத் தேவைகளின் அழுத்தத்தால் ஏற்படுகின்றன என்றும் சொல்வார்கள் இதுவும் உண்மைதான். ஆனால் வலுக்குறைந்த நாடுகள், குறிப்பாகத் தரைப்பரப்பு, பொருளாதாரபலம் போன்றவற்றில் சிறியநாடுகள் பிராந்திய மற்றும் அனைத்லக மட்ட நிகழ்ச்சிகளை தமக்குச் சாதகமாக திருப்பிவிட இயலாது. உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு அமைவாகத் தமது வெளியுறவுக் கொள்கையை உருவாக்கவேண்டிய நிலையில் அவை இருக்கின்றன.

1982இல் போக்லாந்துத் தீவுகள் சம்பந்தமாகப் பிரித்தானியாவுக்கும் ஆர்கென்ரீனாவுக்கும் இடையில் போர் மூண்டது. இந்த விவகாரம் ஐநாவுக்கு வந்தபோது சிறிலங்கா, ஓமான் ஆகிய இரு நாடுகள் மாத்திரம் பிரித்தானியாவுக்குச் சாதகமாக வாக்களித்தன. பிரித்தானியா வழங்கிய நிதி உதவியில் ஜெயவர்த்தனா அரசு அப்போது மகாவலி கங்கைத் திட்டங்களை விரிவாக்கியது. பிரித்தானியாவுக்கு எதிராகப் பிற நாடுகளைப் பின்பற்றி வாக்களித்தால் நிதி உதவி நின்றுபோகலாம். இந்த வாக்களிப்பின்போது சிறிலங்கா அணி சேரா இயக்க நிலைப்பாட்டில் இருந்து விலகி நின்றது. இது தேசிய நலனின் முக்கியத்துவத்தை உணர்த்தப் போதுமானது.

இதுபோன்ற விட்டுக் கொடுப்புக்களையும் வளைந்து போவதையும் அண்மைக்கால அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் காணமுடிகின்றது. பயங்கரவாதம் எங்கு தலைதூக்கினாலும் நாம் அங்கு போர் தொடுப்போம் என்பது பிரகடனப்படுத்தப்பட்ட அமெரிக்க நிலைப்பாடு. இது சாத்தியமற்ற காரணத்தால்



Scanned by CamScanner

அது பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைகளைத் தீருங்கள் என்று பரிந்துரை செய்யுமளவுக்குச் செல்கின்றது. இதை இரட்டை வேடம் என்று கண்டிக்கலாம் ஆனால் தேசிய நலனின் தேவை என்பதுதான் யதார்த்தம்.

தேசிய நலனுடன் ஒத்துப்போகும்வரை உடன்படிக்கைகள் மதிக்கப்படுகின்றன என்கிறார் நெப்போலியன்-TREATIES ARE OBSERVED AS LONG AS THEY ARE IN HARMONY WITH INTERESTS. (NAPOLEAN I MAXIMS 1804-1815) உடன்படிக்கைகளை உதறித் தள்ளும் அளவுக்கு தேசியநலன் மேலோங்கி நிற்கின்றது.

## மேற்கு நாடுகளின் வெளிவிவகாரக் கொள்கையில் இஸ்லாம் மதத்தினருக்கு எதிரான நிலைப்பாடு- THE DEMONISING OF ISLAM

தனியொரு வல்லரசாகத் திகழும் காலம் மிகவும் சொற்பம் என்று இங்கிலாந்தின் மைய இடதுசாரி செய்திச் சஞ்சிகையான எக்கனோமிஸ்ற், அமெரிக்க இராஜங்க செயலக அதிகாரிகளைச் சென்ற வருடம் எச்சரிக்கை செய்தது. மிகவும் சிறிய காலத்தில் உலகில் ஆறு சக்தி பீடங்கள் உருவாகுமென எக்கனோமிஸ்ற் (ECONOMIST) கட்டியம் கூறியது. அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், ருஷ்யா மற்றும் இஸ்லாம் என்று அது ஆறு சக்தி பீடங்களையும் பட்டியலிட்டது.

செப்ரம்பர் 11,2001 நிகழ்வுகள் ஏற்கனவெ அமெரிக்காவுக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இருந்த அச்ச உணர்வைப் பன்மடங்காக்கியுள்ளது. கொமியூனிச வீழ்ச்சிக்குப்பின் தோன்றிய மிகப்பெரிய அச்சுறுத்தல் என்று இஸ்லாமை நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வர்ணிக்கின்றது. வெளியுறவுக் கொள்கை உருவாக்கத்திற்குப் பொறுப்பான அமெரிக்க அதிகாரிகள் இஸ்லாமை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் உபாயங்களைத் தயாரிக்க வேண்டுமென இப்பத்திரிகை வலியுறுத்துகின்றது.

இலண்டனிலுள்ள இஸ்லாமிய கல்விக்கான ஒக்ஸ்போட் மையம் OXFORD CENTRE FOR ISLAMIC STUDIES மேற்கூறிய நோக்கில் நிறுவப்பட்டது. இந்த அமைப்பில் உரையாற்ற வந்த ஐநா செயலாளர் நாயகம் கோபி அனான் பின்வருமாறு பேசினார். ஐரோப்பிய ஆசிய, ஆபிரிக்க கண்டங்களில் இஸ்லாம் ஒரு காலத்தில் உயர்நிலையில் இருந்ததை முஸ்லிம்கள் மறப்பதில்லை. மத்திய காலத்தில் இஸ்லாம் மதத்தினரிடமிருந்து விஞ்ஞானம், மருத்துவம், கணிதம், கிரேக்க மெய்யிலாளர்களின் அரபு மொழிபெயர்ப்புக்கள் போன்றவைற்றைக் கடன்பெற்று மேற்கு நாடுகள் மேம்பாடடைந்தன. இதையும் இன்றைய முஸ்லிம்கள் மறக்கவில்லை. இதெல்லாம் புதிய உத்வேகம் பெறுவதற்கு இஸ்லாம் மதத்தினரைத் தூண்டுகின்றன என்கிறார் கோபி அனான்.



Scanned by CamScanner

காலனித்துவ ஆட்சிமுறை மறைந்துவிட்டாலும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் நவகாலனித்துவத்தின் வடிவமாக அமைகின்றன. அல்குரான் வழியில் வாழ விரும்பும் இஸ்லாமிய நாடுகளின் எண்ணிக்கை விரிவடைகின்றது. உலகின் இஸ்லாமிய நாடுகள் குர்ரான் அடிப்படையில் ஒன்றிணைவதைத் தடுப்பதில் அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சுகள் ஈடுபடுகின்றன.

## வெளிவிவகாரக் கொள்கையில் தேசிய மரபு

## TRADITION IN FOREIGN POLICY

ஒரு நாடு உருவாக்கி அமுல்படுத்தும் வெளிவிவகாரக் கொள்கையில் அந்த நாட்டின் தனித்துவ முத்திரை புலப்படும். இந்த அடையாளத்தைக் கொண்டு அது தோன்றிய நாட்டைக் கண்டுபிடித்துவிடலாம். அந்த நாட்டின் சிந்தனைப் பாரம்பரியம், மத வழிபாட்டு நம்பிக்கை, வரலாற்றுத் தரவுகள், முன்னுதாரணங்கள் என்பனவற்றை அறிந்திருந்தால் அடையாளம் காண்பது சுலபம். ஒரு நாட்டைப் புரிந்துகொள்வதற்கு அந்த நாடு பற்றிய எல்லாவகை விவரங்களையும் அறிந்திருக்கவேண்டும்.

அரசுகள் மாறலாம் ஆனால் கொள்கைகள் மாறுவது அபூர்வம். ஏனென்றால் தேசியல நலன் மாறாதிருக்கின்றது. புதிய அரசுகள் பதவியேற்கும்போது கொள்கை மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அனேகமாக மேல்பூச்சு மாற்றங்கள் மாத்திரமே நடைபெறுகின்றன. அடிப்படைகள் தொடர்கின்றன. அதிபர் கெனடி பதவியேற்றவுடன் பல வெளிவிவகாரக் கொள்கை மாற்றங்கள் எதிர்பார்க்கப்பட்டன. ஆனால் அவர் கியூபாவுக்கும், வியற்நாமுக்கும் எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினார். புதிய பானையில் பழைய கள் என்பதே சரியான ஒப்புவமை.



Scanned by CamScanner

# வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்திற்கு உதவும் நபர்களும் நிறுவனங்களும்

## FOREIGN POLICY FORMULATION, THE INDIVIDUALS AND INSTITUTIONS

பொதுவாக வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்தில் ஈடுபடுகின்றனர். வேறு அமைச்சகங்களும், நிர்வாக அதிகாரிகளும் வெளிவிவகாரத் தீர்மானங்களில் பங்கேற்கின்றனர். அரசியல் கட்சிகளின் உயர்மட்டத்தினரும் இந்த உருவாக்கத்தில் முக்கிய பங்களிப்புச் செய்கின்றனர். முப்படைகளின் கட்டளை அதிகாரிகள், முப்படைகளின் கூட்டுத்தலைமை அதிகாரி போன்றோர் தமது தேவைகளுக்கு உகந்த கொள்கையை வகுக்கும்படி கோருகின்றனர். அமெரிக்கா போன்ற நாடுகளில் வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்தில் எதிர்கட்சி முக்கிய பங்கேற்கின்றது. அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கை பலதுறைகளுக்கு இசைவானதொரு கூட்டு முயற்சியாக அமைகின்றது.

மேற்கூறியோரைவிடப் பின்வரும் நபர்களும் நிறுவனங்களும் வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்திற்கு உந்துதல் கொடுக்கின்றன. நாட்டிற்கு நாடு சில வேறுபாடுகள் காணப்பட்டாலும் அனேகமாக இன்றைய உலகில் இவை பரவலாகக் காணப்படும் அம்சங்களாகும்.

1. ஊடகத்துறையினர், மக்கள் அபிப்பிராயத்தை தாம் விரும்பியவாறு கட்டியெழுப்பும் திறன் ஊடகத்துறையினருக்கு உண்டு. ஆசிரியர் தலையங்கம், முதற்பக்கச் செய்தி, ஆசிரியருக்குக் கடிதம் என்ற பகுதிகள் மூலம் பத்திரிகைகள் அழுத்தம் பிரயோகிக்கின்றன. அரசின் செல்வாக்கைப் பெற்ற பத்திரிகைகளும் அழுத்தம் பிரயோகிப்பதில் உயர்நிலையில் இருக்கின்றன.

2. ஆசிய நாடுகளிலும், இஸ்லாம் தேசிய மதமாகவுள்ள நாடுகளிலும் மதவாதிகளின் தலையீடு நிறைய உண்டு. இந்தியா போன்ற நாட்டில் ஆர்.எஸ்.எஸ் இந்து வலதுசாரி அமைப்பு ஒரு மாபெரும் பின்னணி சக்தியாகத் திகழ்கின்றது. சிறிலங்காவில் புத்தமத பீடாதிபதிகள் ஆன்மீக விடயங்களிலும் பார்க்க அரசியலில் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.

3. தொழிலதிபர்கள், பன்னாட்டு வர்த்தக நிறுவனத் தலைவர்கள், வங்கி மேலாளர்கள் போன்ற நிதிப் பெருக்கத்தில் பங்களிப்பு செய்வோர் தமது முயற்சிகளுக்குச் சாதகமான வெளியுறவுக் கொள்கையை உருவாக்கும்படி அழுத்தம் கொடுக்கின்றனர். இவர்கள் அரசியல் கட்சிகளுக்கு நிதி உதவி செய்யும் காரணத்தால் மிகவும் பலமான நிலையில் உள்ளனர்.



Scanned by CamScanner

வளர்ச்சியடையாத மூன்றாம் உலக நாடுகளுக்கு நிதி மற்றும் பொருளுதவி செய்யும் வழமையை ஜப்பான் கடைப்பிடிக்கின்றது. இது அந்த நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படை அம்சமாகும். 1970 தொடக்கம் ஜப்பானின் வெளிவிவகாரக் கொள்கையில் நிதிஉதவி வழுங்கல் முக்கிய அம்சமாக அமைகின்றது. உதவிபெறும் நாடுகளின் கொள்வனவுச் சக்தியைக் கூட்டி ஜப்பானிய ஆக்கங்களை வாங்கச் செய்வதே வழுங்கலின் அடிப்படை நோக்கமாகும். சிறிலங்காவுக்கு மிகக்கூடுதலான நிதி உதவி வழங்கும் நாடு ஜப்பான் என்பது குறிப்பிடத்தக்கது.

4. புலனாய்வுத் துறையினர் வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்தில் செய்யும் பங்களிப்பை அளவிடமுடியாது. புலனாய்வுத் துறைத் திணைக்களத்தினரோடு வேறு பலதரப்பட்ட மாந்தர்களும், விண்வெளியில் உலாவும் செய்கோள்களும் இத்துறையில் ஈடுபடுகின்றன.

அண்மையில் வெளிவந்த பத்திரிகைச் செய்திகளின்படி சிறிலங்காவில் வந்திறங்கிய இந்தியப் படைகளை புலிகளுடன் மோத வைப்பதற்காக ஜெயவர்த்தனா அரசு பின்வரும் உபாயத்தைக் கையாண்டது. புலனாய்வுத்துறை மேலாளர் மெறில் குணரத்தினாவை புதுடில்லிக்கு அனுப்பி றோவின் தலைவர் ஜீ.சக்செனாவுடன் பேச வைத்தது. மெறில் குணரத்தினா (MERRIL GUNARATNA) சக்செனாவுடன் (G.SAXENA) நடத்திய பேச்சுக்கள் காரணமாக பவான் என்று பெயரிடப்பட்ட (OPERATION PAWAN) இராணுவ நடவடிக்கையை புலிகளுக்கு எதிராக இந்தியப் படைகள் ஆரம்பித்தன. இப்போதைய றணில் விக்கிரமசிங்க அரசு இளைப்பாறிய நிலையில் இருந்த குணரத்தினாவை சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சக ஆலோசகராக நியமித்துள்ளது.

போருக்குச் சென்றாயினும் போராளிகளின் ஆயுதங்கள் களையப்படும் என்ற சரத்துக்கள் இந்தோ-சிறிலங்கா ஒப்பந்தத்தில் காணப்படுகின்றன.

5. சிந்தனையாளர் குழுக்கள்-THINK TANKS இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே அது தனது எதிர்கால சர்வதேச உறவுகள், பரஸ்பர இராசதந்திரம் பற்றிய தயாரிப்புக்களை ஆரம்பித்துவிட்டது. முதலாவது வெளிவிவகாரக் கல்விக்கான அறிஞர் குழு 1943இல் உருவாக்கப்பட்டது. பிற நாடுகள் பற்றிய எல்லாவகை படிப்பையும் மேற்கொள்வதற்காக பெரும் எண்ணிக்கையில் நாடு தழுவிய மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

சிறிலங்கா பற்றிய படிப்புக்கள் சென்னை, புதுடெல்லி, ஜெயப்பூர் கல்கத்தா, சண்டிகார் ஆகிய பெருநகரப் பல்கலைக் கழகங்களில் நடைபெறுகின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியல் பிரிவில் மூத்த பேராசிரியர்களும், றோ அமைப்பைச் சேர்ந்த அறிவு ஜீவிகளும் பணியாற்றுகின்றனர். சென்னைப் பல்கலைக் கழகத்தின், தெற்கு மற்றும் தென்கிழக்குஆசிய கல்வி மையத்தின்



Scanned by CamScanner

இயக்குநர் வீ. சூரியநாராயணன் எல்ரிரிஈ க்கும் அது பிரதிநிதித்துவப்படுத்தும் ஈழத் தமிழர்களுக்கும் எதிரான நிலைப்பாடு எடுக்கும் இந்து பத்திரிகையில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியும் அடிக்கடி இலங்கை வந்து செல்பவருமாவார். (V.SURYANARAYANAN, DIRECTOR OF THE CENTRE FOR SOUTH AND SOUTH EAST ASIAN STUDIES, UNIVERSITY OF MADRAS)

2001 ஆம் ஆண்டில் சிறிலங்கா பற்றிய ஆராய்ச்சி மாநாடு ஜெய்ப்பூரில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் ஐம்பது மூத்த இராணுவ இராசதந்திர, பல்கலைக்கழக, வெளிவிவகார அமைச்சகக நிபுணர்கள் கலந்துகொண்டனர். புதுடில்லியின் ஜவர்கலார் நேரு பல்கலைக்கழகம் இந்திய வெளிவிவகார அமைச்சகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவின் பிரபல கல்விமானும் இராசதந்திரியுமாகிய ஜீ பார்த்தசாரதி இதன் முதலாவது பல்கலைக்கழகத் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆகஸ்து 01,1995 இல் இறக்கும்வரை அவர் இப்பதவியில் இருந்தார்.

இந்தியாவின் கொள்கை ஆராய்ச்சி மையம் - CENTRE FOR POLICY RESEARCH - இன்னுமோர் இராசதந்திரக் கல்வி சம்பந்தமான அமைப்பாகும். சிறிலங்காவின் அனைத்துலக இராசதந்திரக் கல்விக்கான பண்டாரநாயக்கா மையம் தனது 25 வருடச் சேவையை அண்மையில் நிறைவு செய்துள்ளது. சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சகத்தின் ஆதரவுடன் சர்வதேச உறவுகளுக்கான அமைப்பு - THE INSTITUTE OF INTERNATIONAL RELATIONS செயற்படுகின்றது.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகாவின் வேண்டுதலுக்கு அமைவாக சிறிலங்காவின் மூத்த இராசதந்திரிகளில் ஒருவரான டாக்டர் வேர்னன் மென்டிஸ் (VERNON MENDIS), BANDARANAIKE INTERNATIONAL DIPLOMATIC TRAINING INSTITUTE என்ற இந்த இராசதந்திரக் கல்வி நிலையத்தின் பணிப்பாளர் நாயகமாகப் (DIRECTOR GENERAL) பதவியேற்றார். இன்றுவரை அவர் இப்பதவியிலுள்ளார்.

அமெரிக்காவில் ஹாவாட் - HARVARD - பல்கலைக் கழகம், ஜோர்ஜ்ரவுண் வெளிவிவகாரச் சேவைகளுக்கான கல்விக்கழகம் - GEORGETOWN SCHOOL OF FOREIGN SERVICE, பொட்டோமாக் அமைப்பு - POTOMAC INSTITUTE அதனுடைய பயங்கரவாதம் பற்றிய ஆராய்சிப் பிரிவு என்பன இத்துறையில் ஈடுபடுகின்றன.

6. அரசசார்பற்ற நிறுவனங்கள் - NON GOVERNMENTAL ORGANIZATIONS (NGOS)

இவை பெயரளவில் அரசசார்பற்ற நிறுவனங்கள் எனப்பட்டாலும் அவை உண்மையில் அரசுகளின் நோக்கங்களை நிறைவேற்றும் அமைப்புக்களாகவே செயற்படுகின்றன. வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கத்தில் இவை பெரும் செல்வாக்கு பெற்றுள்ளன. "என் ஜீ ஓக்கள் உலகத் தரைப்பரப்பின் ஒரு முக்கிய பகுதியாகவும்; அவை பல எண்ணிக்கையில், பல பருப்பங்களில், பல



Scanned by CamScanner

நோக்கங்களுடன் காணப்படுகின்றன" என்று ஒரு ஆராய்ச்சி நூல் தெரிவிக்கின்றது. உலக வங்கி, நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பாரிய கடன் வழங்கும் நிறுவனங்கள் கடன்பெறும் நாடுகள் பற்றிய இரகசிய தகவல்களை என் ஜீ யோக்களிடமிருந்து பெறுகின்றன. சுவீடன் டென்மார்க் நோர்வே ஆகிய நாடுகளின் 50,000 வரையிலான என்ஜீயோ தொண்டர் நிறுவனங்கள் 100 வரையிலான உலக நாடுகளில் 5,000 வரையிலான திட்டங்களில் பணியாற்றுகின்றன.

7. ஆதரவு தேடும் துறைசார் அமைப்புக்கள் - LOBBY GROUPS

மேற்கு நாடுகளின் கொள்கை உருவாக்கப் பணிகளில் ஆதரவு தேடும் குழுக்களின் ஆதிக்கம் பெருமளவில் காணப்படுகின்றது. உள்துறை, வெளித்துறை விவகாரங்கள் யாவற்றிலும் இவை ஆதிக்கம் செலுத்துகின்றன. சிறிலங்காவில் நடந்த இறுதித் தேர்தல்களில் வர்த்தக சங்கங்களும் - CHAMBER OF COMMERCE ஒப்பந்தகாரர் அமைப்புக்களும் தேர்தலின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் அளவுக்கு உயர்ந்து நின்றன. இவற்றை மீறிச் செயற்படுவதற்கு அரசினால் இயலாது.

அதுபோல அமெரிக்காவில் மென்பான தயாரிப்பாளர் சங்கம், சிகரற் தயாரிப்பாளர் ஒன்றியம், தொழிலாளர் சங்கம் போன்றவை காங்கிரஸ்மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதோடு தமக்குச் சாதகமான பல சட்டங்களையும் இயற்றுவிக்கின்றன, பாதகமான சட்டங்கள் இயற்றப்படுவதைத் தடுக்கின்றன. அமெரிக்காவின் இவ்வகை அமைப்புக்களுக்குத் தாய் அமைப்பாகத் திகழ்வது எயிபாக் - AIPAC எனப்படும், அமெரிக்க இஸ்ரேயில் பொதுப்பணிக் குழுவாகும் - AMERICAN ISRAEL PUBLIC AFFAIRS COMMITTEE; இந்த அமைப்பு அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கைமீது செலுத்தும் செல்வாக்கு காரணமாக இஸ்ரேயிலுக்கு எதிராக அமெரிக்காவினால் ஒன்றுமே செய்யமுடியாது, நூறுக்கு மேற்பட்ட காங்கிரஸ் பிரதிநிதிகள் இந்த அமைப்பின் உதவியுடன் தேர்தல் வெற்றி பெற்றனர்.

இந்த அமைப்பின் கைகளிலுள்ள செல்வம், அதாவது நிதி வைப்பு பல கோடிக்கு மேற்பட்டது. 2000ஆம் ஆண்டில் நடந்த அதிபர் தேர்தல்களில் 6.5 மில்லியன் டாலர் பணத்தை இரு வேட்பாளர்களுக்கும் இந்த அமைப்பு வழங்கியது. இதன்காரணமாக இஸ்ரேயிலுக்குச் சாதகமான நூறு வரையிலான சட்டங்களை இயற்றுவதற்கு எய்பாக் காரணமாகியுள்ளது. மேடையில் அல்லது தனிப்பட்ட உரையாடலில் ஒரு அமெரிக்க அதிபர் இஸ்ரேயிலுக்கு எதிராக ஏதேனும் கூறுவாரானால் அவரால் அரசியலில் நெடுங்காலம் நீடிக்கமுடியாது. எய்பாக் நடத்தும் நிதி சேர்க்கும் விருந்துகளில் அமெரிக்க தலைவர்களும், இராசதந்திரிகளும், தொழிலதிபர்களும், வங்கி மேலாளர்களும் கட்டாயமாக வருகை தருவார்கள். அமெரிக்காவின் மத்திய - கிழக்கு சம்பந்தமான வெளியுறவுக் கொள்கையை எயிபாக் அமைப்பு தீர்மானிக்கின்றது.



Scanned by CamScanner

# சிறிய மற்றும் பெரிய நாடுகள் இராசதந்திரம்
## DIPLOMACY OF THE SMALL AND BIG

சிறிய பரப்பளவு, குறைந்த இராணுவ பலம், மெலிந்த பொருளாதாரம் ஆகியவை கொண்ட வலுக்குறைந்த நாடுகள் வல்லாண்மைமிக்க நாடுகளுடன் சம அந்தஸ்து கோரக்கூடாது என்பது பண்டுதொட்டு நிலவும் இராசதந்திரப் பாரம்பரியமாகும். இன்றுவரை மிகவும் இறுக்கமாகப் பின்பற்றப்படும் அனைத்துலக மட்டக் கோட்பாடு என்று இதை வர்ணிக்கலாம். சட்டப்படி இறைமை நாடுகள் யாவும் சமம் என்பது ஏட்டுச் சுரைக்காய் போல வேறு விடயம்.

இக்கோட்பாட்டிற்கு உதாரணமாக அரசியல் தத்துவஞானி மக்கியவெல்லியின் வாழ்க்கையில் நடந்த சம்பவமொன்று எடுத்துக் காட்டப்படுகின்றது. (MACHIAVELLI (1469-1527) இத்தாலி நாட்டின் புளோரன்ஸ் (FLORENCE) குறுநில மன்னரின் பிரதிநிதியாக இவர் பிரான்சின் பேரரசர் பன்னிரண்டாம் லூயியைச் (LOUIS XII 1462-1515) சந்திக்கச் சென்றார். பிரான்சு நாட்டின் படைகளுக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்காகவே அவர் இப்பயணம் மேற்கொண்டார். மெக்கியவெல்லி எதிர்பார்த்த வரவேற்பு பிரெஞ்சு அரசவையில் அவருக்குக் கிடைக்கவில்லை SER NIHILIO அல்லது திரு பூச்சியம் என்ற கேலிப்பட்டத்துடன் அவர் வெளியேற்றப்பட்டார். இன்றும் சிறிய நாடுகளின் பிரதிநிதிகளும் வலுவற்ற இராணுவ மற்றும் பொருளாதார நாட்டுப் பிரதிநிதிகளும் அவ்வாறே கணிப்பிடப்படுகின்றனர்.

சர்வதேச சட்டத்தின் முன்னிலையில் எல்லா இறைமை நாடுகளுக்கும் சம உரித்தும் சம அந்தஸ்தும் உண்டு. ஆனால் நாடுகளுக்கிடையில் நிலவும் சர்வதேச உறவுகளில் வலு உயர்வு, தாழ்வுகளை நிர்ணயிக்கும் காரணியாக இடம்பெறுகின்றது. INTERNATIONAL LAW வும் INTERNATIONAL RELATIONS ம் வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றன. ஒன்று சட்டம். அடுத்தது உறவுமுறை. உயரமான மரத்திற்கு நீளமான நிழல் என்று சீனப் பழமொழி கூறுகின்றது.

சர்வதேச சமூகம் INTERNATIONAL COMMUNITY என்ற சொற்றொடரையும் இவ்விடத்தில் கவனிக்க வேண்டும். சர்வதேச சமூகம் என்றால் உலக நாடுகள் யாவற்றையும் உள்ளடக்கியதல்ல. மேற்கு நாடுகளின் வெளிவிவகார கொள்கை வெளிப்பாடுகளின்படி சர்வதேச சமூகம் என்றால், மேற்கு நாடுகள் மாத்திரமே என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.



Scanned by CamScanner

# வெளிவிவகார இரகசியங்களை வெளியிடுதல்
## DECLASSIFIED INFORMATION

வெளிவிவகார நிகழ்ச்சிகள் உள்ளடங்கலான தேசிய இரகசியங்கள் பெரும்பாலும் முப்பது வருடங்கள் சென்றபின் பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்படுகின்றன. அப்படி வெளியிடத்தான் வேண்டும் என்ற கட்டாய விதிமுறை கிடையாது. ஆனால் முப்பது வருடம் என்ற காலவரம்பு பேணப்படுகின்றது. இராணுவ இரகசியங்கள், பிற நாடுகளுடனான உறவுகள் பற்றிய இரகசியங்கள் வெளியிடப்படுவதில்லை ஒத்துழைப்பு வழங்கிய எதிரி நாட்டு உயர்மட்டத் தலைவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படுவதில்லை. இந்தியா–சீனா1962 ஆம் ஆண்டு போர் சம்பந்தமான இரகசிய அறிக்கை, இந்திய பாதுகாப்பு அமைச்சகத்தினால் அமுக்கப்பட்டு வருகின்றது.

தேசிய இரகசியங்கள் STATE SECRETS என்று வகைப்படுத்தப்படுகின்றன. அமெரிக்கர்கள் தேசிய இரகசியங்களை CLASSIFIED INFORMATION என்று அழைக்கிறார்கள். இப்படியான இரகசியங்கள் வெளியிடப்படும்போது அவை DECLASSIFIED INFORMATION ஆக மாறுகின்றன. உள்நாட்டு இரகசியங்களும் மேற்கூறியவற்றிற்கு அமைவாகப் பேணப்படுகின்றன, காலப்போக்கில் வெளியிடப்படுகின்றன.

ஒக்ரோபர் 1965 இல் நடைபெற்ற இந்தோனேசியப் படுகொலைகளுக்கும், ஆட்சி மாற்றத்திற்கும் அந்தநாட்டின் அமெரிக்கத் தூதுவரும் சி.ஐ.ஏ புலனாய்வு அமைப்பினரும் காரணமாகின்றனர். இந்த விவரங்கள் சென்ற வருடம் பகிரங்கப்படுத்தப்பட்ட அமெரிக்க இராஜங்க செயலகத்தின் ஆவணங்களில் இருந்து தெரியவருகின்றன. "20 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய மறைக்கப்பட்ட அத்தியாயங்களில் ஒன்றாக" இந்தோனேசியாவின் இக்காலகட்ட நிகழ்வுகள் அமைகின்றன.

மார்ஷல் கிறீன் (MARSHALL GREEN) என்ற இந்தோனேசியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் தனது தூதரகம் தயாரித்த இந்தோனேசிய கொமியூனிஸ்ற் கட்சித் தலைவர்களின் பட்டியலை இந்தோனேசிய இராணுவத்திற்கு வழங்கினார். இதை அவர் மேற்கூறிய இராஜங்க செயலக ஆவணம் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்துகிறார். இன்னுமொரு ஆவணத்தின் மூலம் கொமியூனிஸ்ற் கட்சியினரை நிர்மூலமாக்குவதற்கு உதவும் விதத்தில் டிசெம்பர் 02,1965இல் ரூப்பியா 50 மில்லியன் பணத்தை அமெரிக்காவிடமிருந்து கிறீன் பெற்றுக் கொடுத்தார் என்ற செய்தி வெளியாகின்றது.

1965இன் இந்தோனேசியச் சம்பவங்கள் உள்ளடங்கலாக வேறுபல இரகசிய அமெரிக்க அரச ஆவணங்கள் 1998–1999 காலப்பகுதியில் DECLASSIFIED ஆக்கப்பட்டன. ஆனால் 2001ஆம் ஆண்டுவரை அவை பொதுமக்கள் கண்ணில் படாமல் அமெரிக்க இராஜாங்க செயலகமும் சிஐஏ அமைப்பும் தடுத்து வந்தன.



Scanned by CamScanner

இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பீன்ஸ், கிறீஸ், துருக்கி, சைப்பிரஸ் ஆகிய நாடுகள் பற்றிய இராஜாங்க செயலக உத்தியோகபூர்வ வரலாறுகள் -OFFICIAL HISTORY PREPARED BY STATE DEPARTMENT என்ற ஆவணமும் தடுத்து வைக்கப்பட்டிருந்தபின் 2001இல் வெளிவந்தது.

1965இல் சிஐஏ அமைப்பினரின் மேற்பார்வை மற்றும் வழிநடத்தலில் கொல்லப்பட்டோர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தில் இருந்து ஒரு மில்லியன் வரை இருக்கலாம் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. உயிரிழந்தோர்களில் பெரும்பாலானோர் இந்தோனேசியாவின் சீனப் பரம்பரையினராவர். அமெரிக்கத் தூதரகம் படுகொலைகளின் பின்னணியில் தீவிரமாகச் செயற்பட்டதை அண்மையில் பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்ட ஆவணங்கள் தெரிவிக்கின்றன. தனது வரலாற்றில் சி.ஐ.ஏ வழிநடத்திய மிகப்பெரிய படுகொலை என்று 1965 இன் இந்தோனேசியா சம்பவங்கள் வர்ணிக்கப்படுகின்றன.

இந்தோனேசியாவை உருவாக்கிய பிதாமகர் எனப்படும் சுகர்னோ கொமியூனிஸ்றுகளுக்கு எதிரான வெற்றிகர நடவடிக்கைக்குப்பின் அரண்மனை ஒன்றில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். இதன்பின் அமெரிக்க ஆதரவுடன் இராணுவ அதிகாரி சுகர்த்தோ அதியுயர் அரசியல் பதவியில் அமர்ந்தார்.

இரண்டாம் உலகப்போரில் மிகவும் இரகசியமாக பிரித்தானியா நடத்திய கனவான்களுக்கு அல்லாத நாசவேலை நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் அண்மையில் புத்தகரூபமாக வெளிவந்துள்ளன. 400 பக்கம் கொண்ட இந்த நூலைப் பிரித்தானியா அரசின் பொது ஆவணப்பதிவகம் 2001இல் வெளியிட்டுள்ளது.- SOE. SYLLABUS: LESSONS IN UNGENTLEMANLY WARFARE, WORLD WAR II, PUBLISHED BY BRITISH PUBLIC RECORD OFFICE.

1940ஆம் ஆண்டில் விசேட நடவடிக்கைகள் நிறைவேற்றுப் பிரிவை புதிதாகப் பதவியேற்ற பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் தோற்றுவித்தார். SPECIAL OPERATIONS EXECUTIVE என்ற பெயரிடப்பட்ட இந்த அமைப்பின் சுருக்கமான பெயர் SOE. SYLLABUS என்பது இந்த அமைப்பு தனது முகவர்களுக்கு வழங்கிய பயிற்சி சம்பந்தமான பாடத்திட்டத்தைக் குறிக்கும். இந்த அமைப்பு தனது பயிற்சிப் பாசறைகளை அனைத்துலக மட்டத்தில் ஸ்கொட்லாந்து, கனடா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அமைத்தது. இங்கு குண்டுவைத்துத் தகர்த்தல், எரியூட்டுதல், படுகொலை செய்தல், இத்தியாதி நடவடிக்கைளை எதிரியின் நாட்டிற்குள் நெடுந்தூரம் புகுந்து நடத்தும் பயிற்சிகள், வழங்கப்பட்டன. மாறுவேடம் தரித்தல், பிற நாட்டவர் போல் நடித்தல் போன்ற பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன.



Scanned by CamScanner

1940 – 1944 காலப்பகுதியில் இந்த அணியினர் ஜேர்மன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் ஊடுருவிப் பல பெறுமதிமிக்க தீரச் செயல்களை நடத்தியதாக இந்தநூல் தெரிவிக்கின்றது. பெப்பிரவரி 1943இல் இந்த அமைப்பினர் நோர்வே நாட்டில் ஜேர்மன் ஆக்கிரமிப்பாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்கிய கனநீர் (HEAVY WATER) தொழிற்சாலையை நிர்மூலமாக்கினர். இது ஜேர்மனியின் அணுகுண்டுத் திட்டத்தை பிற்போட்டது. ஜூன் 1944இல் நோர்மன்டியை நோக்கி ஜேர்மன் படைகள் நடத்திய நகர்வையும் இந்த அணியினர் காலதாமதமாக்கினர்.

மேற்கூறியவாறு உத்தியோகபூர்வமாகத் தமது வெளியீட்டகங்கள் மூலம் இரகசியங்களை வெளிப்படுத்துவதோடு அரசு நிற்பதில்லை. தமக்குச் சார்பான பத்திரிகைகள் மூலமாகவும் சில வெளிவிவகாரம் சம்பந்தமான செய்திகள் வெளியிடப்படுவதுண்டு. இந்தக் 'கசிவு' என்றுகூடச் சொல்லாம். 1949இல் மாவோவின் வெற்றி ஹொங்கொங் தீவுகளின் நிலமையை மோசமடையச் செய்தன. இதுசம்பந்தமான இரகசிய ஆவணங்கள் ஹொங்கொங்கில் பிரசுரமாகும் CHINA MORNING POST என்ற பத்திரிகையில் 2001இல் பிரசுரமாகியுள்ளன.

அப்போது இத்தீவுகளின் ஆளுநராகப் பதவிவகித்த சேர் அலெக்ஸ்சான்டர் கிரந்தம் (SIR ALEXANDER GRANTHAM) பிரிட்டிஷ் அரசாங்கம் பகிரங்கமாகப் பின்வரும் அறிக்கையை வெளியிடவேண்டும் என்று இலண்டனுக்கு மனுச் செய்தார்: 'ஹொங்கொங் தீவுகள் பாதுகாக்கப்படும்'. இந்த வாசகம் அடங்கிய அறிக்கையை பிரித்தானிய அரசு சார்பில் வெளியிட அப்போது பதவியில் இருந்த தொழிற்கட்சிப் பிரதமர் கிளெமென்ற் அற்லீ (CLEMENT ATLEE) மறுத்தார். அவருடைய அரசு பிறிதோர் நிலைப்பாட்டை எடுத்தது. சீனத் தலைவர் மாவோ ஹொங்கொங் தீவுகளைத் தரும்படி கேட்டால் மறுக்காமல் ஒப்படைப்பது என்பது அற்லி அரசின் நிலைப்பாடு.

பிரிட்டிஷ் இராணுவத் தலைமைபீடம் அற்லி அரசின் நிலைப்பாட்டை ஏற்க மறுத்ததை அண்மையில் வெளிவந்த இரகசிய ஆவணங்களில் இருந்து அறியவருகின்றது. ஹொங்கொங் தீவுகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதற்கு அங்கு நிலைகொண்டிருந்த பிரிட்டிஷ் இராணுவம் முனைப்பாக ஈடுபட்டது.

அற்லி அரசின் விட்டுக்கொடுக்கும் நிலைப்பாடு மிகவும் சாதுரியமானது. மாவோவின் படைகளை எதிர்த்து நிற்பது தற்கொலைக்குச் சமமானது. ஏப்பிறில் 1949 இல் மாவோவின் அதியுயர் தாக்குதல் திறன்மிக்க தளபதிகளில் ஒருவரான லின் பியோ (LIN BIAO) தனது படைகளோடு ஹொங்கொங் தீவுகளில் இருந்து இருபத்தைந்து மைல் தூரத்திற்குள் வந்துவிட்டார். அந்த நேரத்தில் சியாங் படைகளின் ஒரு அணியோடு மோதவேண்டிய கட்டாயம் லின் பியோவுக்கு ஏற்பட்டது. இதனால் அவர் தனது தாக்குதல் இலக்கை மாற்றிக் கொண்டார்.



Scanned by CamScanner

இவ்வாறான வரலாற்றுத் தகவல்கள் முப்பது வருடம் முடிந்தபின் அரசின் அனுமதியுடன் வெளிவருகின்றன. சிறிலங்கா போன்ற நாடுகளில் இந்த முப்பது வருடகால வரம்பு கிடையாது. இரகசியத்தை கட்டிக்காக்கும் வலுவும் அரசிடம் இல்லை. இதன் காரணமாகப் பெறுமதிமிக்க இரகசியங்கள் உடனுக்குடன் வெளிவரும் வாய்ப்பு உண்டு.

டிசெம்பர் 2002 இல் வெளியிடப்பட்ட இரகசியத் தகவலின்படி பிரிட்டிஷ் இராணுவம் ஜேர்மன் தலைநகர் பேர்ளின்மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்த உத்தேசித்திருந்தது. இலண்டன் மாநகர்மீது ஜேர்மன் படைகள் நடத்திய வீ2 (V2) றொக்கற் தாக்குதல்கள் பேரிழப்பை ஏற்படுத்தின. 1939 - 1945 இடைப்பட்ட காலத்தில் M15 உளவமைப்பின் புலனாய்வுப் பிரிவுத் தலைவராகப் பதவிவகித்த கை லிடல் (GUY LIDDEL) உத்தியோகபூர்வ நடவடிக்கைகளைத் தனது தினக்குறிப்பேட்டில் பதிந்து வைத்திருந்தார். இப்பதிவேடு டிசெம்பர் 2002இல் பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளது.

ஆக்ஸ்து 1944 இல் பிரதமர் சேர்ச்சிலுடன் நடத்திய சந்திப்பில் அணுகுண்டுத் தாக்குதல் நடத்துவது பற்றி முதன்முதலாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது. இச்சந்திப்பில் கை லிடல் மற்றும் M16 வெளி உளவமைப்பின் தலைவர் சேர் ஸ்ரிவாட் மென்சிஸ் (SIR STEWART MENZIES) கலந்துகொண்டனர். ஜேர்மனியில் நிலைகொண்டிருந்த பிரிட்டிஷ் உளவாளிகள் அனுப்பிய செய்தி விவாதத்திற்கு எடுக்கப்பட்டது. ஒலியிலும் கூடிய வேகத்தில் பாயும் றொக்கெற்றுக்களை ஹிற்லர் பயன்படுத்த இருப்பதாகவும், ஒவ்வொரு றொக்கெற்றும் 2000 இறாத்தல் எடையுள்ள வெடிபொருளைக் காவிச்செல்லும் என்றும் உளவாளிகள் அனுப்பிய செய்தி கூறியது.

சேர்ச்சிலுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் மேலதிக விவரங்கள் வெளியிடப்படவில்லை. ஆனால் பேர்ளின்மீது அணுகுண்டு போடுவது பற்றிய பேச்சுக்கள் பற்றிய விவரம் தரப்பட்டுள்ளது. 1944 இல் அணுகுண்டு போடுவது சாத்தியமானதல்ல. அணுகுண்டின் பரீட்சார்த்த வெடிப்பு வெற்றிகரமாக நடத்தப்பட்ட தேதி ஜூலை 16,1945. அது தயாராகி விட்டது என்ற எண்ணத்தில் அதைப் பாவிப்பதுபற்றி பிரிட்டிசார் சிந்தித்தனர். அன்டுரூ றொபேட்ஸ் (ANDREW ROBERTS) என்ற இரண்டாம் உலகப் போரின் வரலாற்றாசிரியர் இது பற்றிப் பின்வருமாறு கருத்துக் கூறியுள்ளார். 1944இல் அமெரிக்காவின் அணுகுண்டு தயார்நிலையில் இருந்திருப்பின் அது நிட்சயம் பேர்ளின் நகர்மீது போடப்பட்டிருக்கும். அண்மைக்காலமாக பிரிட்டிஷ் அரசு வெளியிட்டுவரும் இரகசியத் தகவல்களில் இதுதான் மிகவும் கூடுதலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.



Scanned by CamScanner

# வெளிவிவகாரக் கொள்கையும் வர்த்தகமும்
## TRADE AND FOREIGN POLICY

தேசிய வருவாயைக் கூட்டுவதற்கு வெளிவர்த்தகம் மிகவும் சிறப்பாக உதவுகின்றது. வெளிவர்த்தகத்தை விரிவாக்கும் நோக்கில் வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கப்படுகின்றது. நாடுகளுக்கிடையிலான உறவுகளில் பெரும்பாலும் வர்த்தக உறவுகள் முதலிடம் பிடிக்கின்றன. உதாரணத்திற்கு, 1979 ஆம் ஆண்டு ஆரம்பித்த அமெரிக்க-சீன இராசதந்திர உறவுகள் காரணமாக இருபக்க வர்த்தக உறவுகள் மிகவும் வேகமாக வளர்ச்சி கண்டுள்ளன. இருநாடுகளும் தமது வர்த்தக உறவு காரணமாகச் சீரான இராசதந்திர உறவுகளைப் பேணுகின்றன என்று கூறுமளவுக்கு பரஸ்பர ஒத்துழைப்பு காணப்படுகின்றது.

கால் நூற்றாண்டுவரை நிலைத்த இருபக்க முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அமெரிக்காவும் வியற்நாமும் ஜூலை 2000 ஆண்டில் ஒரு வர்த்தக உடன்படிக்கையைச் செய்துகொண்டன. சர்வதேச உறவுகளை நிர்ணயிப்பது பொருளாதாரம் மாத்திரமே, அரசியல் அல்லவென்ற கூற்றிற்கு இது உரமூட்டுகின்றது. பனிப்போர் கருத்தியல் அடிப்படையில் இயங்கியது. இப்போதைய புதிய ஒழுங்கில் அரசியல் கோட்பாடுகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. வர்த்தகம், வர்த்தக ஒன்றிணைப்பு என்பன முன்னணிக்கு வந்துள்ன.

1975ஆம் ஆண்டுவரை நடைபெற்ற தொடர்ச்சியான போர் காரணமாக, வியற்நாம் அரிசியை இறக்குமதி செய்யும் நாடாக இருந்தது. பத்து வருடகாலமாக அரசியல் சீர்திருத்தம் சோசாலிச அடிப்படையிலான பொருளாதாரம் என்று வியற்நாம் காலத்தை வீணடித்தது. எண்பதுகளில் வியற்நாமிய பொருளாதாரம் வீழ்ச்சி காணும் நிலைக்குத் தள்ளப்பட்டது. அதன்பின் இனி வேறு வழியில்லை என்ற நோக்கில் 'டோய் மோய்' (DOI MOi) என்ற திறந்த பொருளாதாரத்தை வியற்நாம் ஆரம்பித்தது. இன்று அரிசி ஏற்றுமதி செய்யும் உலகின் மூன்றாவது மிகப்பெரிய நாடாக வியற்நாம் வளர்ச்சி கண்டுள்ளது.

அமெரிக்க-சீனப் பனிப்போர் தொடங்கி விட்டதாகக் கூறுவோர் இரு நாடுகளின் வர்த்தக உறவுகளைக் கணக்கில் எடுப்பதில்லை. கடந்த இருபது வருட காலத்தில் அமெரிக்கர்களின் சீன முதலீடுகள் 30 பில்லியன் டாலரை எட்டிவிட்டன. 1999-2000 காலப்பகுதயில் இருபக்பக வர்த்தகம் ஆறுமடங்கு கூடியது, வருடாவருடம் கூடிக்கொண்டே போகின்றது. சீனாவின் வருவாயில் வெளிவர்த்தகம் 40% வீதமாக அமைகின்றது. சீனாவின் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி வருடமொன்றுக்கு 100 பில்லியன் டாலர் பெறுமதி வாய்ந்தது. அமெரிக்காவின் நான்காவது மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாகச் சீனா இடம்பெறுகின்றது. அமெரிக்கா சீனாவுடன் ஒரு பனிப்போரைத் தொடங்குமாயின் அது அமெரிக்காவுக்குப் பெரும் பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தும், சீனாவுக்கும் அதே பாதிப்பை ஏற்படுத்தும்.



Scanned by CamScanner

முறிவோ, முரண்பாடோ தோன்றுவதை இரு நாடுகளும் அனுமதிக்கமாட்டா. அப்படித் தோன்றும் பட்சத்தில் இராசதந்திர முன்னெடுப்புக்கள் மூலம் அவை தீர்த்துவைக்கப்படும். கொள்கை நிலைப்பாடுகளின் இறுக்கத்தைத் தணிப்பதற்கு இராதசதந்திரம் உதவுகின்றது. சீன அமெரிக்க இராசதந்திரம் இந்த நோக்கில் செயற்படுகின்றது எது வரினும் வர்த்தகம் தொடரவேண்டும் என்பதே இருபக்கக் வெளிவிவகாரக் கொள்கை.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டு வெளிவிவகாரக் கொள்கை

## JOINT FOREIGN POLICY OF THE EUROPEAN UNION

ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் வெளிவிவகாரக் கொள்கை நடைமுறைச் சாத்தியமா, என்று கேட்கப்படுகின்றது. அயர்லாந்தும் ஜேர்மனியும் போன்ற வேறுவேறான நாடுகள் ஒரு பொது வெளிவிவகாரக் கொள்கை அடிப்படையில் இயங்க இயலுமா இவ்வாறு விமர்சகர்கள் கூறுகின்றனர். இருப்பினும் அப்படியானதொரு பொது வெளிவிவகாரக் கொள்கை இருப்பதற்கான சான்றுகள் தென்படுகின்றன.

ஐரோப்பிய ஒன்றியம் இப்போது தனது அங்கத்துவ நாடுகளுக்கு அப்பாற்பட்ட வெளிவர்த்தகத்தை பெருமளவில் செய்கின்றது. இதற்கான ஒப்பந்தங்களையும் அது செய்துள்ளது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு அது கடனுதவி, நன்கொடை போன்றவற்றை வழங்குகின்றது. இந்த நாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கில் நிலவும் பாலஸ்தீன - இஸ்ரேயில் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் அமைதி முன்னெடுப்புக்களையும் ஐரோப்பிய ஒன்றியம் நடைமுறைப்படுத்துகின்றது.

வேகமாகக் களமிறக்கக்கூடிய 60,000 வீரர்கள் கொண்ட ஒரு படையணியை ஐரோப்பிய ஒன்றியம் ஜனவரி 2003 இல் அறிமுகம் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அமைதிப் பணியில் இப்படையணி ஈடுபடுத்தப்படுமென அது அறிவித்துள்ளது. ஐரோப்பாக் கண்டத்தில் முதற்கட்டமாக இப்படையணி செயற்படுமென தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காமீது தங்கியிருப்பதைத் தவிர்ப்பதற்காகவே இப்படை உருவாக்கப்படுகின்றது.

தனது உள்விவகாரங்களில் மாத்திரம் கவனம் செலுத்திய இந்த அமைப்பு உலக விவகாரங்களில் காத்திரமான பங்களிப்புச் செய்யவிரும்புகின்றது. அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன. இருப்பினும் மாறுபட்ட கொள்கைகளை அங்கத்துவ நாடுகள் முன்னெடுப்பதை அவதானிக்க முடிகின்றது. பாலஸ்தீனப் பிரச்சனையை எடுத்துக்கொள்வோம். பிரித்தானியாவும் ஜேர்மனியும் இஸ்ரேயிலுக்குச் சார்பான கொள்கையையும், பிரான்சும் சுவீடனும் பாலஸ்தினத்திற்குச் சார்பான கொள்கையையும் கடைப்பிடிக்கின்றன. இப்படியான பிளவுகள் மறையும் வாய்ப்புக்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன.



Scanned by CamScanner

இதற்கு பிரித்தானியா ஒத்துழைப்பு வழங்குமா என்பது சந்தேகமே. அமெரிக்காவுடனான விசேட உறவுகளைப் பேணும் பிரித்தானியா, அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றினால் அமெரிக்காவுக்குச் சாதகமான நிலைப்பாட்டையே எடுக்கும். ஈச்சலோன் (ECHELON) என்ற பெயருடன் ஒரு விண்வெளி கண்காணிப்பு ஒழுங்கை அமெரிக்காவும் பிரித்தானியாவும் பனிப்போர் காலந்தொட்டு நடத்துகின்றன. இது வேவு பார்க்கும் செய்மதியை உள்ளடக்கியது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஏற்றுமதி இறக்குமதிகளை ஈச்சலோன் மூலம் இரு நாடுகளும் கண்காணிக்கின்றன. அடுத்ததாக ஐரோப்பிய ஒன்றியத்தை அமெரிக்காவின் தலைமைத்துவக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நோக்குடன் செயற்படுவதாக பிரித்தானியா மீது குற்றம் சுமத்தப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார கொள்கை உருவாக்கத்தில் வெளிவர்த்தகம், பிறநாடுகளுக்கு நிதியுதவி, அமைதிப்பணி என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு சக்தி மையமாக வளரும் திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் உண்டு. இதை அரசியல் விமர்சகர்கள் வரவேற்றுள்ளனர். பலதுருவ சக்தி மையங்கள் விரும்பத் தகுந்தது என்பது அவர்கள் நிலைப்பாடு. சக்தி மையமாக அடையாளம் காணப்படுவதற்கு ஆயுதபலம் அவசியம். இதற்கான ஏற்பாடுகளையும் ஐரோப்பிய ஒன்றியம் செய்கின்றது.

ருஷ்யா, சீனா, பிரித்தானியா, பிரான்சு, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் மொத்தப் பாதுகாப்புச் செலவிலும் கூடியதொகையை அமெரிக்கா தனது சொந்தப் பாதுகாப்புக்காகவும், ஆயுத ஆராய்ச்சி மற்றும் தயாரிப்புக்காகவும் செலவிடுகின்றது. எனவே ஐரோப்பிய ஒன்றியமும் கூட்டு முயற்சியாக ஆயுதத் தயாரிப்பிலும், நவீன ஆயுதம் பற்றிய ஆராய்ச்சியிலும் ஈடுபடவேண்டியுள்ளது. இது தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாக அமையும்.

1995 தொடக்கம் சிறிலங்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளன. 1994இல் இருபகுதியும் ஒரு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தைச் (COOPERATION AGREEMENT) செய்துகொண்டன. 1995வரை ஐரோப்பிய ஒன்றியத்தின் புதுடில்லி அலுவலகம் சிறிலங்கா விவகாரங்களைக் கவனித்தது. ஆனால் மேற்கூறிய ஒப்பந்தம் கைச்சாத்தாகியபின் ஒரு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதித்துவ அலுவலகம் (A REPRESENTATIONAL OFFICE OF THE E.U) 1995ஆம் ஆண்டு கொழும்பு நகரில் திறக்கப்பட்டது. இது திறக்கப்பட்டபின் இருபக்க நெருக்கம் கூடுதலடைந்தது.

சிறிலங்காவின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உதவிசெய்யும் அமைப்புக்களில் ஐரோப்பிய ஒன்றியம் முன்னணி இடம் வகிக்கின்றது. நாட்டில் அமைதி ஏற்பட்டால் கூடுதல் உதவிகள் வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. சிறிலங்காவின் உல்லாசப் பயணத்துறை ஐரோப்பிய ஒன்றிய ஆதரவுடன் இலாபம்



Scanned by CamScanner

ஈட்டுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் செலவில் தெற்கு ஆசிய ஒன்றிணைந்த உல்லாசப் பயணத்துறை மனிதவள மேம்பாட்டு திட்டம் (REGIONAL SOUTH ASIA INTEGRATED TOURISM HUMAN RESOURCES DEVELOPMENT PROJECT) செயற்படுகின்றது.

ஐரோப்பிய வர்த்தக தகவல் மையம் (EUROPEAN BUSINESS INFORMATION CENTRE) கொழும்பில் திறக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவின் வர்த்தக நிறுவனங்களும், ஐரோப்பிய வர்த்தக நிறுவனங்களும் தகவல் பரிமாறுவதற்கும் கூட்டு வர்த்தக முயற்சிகளைச் செய்வதற்கும் இந்த மையம் உதவுகின்றது. மீளக்குடியமர்வு, உதவிப்பணி (REHABILITATION, RELIEF) போன்றவற்றில் ஐரோப்பிய ஒன்றியம் பெரும் பங்களிப்புச் செய்கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்கள் நாளுக்கு நாள் விரிவடைகின்றன.

## ஆயுத விற்பனையும் வெளிவிவகாரக் கொள்கையும்
## ARMS SALES AND FOREIGN POLICY

உலகின் 90% வீதமான ஆயுத விற்பனைகளை அமெரிக்கா, ருஷ்யா பிரித்தானியா, பிரான்சு ஆகிய நாடுகள் நடத்துகின்றன. இந்த நான்கு நாடுகளும் விற்பனை செய்யும் ஆயுதங்களைப் பொருளாதார மேம்பாடு அடைந்து கொண்டிருக்கும் நாடுகள் கொள்வனவு செய்கின்றன. மரபு ரீதியான ஆயுதங்களைக் (CONVENTIONAL ARMS) கொள்வனவு செய்யும் இந்தவகை நாடுகளில் ஐக்கிய அரபு எமிரேற்ஸ் (UNITED ARAB EMIRATES) முதலாம் இடத்தையும், இந்தியா, தென்கோரியா ஆகியவை இரண்டாம், மூன்றாம் இடங்களையும் வகிக்கின்றன. ருஷ்யாவின் முக்கிய வாடிக்கையாளர்களாக சீனாவும் இந்தியாவும் இடம்பெறுகின்றன.

ஆயுதவிற்பனை செய்யும் நாடுகளில் அமெரிக்கா முதலிடமும், ருஷ்யா இரண்டாமிடமும், பிரான்சு மூன்றாம் இடமும் வகிக்கின்றன. மிகக்கூடுதலான ஆயுதங்களைப் பிரித்தானியா ஏற்றுமதி செய்கின்றது. ஆயுத விற்பனையைப் பெருக்க உதவும் வெளிவிவகாரக் கொள்கையை பிரித்தானியா நடைமுறைப்படுத்துகின்றது. 2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அமெரிக்க கொங்கிரஸ் ஆராய்ச்சிக் குழு அறிக்கைப்படி ருஷ்யாவுக்கு முந்திய நிலையில் பிரித்தானியா வைக்கப்பட்டுள்ளது, அதாவது அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில்.

ஆயுத வர்த்தகம் மேற்கு நாடுகளின் பொருளாதார உயர்நிலைக்கு முக்கிய காரணமாக அமைகின்றது. ஆயுத வர்த்தகத்தைப் பெருக்குவதில் இந்த நாடுகள் குறியாக உள்ளன. மேற்கு நாடுகளுக்கிடையில் ஆயுத விற்பனைப் போட்டி பலமாகவுள்ளது. விற்பனையைப் பெருக்குவதற்கு அவை பல உத்திகளைக் கையாளுகின்றன. ஆசிய ஆபிரிக்க நாடுகளின் இராணுவத் தலைவர்களை தமது நாடுகளுக்கு அழைத்து பயிற்சி வழங்குதல், காலத்திற்கு காலம் ஆயுதக் கண்காட்சி நடத்துதல், முகவர்களை இந்த நாடுகளுக்கு அனுப்பி



Scanned by CamScanner

கொள்வனவை ஊக்குவித்தல் போன்றவை இதிலடங்கும். தமது பொறுக்கியெடுத்த வீரர்களைச் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அனுப்பி பயிற்சி கொடுக்கும் கூட்டுப்பயிற்சி திட்டங்களும் இதே இலக்குடன் உருவாக்கப்படுகின்றன.

இன்று உலக வர்த்தகத்தில் பெரும்பங்கு வகிக்கும் ஆயுத ஏற்றுமதி வர்த்தகம் 1860களில் வில்லியம் ஆம்ஸ்திரோங் (WILLIAM ARMSTRONG) என்ற பிரிட்டிஷ் தொழிலதிபரால் ஆரம்பிக்கப்பட்டது. வழக்கறிஞரான இவர் ஜேர்மன் ஆயுதத் தயாரிப்பாளர் அல்பிறெட் குறுப் (ALFRED KRUPP) என்பவருக்கு போட்டியாக தனது ஆயுதத் தொழிற்சாலையை நடத்தினார். தனது தயாரிப்புக்கள் புனிதமானவை, நாட்டின் பாதுகாப்புக்கு அர்ப்பணிக்கப்பட்டவை என்று அவர் நம்பினார். இந்த ஆயுதங்களின் ஒரு பகுதியை ஏற்றுமதி செய்தால் நாட்டிற்குப் பெருமையும் இலாபமும் ஏற்படும் என்று இவருக்கு ஆலோசனை வழங்கியோர் கூறினர். இதுதான் ஆயுத ஏற்றுமதி வர்த்தகத்தின் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட செய்தி.

1880களில் விக்கர்ஸ் (VICKERS) என்ற போட்டி ஆயுதத் தொழிற்சாலை இங்கிலாந்தின் செபீல்ட் (SHEFFIELD) நகரில் இருந்து ஏற்றுமதிகளை ஆரம்பித்தது. வரலாற்றுப் புகழ்மிக்க மக்சிம் இயந்திரத் துப்பாக்கியை விக்கர்ஸ் நிறுவனம் ஏற்றுமதி செய்தது. பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் விரிவுக்கு மக்சிம் இயந்திர துப்பாக்கி (THE MAXIM MACHINE GUN) பேருதவி புரிந்தது. இக்காலப்பகுதியில் ஆயுத விற்பனைக்கு இன்றியமையாதவர்களான இடைத்தரகர்களும் உருவாகினர். சேர் பசில் சகரோப் (SIR BASIL ZAHAROFF) என்ற தரகரின் பெயர் இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. 1905 இல் இவருக்கு 86,000 பவுண் வருடாந்திர ஊதியத்தையும் பிற சலுகைகளையும் விக்கர்ஸ் நிறுவனம் வழங்கியது. ஆயுத விற்பனையாளர்களை 'மரணத்தின் வியாபாரிகள்' (MERCHANT OF DEATH) என்பார்கள். இந்தப் பட்டத்தை முதன்முறையாகப் பெற்றவர் மேற்கூறிய பசில் சகரோப், இவருக்கு பிரிட்டிஷ் அரசு சேர் பட்டம் கொடுத்துக் கௌரவித்தது.

இன்று நிலமை பெரிதாக ஒன்றும் மாறவில்லை இப்போது அரசுகள்தான் கூடுதலாக ஆயுத விற்பனையில் ஈடுபடுகின்றன. தனியார் தயாரித்தாலும் ஏற்றுமதி அனுமதி அரசிடம் பெற்றபின்பே அனுப்ப முடியும். பிரித்தானியா தனது முன்னோடி முயற்சியான ஆயுதத் தயாரிப்பையும் ஏற்றுமதியையும் தொடர்ச்சியாக நடத்துகின்றது. சர்வதேச சட்டம் தடைசெய்த ஆயுதங்களையும் தயாரித்து அது ஏற்றுமதி செய்கின்றது. மனித உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு பிரித்தானியாவை வெல்லப் பிறிதொரு நாட்டால் இயலாது. ஆனால் மனித உரிமைகளை மீறும் நாடுகளுக்கு ஆயுதம் விற்பதிலேயே பிரித்தானியா குறியாகவுள்ளது.

ஆகஸ்து 2001இல் பிரித்தானியாவின் கிளாட்ஸ்ரோன் இன்டஸ்திரியல் ஹோல்டிங்ஸ் லிமிற்றெட் (GLADSTONE INDUSTRIAL HOLDINGS LTD) என்ற தனியார் நிறுவனம் ஆயிரம் தேர்மோபாறிக் றொக்கெற் லோஞ்சர்களை சிறிலங்காவுக்கு விற்பனை செய்தது. இந்த THERMOBARIC ROCKET LAUNCHER ஆயுதங்கள் ருஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை. பிரிட்டிஷ் தனியார்



Scanned by CamScanner

நிறுவனம் இந்த ஏற்றுமதியை பிரிட்டிஷ் அரசின் அனுமதியுடன் செய்தது. ஆயுத ஏற்றுமதிகளைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுமதி செய்யும் நாட்டின் புலனாய்வுத் துறையினர் ஏற்கின்றனர். பிரிட்டிஷ் அரசின் 'கண்ணும் காதுமான' எம்.ஐ 5 புலனாய்வு அமைப்பிற்குத் தெரியாமல் மனித உரிமை ஆர்வலர்களால் கண்டிக்கப்பட்ட இந்த ஆயுதம் சிறிலங்காவுக்கு ஏற்றுமதியாக முடியாது. பிரிட்டிஷ் அரசின் இதுபோன்ற அநீதிகளுக்கு எண்ணற்ற உதாரணங்கள் உண்டு,

'போருக்குத் தயாராகும் இரு பக்கத்திற்கும் ஆயுதம் விற்கலாம்' என்பது சேர் பசில் சகரோப் கோட்பாடு. இன்றுவரை பிரிட்டிஷ் அரசு இதை மிகவும் இறுக்மாகப் பின்பற்றுகின்றது. 1980 களில் இந்திய-பாகிஸ்தான் போர் மூழும் அபாயம் தோன்றியபோது பிரிட்டிஷ் தரகர்கள் இரு பக்கத்திற்கும் பாரபட்சமின்றி ஆயுத விற்பனை செய்தனர். இன்றும் அதே காட்சி, அதாவது இந்தோ-பாகிஸ்தான் போர் மூழும் வாய்ப்பு காணப்படுகின்றது. பிரித்தானியா மீண்டும் இரு பக்கத்திற்கும் ஆயுத விநியோகம் செய்கின்றது. பிரிட்டிசாரைத் தட்டிக்கேட்ட முடியாது, அவர்கள் காத்திரமான பதிலைத் தயார்நிலையில் வைத்திருப்பார்கள்.

பிரித்தானியாவின் மிகவும் இலாபகரமான ஏற்றுமதிப் பொருள் போர் ஆயுதங்கள் என்பதை பொருளாதார நிபுணர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். உலகின் ஆயுதச் சந்தையின் கால்பங்கு பிரிட்டிசார் பிடியில் இருக்கின்றது. மேம்பாட்டு நிதி உதவித் திட்டங்களை பிரித்தானியா மேம்பாடு அடைந்து கொண்டிருக்கும் மற்றும் மேம்பாடு அடையாத நாடுகளுக்கு வழங்குகின்றது. இது உண்மையில் ஆயுத விற்பனையைத் தூண்டுவதற்கு உதவியாக வழங்கப்பட்ட ஊக்குவிப்புத் தொகையாக அமைகின்றது. மலேசியா, இந்தோனேசியா போன்ற பிரிட்டிஷ் ஆயுதங்கள் வாங்கும் நாடுகளுக்கு இந்தவகை ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுகின்றன. நல்ல வசதியுள்ள நாடான ஓமான் (OMAN) பிரிட்டிஷ் நிதி உதவியைப் பெறுகின்றது. பெருந்தொகையான பிரிட்டிஷ் ஆயுதங்களை ஓமான் கொள்வனவு செய்கின்றது. ஆயுத விற்பனையை உச்ச கட்டத்திற்கு இட்டுச் சென்றவர் பிரதமர் மாகரேற் தச்சர் என்பது உலகறிந்த விடயம்.

வெளிவிவகார அமைச்சர்கள், இராசதந்திர தூதுவர்கள், உயர் இராணுவ அதிகாரிகள், சாதாரண நிலைத் தரகர்கள் யாபேரும் தத்தம் நாட்டின் ஆயுதங்களைப் பிற நாடுகளுக்கு விற்பனை செய்வதில் இடைவிடாது ஈடுபடுகின்றனர். இராசதந்திர உறவுகள் முறிந்துபோன நாடுகளுடனும் அமோகமான இந்தவகை வர்த்தகம் நடைபெறுகின்றது. இதற்காக பிரித்தானியாவை மாத்திரம் குற்றம் சொல்லிப் பயனில்லை. எல்லோரும் இன்று செய்கிறார்கள், பிரித்தானியா முன்னோடி அவ்வளவுதான், பிரதமர் தச்சர் வித்தியாசமானவர், தானே நேரடியாகப் பிறநாடுகளுக்குச் சென்று உயர்மட்டப் பேச்சுக்கள் நடத்தி விற்பனையைப் பெருக்கினார். பிரதமர் தச்சரின் மகன் மார்க் தச்சரும் (MARK THATCHER) பலகோடி பவுண் பெறுமதியான தரகுப் பணத்தை தாயின் உதவியால் பெற்றார்.



Scanned by CamScanner

மிகப்பெருமளவில் இராணுவ ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்யும் நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குகின்றது. இருபத்தியொராம் நூற்றாண்டில் ஒரு உலகதர இராணுவ பலமிக்க நாடாக உயரவேண்டும் என்ற இலக்கு இந்தியாவுக்கு உண்டு. அதனுடைய இராசதந்திர நகர்வுகள் இந்த இலக்கை நோக்கிச் செல்கின்றன. 2001-2002 காலப்பகுதியில் 13.3 பில்லியன் டாலர் பணத்தை இந்தியா ஆயுதம் மற்றும் ஆயுதத் தொழில்நுட்பக் கொள்வனவுக்குச் செலவிட்டது. ருஷ்யா, பிரித்தானியா, இஸ்ரேயில், போலாந்து ஆகிய நாடுகளிடமிருந்து அது இறக்குமதி செய்தது.

ஆயுதத் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை பிரான்சு, உக்கிரேயின், தென் ஆபிரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் இந்தியா மேற்கொள்கின்றது. ருஷ்யாவுடன் ஒத்துழைப்பு மிகவும் விரிவானது. இந்தியப் படைகளுக்குத் தேவையான 65% வீதமான ஆயுத தளபாடங்களை ருஷ்யா வழங்குகின்றது. தரைப்படைக்குத் தேவையானவற்றில் 40% வீதம், கடற்படைக்குத் தேவையானவற்றில் 80% வீதம், விமானப்படைக்குத் தேவையானவற்றில் 75% வீதம் ருஷ்யாவிடமிருந்து கிடைக்கின்றன.

ருஷ்ய ஆயுதங்கள் உலக தரத்திற்கு நிகரானவை ஆனால் விலை மலிவானவை. அத்துடன் இந்தியாவின் விசேட தேவைகளுக்குப் பொருத்தமான ஆயுதங்களை ருஷ்யா தயாரித்து வழங்குகின்றது. விற்பனை-கொள்வனவு என்ற நிலையைக் கடந்து கூட்டுத் தயாரிப்பு என்ற நிலைக்கு இரு நாடுகளும் வளர்ந்துள்ளன. இந்தியாவின் நட்பும் வர்த்தக உறவும் ருஷ்யாவின் பொருளாதாரத்திற்கு அவசியமாகத் தேவைப்படுகின்றது.

மேற்கூறிய இருநாட்டு வர்த்தக உறவிற்கு ஒரு அரசியல் அர்த்தம் இருக்கிறது. இவ்வருடம் (2002) இந்தியா-பாகிஸ்தான் முறுகல் நிலை தோன்றியபின் ருஷ்யத் துணைப் பிரதமர் கிளேபனோவ் இந்தியாவுக்கு பெப்பிரவரி மாதம் வந்தார். பாகிஸ்தானுடன் போர் தொடங்குமாயின் ருஷ்யா இந்தியாவுக்கு உதவி வழங்கும் என்று அவர் பகிரங்கமாகத் தெரிவித்தார். இந்தியாவுக்கு ஆயுதம் வழங்கும் எந்தவொரு நாட்டாலும் இந்தவகை உறுதிமொழியை வழங்கமுடியவில்லை. அமெரிக்காவிடமிருந்து ஆயுதக் கொள்வனவு செய்வதற்கு இந்தியா முயல்வதற்கும் அரசியல் அர்த்தம் உண்டு. பாகிஸ்தானும் அமெரிக்காவும் ஒரு அளவுக்குமேல் நெருங்கி வரக்கூடாது, அமெரிக்காவைத் தன்பால் இழுக்கவேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு. இதற்கு ஆயுதக் கொள்வனவு நல்ல 'துருப்புச் சீட்டு.'

ருஷ்யாவினால் கடன் வழங்கவோ, சலுகை அடிப்படையில் விற்பனை செய்யவோ இயலாது. அந்த நாட்டின் பொருளாதாரம் அப்படி. அமெரிக்காவால் அது இயலும். இந்தியா மாபெரும் ஆயுதச் சந்தை, இப்படி வாங்கிக் குவிக்கும் வேறு நாடு உலகில் கிடையாது. ஜனவரி 28, 2002இல் இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் பிளாக்வில் (BLACKWILL) இருபது வகையான உயர் தொழில்நுட்ப ஆயுதங்களை இந்தியாவுக்கு அமெரிக்கா விற்பனை செய்யும் என்று

Scanned by CamScanner

அறிவித்தார். ராடார் கருவிகள், எடைகுறைந்த போர்விமான எந்திர சாதனங்களும் விற்பனையாகும் என்றார். பனிப்போர் காலத்திலும், அதன்பின் இந்தியா அணுப் பரீட்சைகள் நடத்திய காலத்திலும் இந்தியாவுக்கு ஆயுதம் வழங்க அமெரிக்கா தொடர்ச்சியாக மறுத்தது.

இப்போது மாற்றம் நடைபெறுகின்றது. இருபெரும் ஆயுதத் தயாரிப்பாளர்களிடம் சமகாலத்தில் அதியுயர் தொழில்நுட்ப ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் ஒரேயொரு உலக நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது. போர் உலகில் நிலவும்வரை ஆயுதங்கள் தயாரித்து விற்கப்படும். ஆயுத ஏற்றுமதிக்குப் பொருத்தமான இராசதந்திர முன்னெடுப்புக்களை ஆயுதம் தயாரிக்கும் நாடுகள் எடுக்கின்றன.

நவீன வர்த்தக வரலாற்றில் போர் ஆயுத விற்பனை முதலிடம் வகிக்கின்றது. போர் சம்பந்தமான வரவுசெலவுக் கணக்கைப் பார்க்கும்போது ஆயுதம் தயாரிக்கும் நாடோ, நாடுகளோ போரின் இலாபத்தை முற்றுமுழுதாகப் பெறுவதை உணரமுடியும். போர் என்ற செய்தி அடிபடத் தொடங்கியவுடன் ஆயுதம் தயாரிக்கும் நாடுகளின் பங்குச்சந்தைச் சுட்டெண்கள் உயருகின்றன. தேர்தல் காலத்தில் வேட்பாளர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிகளில், ஆயுதம் தயாரிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முதலிடம் வகிக்கின்றது. இவ்வுதவிகள் முதலீடாகக் கருதப்படுகின்றன. உலகின் எங்கோவொரு இடத்தில் போரைத் தொடக்கி, ஆயுத விற்பனையைப் பெருக்கவேண்டிய கட்டாயம் அரசுகளுக்கு உண்டு. அமெரிக்க அரசின் பின்னணியில் ஆயுதம் தயாரிக்கும் நிறுவனங்கள் வரிசையாக நிற்கின்றன. அமெரிக்காவின் மிகப்பெரிய ஆயுதத் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான போயிங் நிறுவனம் (BOEING CO.,) உலகமட்டத்திலும் இத்துறைசார்ந்த முன்னணி இடம் வகிக்கின்றது. அமெரிக்க வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிப்பதில் இதற்குப் பெரும்பங்கு உண்டு.

## கொள்வனவு செய்பவரே இறுதிப் பாவனையாளர் என்பதை உறுதி செய்யும் ஆவணம்

### END USER CERTIFICATE

ஆயுதங்களை, ஆயுதம் தயாரிக்கும் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் நாடுகள், தாமே இறக்குமதி செய்யும் ஆயுதங்களின் இறுதிப் பாவனையாளர் என்ற உறுதிச் சான்றிதழை ஏற்றுமதி செய்யும் நாட்டிற்கு வழங்கவேண்டும். இது உலக நடைமுறை. நாடும் நாடும் மாத்திரமே ஆயுத விற்பனையில் ஈடுபடவேண்டும் என்பதே இவ்வித முறையின் உட்பொருள். நாடுகள் அல்லாத அமைப்புக்கள் ஆயுத இறக்குமதி செய்வதைத் தடைசெய்வதே இதன் நோக்கம். அத்தோடு ஆயுத இறக்குமதித் தடை விதிக்கப்பட்ட நாடுகளும் ஆயுத தயாரிப்பு நாடுகளிடம் இருந்து இறக்குமதி செய்ய இயலாது. மேற்கூறிய ஆவணத்தை அவர்கள் கொடுக்கும்போது அவர்களுடைய அடையாளம் வெளிவந்துவிடும்.



Scanned by CamScanner

இன்று ஆயுதவிற்பனைப் போட்டி பலமாக இருப்பதால் போலி ஆவணங்களையும் ஏற்பதற்கு தயாரிப்பாளர்கள் தயாராக இருக்கின்றனர். ஹலப்ஜா – HALABJA – நகரின் 5,000 வரையிலான குர்திஷ் மக்களை நச்சு வாயுப் பிரயோகத்தின் மூலம் ஈராக் தலைவர் சதாம் ஹுசேயின் 1988 இல் கொன்றார். இதன்பின் ஈராக்கிற்கான ஆயுத விற்பனைகளை பிரித்தானியா உத்தியோகபூர்வமாக நிறுத்தியது. ஆனால் ஆயுதம், நிதி உதவி, தொழில்நுட்ப உதவி என்பன பிரித்தானியாவில் இருந்து ஈராக்கை நோக்கித் தொடர்ச்சியாகச் சென்று கொண்டிருந்தன.

340 மில்லியன் பவுன் பெறுமதியான ஆயுத ஏற்றுமதிக் கடனுதவிகள் ஈராக்கிற்கு குர்திஷ் மக்களின் கொலை நடந்த ஒரு மாதத்திற்குள் பிரித்தானியாவால் வழங்கப்பட்டன. இதற்கு ஜோர்தான் நாட்டின் பெயரால் வழங்கப்பட்ட END USER CERTIFICATE – பயன்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் இராசதந்திரிகளுக்கும் உளவுத் துறையினருக்கும் வெட்ட வெளிச்சமாக இதுபற்றித் தெரியும். ஆனால் பிரிட்டிஷ் பொதுமக்கள் இருட்டில் விடப்பட்டனர். இந்த ஆவணம் இன்று மேற்கு நாடுகளின் வசதிக்கேற்றவாறு பயன்படும் கருவியாக மாறிவிட்டது.

## இராணுவ -தொழிற்துறை- அரசயந்திர இணைப்பு

## THE MILITARY – MILITARY &INDUSTRIAL COMPLEX

இன்று 'மிலிற்றறி' – MILITARY என்ற சொல் முப்படைகளையும் குறிக்கின்றது. எல்லாவகைத் தாக்குதல் (OFFENSIVE) மற்றும் தற்காப்புப் (DEFENSIVE) படைகளும் மிலிற்றறி என்ற தலைப்பின்கீழ் அடங்குகின்றன. காவல்துறை (POLICE) புறநீங்கலாக முப்படைகளும் அவற்றின் விசேட படைகளும் மிலிற்றறியாக கணிப்பிடப்படுகின்றன. காலம் காலமாக நிலவிய ஒரு முக்கிய வேறுபாடு இந்தவகை வரையறை மூலம் நீக்கப்பட்டுள்ளது. முன்பு தரைப்படைகள் மாத்திரம் இவ்வாறு மிலிற்றறி எனப்பட்டன. கடற்படை தனியொரு பிரிவாக, கடற்படை NAVY அல்லது NAVAL FORCES என்று அழைக்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில் விமானப்படை உருவாகியது. அது AIR FORCE என்ற தனிப்பிரிவாக சிலகாலம் இயங்கியது. இன்று மூன்றும் ஒரு பொதுத் தலைப்பின் கீழ் வந்துள்ளன.

'மிலிற்றறி - இன்டஸ்திரியல் கொம்பிளெக்ஸ்' (MILITARY -INDUSTRIAL COMPLEX) என்ற மூன்று சொற்கள் கொண்ட வரியில் முப்படைகள், போராயுதம் தயாரிக்கும் நிறுவனங்கள், அரச நிர்வாகம், அரசியல் தலைமை ஆகிய நான்கு அலகுகள் அடங்குகின்றன. இந்த நான்கின் கூட்டு முயற்சி நாட்டின் உள்விவகாரம் முதல் வெளிவிவகாரம் வரையிலான அனைத்தையும் தீர்மானிக்கின்றன. அமெரிக்க அரசியல் விமர்சனமாக மேற்கூறிய மூன்று சொற்கள் கொண்ட வரி உருவாக்கப்பட்டது. மக்கள் உரிமை, ஜனநாயகம் போன்றவற்றை அமெரிக்க அரசியல் நிராகரிப்பதாக இந்த விமர்சனம் கூறுகின்றது.



Scanned by CamScanner

THE POWER ELITE (அதிகார மேட்டுக்குடியினர்) என்ற நூலை சி.றைற் மில்ஸ் (C.WRIGHT MILLS 1916-1962) சமுதாய விஞ்ஞானி எழுதினார். இதில் அமெரிக்காவின் தீர்மானமெடுக்கும் அதிகார பீடம்பற்றிய ஆய்வை அவர் மேற்கொள்கின்றார். முன்பு மிகவும் ஆணித்தரமாகத் தங்கள் அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் முன்வைத்த அமெரிக்க மக்கள் 1950களின் பின் 'வழிநடத்தப்படும் மக்கள் கூட்டமாக' மாறிவிட்டார்கள் என்று மில்ஸ் எழுதிய நூல் தெரிவிக்கின்றது.

இதன்காரணமாக அமெரிக்க அரசியலின் தளம் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு முப்படைகள், ஆயுத நிறுவங்கள், நிர்வாகத்தினர், அரசியல் தலைமை ஆகியவற்றின் கூட்டுப் பொறுப்பாக மாறிவிட்டது. இக்கூற்று அமெரிக்க அரசியலுக்கு மாத்திரமல்ல வேறுபல உலக நாடுகளுக்கும் பொருந்தும். வெளிவிவகாரம் பற்றிய கற்கை நெறியில் அறிஞர் மில்ஸ் முன்வைக்கும் கருத்து முக்கிய பங்கு வகிக்கின்றது.

## கூலிப் படைகள்
## MERCENARIES

ஊதியம் ஒன்றிற்காகவே போரிடும் படையினரை கூலிப்படைகள் என்று அழைப்பார்கள். நாட்டுப்பற்று, கொள்கைப்பற்று போன்ற அம்சங்கள் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. பாப்பரசரின் வத்திக்கான் அரண்மனையில் பணியாற்றும் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த படையினர் இதற்குச் சிறந்த உதாரணமாக அமைகின்றனர். சுவிற்சர்லாந்தின் 13ஆம் நூற்றாண்டு வரையில் தொடங்கிய விடுதலைப்போர் 15ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியுடன் முற்றுப்பெற்றது. 1648 இல் கைச்சாத்திடப்பட்ட அமைதி உடன்படிக்கைப் பிரகாரம் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளும், இறைமையும் அங்கீகரிக்கப்பட்டன. இதே உடன்படிக்கை (PEACE OF WESTPHALIA) சுவிற்சர்லாந்தைத் தனிநாடாக அங்கீகரித்தது.

சுவிஸ் போர்வீரர்கள் தமது விடுதலைப் போரின்போது காட்டிய வீரத்தின் பயனாய் பிற ஐரோப்பிய நாடுகள் சுவிஸ் வீரர்களை தமது படைகளில் கூலிக்கு அமர்த்தும் வழமை ஐரோப்பாவில் உருவாகியது. சுவிற்சர்லாந்தின் மிகமுக்கிய ஏற்றுமதிகளில் ஒன்றாக சுவிஸ் கூலிப்படையினர் இடம்பெற்றனர். கூலியைப் பெற்றுக்கொண்டு வெற்றியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் அவர்கள் போரிட்டனர். 1874இல் சுவிற்சர்லாந்தில் புதிய அரசியல் யாப்பு அறிமுகப் படுத்தப்பட்டது. அதன்படி கூலிப்படை ஏற்றுமதிக்குத் தடைவிதிக்கப்பட்டது. ஆனால் வத்திக்கான் சேவையில் இருக்கும் சுவிஸ் படையினர் விதிவிலக்காக அமைகின்றனர்.

ஐரோப்பாவின் கூலிப்படைச் சகாப்தம் அந்தளவோடு முடிவுறவில்லை. இன்று பிரித்தானியா, பிரான்சு, அமெரிக்கா போன்ற முன்னணி நாடுகளில் புதிய பெயர்களோடு அதிநவீன ஆயுதங்கள் சகிதமாகக் கூலிப்படைகள்

செயற்படுகின்றன. இப்போது MERCENARIES என்ற பெயர் தவிர்க்கப் படுகின்றது. ஒரு வர்த்தக நிறுவனம் என்ற அர்த்தத்தோடு PRIVATE MILITARY COMPANIES என்ற பெயர் பாவனைக்கு வந்துள்ளது. தனியார் இராணுவ சேவை நிறுவனங்கள் என்பது இதன் பொருள். இவை சம்பந்தப்பட்ட அரசுகளுடன் இணைந்து செயற்படுகின்றன. இந்தவகை நிறுவனங்களின் மேம்பாட்டிற்கு அவை அமைந்துள்ள நாட்டின் அரசுகள் ஆதரவு வழங்குகின்றன.

தனியார் இராணுவ நிறுவனங்களுக்குத் தலைமை தாங்குவோர் பெரும்பாலும் முன்னாள் அரசபடை உயரதிகாரிகளாக இருக்கின்றனர். பிரான்ஸ் நாட்டின் புகழ்பூத்த பொப் டெனாட் (BOB DENARD) பிரெஞ்சு கடற்படையில் கீழ்மட்டச் சிப்பாயாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரித்தானியாவின் கூலிப்படைகளில் முப்படைகளில் இருந்து விலகியவர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் அரசு நடத்தும் இரகசிய வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்தப் படுகின்றனர். அத்தோடு பிறநாடுகளுக்கும் அவர்கள் தமது சேவைகளை வழங்குகின்றனர். அமெரிக்க, பிரெஞ்சு, மற்றும் பிரித்தானியா இரகசிய சேவை அமைப்புக்களுடன் இவ்வகை நவீன கூலிப்படையினருக்கு மிகவும் நெருக்கமான தொடர்பு உண்டு.

1996 இல் சிறிலங்காவின் தமிழர்களுக்கு எதிரான இனப்போர் முனைப்பு அடைந்த காலத்தில் எம்.பீ.ஆர்.ஐ இன்கோப்பரேற்றட் MPRI INCORPORATED என்ற அமெரிக்க தனியார் இராணுவ சேவை நிறுவனம் சிறிலங்காவின் உதவிக்கு வந்தது. நான்கு நட்சத்திர முன்னாள் அமெரிக்க ஜெனரல் இந்த அமைப்பின் தலைவர். இவருடைய பெயர் எட் சோயிஸ்ரர் (ED SOYSTER). ரேகன் மற்றும் மூத்த புஷ் நிர்வாகத்தின் பாதுகாப்பு உளவுத்துறை ஆலோசகராக இவர் முன்பு பணியாற்றியவர். DEFENCE INTELLIGENCE ADVISOR என்பது இவருடைய பதவிப்பெயர்

கொழும்பு வந்த எம்.பி.ஆர்.ஐ அமைப்பின் குழுவுக்கு ஜெனரல் எட் சோயிஸ்ரர் தலைமை தாங்கினார். சிறிலங்காவின் முப்படைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அமெரிக்க அரசிடமிருந்து பிற உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் இவர் கேட்ட கூலித்தொகை 15 மில்லியன் அமெரிக்க டாலர். இத்தொகையை உடனடியாகச் செலுத்த சிறிலங்காவினால் முடியாத காரணத்தினால் இந்த நிறுவனத்தின் சேவையைச் சிறிலங்கா பெறமுடியவில்லை.

எம்.பி.ஆர்.ஐ நிறுவனத்தில் அமெரிக்க முப்படைகளில் இருந்து இளைப்பாறிய பல மூத்த அதிகாரிகள் பணியாற்றுகின்றனர். இந்த அமைப்பின் செல்வாக்கு வெள்ளை மாளிகையின் உட்புறம்வரை செல்லும் வலுவுள்ளது. கொசோவோப் போரின்போது இந்த அமைப்பு சேர்பியர்களுக்கு எதிராக குரோசியாவுக்கும் பொஸ்னியா முஸ்லிம்களுக்கும் தனது தொழில்சார் உதவிகளை வழங்கியது. இதனால் சேர்பியாவின் கையோங்காமல் தடுக்கப்பட்டது. டேய்ரோன் ஒப்பந்தம் நிறைவேறுவதற்கு எம்.பீ.ஆர்.ஐ வழங்கிய உதவிகளும் ஒரு காரணியாக அமைகின்றது.



Scanned by CamScanner

ஜூலை 24,2001 இல் கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் புலிகளால் தாக்கப்பட்டபின் சிறிலங்காவுக்கான கடல் மற்றும் ஆகாய காப்புறுதிக் கட்டணங்களை இலண்டனிலுள்ள லோயிட்ஸ் காப்புறுதி நிறுவனம் (LLOYDS INSURANCE) உயர்த்தியது. இதனால் ஏற்கனவே நலிவுற்ற சிறிலங்காப் பொருளாதாரம் மேலும் பன்மடங்கு நலிவுறும் வாய்ப்பு தோன்றியது. அப்போதைய சிறிலங்காவின் துறைமுக அமைச்சர் றொன்னி த மெல், கொழும்பு துறைமுகம் மிகவும் பாதுகாப்பானது என்ற உத்தரவாதத்தை லோயிட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கினார். உலகின் மிகப்பெரிய காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான லோயிட்ஸ் இந்த உத்தரவாதத்திற்கு மசியவில்லை.

தாம் சிபாரிசு செய்யும் தனியார் இராணுவசேவை நிறுவனத்தை சிறிலங்காவுக்கு அழைத்து கொழும்பு துறைமுகம் மற்றும் கட்டுநாயக்கா விமானதளம் என்பனவற்றின் பாதுகாப்பை உறுதிசெய்யும்படி லோயிட்ஸ் அழுத்தம் கொடுத்தது. லோயிட்ஸ் சிபாரிசு செய்த நிறுவனத்தின் பெயர் ரிறைடன்ற் மரிற்ரைம் (TRIDENT MARITIME), ரிறைடன்ற் மரிற்ரைம் தனியார் இராணுவ சேவை நிறுவனத் தலைவரின் பெயர் லெப்.கேணல் ரிம் ஸ்பைசர் (LT.COL.TIM SPICER). இவர் பிரிட்டிஷ் இராணுவத்தில் இருந்து இளைப்பாறியபின் உலகின் பல பாகங்களில் தனது இராணுவ சேவையை விற்பனைசெய்து வருபவர். பதவி உயர்வு கிடைக்காத காரணத்தால் இவர் ஐம்பது வயதில் இளைப்பாறியதாகச் சொல்லப்படுகின்றது.

அரசுகளைக் கவிழ்ப்பதற்கு உதவுதல், இராசதந்திர தூதுவர்கள், உயர்மட்ட அரசியல் தலைவர்கள் போன்றோருக்குப் பாதுகாப்பு வழங்குதல், உள்நாட்டுப் போரில் பங்குபற்றுதல், நாசவேலைகளில் ஈடுபடுதல், எதிரிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி படுகொலை செய்தல் போன்ற பயங்கர வேலைகளில் லெப்.கேணல் ரிம் ஸ்பைசரின் கூலிப்படை திறம்படச் செயற்படுகின்றது.

ஒக்ரோபர் 2002 இல் அதியுயர் இராணுவ பாதுகாப்பு வலயம் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குவதற்கு யாழ்குடாவிற்கு விஜயம் செய்த ஜெனரல் சேர் மைக்கேல் றோசின் (GEN.SIR MICHAEL ROSE) உத்தியோகபூர்வ பேச்சாளனாக ஸ்பைசர் சிலகாலம் பணியாற்றியுள்ளார். பொஸ்னியாவில் ஐநா பாதுகாப்புப் படையின் தளபதியாக றோஸ் 1994 – 1995 காலப்பகுதியில் பணியாற்றினார். அப்போது ஸ்பைசர் அவருடைய பேச்சாளனாகப் பதவிவகித்தார். 1996 இல் பிரிட்டிஷ் இராணுவ சேவையிலிருந்து இளைப்பாறிய ஸ்பைசர் கூலிப்படை நபராக மாறினார். முன்பு எஸ்.ஏ.எஸ் கொமான்டோ படையணியின் தலைவராக இருந்த றோஸ் இப்போது இளைப்பாறிவிட்டார். ஆனால் இராணுவ ஆலோசகர் என்ற வசதியான பெயருடன் வலம்வருகிறார். முன்னாள் யூகோசுலாவியாவுக்குச் சென்ற ஐநா படைகளுக்கு லெப்.ஜென். நம்பியார் என்ற இந்தியர் முதலாவது தளபதியாகப் பதவி வகித்தார்.



Scanned by CamScanner

தனியார் இராணுவ சேவை நிறுவனம் (PRIVATE MILITARY COMPANIES அல்லது PMC) என்ற பெயர் 1995 ஆம் ஆண்டின் பின்புதான் பாவனைக்கு வந்தது. அதற்குமுன் இந்தவகைச் சொற்றொடர் ஆங்கில மொழியில் கிடையாது. MERCENARIES அல்லது கூலிப்படைகள் என்ற சொல்தான் பாவனையில் இருந்தது. இன்று நிலமை மாறிவிட்டது. ஒரு காலத்தில் கூலிப்படையினரை 'போரின் நாய்கள்' -DOGS OF WAR என்று அழைப்பார்கள். இன்று அது நிறுத்தப்பட்டுவிட்டது. இன்று கூலிப்படையினருக்கு ஒரு கௌரவ அந்தஸ்து கிடைத்துவிட்டது. பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சகம், அமெரிக்காவின் இராஜாங்க செயலகம் போன்றவை தமது விசேட தேவைகளுக்காக தனியார் இராணுவசேவை நிறுவனங்களைக் கூலிக்கு அமர்த்துகின்றன.

PMC என்று சுருக்குப் பெயரை நடைமுறைக்குக் கொண்டுவந்த பெருமை EXECUTIVE OUTCOMES, SANDLINE INTERNATIONAL என்ற பெயரிடப்பட்ட இரு கூலிப்படை நிறுவனங்களைச் சாரும். இவை 1990 களில் பிரித்தானியாவின் இளைப்பாறிய உயர் இராணுவ அதிகாரிகள், தென் ஆபிரிக்காவின் வர்த்தகர்களின் கூட்டுமுயற்சியால் உருவாக்கப்பட்டன. அங்கோலா, சியரா லியோன், பப்புவா நியூகினியா ஆகிய நாடுகளில் இவ்விரு கூலிப்படைகளும் செயற்பட்டன.

பாலைவனப் புயல் என்ற ஈராக்கிற்கு எதிரான 1991 ஆம் ஆண்டின் போரில் பிரிட்டிஷ் படைகளுக்குத் தலைமைதாங்கிய ஜெனரல் பீற்றர் டீ லா பில்லியர் (GEN. PETER DE LA BILLIERE) 1992 இல் இளைப்பாறியபின் பிரித்தானிய அரசின் 'மத்திய கிழக்கு ஆலோசகர்' என்ற பதவியுடன் மத்திய கிழக்கில் நிலைகொண்டுள்ளார். இவருடைய உண்மையான பணி: பிரித்தானியாவின் ஆயுத விற்பனையைப் பெருக்குதல், தனியார் இராணுவ சேவை நிறுவனங்களுக்கு 'தொழில்' வாய்ப்புக்களைப் பிடித்துக் கொடுத்தல் என்பனவாகும். லெப்.கேணல் ரிம் ஸ்பைசர் பில்லியருடன் நெருங்கிச் சேவையாற்றுகிறார் என்பது விடயம் அறிந்தோருக்குத் தெரிந்த விடயம்.

இன்று தனியார் இராணுவசேவை நிறுவனங்கள் அமைதி காப்பவர்களாகவும், முரண்பாடுகளுக்கு முடிவுகட்டுவோராகவும் தம்மை சட்டபூர்வமாக அங்கீகரிக்கும்படி சர்வதேச மட்டத்தில் அழுத்தம் கொடுக்கின்றன. சுருங்கக் கூறின் தமக்கு இராசதந்திரிகளுக்கு நிகரான அந்தஸ்தைத் தரும்படி அவை கோரிக்கை விடுக்கின்றன. இந்தவகை நிறுவனங்கள் சார்பில் பின்வரும் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன: நாம் அரச சேவையில் அரசுடன் இணைந்து பணியாற்றுகிறோம், அரசின் தீர்மானங்களை நிறைவேற்றுகிறோம், அரசுக்கு எதிரான அரசியல் மற்றும் வர்த்தக எதிரிகளை அழிக்கும் பணியில் ஈடுபடுகிறோம், அரசு விரும்பும் தகவல்களைத் திரட்டிக் கொடுக்கிறோம், உளவுத் தகவல்களையும், தகவல் வழங்கும் முகவர்களையும் பெற்றுக் கொடுக்கிறோம், ஆகையால் கூலி மாத்திரம் போதாது எமக்கு சட்டபூர்வ அங்கீகாரம் அவசியம் தேவைப்படுகின்றது. இதை நவீன இராசதந்திரத்தின் முக்கிய படிமுறை வளர்ச்சியாகக் கருதலாம்.



Scanned by CamScanner

# ஒரு சில நபர்களால் தமது சொந்த நன்மைக்காக நடத்தப்படும் ஆட்சி

## OLIGARCHY

ஐரோப்பிய அரசறிவியல் வரலாற்றில் முதன்முறையாக அரசுகள் எத்தனை வகை, அவற்றின் அடிப்படைகள் யாது, அரசுமுறைகளால் ஏற்படும் நன்மை தீமைகள் என்ன? போன்ற தத்துவ விசாரணைகளை நடத்தியவர் கிரேக்க தத்துவஞானி அரிஸ்தோத்தில் என்பவராவர் - (ARISTOTLE கி.மு 384-322) இவர் சோக்கிரட்டிசின் (SOCRATES கி.மு 469-399) மாணவர் பிளேட்டோவின் (கி.மு 429-347) சீடர். அரிஸ்தோத்தில் பெரும் அறிவியல் பாரம்பரியத்தைக் கொண்டவர். மகா அலெக்சாந்தரின் இளம் பாராய ஆசிரியர் என்ற சிறப்பும் அவருக்கு உண்டு.

அரசுகள் பற்றிய வகைப்படுத்தலை அவர் இருவிதமாக மேற்கொண்டார்.

1. சமுதாயத்தை எத்தனை பேர் ஆட்சி செய்கின்றனர். அதாவது ஆட்சிபீடத்தில் எத்தனைபேர் இடம்பிடித்துள்ளனர்.
2. அவர்கள் தமது சொந்த நலன் நோக்கில் ஆட்சி செய்கின்றனரா அல்லது சமூக நன்மைக்காக ஆட்சி செய்கின்றனரா?

மேற்கூறிய வகைப்படுத்தலின் அடிப்படையில் 'ஒலிகார்கி' (OLIGARCHY) எனப்படுவது ஒரு சிலரால் தமது சொந்த நலனுக்காக மேற்கொள்ளப்படும் ஆட்சிமுறையாகும். அரிஸ்தோத்திலின் இக்கணிப்பீடு இன்னும் செல்லுபடியாகும். இதற்கு இராசதந்திர உலகில் முக்கிய பெறுமதி உண்டு. அரிஸ்தோத்திலின் கண்ணோட்டத்தில் அரசியலை ஆய்வுசெய்வோர் பெரும்பாலானோரின் கூற்றுப்படி உலகின் அரசுகள் யாவும் எண்ணிக்கையில் குறைந்த ஒரு சில மனிதர்களாலேயே நடத்தப்படுகின்றன. மக்களாட்சி நடக்கும் நாடுகளிலும் இதுதான் நடக்கின்றது.

கார்ள் மாக்ஸ், எங்கெல்ஸ் என்ற பொதுவுடமைச் சிந்தனையாளர்கள் 'ஈலைற்' (ELITE) என்ற சொல்லை இத்தொடரில் பயன்படுத்தினர். கார்ள் மாக்ஸ் (KARL MARX 1818-1883), எங்கெல்ஸ் (FRIEDRICH ENGELS 1820-1895) ஆகியோர் ஈலைற் என்ற பதத்திற்கு தொழிலாள வர்க்கத்திற்குத் தலைமை தாங்கும் கொமியூனிச கட்சித் தலைமைபீடம் என்று அர்த்தம் கொடுத்தனர். மேற்கு உலகச் சிந்தனையில் ஈலைற் மேட்டுக்குடியினரையும் அதிகார வர்க்கத்தையும் குறிக்கும் சொல்லாகப் பயன்படுகின்றது.

எல்லாவகை அரசுகளும் அடிப்படையில் ஒலிகார்கிகள் தான் என்ற கூறுவதை மிகைப்படுத்தல் என்று தட்டிக் கழிக்கமுடியாது. மக்கள் தமது வாக்களிப்பு மூலம் தெரிவு செய்த பிரதிநிதிகள் யாபேரும் கொள்கை உருவாக்கம், அமுலாக்கம் போன்ற செயற்பாடுகளில் பங்கெடுப்பதில்லை. ஆட்சியைக் கைப்பற்றிய தலைமைகள் கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துகின்றன. இது மறுக்க முடியாத யதார்த்தம். அதிகார மையம் (POWER CENTRE) எங்கே இருக்கிறது என்பதை இராசதந்திர



Scanned by CamScanner

அதிகாரிகளும் பிற நோக்கர்களும் தேடுகின்றனர். அது திரைமறைவில் கூட இருக்கலாம். உதாரணத்திற்கு ஒரு நாட்டின் பிரதமராகவோ ஜனாதிபதியாகவோ ஒருவர் இருப்பார். ஆனால் அவரை இயக்கும் சக்திகள் இலைமறை காயாக மறைந்திருக்கும்.

சோவியத் ஒன்றிய உடைவுக்குப்பின் ஆட்சியை கைப்பற்றிய பொறிஸ் யெல்ற்சின் (BORIS YELTSIN) காலத்தில் அப்பட்டமானதொரு 'ஒருசிலர் தமது நன்மைக்காக நடத்தும் ஆட்சி' நடைபெற்றது. ஒலிகார்கி ஆட்சிமுறைக்குச் சிறந்த நவீன உதாரணமாக யெல்ற்சின் கால ஆட்சி விளங்கியது. சோவியத் ஒன்றிய கால தேசிய உடமைகள் தனியார் மயமாக்கப்பட்டபோது யெல்ற்சினைச் சுற்றியுள்ள ஒட்டுண்ணிகள் மிகவும் மலிவான விலையில் எண்ணைக் கிணறுகளையும் பிற தேசிய வளங்களையும் பங்கீடு செய்து கொண்டனர். இது பொதுமக்களுக்கு யாதொரு நன்மையும் செய்யாத அநீதியாக அமைந்தது.

யெல்ற்சின் பெற்ற பெண்களும் அவர்களுடைய கணவன்மார் குடும்பங்களும் மேற்கூறிய சுரண்டிலில் பெரும்பங்கு எடுத்தனர் யெல்ற்சின் கால ருஷ்யாவை THE FAMILY அதாவது குடும்பம்தான் தனது சுயலாபத்திற்காக ஆட்சிசெய்ததாக விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இப்போதைய ருஷ்யத் தலைவர் புடினை (VLADIMIR PUTIN) யெல்ற்சின் தனது வாரிசாகத் தெரிவுசெய்து அரியாசனம் ஏற்றினார். தனது குடும்பத்தவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்ற இரகசிய ஒப்பந்தம் இருவருக்கும் இடையில் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

தனது ஆட்சியை உறுதிப்படுத்தும் முதற்கட்ட நடவடிக்கையாக யெல்ற்சின் காலத்து அதிகார வர்க்கத்துடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவேண்டிய கட்டாயம் அதிபர் புடினுக்கு இருந்தது. நீங்கள் கொள்ளையடித்ததை வைத்திருங்கள். அதற்கு மாற்றீடாக எனது அரசைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம் என்று உறுதிமொழி தாருங்கள். இந்த அடிப்படையில் இன்று ருஷ்ய ஆட்சி நடைபெறுகின்றது. மிகவும் சக்திவாய்ந்த இரு யெல்ற்சின் காலத்து முதலாளிகள் புடினுடன் இணக்கப்பாட்டிற்கு வர மறுத்தனர். பெர்கோவிஸ்கி, குசின்ஸ்கி என்ற இரு கோடீஸ்வரர்களும் இப்பொழுது ருஷ்யாவை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் வாழ்கின்றனர்.

இராசதந்திர கல்வியில் அதிகாரத்தின் இருப்பிடம் பற்றிய ஆய்வு மிகவும் முக்கியமாக மேற்கொள்ளப்படவேண்டும். தேடலை வெற்றிகரமாக முடிக்க இயலுமானால் பல காரியங்களைச் சுலபமாக முடிக்க இயலும். அதிகார பீடத்தின் பரப்பளவு எப்போதும் குறுகலாகத்தான் இருக்கும். கண்டுபிடிப்பதும், அதற்குள் நுழைவதும் அனுபவசாலிகளுக்கு இயன்ற காரியம்.



Scanned by CamScanner

# தீர்மானம் எடுப்போர்
# THE DECISION MAKERS

மன்னன் மனைவிக்குப் பயந்து நடப்பான், அவளோ தனது ஒரேயொரு செல்வ மகனுக்குப் பணிந்து நடப்பாள். நாட்டை ஆள்வது யார் என்ற வினாவைத் தர்க்க சாஸ்திரம் எழுப்புகின்றது. விடை எளிதாகக் கிடைக்க மாட்டாது. அதுமாதிரித்தான் தீர்மானம் எடுப்போர் யார் என்ற வினாவும், அரசறிவியலில் எழுப்பப்படுகின்றது. தனது பெயரையும் கைச்சாத்தையும் வழங்கும் தனிநபர் அல்லது குழு இறுதித் தீர்மானம் எடுப்பதாகக் கருதப்படுவதில் தவறில்லை. ஆனால் உண்மை அதுவல்ல. தீர்மானம் எடுக்கும் வெளித்தோற்றம் வேறு, தீர்மானத்திற்கான பின்னணிக் காரணிகள் வேறு என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும்.

தீர்மானம் எடுப்போர் நாட்டுக்கு நாடு வேறுபடுவர். இவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகவோ அல்லது மக்கள் பிரதிநிதிகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியினராகவோ இருக்கலாம். கட்சித் தலைவர், முப்படைத் தளபதி, பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்யும் தொழிலதிபர், மதகுருமார் போன்றோர் தீர்மானங்களின் தன்மையைத் தீர்மானிக்கின்றனர். சுருக்கமாகச் சொல்வதாயின் ஆட்சி பீடத்துடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்போர் செல்வாக்குச் செலுத்தும் நிலையில் உள்ளனர். தமது கருத்துக்களை ஆட்சி பீடத்தின்மீது செலுத்தும் வலு இவர்களிடம் உண்டு.

தனிமனிதன் பதவி வகித்தாலும் அவனுடைய குடும்பமும் ஆட்சியில் அங்கம் வகிக்கின்றது. பிலிப்பீன்ஸ், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் திருமணமான பெண்கள் நாட்டின் அதியுயர் பதவியில் அமர்ந்துள்ளனர். இவர்களுடைய வாழ்கைத் துணைவர்களும் தமது மனைவியர் ஊடாக ஆட்சியில் பங்கெடுப்பதாக நம் அறிகிறோம். சிறிலங்கா அரசியல் தலைமைத்துவம் சேனநாயக்கா ஜெயவர்த்தனா குடும்பம், பண்டாரநாயக்கா குடும்பம் ஆகிய இரண்டின் கைகளில் மாறமாறி வந்துள்ளது. கடந்த ஐம்பது வருட வரலாறு, இருகுடும்பங்களின் முரண்பாடுகளின் வரலாறாகப் பார்க்க முடிகின்றது. வாரிசு அரசியல் தகப்பன், பிள்ளை, கணவன், மனைவி என்ற குறுகிய வட்டத்துக்குள் சுற்றுகின்றது. ஒரு அரசியல் தலைவன் இறந்தால் தெற்கு ஆசியாவின் மனைவியர் மகிழ்ச்சி அடைவர் என்ற விமர்சனம் எழுவதற்கு இறந்த கணவனின் பதவி அவனுடைய மனைவிக்குச் சொந்தம் என்ற 'கோட்பாடு' காரணமாக அமைகின்றது.

கருத்துக் கணிப்பு நிறுவனங்களும், மக்கள் அபிப்பிராயத்தை குறிப்பிட்ட திசையில் செலுத்தும் நோக்கில் செயற்படும் ஊடகத்துறையும் தீர்மானங்களின் தன்மையை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. கருத்துக் கணிப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மக்கள் சந்திப்பை குடியிருப்புக்கள் மற்றும் வேலைத்தளங்கள் போன்ற இடங்களுக்குச் சென்று நடத்துகின்றனர். முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வினாக்களைக் கேட்டு, கிடைக்கும்



Scanned by CamScanner

விடையில் இருந்து 'மக்கள் கருத்து இதுதான்' என்ற அறிக்கையை கருத்துக் கணிப்பு நிறுவனங்கள் வெளியிடுகின்றன. கருத்து கணிப்பு நிறுவனங்கள் தொண்டர் ஸ்தாபனங்கள் அல்ல கருத்துக் கணிப்புக்கள் செய்வதற்காக அவர்களுக்கு யாரோ பணம் கொடுக்கிறார்கள். கருத்துக் கணிப்பு நடத்துவதற்கு நிறையச் செலவாகும். பணம் கொடுப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட எதிர்பார்ப்புடன் கருத்துக் கணிப்பை நடத்தும்படி ஏவுகிறார்கள். ஆகையால் கருத்துக் கணிப்பு என்பது ஒரு இலக்குடன் செய்யப்படும் உபாயமாகும். அரசின் தீர்மானத்தை முறியடிப்பதற்கு அலலது தீர்மானத்திற்கு உரமூட்டுவதற்கு அல்லது தீர்மானம் எடுக்கும்படி தூண்டுவதற்கு பெரும்பாலும் கருத்துக் கணிப்புக்கள் நடத்தப்படுகின்றன.

இது ஊடகத்துறையின் அறுவடைகாலம். மக்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் முயற்சியில் வெற்றிகண்ட ஊடகத்துறையினர் இப்போது உலக விவகாரங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். சிறிய பத்திரிகைகள், சிறிய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் பாரிய தொடர்பூடகத்துறை நிறுவனங்களுடன் போட்டியிட இயலாது சரணடைந்துள்ளன. முன்பு அரசின் ஊதுகுழலாக ஊடகத்துறை இடம்பெற்றது. இப்போது நிலைமை மாறிவிட்டது. அரசு ஊடகத்துறையின் சொற்படி இயங்குகின்றது. றூப்பேட் மேடொக்கின் சாம்ராச்சியம் (THE RUPERT MURDOCH MEDIA EMPIRE) அவுஸ்திரேலியாவில் ஆரம்பித்து, ஹொங்கொங் ஊடாக, இந்தியா, இங்கிலாந்து அமெரிக்காவரை பரவியுள்ளது. இவருக்குச் சொந்தமான பத்திரிகைகளும், தொலைக்காட்சி நிறுவனங்களும் மக்களைத் திசை திருப்புகின்றன, அரசுகளை வழிநடத்துகின்றன. அமெரிக்காவில்" சி.என்.என், இங்கிலாந்தில் பீ.பீ.சி போன்ற சாம்ராச்சியங்களும் இதையே செய்கின்றன.

பதவி விலகி இளைப்பாறிய மூத்த தலைவர்களும் தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்கின்றனர். இளைப்பாறிய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், இங்கிலாந்தின் மாகரேற் தச்சர், சிங்கப்பூரின் லீ குவான் யூ போன்ற முன்னாள் தலைவர்கள் இன்றும் தமது செல்வாக்கைச் செலுத்துகின்றனர். லீ குவான் யூவுக்கு 'மூத்த அமைச்சர்' SENIOR MINISTER என்ற பதவி வழங்கப்பட்டுள்ளது. முக்கிய தேசிய விவகாரங்கள் அவருடைய ஒப்புதல் இன்றி முன்னெடுக்கப்படுவதில்லை. அவர் தனது பதவிக் காலத்தில் பயன்படுத்திய பிரதமர் அலுவலகம் அவர் இளைப்பாறியபின் பதவிக்கு வந்த புதிய பிரதமரால் பயன்படுத்தபடுவதில்லை. அது அப்படியே வெறுமனே வைக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா போன்ற வலுவிழந்த சிறிய நாடுகளின் தீர்மானம் எடுக்கும் சக்தி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பக்கத்து நாடான இந்தியா என்ன செல்லுமோ, எமக்கு உதவி வழங்கும் தூரத்து நாடான அமெரிக்கா என்ன சொல்லுமோ என்று அஞ்சவேண்டிய கட்டாயம் அதற்கு உண்டு. தீமானங்கள், கொள்கை முன்னெடுப்புக்கள், முக்கிய நடவடிக்கைகள் என்பன பல பின்னணி காரணிகளின் வெளிப்பாடாக அமைகின்றன எனலாம்.

தீர்மானம் எடுக்கும்போதும் அதற்கு முன்பும் பின்பும் சோதிடர்களை நாடும் வழக்கம் தெற்கு ஆசிய அரசியலில் காணப்படுகின்றது. திறப்பு விழாவுக்கு நாள் நேரம் குறிப்பது தொடக்கம் போர் நடவடிக்கை தொடங்குவதற்குச் சாதகமான நாள் நேரம் வைப்பது வரை சோதிடர்களின் சொற்படி நடக்கின்றன. 1999 ஒக்ரோபரில் இந்தியாவின் மாநிலம், ஒறிசா வரலாறு காணாத பெரும் சூறாவளியைக் கண்டது. 20,000 மக்கள் உயிரிழந்தனர், பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் கொல்லப்பட்டன, 2 மில்லியன் வீடுகள் அழிக்கப்பட்டன. சோதிடம் தலையிடாமல் விட்டிருந்தல் உயிரழிவைத் தவிர்த்திருக்கலாம் அல்லது பெருமளவில் குறைத்திருக்கலாம்.

சூறாவளி வீசுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாகவே அதுபற்றிய வானிலை அறிக்கை ஒறிசா முதல்வர் கிரிதர் கமங் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர் உடனடியாக ஒறிசாவின் 3 பிரபலமான சோதிடர்களை அழைத்து யோசனை கேட்டார். அவர்கள் ஒரு இரவு முழுவதும் 'பூசை போட்டபின்' காற்று ஒறிசாவைப் பாதிக்காமல் வானத்தின் உயர் மட்டமூடாகப் பறந்து சென்றுவிடும் என்று கூறினர். அவர்கள் கூறிக்கொண்டிருக்கும் போதே புயல்காற்று பலமாக வீசிக்கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் 'அஞ்சேல் சோதிடம் பொய்க்காது' என்று உறுதி அளித்தனர். முதலமைச்சர் கமங் எடுத்த தவறான தீர்மானம் 20,000 உயிர்களைப் பறித்தது – THE ORISSA TRAGEDY BY RUBEN BANNERJEE: BOOKS TODAY, NEW DELHI. 2001.

அமெரிக்க அதிபர்கள் தேர்தலில் போட்டியிடும் காலத்தில் பலகோடி பெறுமதியான டொலர்களைச் செலவிடுகின்றனர். இதை அவர்கள் தேர்தல் நிதி உதவியாக தனியார் வர்த்தக ஸ்தாபனங்கள், தனிமனிதர்கள் போன்றோரிடம் இருந்து பெறுகின்றனர். இதன்காரணமாக அமெரிக்க அதிபர்கள் இவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. நன்கொடை கொடுத்தோரின் கைப்பாவையாக அமெரிக்க அதிபர்கள் இயங்குவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். மின்சக்தி, இரும்பு, எரிபொருள், இராணுவ ஆயுத தளபாடங்கள் தயாரிக்கும் தொழிற்துறைகள் அமெரிக்க அதிபர்கள் மீது நிதிஉதவி செய்வதன் மூலம் பெரும் ஆதிக்கம் செலுத்துகின்றன. எயிபாக் (AIPAC) என்ற அமெரிக்க யூதர்கள் சங்கம், வலதுசாரி கிறிஸ்தவ அமைப்பு போன்றவையும் தேர்தல் நிதியாகப் பெருந்தொகையை வழங்குகின்றன. நிதிஉதவி வழங்குவோர் அமெரிக்க அரசு எடுக்கும் தீர்மானங்களின் தன்மையை நிர்ணயிக்கின்றனர் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் மனைவியருக்கு காத்திரமான இடமுண்டு. அமெரிக்காவின் 28 ஆம் அதிபர் வூட்றோ வில்சன் பதவி வகிக்கும் காலத்தில் ஒக்ரோபர் 2, 1919இல் கடும் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தார். 1915 இல் அவர் திருமணம் செய்த இரண்டாவது மனைவி எடிக் கால்ற் 'பதில் அதிபராக' உத்தியோகப் பற்றற்ற முறையில் நிர்வாகம் செய்தார். வில்சன் சிறிது காலத்தின் பின் நோயின் பிடியிலிருந்து விலகினாலும் 1921இல் பதவி

விலகும்வரை அவருடைய மனைவி தனது அரசியல் தலைமீடுகளைத் தொடர்ந்தார். தெற்கு ஆசிய அரசியல் தேரை, அரசியல்வாதி, இராணுவம், மதகுரு என்ற மூன்று குதிரைகள் இழுத்துச் செல்கின்றன. மனைவி என்பவளை நான்காவது குதிரையாகக் குறிப்பிடலாம்.

## சுய மதிப்பீடு
## SELF-ESTIMATE

உன்னை நீ அறிவாய் என்ற ஆத்மீகத் தத்துவத்திற்கு நிகரானதொரு முக்கிய நிலைப்பாடு இராசதந்திரத்தில் நிலவுகின்றது. தனது நாண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பதை கொள்கை வகுப்புச் செய்யும் நாடு அறிந்திருக்க வேண்டும். இராசதந்திரத்தில் நிரந்தர நண்பனும் இல்லை, எதிரியுமில்லை என்பது உண்மைதான், இருப்பினும் இத்தகைய கணிப்பீடு மிகவும் அவசியம். காலத்திற்குக் காலம் எதிரியும் நண்பனும் இடம்மாறலாம், பரவாயில்லை இதற்காகத்தான் எதிரி நண்பன் என்ற வித்தியாசம் பாராட்டாமல் எல்லார் பற்றிய தரவுகளையும், தகவல்களையும் உலக நாடுகள் திரட்டுகின்றன.

ஒவ்வொரு நாடும் தனது அரசியல், இராசதந்திர, இராணுவ, மற்றும் பொருளாதாரம் பற்றிய சுய மதிப்பீடுகளை பாரபட்சமின்றி மேற்கொள்ள வேண்டும். இதில் நேர்மையும், பொய்யின்மையும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டும். நாட்டின் பலம் பற்றிய மதிப்பீட்டிற்கு இது அத்தியாவசியம். அல்லாவிட்டால் பெறுமதியான உள்விவகார/வெளிவிவகாரக் கொள்கைகளை உருவாக்க முடியாது. மதிப்பீடு என்பது இருவகைச் செயற்பாடு – ஒன்று தன்னைப் பற்றியது. அடுத்தது பிறநாடுகள் பற்றியது இரண்டும் சம அளவு முக்கியமானவை.

தேசிய நலனும், தேசிய திறனும் ஒன்றல்ல. திறன் இருப்பதால் நலன் இருப்பதாகக் கற்பனை செய்யக்கூடாது. எந்த நாட்டிலும் இராணுவர்தியாகத் தலையிடும் திறன் அமெரிக்காவிடம் இருக்கலாம். அதன்மூலம் தேசிய நலன் கிடைக்குமா என்றால் சந்தேகமே, வெளிவிவகாரக் கொள்கை விவேகமுள்ளதாக இருத்தல் வேண்டும். இதை ஆங்கிலத்தில் PRUDENT DIPLOMACY விவேகமான இராசதந்திரம் என்பார்கள்.

தன்னுடைய தேவைகள், குறைபாடுகள், இலக்குகள் என்பனவற்றைத் துல்லியமாக அளவீடு செய்தபின் பிறநாடுகளின் தேவைகள், குறைபாடுகள், இலக்குகள் என்பனவுடன் ஒப்பீடு செய்யவேண்டும். இன்னொரு விதமாகச் சொல்வதாயின் ஒரு விவேகமான வெளிவிவகாரக் கொள்கை தனது தேசிய நலனை மாத்திரமல்ல பிறநாடுகளின் இலக்குகளையும் எடைபோட்டு வைத்துக் கொள்ளவேண்டும். தன்னுடைய நலன் மாத்திரம் பெரிதென்று செயற்பட்டால் முரண்பாடுகள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது.



Scanned by CamScanner

சிறிய, வலுவற்ற நாடுகள் பலம்வாய்நத நாடுகளுடன் உறவுகளில் ஈடுபடும்போது தமது வெளிவிவகாரக் கொள்கையை சக்திவாய்ந்த நாடுகளுடன் ஒத்துப்போகும் விதத்தில் உருவாக்கவேண்டும். இது தவிர்க்க முடியாத உலக யதார்த்தம். இந்தவகைப் போக்கு சிறிய நாட்டின் நலனுக்கு உதவும். பெரிய நாட்டின் எதிர்பார்ப்பு என்னவென்பதை சிறிய நாடு கணிப்பீடு செய்து அதற்கு அமைவாகத் தனது கொள்கையை உருவாக்க வேண்டும். வளைந்து கொடுத்து வெல்லவேண்டிய கட்டாயம் உண்டு.

# சிந்தனையாளர்களின் ஆலோசனைக் குழுக்கள்

## THINK TANKS

நிபுணத்துவ அறிவுடைய கல்விமான்கள் மற்றும் தொழில்சார் மேன்மையுள்ளளோர் ஒன்றுகூடிக் குழுவாகவோ, நிரந்தர அமைப்பாகவோ அமர்ந்து ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒழுங்கை 'திங்க் டாங்க்' என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள். திங்க் என்ற சொல் சிந்தனை, திட்டமிடல், ஆலோசனை வழங்கல் ஏன்ற மூன்று செயற்பாடுகளைக் குறிக்கும். TO THINK IS TO EXERCISE YOUR MIND IN AN ACTIVE WAY, TO DEVISE PLANS AND TO ADVICE என்று வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட திசையில் உங்கள் கருத்தை சுறுசுறுப்பாகச் செலுத்துதல், திட்டமிடல், ஆலோசனை வழங்கல் என்பது இதன் பொருள். டாங்க் என்ற சொல் தொட்டி, போர் வாகனம், திரவம் நிரப்பும் பாத்திரம் என்பனவற்றைக் குறிக்கும். இங்கே அமர்விடம் என்ற பொருள்பட அது பயன்படுகின்றது.

திங்க் டாங்க் என்ற அமைப்புக்கள் நவீன இராசதந்திரம், அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. இந்தவகை அமைப்புக்கள் கொள்கைத் திட்டமிடலுக்கு முக்கிய பங்காளியாகச் செயற்படுகின்றன. உலகின் ஒவ்வொரு நாட்டிலும் இவை காணப்படுகின்றன, எண்ணிக்கையில் குறைந்தோ கூடியோ இருந்தாலும் அவை நிட்சயமாகக் காணப்படுகின்றன எனலாம். சிந்தனையாளர்களின் ஆலோசனைக் குழுக்கள் பெரும்பாலும் பல்கலைக் கழகங்களில் இருப்பது கண்கூடு.

ஒரு வளர்ச்சி அடைந்த நாட்டின் பல்கலைக் கழகங்கள் நால்வகைப்படும்

1. அரசின் நிதி உதவியுடன் இயங்கும் பல்கலைக் கழகங்கள்.
2. தனியார் உடமையான பல்கலைக் கழகங்கள்.
3. வெளிவாரிப் பட்டப்படிப்பு வழங்கும் பல்கலைக் கழகங்கள்.
4. தபால் மூலம் பாடநெறிகள் வழங்கும் பல்கலைக் கழகங்கள்.



Scanned by CamScanner

சிறிய, வலுவற்ற நாடுகள் பலம்வாய்நத நாடுகளுடன் உறவுகளில் ஈடுபடும்போது தமது வெளிவிவகாரக் கொள்கையை சக்திவாய்ந்த நாடுகளுடன் ஒத்துப்போகும் விதத்தில் உருவாக்கவேண்டும். இது தவிர்க்க முடியாத உலக யதார்த்தம். இந்தவகைப் போக்கு சிறிய நாட்டின் நலனுக்கு உதவும். பெரிய நாட்டின் எதிர்பார்ப்பு என்னவென்பதை சிறிய நாடு கணிப்பீடு செய்து அதற்கு அமைவாகத் தனது கொள்கையை உருவாக்க வேண்டும். வளைந்து கொடுத்து வெல்லவேண்டிய கட்டாயம் உண்டு.

# சிந்தனையாளர்களின் ஆலோசனைக் குழுக்கள்

## THINK TANKS

நிபுணத்துவ அறிவுடைய கல்விமான்கள் மற்றும் தொழில்சார் மேன்மையுள்ளளோர் ஒன்றுகூடிக் குழுவாகவோ, நிரந்தர அமைப்பாகவோ அமர்ந்து ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒழுங்கை 'திங்க் டாங்க்' என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள். திங்க் என்ற சொல் சிந்தனை,, திட்டமிடல், ஆலோசனை வழங்கல் என்ற மூன்று செயற்பாடுகளைக் குறிக்கும். TO THINK IS TO EXERCISE YOUR MIND IN AN ACTIVE WAY, TO DEVISE PLANS AND TO ADVICE என்று வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட திசையில் உங்கள் கருத்தை சுறுசுறுப்பாகச் செலுத்துதல், திட்டமிடல், ஆலோசனை வழங்கல் என்பது இதன் பொருள். டாங்க் என்ற சொல் தொட்டி, போர் வாகனம், திரவம் நிரப்பும் பாத்திரம் என்பனவற்றைக் குறிக்கும். இங்கே அமர்விடம் என்ற பொருள்பட அது பயன்படுகின்றது.

திங்க் டாங்க் என்ற அமைப்புக்கள் நவீன இராசதந்திரம், அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. இந்தவகை அமைப்புக்கள் கொள்கைத் திட்டமிடலுக்கு முக்கிய பங்காளியாகச் செயற்படுகின்றன. உலகின் ஒவ்வொரு நாட்டிலும் இவை காணப்படுகின்றன, எண்ணிக்கையில் குறைந்தோ கூடியோ இருந்தாலும் அவை நிட்சயமாகக் காணப்படுகின்றன எனலாம். சிந்தனையாளர்களின் ஆலோசனைக் குழுக்கள் பெரும்பாலும் பல்கலைக் கழகங்களில் இருப்பது கண்கூடு.

ஒரு வளர்ச்சி அடைந்த நாட்டின் பல்கலைக் கழகங்கள் நால்வகைப்படும்

1. அரசின் நிதி உதவியுடன் இயங்கும் பல்கலைக் கழகங்கள்.
2. தனியார் உடமையான பல்கலைக் கழகங்கள்.
3. வெளிவாரிப் பட்டப்படிப்பு வழங்கும் பல்கலைக் கழகங்கள்.
4. தபால் மூலம் பாடநெறிகள் வழங்கும் பல்கலைக் கழகங்கள்.



Scanned by CamScanner

மேற்கூறிய நான்கில் எந்தவகையான பல்கலைக் கழகமாக இருப்பினும் பல்கலைக் கழகங்களின் அடிப்படை நோக்கங்களை மூன்றாக வகுக்கலாம்;

1. அறிவுப் பரப்பலும் அதற்கான அத்தாட்சிச் சான்றிதழ் வழங்கலும்.
2. ஆராய்ச்சியும் ஆலோசனைப் பணிகளும்.
3. தேசிய மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தல்.

நாட்டின் மேம்பாட்டிற்கு பல்கலைக் கழகங்கள் பின்வருமாறு உதவுகின்றன;

1. தேசிய திட்டமிடல் மற்றும் கொள்கை உருவாக்கத்திற்கு ஆசிரியர் பீடம் வழங்கும் உதவி.
2. மாணவர்கள் தேசியமட்டப் பிரச்சனையில் தம்மை ஈடுபடுத்தல்.
3. பல்கலைக் கழகங்களின் பங்களிப்பை வரவேற்று அரசு வழங்கும் ஊக்குவிப்பும், பல்கலைக் கழகங்களின் ஆலோசனைகளை வரவேற்றலும்.

பல்கலைக் கழகங்களுக்கு அடுத்தபடியாக பாதுகாப்பு விவகாரங்கள், வெளிவிவகாரம், அனைத்துலக உறவுகள், அயல் மற்றும் தூர நாடுகள் பற்றிய ஆழமான ஆய்வுகள், பொருளாதாரம் குறிப்பாக வர்த்தகம் சம்பந்தமான விடயங்களை ஆய்வு செய்யும் 'திங்க் டாங்க்' குழுக்கள் தமது பங்களிப்பை தேசிய வளர்ச்சிக்கு வழங்குகின்றன.

கொள்கைத் திட்டமிடலுக்கு பின்னணியில் இயங்கும் இக்குழுக்களை அமைப்பதற்கு ஒரு நாடு விடுதலை அடையும்வரை காத்திருக்க வேண்டியதில்லை. விடுதலை என்றோ நிட்சயம் என்ற குறிக்கோளுடன் அத்தியாவசியமான கட்டமைப்புக்களை உருவாக்கவேண்டியது தலைமையின் தலையாய கடமை. இந்தியா 1947 இல் விடுதலை பெறுவதற்கு முன்பே 1943 இல் தனது முதலாவது குழுவை அமைத்தது. அனைத்திந்தியா காங்கிரஸ் கட்சி அப்போது இதற்கான ஒழுங்குகளைச் செய்தது. அன்றுதொட்டு அயல் மற்றும் தூரநாடுகள் பற்றிய எல்லாவகை ஆய்வுகளையும் இந்தியாவின் திங்க் டாங்க் குழுக்கள் மேற்கொள்கின்றன.

இந்திய வெளியுறவுக் கொள்கை உருவாக்கத்தில் இந்தியாவின் வெளித்துறைப் புலனாய்வு அமைப்பான றோ முக்கிய பங்களிப்பு செய்கின்றது. இது இந்தியாவுக்கு மாத்திரம் தனித்துவமான உண்மையல்ல. வெளியுறவுக் கொள்கை உருவாக்கத்தில் புலனாய்வு அமைப்புக்களின் பங்களிப்பு அளப்பரியது. றோ என்ற ஆங்கில மூன்றெழுத்து (RAW) RESEARCH AND ANALYSIS WING என்பதின் முதலெழுத்துக் கூட்டாகும். அதாவது ஆராயச்சிக்கும் பகுப்பாய்வுக்குமான அலகு என்பது பொருள்.

கொதிநிலையிலுள்ள அயல்நாடு என்ற காரணத்தால் சிறிலங்கா விவகாரங்களில் இந்தியாவின் ஆராய்ச்சிக் கழகங்கள் மிகப்பெரிய கவனம் எடுக்கின்றன. புதுடில்லி, ஜெய்ப்பூர், கொல்கத்தா, சன்திகார், ஆகிய பெருநகரப் பல்கலைக் கழகங்கள் சிறிலங்கா பற்றிய விவகாரங்களை ஆய்வு செய்கின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய



Scanned by CamScanner

அரசறிவியற் பிரிவு சிறிலங்கா மீது கவனம் செலுத்துகின்றது றோ அமைப்பைச் சேர்ந்த புத்திஜீவிகள் இப்பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகின்றனர். இவர்கள் தமது சிறிலங்கா பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களை நூல் மற்றும் கட்டுரை வடிவமாக வெளியிடுகின்றனர்.

சென்னையின் பத்திரிகை நிறுவனமான கஸ்தூரி ஸ்தாபனம் (KASTURI &CO) இந்து தினசரியையும், புறொன்ற்லைன் சஞ்சிகையையும் வெளியிடுகின்றது. சிறிலங்கா ஆட்சியாளர்களுடன் நெருங்கிய உறவுகளைப் பேணும் இப்பத்திரிகை தனது பங்கிற்கு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தனது வெளியீடுகளில் பிரசுரிக்கின்றது. அமெரிக்காவின் மாசாசூசெற்ஸ் மாநிலத் தொழில்நுட்பக் கல்லூரியின் அரசறிவியல் பிரிவில் பணியாற்றும் ஈழத்தமிழரானவர் ராம் மாணிக்கலிங்கம். இந்த நிறுவனம் நடத்தும் ஆராய்ச்சிகளுக்கும் பத்திரிகை மற்றும் சஞ்சிகைக் குறிப்புக்களுக்கும் பங்களிப்புச் செய்கிறார்.

இந்திய வெளிவிவகார அமைச்சகம் ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தை (JAWAHARLAL NEHRU UNIVERSITY) புதுடில்லியில் திறந்துள்ளது. சிறிலங்கா விவகாரங்களுடன் பிரதமர் இந்திரா காலத்தில் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்த கால்விமானும் இராசதந்திரியுமாகிய ஜீ பார்த்தசாரதி பல்கலைக்கழகத்தின் முதலாவது தலைவராக நியமனம் பெற்றார். முன்னாள் இந்திய வெளிவிவகாரச் செயலராக பதவிவகித்த திரு பார்த்தசாரதி தனது 83 ஆம் வயதில் இறக்கும்வரை (ஆகஸ்து 01,1995) ஜே.என்.யூ (JNU) என்றழைக்கப்படும் இக்கல்வி நிலையத் தலைவராக இருந்தார். இங்கு பணியாற்றும் பெருமளவு பேராசிரியர்களில் கூடுதலானோர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

புதுடில்லியில் கொள்கைள் பற்றிய ஆராய்ச்சி மையம் -CENTRE FOR POLICY RESEARCH- இன்னுமோர் மிகவும் சக்திவாய்ந்த புத்திஜீவிகள் அமைப்பு. வட இந்தியப் பேராசிரியர்கள் பலர் இதில் அங்கம் வகிக்கின்றனர். சிறிலங்கா பற்றிய எட்டாவது அனைத்துலக மாநாட்டை 2001 ஆம் வருடம் இந்தியா ஜெய்ப்பூரில் நடத்தியது. சிறிலங்கா பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் இராணுவ உயர்மட்ட அதிகாரிகள், பேராசிரியர்கள், வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் என்போர் இந்த மாநாட்டில் தமது ஆராய்ச்சிக் குறிப்புக்களை வாசித்தளித்தனர்.

அனைத்துலக கற்கை நெறிகளுக்கான பண்டாரநாயக்கா மையம் -THE BANDARANAIKE CENTRE FOR INTERNATIONAL STUDIES- என்ற சிறிலங்காவின் புத்திஜீவிகள் அமைப்பு இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. இது இராசதந்திரிகள் பயிற்சிக் கல்லூரியாகவும், இராசதந்திரம் மற்றும் நவீன அரசியல் சம்பந்தமான புத்தக வெளியீட்டுப் பிரிவாகவும் செயற்படுகின்றது. சிறிலங்காவின் வெளிவவிகார அமைச்சகம் அனைத்துலக உறவுகள் அமைப்பை -THE INSTITUTE OF INTERNATIONAL RELATIONS- உருவாக்கியுள்ளது. இது தனது முதலாவது மாநாட்டை 2002இல் நடத்தியது. இந்திய விஞ்ஞானி எம்.எஸ் விஸ்வநாதன் கௌரவ விருந்தினராக வந்திருந்தார்.



Scanned by CamScanner

அமெரிக்காவின் போட் பவுன்டேசனின் (FORD FOUNDATION) நிதி உதவியுடன் செயற்படும் இனவிவகாரக் கற்கை நெறிகளுக்கான அனைத்துலக மையம் - THE INTERNATIONAL CENTRE FOR ETHNIC STUDIES - கொழும்பின் மிகப்பிரபலமான திங்க் டாங்க் அமைப்புக்களில் ஒன்றாகும். இதனுடைய கிளை அமைப்பு கண்டியில் இயங்குகின்றது. கண்டிக் கிளையின் இயக்குநர் பேராசிரியர் கிங்ஸ்லி தி சில்வா (KINGSLEY DE SILVA) போத்துக்கல், நெதர்லாந்து, பிரித்தானியா ஆகிய நாடுகள் பற்றிய அனைத்துலக நிர்வாகம் (INTERNATIONAL ADMINISTRATION) பற்றிய ஆய்வுகளை மேற்கொள்பவர். ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் இருபாகம் கொண்ட வாழ்க்கை நூலை இவர் சிறிலங்காவுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் டாக்டர் ஹோவாட் றிகின்சுடன் (HOWARD WRIGGINS) இணைந்து எழுதியுள்ளார்.

ஜெகான் பெரேரா (JEHAN PERERA) என்ற அமெரிக்கவின் ஹாவாட் பல்கலைக் கழகப் பட்டதாரி தேசிய சமாதானப் பேரவை என்ற – NATIONAL PEACE COUNCIL – என்ற அமைப்பை வெளிநாட்டு நிதியுதவியுடன் உருவாக்கியுள்ளார். இவர் அரசுக்கு அரசியல் ஆலோசனைகளை வழங்குவார். 2001இல் இவர் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது பல்கலைக்கழக மாணவர் தலைவர்களை சிநேகபூர்வமாக படம்பிடித்தார். சிறிது காலத்தின் பின் அப் படங்களை கொழும்புப் பத்திரிகைகள் 'புலி மாணவர்கள்' என்ற தலைப்பின் கீழ் பிரசுரித்தன. மார்கா இன்ஸ்ரிற்றியூட் MARGA INSTITUTE, அகோட்டிக் என்ற அமைப்புக்களும் கொழும்பில் இயங்குகின்றன. ACTION GROUP OF TAMILS IN COLOMBO என்பது அகோட்டிக் பெயரின் விரிப்பாகும்.

இன்று இஸ்ரேயில் என்று அழைக்கப்படும் நிலப்பரப்பு 1915 இல் பாலஸ்தீனம் என்று அழைக்கப்பட்டது. அன்று அது துருக்கியின் உதுமான் சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1917 – 18 இல் உதுமான் சாம்ராச்சியம் இல்லாதொழிந்தது, பாலஸ்தீனம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தது. இஸ்ரேயில் நாடு 1948 இல் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் 1918 இல் ஜெருசலேம் நகரில் ஹீபுரு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு விட்டது. THE HEBREW UNIVERSITY OF JERUSALEM இப்பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர் மாட்டின் வான் கிறேவால்ற் – MARTIN VAN CREVELD போரியல் வரலாறு மற்றும் நடைமுறைகள் பற்றிய பல நூல்களை எழுதியுள்ளார். இவை இஸ்ரேலிய அமெரிக்கா, பிரித்தானியா இராணுவக் கல்லூரிகளில் பயன்படுத்தப்படுகின்றன. இராணுவம் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குவதில் வல்லவராக இவர் விளங்குகிறார்.



Scanned by CamScanner

பிரித்தானியாவின் திங்க் டாங்க் குழுக்களில் மிக முக்கியமான இரண்டை இங்கு குறிப்பிட முடியும்.

1. சர்வதேச விவகாரங்களுக்கான முடிக்குரிய அமைப்பு - ROYAL INSTITUTE OF INTERNATIONAL AFFAIRS

2. கேந்திர கற்கை நெறிக்கான அமைப்பு - INSTITUTE OF STRATEGIC STUDIES, முதலாவது உலக விவகாரங்கள், அதாவது நிகழ்வுகளை ஆய்வு செய்கின்றது. அடுத்தது அனைத்து உலக நாடுகளின் இராணுவ நிலவரங்களை இடைவிடாது கவனித்துக் கொள்கின்றதோடு பகுப்பாய்வும் செய்கின்றது. 13 ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒக்ஸ்போட் கேம்பிறிஜ் பல்கலைக் கழகங்களிலும் மேற்கூறிய இரு விவகாரங்களும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. பிரித்தானியாவின் உள்நாட்டு உளவு ஸ்தாபனம் எம் ஐ5, ஜேன்ஸ் டிபென்ஸ் பிரசுர நிலையம் என்பனவும் தமது ஆய்வுகளை மேற்கொள்கின்றன.

சீனாவின் பீக்கிங் பல்கலைக் கழகம் 1952 இல் உருவாக்கப்பட்டது. முன்பிருந்த பீக்கிங், திசிங்குவா மற்றும் யென்சிங் - PEKING, TSINGHUA, YENCHING - பல்கலைக் கழகங்களை இணைத்து இது உருவாக்கப்பட்டது. இப்போது பீஜிங் பல்கலைக்கழகம் என்று அழைக்கப்படுகின்றது. சீனாவின் முக்கிய ஆய்வு மன்றங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்படலாம்.

1. சீனாவின் சர்வதேச கற்கை நெறிகளுக்கான அமைப்பு - CHINA INSTITUTE OF INTERNATIONAL STUDIES.
2. சீனாவின் சமூக விஞ்ஞானப் பயிலகம் - CHINESE ACADEMY OF SOCIAL SCIENCES.
3. சமகால அனைத்துலக உறவுகளுக்கான சீனா அமைப்பு - CHINA INSTITUTE OF CONTEMPORARY INTERNATIONAL RELATIONS.
4. தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின், கேந்திர கற்கை நெறிப்பிரிவு - NATIONAL DEFENSE UNIVERSITY, INSTITUTE FOR STRATEGIC STUDIES.
5. சீன விஞ்ஞானப் பயிலகம் - CHINESE ACADEMY OF SCIENCES அரசு கட்டுப்பாடு குறைந்த ஒரு தனி அமைப்பான இப்பயிலகம் இராணுவ - அரசியல் பகுப்பாய்வுகளை மேற்கொள்கின்றது. சீன இராணுவம் இட்ட பணிகளையும் நிறைவேற்றுகின்றது.

வாஷிங்ரன் தலைநகரின் ஜோர்ஜ்ரவுண் வெளிநாட்டுச் சேவைக்கான பயிற்சிக் கல்லூரி - GEORGETOWN SCHOOL OF FOREIGN SERVICE - அமெரிக்க இராசதந்திரிகளின் கல்வி மற்றும் பயிற்சியை வழங்குகின்றது. ஒவ்வொரு வருடமும் இது தலைவர்கள் ஆராய்ச்சி மாநாட்டை (LEADERSHIP SEMINAR) கோடை காலத்தில் நடத்துகின்றது. உலகின்



Scanned by CamScanner

பல பாகங்களில் இருந்து அரசுத்தலைவர்கள், அரச நிர்வாகிகள், இராணுவ அதிகாரிகள், தொழிலதிபர்கள், நிதித்துறை அதிகாரிகள், பத்திரிகை ஆசிரியர்கள் அழைப்பின் பேரில் வருகை தருகின்றனர். கொள்கைத் திட்டமிடலுக்கு அத்திவாரமாக இந்த அமர்வு கருதப்படுகின்றது.

இதே தலைநகர் வாஷிங்ரனில் பொட்டோமாக் கல்வி அமைப்பு – THE POTOMAC INSTITUTE – செயற்படுகின்றது. சிஐஏ உளவமைப்புடன் நெருங்கிய தொடர்புடைய இக்கல்விக் கழகம் பல பிரபலமான பேராசிரியர்களை பணிக்கு அமர்த்தியுள்ளது. மூத்த பேராசிரியர் யோனா அலெக்சாந்தார் (YONAH ALEXANDER) வேர்ஜீனியா மாநிலத்தின் அனைத்துலக பயங்கரவாதம் பற்றிய கற்கை நெறி மையத்தின் இயக்குநராகப் பணியாற்றுகிறார் – INTERNATIONAL CENTER FOR TERRORISM STUDIES அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கைத் திட்டமிடல் ஆலோசகர்களில் ஒருவராகப் பேராசிரியர் யோனா அலொக்சாந்தர் இடம்பெறுகிறார். கொழும்பின் பண்டாரநாயக்கா அனைத்துலக கற்கை நெறிகளுக்கான மையத்துடன் தொடர்புகளைப் பேணுபவர்.

அமெரிக்காவின் புகழ்பூத்த பல்கலைக் கழகங்களான ஹார்வார்ட் (HARVARD), யேல் (YALE), ஸ்ரான்போட் (STANFORD), பிறின்ஸ்ரன் (PRINCETON) ஆகியவற்றின் அரசியல் மற்றும் இராசதந்திர கற்கை நெறிப் பிரிவுகளில் பணியாற்றும் பேராசிரியர்கள் திங்க் டாங்க் அமர்வுகளை மேற்கொண்டு அரசுக்கு உதவுகின்றனர். பேராசிரியர் ஹென்றி கிசிங்கர் ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய வேளையில் நிக்சன் அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அதன்பின் அவர் நிக்சனின் இராஜங்க செயலராகப் பதவி உயர்வு பெற்று உலகப்புகழ் அடைந்தார். மேற்படிப்பை மேற்கொள்ளும் இந்திய, இந்தோனேசிய, சிங்கப்பூர்ச் சிறிலங்கா மாணவர்கள் பெரும்பாலும் மேற்கூறிய பல்கலைக் கழகங்களில் இணைகின்றனர். இதனால் கருத்துப்பரிமாற்றம் ஏற்படுகின்றது. இது நவீன இராசதந்திரத்தின் அடிப்படையாக அமைகின்றது.

சிறிலங்காவின் அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய (1992 – 1995) தெரசிற்றா ஷபர் (TERESITA SCHAFFER) வாஷிங்ரனின் அனைத்துலக கேந்திர மற்றும் கற்கை நெறிகளுக்கான மையத்தின் – CENTRE FOR STRATEGIC AND INTERNATIONAL STUDIES – தெற்கு ஆசியத் திட்டத்தின் இயக்குநராகச் செயற்படுகிறார் – DIRECTOR OF SOUTH ASIA PROGRAMME – இவர் சிறிலங்கா நிலவரம் பற்றிய ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் அமெரிக்க அரசுக்கு வழங்குகிறார். அவர் 1994/95 போச்சுவார்த்தைகள் – புலிகள் அரசு – பற்றிய ஆய்வு நூலைப் பிரசுரித்துள்ளார். மத்திய கிழக்கு விவகாரங்களுக்குப் பொறுப்பான இன்னுமோர் திங்க் டாங்க் அமைப்பு WASHINGTON INSTITUTE OF NEAR EAST AFFAIRS என்ற பெயருடன் இயங்குகின்றது. செல்வி ஷாபர் 1989 – 1992 காலப்பகுதியில் அமெரிக்காவின் தெற்கு ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான துணை இராஜங்க செயலராகப் பதவி வகித்தார்.



Scanned by CamScanner

றொபேட் புறூக்கிங்ஸ் (ROBERT BROOKINGS 1850-1932) என்ற அமெரிக்க வர்த்தகர் தனது சொந்தப் பணத்தில் புறூக்கிங்ஸ் அமைப்பு (BROOKINGS INSTITUTION) என்ற பொருளாதாரம் சம்பந்தமான ஆய்வுகளுக்கான திங்க் டாங்க் அமைப்பை உருவாக்கியுள்ளார். கல்வி, பொருளாதாரம் இரண்டிலும் 'அரசின் செயற்பாடு என்ற பொருள் பற்றி இந்த தலைநகர் வாஷிங்ரன் அமைப்பு ஆய்வு செய்கின்றது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம், பாதுகாப்பு படைகளின் தலைமைச் செயலகம் நிலைகொண்டுள்ள பென்டகன் நிர்வாக அலகுடன் இரு முக்கிய தனியார் துறை திங்க் டாங்க் குழுக்கள் தொடர்புபட்டுள்ளன:

1. றான்ட் கோப்பரேஷன் -RAND CORPORATION. தனியார் நிதி உதவியுடன் இயங்கும் இவ்வமைப்பில் முப்படைகளின் இளைப்பாறிய தலைவர்கள் அங்கம் வகிக்கின்றனர். டுருமன் அரசினால் பதவி அகற்றப்பட்டபின் ஜெனரல் மெக் ஆர்தர் இதில் இணைந்து பணியாற்றினார்.
2. பாதுகாப்பு கொள்கை அமைப்பு-DEFENCE POLICY BOARD. இதில் இளைப்பாறிய அமெரிக்க துணை அதிபர்கள், இராஜங்க செயலர்கள் (கிசிங்கர் இதில் பணியாற்றுகிறார்) காங்கிரஸ் சபை உறுப்பினர்கள், அதியுயர் இராணுவ அதிகாரிகள் இடம்பெறுகின்றனர். உத்தியோகப் பற்றற்ற நிறுவனமாக இருப்பினும் அமெரிக்க வெளியுறவுக் கொள்கை மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் காத்திரமான பங்களிப்புச் செய்யும் நிறுவனமாக இது கணிப்பிடப்படுகின்றது.

நூறு வருடம் பழமை வாய்ந்த ஒரு இந்திய திங்க் டாங்க் பற்றிய செய்தியை இங்கு தருகிறோம். மேற்கு கிழக்காகப் பிரிபடாத வங்காள மாநிலத்தைச் சுற்றி அமைந்துள்ள இந்தியாவின் கிழக்கு மாநிலங்களின் தலைவர்கள் இணைந்து 'வங்காள முன்னெடுப்பு' BENGAL INITIATIVE என்ற திங்க் டாங்க் அமைப்பை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உருவாக்கினர். வர்த்தகம், கல்வி, செய்தித் தொடர்பு, கலாசார இணைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதே இந்த அமைப்பின் பொது நோக்கம்.

THINK TANK என்ற தலைப்பில் இவ்வளவு விரிவாக எழுதவேண்டியதற்கு நவீன இராசதந்திரம்/ அரசியல் என்பனவற்றில் இதற்கு இருக்கும் முக்கியத்துவமே காரணம். இந்த அமைப்புக்கள் கொள்கையைத் தீர்மானிக்கின்றன, ஆலோசனைகளை வழங்குவதோடு நிறுத்தாது, நடவடிக்கையின் தன்மையையும் தீர்மானிக்கின்றன.



Scanned by CamScanner

# 'நேஷன் எனப்படும் தேசம்'
## THE NATION

நேஷன் எனப்படும் ஆங்கிலச் சொல்லிற்கு நேர்த்தமிழ் பதம் கிடையாது. தேசம் என்று செல்லும்போது அதன் முழு அளவு அர்த்தம் வெளிவருவதில்லை. நேஷன் என்றால் என்ன என்பது பற்றிய பல வரையறைகள் இருந்தபோதிலும் மறைந்த சோவியத் ஒன்றியத் தலைவர் ஜோசப் ஸ்ராலின் நல்கிய வரையறையைப் பலர் ஏற்றுள்ளனர். "பொதுவான மொழி, வாழ்புலம், பொருளாதர வாழ்வு, பொதுவான கலாசார வரலாற்றுப் பாரம்பரியம் உடைய மக்கள் வாழ்விடம்" நேஷன் எனப்படும் என்பது அவருடைய வரையறையின் சுருக்கம்.

இனத்துவ அளவீடுகளில் மதமும் ஒரு சமூகத்தை தனியான இனமாக அடையாளப்படுத்துவதை மானுடவியலாளர்கள் ஏற்றுள்ளனர். முஸ்லிம்கள் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் தங்களை அடையாளப்படுத்துவதற்கு மதத்தைப் பிரயோகிக்கின்றனர். முஸ்லிம்கள் எம்மொழியைப் பேசினாலும் மதத்தின் மூலமாகவே தம்மை அடையாளப்படுத்தியுள்ளனர்.

தேசம் என்ற செல்லிற்கு நாடு என்ற அர்த்தம் உண்டு. மண் இல்லாமல் ஒரு தேசம் இருக்கமுடியாது. மண் என்னும்போது "நன்கு அடையாளம் காணக்கூடிய புவியியல் கூறு" என்று பொருள்படும் – AN IDENTIFIABLE GEOGRAPHICAL UNIT.

தேசத்திற்கு இருக்கவேண்டிய பிற அம்சங்களாவன:

(அ). பொது அடையாளமுடைய மக்கள் கூட்டம்.
(ஆ).பொது வரலாற்றுப் பாரம்பரியம் – COMMON HISTORICAL TRADITION
(இ).பொது கலாசாரப் பண்பாதாரங்கள் – COMMON CULTURAL HERITAGE
இதில் மொழி, மத அடையாளங்கள் உள்ளடங்கும்.
(ஈ).இந்த மக்கள் கூட்டத்தின் கணிசமானளவு எண்ணிக்கையானோர் அடையாளம் காணக்கூடிய புவியியல் கூறில் காலம் காலமாக வாழவேண்டும்.

மேற்கூறியவற்றிற்கு விதிவிலக்கு உண்டு. பெல்ஜியம் உலகின் முக்கிய தேசங்களில் ஒன்று ஆனால் உண்மையில் பிளெமிஷ் (FLEMISH) வலூன் (WALLOON) என்ற இரு முற்றிலும் வேறுபட்ட மக்கள் பிரிவுகள் அதில் காணப்படுகின்றன. பெல்ஜியம் நாட்டின் 55% வீதத்தினரான பிளெமிங் மக்கள் நாட்டின் வடக்கில் பிளான்டர்ஸ் (FLANDERS) என்ற பகுதியில் வாழ்கின்றனர். இவர்கள் பிளெமிஷ் என்றழைக்கப்படும் நெதர்லாந்து நாட்டவரின் டச்சு மொழியைப் பேசுகின்றனர்.



Scanned by CamScanner

தெற்கில் வாழும் வலூன் மக்கள் பிரெஞ்சு மொழி பேசுகின்றனர். பிளெமிஷ் மக்கள் புராதனகால ஜேர்மன் பழங்குடிகளில் இருந்து தோன்றியவர்கள். வலூன் மக்கள் ஜூலியஸ் சீசர் காலத்தில் நடந்த றோமன் படையெடுப்பின் காரணமாக குடியேறிய றோமன் மக்களுடன் ஒன்றுசேர்ந்த பிரெஞ்சு நாட்டின் பழங்குடிகளான கலிக் (GALLIC) மக்களாவர். மதம், மொழி வரலாற்றுப் பாரம்பரியம், வாழ்விடம் என்ற நான்கு அம்சங்களால் இரு மக்கள் கூட்டமும் முரண்படுகின்றனர். ஆனால் பெல்ஜியம் ஐரோப்பாவின் முக்கிய நாடுகளில் ஒன்றாக இடம்பெறுகின்றது.

பெல்ஜியம் நாட்டிற்கு இரண்டு உத்தியோகபூர்வமான பெயர்கள் உண்டு. டச்சு மொழியில் கோனின்கிறிக் பெல்ஜிக் –KONINKRIJK BELGIQUE- என்றும் பிரெஞ்சு மொழியில் றொயுமே பெல்ஜிக் ROYAUME BELGIQUE என்றும் ஆங்கிலத்தில் பெல்ஜியம் என்றும் அழைக்கப்படும். பெல்ஜியத்திலுள்ள பல இடங்களுக்கு வித்தியாசமான பெயர்கள் இரு மொழிகளிலும் வழங்குகின்றன. மொழிக்குரிய இனங்களும் தத்தம் மொழிகளிலேயே கருமமாற்றுகின்றனர்.

தனது போர் வரலாற்று நூலில் ஜூலியஸ் சீசர் இலத்தீன் மொழியில் பின்வருமாறு எழுதினார், "கோலின் பழங்குடி மக்களில் பெல்ஜே மக்கள்தான் மிகவும் கூடுதலான வீரம் செறிந்தவர்கள்" இது கி.மு முதலாம் நூற்றாண்டில் சொல்லப்பட்டது. ஆனால் சுதந்திரம் அடைவதற்கு பெல்ஜியம் 1830 வரை காத்திருக்க வேண்டியிருந்தது. சுதந்திரம் பெற்ற நாட்டின் உத்தியோகபூர்வ மொழியாக பிரெஞ்சு மொழி நிறுவப்பட்டது. டச்சு மொழி பேசுவோர் காட்டிய கடும் எதிர்ப்பால் 1898 இல் அதற்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டது.

தொடர்ச்சியான வரலாற்றுப் பாரம்பரியமற்ற நாடாகப் போலாந்து அமைகின்றது. மத்திய ஐரோப்பாவில் போலாந்து பலதடவை இடம் மாறியுள்ளதோடு சிலகாலம் வரைபடத்தில் இல்லாமல் மறைந்தும் விட்டது. இன்றும்கூட போலாந்தின் எல்லை மேற்கை நோக்கித் தள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் அது உலகின் முக்கிய நாடுகளில் ஒன்றாக அமைந்துள்ளது. எங்கு வாழ்ந்தாலும், புறச்சூழல் காரணமாக இடம்பெயர நேர்ந்தாலும் தாயகப்பற்று (THE SENTIMENT OF BELONGING) தேசம் பற்றிய வரையறைகளில் முக்கிய இடம்பிடித்துள்ளதை மறுக்க இயலாது.

தென்கிழக்கு நாடுகளில் 20 பில்லியனுக்கும் கூடுதலான சீன மக்கள் செறிந்து வாழ்கின்றனர். தாம் வாழும் நாட்டின் பிரசாவுரிமையை இவர்கள் பெற்றுள்ளனர். ஆனால் சீனா தமது தாய்நாடு என்ற எண்ணம் இன்னும் மறையவில்லை. இது வாழ்விட எல்லையைக் கடந்த உணர்வு என்றும், காலத்தால் அழியாத பற்றுறுதி என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.



Scanned by CamScanner

சீனா. நவீன சிங்கப்பூரின் வரலாறு 1819 இல் ராபிள்ஸின் வருகையுடன் தொடங்குகின்றது. தொழில் வாய்ப்புத் தேடிச் சீனாவின் வறிய பகுதிகளில் வாழ்ந்த சீனர்கள் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு வந்தனர்.

வெளிநாட்டுச் சீனர்களின் இருப்பை சீனாவை ஆட்சிசெய்த குவிங் அரச பரம்பரையினர் (QING DYNASTY) 1867 ஆம் ஆண்டுவரை அங்கீகரிக்கவில்லை. 1870 இல் இப்பாராமுகக் கொள்கை மாற்றம் அடைந்தது. தென்சீனக் கடலிலுள்ள நான்யாங் (NANYANG) தீவுகளுக்கும் சிங்கப்பூருக்கும் குவிங் அரசு தனது வலுக்குறைந்த கொன்சல் தரத் தூதரகங்களைத் திறந்தது. வெளிநாட்டுச் சீனர்களின் விசுவாசத்தையும் நிதி உதவியையும் சீனாவுக்குப் பெற்றுக் கொடுக்கும் பிரதான நோக்குடன் இவை திறக்கப்பட்டன. சீனக் கலாசாரம், கல்வி, வாழ்முறை பற்றிய உணர்வை வளர்ப்பது பிற நோக்கங்களாக அமைந்தன. 1920 களில் சீனாவின் கொமியூனிஸ்ற் கட்சி தனது முகவர்களை சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் பிற சீனர் வாழ்விடங்களுக்கும் அனுப்பியது. 1930 இல், மலேசிய கொமியூனிஸ்ற் கட்சி இதன் காரணமாகத் தோன்றியது.

1949 இல் நவசீனா போர்மூலம் பிறந்தபோது உலகச் சீனர் மத்தியில் தாயகப்பற்று கரைபுரண்டோடியது. இதை தனக்குச் சாதகமாக மாற்றுவதில் நவசீனா முனைப்பாக ஈடுபட்டது. 1949 இல் சீனாவின் வெளிநாட்டுச் சீனமக்கள் விவகார ஆணையகம் (OVERSEAS CHINESE AFFAIRS COMMISSION) திறக்கப்பட்டது. வெளிநாட்டுச் சீனர்களுக்காக சீனமொழி வானொலிபரப்பையும் சீனா ஆரம்பித்தது.

1970 வரை தென்கிழக்கு ஆசிய நாட்டு அரசுகளுக்கு எதிரான வெறித்தனமான பிரசாரத்தை சீனா நடத்தியது. சீன மக்களைக் கிளர்ந்து எழும்படி தூண்டியது. இதன்காரணமாக சீன மக்களுக்கு எதிரான அலை இந்த நாடுகளில் வீசியது. 1964 இல் இந்தோனேசியா வாழ் சீனர்கள் பெருமளவில் அந்த நாட்டின் படைகளால் கொல்லப்படுவதற்கு வழிகோலியது.

1970 களின்பின் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் நல்லுறவை வளர்ப்பதில் சீனா ஈடுபட்டது. சீனத் தலைநகரில் நடந்த மேசைப்பந்து விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும்படி ஆசிய-ஆபிரிக்க நாட்டு வீரர்களுக்கு சீனா அழைப்பு விடுத்தது. ஒரு சீன விளையாட்டு வீரர்குழு சிங்கப்பூர் சென்று மேசைப்பந்து விளையாடியது.

1974 இல் ஒரு மலேசிய இராசதந்திர குழு சீனா சென்றது. வெளிநாட்டில் வதியும் சீனர்கள் சம்பந்தமாக பிரதமர் சூ என்லாயிடம் இக்குழு வினாவியபோது அவர் "வெளிநாட்டில் வதியும் சீனர்கள்" என்ற சொற்பிரயோகம் சரியானதல்ல என்று கூறினார். அவர்கள் தாம் வாழும் நாட்டின் பிரசைகளானபடியால் அவர்களை இப்படி அழைப்பது தவறு என்று அவர் சுட்டிக்காட்டினார்.



Scanned by CamScanner

1969 ஆம் ஆண்டு தொடக்கம் சீனாவைப் பார்க்க விரும்பும் வெளிநாட்டுச் சீனர்கள் உள்நுழைவு அனுமதி பெறவேண்டும் என்று சீன அரசு கட்டாயப்படுத்துகின்றது. பிற நாடுகளுடன் சுமூக உறவுகளைப் பேணுவதற்காக "இரத்த உறவுக் கொள்கையை" சீனா கைவிடவேண்டிய கட்டாயம் நேரிட்டது.

தேசிய உணர்ச்சி உலக அரசியல் அரங்கில் மிகவும் பலம்வாய்ந்த சக்தியாகும். ஒன்றிணையத் தூண்டும் இணைப்புக் கருவியாகவும், பொது அடையாளங்களுக்கு ஆபத்து நேரும்போது எதிர்ப்பை ஊக்குவிக்கும் தூண்டு கருவியாகவும் தேசிய உணர்ச்சி பயன்படுகின்றது. மனிதனின் 'இரண்டாவது இயல்பு' -SECOND NATURE- என்று லெனின் இந்த உணர்ச்சி பற்றிக் கூறியுள்ளார். தேசப்பற்றைக் கட்டியெழுப்பும் நோக்குடன் உலகின் நாடுகள் யாவும் தேசியதினம், சுதந்திரதினம், மாவீரர்தினம், கொடிநாள் போன்ற பொது விழாக்களையும், தேசியக்கொடி, தேசியகீதம், தேசியஉடை, தேசியஉணவு போன்ற பொதுச் சின்னங்களையும் போற்றி மகிழ்கின்றனர்.

ஒரு நாட்டில் பிறந்தவனை அந்த நாட்டின் NATIVE அதாவது சுதேசி என்று பொருள் கூறுவார்கள். அப்படியானவன் பிறநாட்டில் குடியுரிமை, பெற்றாலும் பிறந்த நாட்டை மாற்ற இயலாது. பெற்ற தாயை மாற்றமுடியாத நிலைக்கு இதை ஒப்பிடலாம். NATIONALITY எனப்படும் நாட்டுரிமையைப் பிறந்த நாடு அல்லாத வேறு நாடு அல்லது நாடுகளில் பெறமுடியும். குடியுரிமை பெறுவதன் மூலம் மேற்கூறிய நாட்டுரிமையைப் பெறலாம்.

நாடு எனப்படும் COUNTRY ஒரு புவியில் குறியீடு. STATE என்பது சட்டப் பெறுமதிவாய்ந்த இறைமை நாட்டைக் குறிப்பிடும் குறியீடு. உலக நாடுகள் STATES என்று வகைப்படுத்தப்படுகின்றன. NATION என்பது ஒரு புவியியல் பகுதியில் பொது அடையாளங்களுடன் வாழும் மக்கள் கூட்டத்தைக் குறிப்பிடும் சொல். NATION-STATE என்பது சட்ட அங்கீகாரம் பெற்ற, பொது அடையாளங்களுடன் கூடிய மக்கள் கூட்டம் வாழும் புவியியல் பகுதியைக் குறிக்கும். அனைத்துலக ஒழுங்கமைப்பில் NATION-STATES தான் அங்கத்துவம் வகிக்கின்றன.

அமெரிக்க, ஹவாய் தீவு மாநிலத்தின் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துணைப் பேராசிரியராகவும் தெற்கு ஆசியாக் கற்கை நெறிகள் மையத்தின் இயக்குநராகவும் பதவிவகிக்கும் பேராசிரியர் சங்கரன் கிருஷ்ணா ஆக்கிய காலநித்துவ ஆட்சிக்குப் பிந்திய பாதுகாப்பின்மை- இந்தியா, சிறிலங்காவும் தனிநாட்டு வினாவும்- POST COLONIAL INSECURITIES, INDIA SRI LANKA AND THE QUESTION OF NATIONHOOD- என்ற நூலில் பின்வரும் முடிவை எடுத்துள்ளார். இன அடையாளங்களாக் கணக்கில் எடுக்காமல் இறைமைக்கு முக்கியத்துவம் கொடுத்து நாட்டைக் கட்டியெழுப்பும் இரு நாட்டு முயற்சிகளும் தோல்வி கண்டுள்ளன. இன அடையாளத்தின் கோரிக்கைகளைக் கவனியாது தேசத்தைக் கட்டியெழுப்ப இயலாது.



Scanned by CamScanner

நாடுகளில் இயல்புநிலை நிலவவேண்டுமாயின் கலாசாரப்பன்மை அனுமதிக்கப்பட வேண்டும். உலக நாடுகளின் முழு எண்ணிக்கையில் இருபது நாடுகளில் மாத்திரம் இன ஒற்றுமை நிலவுகின்றது. பெரும்பாலான உலக நாடுகளின் வரலாறு இன முரண்பாடுகளின் வரலாறாக அமைகின்றது. ETHNICITY எனப்படும் இனங்களியல் ஒரு அனைத்துலகமட்ட விவகாரமாக இடம்பெறுகின்றது. உலக நாடுகள் எண்ணிக்கையில் 40% வீதமானவற்றில் சராசரி ஐந்திற்கும் குறையாத தனி இனங்கள் காணப்படுகின்றன. இந்தியாவில் 350, இதியோப்பியாவில் 90, இந்தோனேசியாவில் 100, பிரேசிலில் 80 வரையிலான இனத்தவர்கள் வாழ்கின்றனர். இன அடையாளத்திற்கு ஆபத்து வரும்போது அதன் முக்கியத்துவம் பெரும்பாலும் உணரப்படுகின்றது.

ஒலிம்பிக்ஸ் போன்ற அனைத்துலக மட்டத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளிலும், உதைபந்தாட்டம் கிரிக்கெற் போன்ற பன்னாட்டு விளையாட்டுக்களிலும் தேசியம் தலைவிரித்தாடுகின்றது. தேசிய அடையாளத்தை நிலைநாட்டுவதற்காக வெற்றியைத் தேடும் தீவிரம் பங்குபற்றுவோர் மற்றும் பார்வையாளர் மத்தியில் காணப்படுகின்றது. மனித நாகரிகம் பற்றிய தனது ஆய்வுரையில் எறிக் ஹொப்சம் (ERIC HOBSOWM) என்பார் இதற்குரிய விளக்கத்தை அளித்துள்ளார்.

தனது மூர்க்க குணத்தை வெளிக்காட்டுவதற்கு போரிலும் பார்க்க விளையாட்டைத் தான் மனிதன் கூடுதலாக விரும்புகிறான். விளையாட்டுத் திடலில் அவன் போர்வெறியுடன் எதிரணியுடன் மோதுகிறான். நவீன தேசிய உணர்வின் வளர்ச்சிப் போக்காகவும், மனித இயல்பில் தோய்ந்த போர்க்குணமாகவும் இதைப் பார்க்கமுடியுமென்று அவர் தனது ஆய்வின் முடிவில் கூறுகிறார்.

## குடிமக்கள் CITIZEN
## -குடியுரிமை CITIZENSHIP

ஒரு குறிப்பிட்ட நாட்டின் பிரசை CITIZEN என்று அழைக்கப்படுகிறான். அவனுடைய பிரசாவுரிமை இருவகையால் கிடைக்கின்றது.

1. பிறப்பால்.
2. சட்டபூர்வ வழங்கலால்.

பிரசாவுரிமை பெற்றபின் அல்லது ஏற்கனவே பிரசாவுரிமை பெற்றபின் ஒருவன் அந்த நாட்டிலேயே வாழவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவன் பிற நாடுகளுக்குச் சென்று அங்கு தங்கமுடியும். அதே சமயம் சில குறிப்பிடத்தக்க காரணங்களுக்காக ஒருவன் தனது பிரசாவுரிமையை இழக்கநேரிடும்.

குடியுரிமை எனப்படும் பிரசாவுரிமை அதைப் பெறுபவனுக்கு சட்டபூர்வமான பூரண அங்கத்துவத்தை பிரசாவுரிமை பெறும் நாட்டில் வழங்குகின்றது. இதன் காரணமாக அவனுக்கு அந்த நாட்டின் சட்டப் பாதுகாப்பு



Scanned by CamScanner

கிடைக்கின்றது. அத்தோடு சட்டத்தின் முன்னிலையில் பேணப்படவேண்டிய பொறுப்புக்களையும் சுமத்துகின்றது. குடியுரிமைத் தகுதியைப் பின்வரும் வழிகளால் பெறலாம்:

1. பிறப்பால்.
2. பெற்றார் குடியுரிமை பெற்ற நாட்டில் அவர்கள் மகவும்பெற வழிவகுக்கும் சட்டத்தால்.
3. நீண்டநாள் ஒரு நாட்டில் வாழ்ந்த காரணத்தால் அந்த நாட்டின் அரசு வழங்குவதால்.
4. பிறநாடொன்றிக்கு பெறுமதிமிக்க சேவை செய்ததற்கு சன்மானமாக வழங்கப்படும் கௌரவப் பிரசாவுரிமை (HONARARY CITIZENSHIP)

குடியுரிமை எனப்படும் பிரசாவுரிமை ஒரு குறிப்பிட்ட நாட்டின் பிரசை அல்லது குடிமகன் என்று சொந்தம் பாராட்டும் உரித்தை வழங்குகின்றது. அந்த நாட்டின் சட்டமும் தேசிய பலமும் அவனுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றன. குடிமகனுக்கு உரிய உரிமைகள் மூவகைப்படும்: சட்டத்தின் பாதுகாப்பு உரிமை, தேர்தல்களின்போது வாக்குரிமை, வெளிநாடுகளில் வதியும்போது தனது நாட்டின் தூதரகப் பாதுகாப்பையும் தூதுவருடனான தொடர்பையும் பெறும் உரிமை.

குடியுரிமை இழக்கும் சந்தர்ப்பங்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்: வேற்று நாட்டில் நெடுநாட் தங்குதல், சில நாடுகள் பிரசாவுரிமையை வழங்கும்போது குறிப்பிட்ட கால எல்லைக்குள் குறைந்தபட்சம் ஒரு முறையாவது தங்கிச் செல்லவேண்டும் என்று நிபந்தனை விதிக்கின்றன. சொந்த நாட்டின் அனுமதியின்றி வேற்று நாட்டிற்குப் பணிபுரிதல் குடியுரிமை இழப்பிற்குக் காரணமாகச் சிலநாடுகளில் அமைவதுண்டு. வேற்று நாட்டவரின் சார்பில் விசுவாசப் பிரமாணம் எடுத்தல், அல்லது அதற்கான கைச்சாத்திடல் என்பது இழப்பிற்கு மிகவும் முக்கியமான காரணம். தாமாகவே குடியுரிமையைக் கைவிடுதல் இன்னுமோர் காரணம். சட்டங்களுக்கு அமைவாக ஒரே சமயத்தில் இரு நாடுகளின் குடியுரிமையைப் பெறும் வாய்ப்பு உண்டு. நாடற்றவர்கள் என்று ஒரு நாட்டிலும் குடியுரிமை பெறாதோர் உலகில் காணப்படுகின்றனர். அனைத்துலக ஒழுங்கில் தீர்க்கப்படாத பிரச்சனையாக இது அமைகின்றது. இதை THE PROBLEM OF STATELESS PERSONS என்று அழைப்பார்கள்.



Scanned by CamScanner

# வேற்று நாட்டவன்
## ALIEN

ஒரு நாட்டில் வதிவோரில் குடிமக்கள் அல்லாதோரும், குடியுரிமை பெறாதவர்களும். சட்டத்தின் முன் 'ஏலியன்' எனப்படும் வேற்று நபர்களாகக் கணிப்பிடப்படுகின்றனர். 'எங்களில் ஒருவனாகாதவன்' 'அந்நியன்' 'வேற்று நாட்டவன்' என்ற அர்த்தங்களில் ஏலியன் பயன்படுத்தப்படுகின்றது. அனைத்துலகச் சட்டத்தின்படி ஒரு நாட்டிற்கு தனது குடிமகன் யார் என்று தீர்மானிக்கும் உரித்தும் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது. வேற்று நாட்டவர்களுக்கு சில மட்டுப்படுத்தப்பட்ட உரிமைகளை பெரும்பாலான நாடுகள் வழங்குகின்றன.

பேச்சு சுதந்திரம், மதச் சுதந்திரம், வர்த்தகத்தில் ஈடுபடும் உரித்து, சில தொழில்கள் பார்க்கும் அனுமதி, அசைவுள்ள அசைவற்ற பொருள் கொள்வனவு செய்யும் உரித்து போன்றவற்றை அந்நியர்களுக்கு உலக நாடுகள் வழங்குகின்றன. ஒரு சில உரிமைகளை மாத்திரம் வழங்கும் நாடுகளும், ஒன்றுமே வழங்காத நாடுகளும் உலகில் காணப்படுகின்றன. அனைத்துலகச் சட்டத்தின் பார்வையில் குடியிருக்கும் அந்நியர்கள், தங்கிச்செல்லும் அந்நியர்கள் என்ற இருவகையினர் உள்ர். குடியிருக்கும் அந்நியர்களுக்கு குடியுரிமை பெற்றவர்களிலும் சற்றுக் குறைந்த உரிமைகளும் பொறுப்புக்களும், கடமைகளும் உண்டு. இதில் வரிசெலுத்துதல் மிகவும் முக்கியமான கடமை. தொழில் வாய்ப்புக்களைப் பெறும் அந்நியர்கள் வரி செலுத்தவேண்டிய கட்டாயத்திற்கு உட்படுகின்றனர். தாம் வாழும் முகவரி, செய்யும் தொழில், தொழில் செய்யும் இடம் போன்ற விவரங்களை அந்நியர்கள் அரசின் அந்நியர்களுக்குப் பொறுப்பான திணைக்களத்திற்கோ, காவல் துறைக்கோ கட்டாயமாக அறிவிக்கவேண்டும். இது மேற்குலக நாடுகளின் நடைமுறை.

அந்நியர்களை வெளியேற்றும் உரித்து நாடுகள் யாவற்றிற்கும் உண்டு. அகதிகளும் அந்நியர்கள் என்ற வகைப்படுத்தலின் கீழ் வருகின்றனர். உலகின் மிகப்பெரிய பிரச்சனைகளில் ஒன்றாக அகதிகள் விவகாரம் இடம் பெறுகின்றது.

# இரட்டைக் குடியுரிமை
## DUAL CITIZENSHIP

சமகாலத்தில் இரு நாடுகளில் குடியுரிமை பெறும் வாய்ப்பு இன்று உண்டு. இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒரு நாட்டில் சம்பந்தப்பட்ட நபரின் பெற்றார் பிறந்த காரணத்தால் அந்த நபர் குடியுரிமை பெறும் வாய்ப்பைப் பெறுகிறார். பெற்றார் பிற நாடொன்றில் தங்கியிருக்கும்போது இந்த நபரைப் பிரசவித்த காரணத்தால் அதே நபர் இந்த நாட்டிலும் குடியுரிமையைப் பெறுகிறார். இது வழமையாக நடக்கும் சம்பவம். சில நாடுகளில் இரட்டைக் குடியுரிமைக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. பிறநாட்டில் கிடைத்த குடியுரிமையை ரத்து செய்யும்படி இரட்டை உரித்து உடையவரை நிர்ப்பந்திக்கலாம்.



Scanned by CamScanner

தமக்குக் கிடைக்கவிருக்கும் இலாபத்தைக் கருத்தில் கொள்ளும் சில நாடுகள் இரட்டைக் குடியுரிமையை ஒரு சலுகையாக வழங்குகின்றன. அமெரிக்காவில் குடியுரிமை பெற்ற இந்திய வம்சாவழியினருக்கு இந்தியா இரட்டைக் குடியுரிமை வழங்குகின்றது. இவர்கள் கையில் பொதிந்துள்ள செல்வத்தை இந்தியாவில் முதலீடு செய்யத் தூண்டும் ஊக்கியாக இந்தியப் பிரசாவுரிமையை இவர்களுக்கு இந்தியா வழங்குகின்றது.

இரட்டைக் குடியுரிமை பெற்றோர் மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டும். இரு நாடுகளுக்கும் சமகாலத்தில் விசுமாசமாக இருத்தல் மிகவும் கடினமானதொன்று. அந்தந்த நாடுகளின் அரசியல் மற்றும் சட்ட நிலவரத்தை நன்கு உணர்ந்து கருமமாற்றவேண்டும். இருசோடி உரித்துக்களும் கடமைகளும் அவருடையதாகின்றது. இரு நாடுகளும் அவரை கட்டாய இராணுவ சேவைக்கு அழைத்தால் அவர் சடுதியல் ஒரு நாட்டின் குடியுரிமையை கைவிட்டபடி அடுத்த நாட்டுடன் ஒட்டிக்கொள்ள நேரிடும். அவர் இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கும் இரு நாடுகளுக்குமிடையில் கடும் முரண்பாடு தோன்றினால் அவர் இரு நாடுகளுக்கும் விசுவாசமாக இருக்க இயலாது ஒரு நாட்டின் குடியுரிமையை அவர் கைவிடத்தான் வேண்டும். இரட்டைக் குடியுரிமையால் அனுகூலங்களிலும் பார்க்கத் தொல்லைகள்தான் கூடுதலாக வருகின்றன.

## குடியுரிமையைக் கைவிடுதல்
## EXPATRIATION

சுயவிருப்பின்படி தனது குடியுரிமையை கைவிடும் செய்கை 'எக்ஸ்பற்றியேஷன்' எனப்படுகின்றது. தனது குடியுரிமை பெற்ற நாட்டை விட்டு வெளியேறும் நடவடிக்கையை இச்சொல் குறிப்பிடுகின்றது. வெளிநாட்டில் வதியும் சொந்த நாட்டின் குடியுரிமையைக் கைவிட்டோர்கள் EXPATRIATES என்று அழைக்கப்படுகின்றனர். சிறிலங்கா குடியுரிமை பெற்ற தமிழர்கள் பிறநாட்டின் குடியுரிமையைப் பெற்று அங்கு வாழும்போது சிறிலங்காத் தரப்பினரால் 'எக்ஸ்பற்றியேற்ஸ்' என்று அழைக்கப்படுகின்றனர். ஒரு நாட்டின் குடியுரிமையைக் கைவிட்டபடி பிற நாடொன்றில் குடியுரிமையோ வதியும் உரிமையோ பெறும் நபர்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர்.

ஒரு நபருக்குக் குடியுரிமை வழங்கிய நாடு அதை விலக்கிக் கொள்வதையும் எக்ஸ்பற்றியேஷன் குறிப்பிடுகின்றது. சுயவிருப்பின் பிரகாரம் கைவிடுதல் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். பிறிதோர் நாட்டிற்கு விசுவாசப் பிரமாணம் எடுத்தல், குடியுரிமை வழங்கிய நாட்டின் அனுமதியின்றிப் பிறநாட்டு இராணுவ சேவையில் இணைதல், பிறநாட்டில் நடக்கும் தேர்தல்களில் வாக்களித்தல் போன்ற காரணங்களுக்காக குடியுரிமை பறிக்கப்படலாம். இது எக்ஸ்பற்றியேஷனில் இரண்டாம் ரகம்.



Scanned by CamScanner

சுயவிருப்பின்படி குடியுரிமையைக் கைவிடுதல் என்பதுதான் பெரும்பாலும் நடைபெறுகின்றது. அரசு தான் வழங்கிய குடியுரிமையை விலக்கிக் கொள்வது அரிது. தாமறியாமலே தமது செய்கைகள் மூலம் சில நபர்கள் தமது சொந்த நாட்டுக் குடியுரிமையைக் கைவிடுகின்றனர். அப்படியான சந்தர்ப்பங்களில் அவர்களுக்குப் பிறநாட்டுக் குடியுரிமை கிடைக்காவிட்டால் அவர்கள் நாடற்றவர்களாகின்றனர். இதன்காரணமாக கடவுச்சீட்டுப் பெறும் உரிமை, நுழைவு அனுமதியைப் பெறும் தகுதி போன்றவற்றை அவர்கள் இழக்கின்றனர்.

## கடவுச் சீட்டு
## PASSPORT

அரசின் சார்பில் அதன் உத்தியோகபூர்வ அதிகார அலகினால் குடிமக்களுக்கு வழங்கப்படும் அடையாள ஆவணமாகக் கடவுச்சீட்டு மதிப்பிடப்படுகின்றது. அதைப் பெறும் தகுதி உடையோர் அந்த நாட்டின் குடிமக்கள் மாத்திரமே. பெறுபவரின் பெயர். முகவரி, குடியுரிமை அத்தாட்சி என்பனவற்றை இந்த ஆவணம் தாங்கி நிற்கின்றது. இதையொரு குடியுரிமைக் குறியீடாகவும் கொள்ளலாம். நாட்டிற்கு வெளியே செல்ல விரும்புவோருக்கும், அதை வைத்திருக்க மாத்திரம் விருப்புடையோருக்கும் கடவுச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. இந்த ஆவணத்துடன் பயணிப்பவர்களுக்கு இருவகையில் அது உதவுகின்றது: அவரை அடையாளம் காட்டுவதோடு அவர் நாடுகளின் நுழைவாயில்கள் ஊடாகச் செல்வதற்கும் உதவுகின்றது. கடவுச்சீட்டை வழங்கும் நாட்டின் வெளிநாட்டுத் தூதரகங்களின் உதவிகளையும் பெற்றுக்கொடுக்கின்றது.

கடவுச்சீட்டின் முக்கியத்துவம் மூவகைப்படும் :

1. பயணத்திற்குரிய கட்டாய ஆவணம்.
2. பயணியை அடையாளம் காட்டும் ஆவணம்.
3. அதுவோர் முக்கிய குடியுரிமைச் சான்றாவணம்.

வெளிநாட்டு பயணத்திற்கு கட்டாயமாக பயணியின் கையில் கடவுச்சீட்டு இருக்கவேண்டும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உடன்படிக்கை மூலம் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பயணிக்கும் அங்கத்துவ நாடுகளின் குடிமக்களுக்கு கடவுச்சீட்டு தேவையில்லை என்று தீமானித்துள்ளது. ஆனால் பயணிகள் தத்தம் நாட்டின் அடையாள அட்டைகளை வைத்திருக்க வேண்டியது அவசியம்.



Scanned by CamScanner

# நுழைவு அனுமதி
## VISA

பிற நாடொன்றுக்குச் செல்ல விரும்புவோர் தமது நாட்டிலுள்ள அந்த நாட்டின் தூதரகத்தில் நுழைவு அனுமதியைப் பெறவேண்டும். நுழைவு அனுமதிக்கான விண்ணப்பம் அதற்குரிய படிவத்தின் மூலம் செய்யவேண்டும். நுழைவு அனுமதி வழங்கல் சேவைக்கான கட்டணத்தையும் செலுத்தவேண்டும். அனுமதி விண்ணப்பத்துடன் கடவுச் சீட்டையும் ஒப்படைக்கவேண்டும். நுழைவு அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் அதற்குரிய பதிவுச்சான்று கடவுச் சீட்டில் பொறிக்கப்படும்.

நுழைவு அனுமதியின்றிச் சில நாடுகளுக்குச் செல்லமுடியும். இஸ்லாம் மதத்தினர் நுழைவு அனுமதியின்றி மலேசியா நாட்டிற்குச் செல்லலாம். சில நாடுகள் தமது நாட்டின் நுழைவாயிலில் வைத்து உள்நுழைவு அனுமதியை வழங்குகின்றன. இப்படியான விதிவிலக்குகள் ஒருபுறமிருக்க, பெரும்பாலான உலக நாடுகள் முன்கூட்டியே பெறப்பட்ட நுழைவு அனுமதியை கட்டாய நிபந்தனையாக விதித்துள்ளன. விரும்பத்தகாத வேற்று நாட்டவர்கள்- UNDESIRABLE ALIENS- தமது நாட்டிற்குள் நுழையக்கூடாது என்பதில் அவை மிகவும் விழிப்பாக இருக்கின்றன.

நுழைவு அனுமதியை வழங்கும் தூதரக அதிகாரிகள் தமது அரசின் அறிவுறுத்தல்களின்படி நுழைவு அனுமதியை வழங்குகின்றனர். அல்லது மறுக்கின்றனர். இந்த அதிகாரிகளின் சுய கணிப்பீடும் இத்தீர்மானத்தில் பங்கெடுக்கின்றது. ஒரு குடிமகனுக்கு நுழைவு அனுமதி வழங்கப்படும்போது அவனுடைய குடியுரிமை, ஆள் அடையாளம், நாட்டுரிமை என்பன ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. நுழைவுக்காக விண்ணப்பப் பத்திரம் மூலம் தெரிவிக்கப்பட்ட காரணமும் அங்கீகரிக்கப்படுகின்றது.

# தடுத்து வைத்தல்
## DETENTION

ஒரு நாடு இன்னுமோர் நாட்டுடன் போரில் ஈடுபடும்போது வேற்று நாட்டவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகின்றனர். போரில் ஈடுபடும் எதிரி நாட்டவர்கள் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர். தனது நாட்டில் வாழும் எதிரி நாட்டவர்களைத் தடுத்து வைக்கும் உரித்தை நாடுகள் தமது பாதுகாப்பு விதிமுறையாகப் பயன்படுத்துகின்றன. அமெரிக்காவில் வாழும் வேற்று நாட்டவர்கள் அமைதிக் காலத்தில் குடிமக்களுக்கு நிகரான சுதந்திரங்களை அனுபவிக்கின்றனர். ஆனால் போர் காலத்தில் அவர்களுடைய சுதந்திரமான நடமாட்டத்திற்கு தடை விதிக்கப்படுகின்றது.

1798 இல் அமெரிக்காவுக்கும் பிரான்சுக்குமிடையில் போர் தொடங்கலாம் என்ற அச்சம் நிலவிய காலத்தில் காங்கிரஸ் சபை வேற்று நாட்டவர் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் இரு சட்டங்களை இயற்றியது. அவையாவன — வேற்று நாட்டவர் சட்டம் THE ALIENS ACT, வேற்று நாட்டு எதிரிகள் சட்டம்



Scanned by CamScanner

THE ALIEN ENEMIES ACT (1798). பொது அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலான வேற்று நாட்டவர்களை நாடு கடத்தும் அதிகாரத்தை முதலாவது சட்டம் அமெரிக்க அதிபருக்கு வழங்கியது. போர் நடக்கும் காலத்தில் எதிரி நாட்டவர்களைக் கைதுசெய்தல், தடுத்துவைத்தல், நாடுகடத்தல் ஆகிய மூன்று அதிகாரங்களையும் அமெரிக்க அதிபருக்கு இரண்டாவது சட்டம் வழங்கியது.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் ஜேர்மன், இத்தாலியன், ஜப்பான் எதிரி நாட்டவர்கள்மீது பல தடைகள் விதிக்கப்பட்டன. மிகப்பெரிய பாதிப்பை அடைந்தவர்கள் ஜப்பானிய மக்கள் என்பது தெரிந்த விடயம். அமெரிக்க நிர்வாகம் அவர்களுக்கு பாரிய கொடுமைகளை இழைத்தது. டிசெம்பர் 07,1941 இல் ஜப்பானியப் படைகள் போர்ப் பிரகடனம் செய்யாது அமெரிக்காவின் பேர்ள் துறைமுகப் படைநிலைகள் மீது தாக்குதல் தொடுத்தன. இதற்குப் பதிலடியாக அமெரிக்க காங்கிரஸ் டிசெம்பர் 08 ஆம் நாள் ஜப்பான் மீது போர் பிரகடனம் செய்தது. இதன்பின் அமெரிக்கக் குடியுரிமைபெற்ற ஜப்பானியர்களுக்கும், குடியுரிமை பெறாது அமெரிக்காவில் வேற்று நாட்டவர் அந்தஸ்துடன் வாழ்ந்த ஜப்பானியர்களுக்கும் கடின காலம் ஆரம்பித்தது. தடுப்புக்காவல் சம்பந்தமான அதிபரின் நிறைவேற்று அதிகார உத்தரவு இல:9066 அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்றினால் 1942 இல் பிறப்பிக்கப்பட்டது.

1942ஆம் ஆண்டளவில் அமெரிக்காவின் மேற்குக்கரை மாநிங்களில் வாழ்ந்த 110,000 வரையிலான ஜப்பானியர்கள் தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு அமெரிக்காவின் நடுப்பகுதி மாநிலங்களில் உள்ள தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டனர் இவர்களில் மூன்றில் இரு பங்கினர் அமெரிக்கக் குடியுரிமை பெற்ற ஜப்பானிய வம்சாவழியினர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் கணிசமானோர் தொழில் வளமுள்ளவர்களாகவும் வசதிகளுடன் வாழ்க்கை நடத்தியவர்களாகவும் இருந்தனர். இத்தகைய தடுப்பினால் அவர்கள் யாவற்றையும் இழந்தனர். அவர்களுடைய இளைய தலைமுறையினர் கல்வி வசதிகளை இழந்தனர்.

போர்காலத் தடுப்பிற்கு உலகின் மிகப் பிரபல உதாரணமாக அமெரிக்க அதிபர் பிறாங்லின் ரூஸ்வெல்ற் ஜப்பானிய மக்கள்மீது விதித்த தடுப்பு உத்தரவு கருதப்படுகின்றது. அண்மைக் கால இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் வேறுசில திடுக்கிடும் தகவல்களை வெளிக்கொணருகின்றன. ரூஸ்வெல்ற் நிர்வாகம் கொடுத்த அழுத்தம் காரணமாக தென்அமெரிக்க நாடுகளும் தம்மத்தியில் வாழ்ந்த ஜப்பானியப் பிரசைகளை கைதுசெய்து அமெரிக்கத் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பி வைத்தன. தென் அமெரிக்க நாடுகள் இதனால் இலாபம் அடைந்ததாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கடத்தப்பட்ட ஜப்பானியர்களின் நிலபுலன்களையும், தொழிற்சாலைகளையும் தென்அமெரிக்க அதிகாரிகள் தமதாக்கினர். அத்தோடு அமெரிக்க நிதிஉதவியும் மேலதிகமாக அவர்களுக்கு கிடைத்தது.



Scanned by CamScanner

ஜப்பானியப் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட அமெரிக்கப் படையினரை விடுவிப்பதற்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட கணிசமானளவு ஜப்பானியர்களை அமெரிக்கா ஜப்பானுக்கு அனுப்பி வைத்தது. இவர்களில் பலர் ஜப்பானுக்கு வெளியே பிறந்தவர்கள், ஜப்பானுடன் யாதொரு தொடர்புகளும் இல்லாதவர்கள். இன்றுவரை இவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அமெரிக்கத் தடுப்புக் காவலில் வாழ்ந்த ஜப்பனியர்கள் பலர் தமது அமெரிக்க விசுவாசத்தைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் தரும்படி அமெரிக்க அரசுக்கு விண்ணப்பம் செய்தனர். இதன்காரணமாக அமெரிக்க-ஜப்பான் படையணி உருவாக்கப்பட்டது. இவர்கள் இத்தாலிப் போர்முனைக்கு அனுப்பப்பட்டனர். இரண்டாம் உலகப்போரின் வீரம் செறிந்த வரலாற்றில் அமெரிக்க ஜப்பான் படையணிகள் இத்தாலியில் நிகழ்த்திய சாதனைகள் இடம்பிடிக்கின்றன.

ஜனவரி 1945இல் போர் முடிவுக்கு வரும் வேளையில் அமெரிக்காவின் உட்பகுதி தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த ஜப்பானியர்கள் தத்தம் முன்னாள் வாழ்விடங்களுக்குத் திரும்புவதற்கு அனுமதிக்கப்பட்டனர். 1988 இல் அமெரிக்க அரசு தடுத்து வைக்கப்பட்ட ஜப்பானியர்களுக்கு நட்டஈடு வழங்கியது. தென் அமெரிக்காவிலிருந்து வந்த ஜப்பானியர்களுக்கு மிகச்சொற்ப தொகை வழங்கப்பட்டது. செப்ரம்பர் 11,2001 நிகழ்ச்சிகளுக்குப் பின் வேற்று நாட்டவர்மீதும், அமெரிக்க முஸ்லிம் பிரசைகள்மீதும் வேற்று நாட்டவர் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன. அமெரிக்காவுக்குச் சொந்தமான கியூபாவின் குவான்தனாமோ குடா (GUANTANAMO BAY) இராணுவ முகாம்களில் அப்கானிஸ்தானில் சிறைப்பிடிக்கப்பட்ட அல் குவெய்தா மற்றும் தலிபான் போர் கைதிகளுடன் வேறு பல அந்நியர்களும் அடைக்கப்பட்டுள்ளனர். 39 நாடுகளைச் சேர்ந்த 600 வரையானோர்கள் இத்தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணையின்றி தடுத்து வைக்கும் நடைமுறை உலக நாடுகள் யாவற்றிலும் காணப்படுகின்றது. சிறிலங்காவின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தடுத்து வைத்தலைத் தனது பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. சீனப் பாதுகாப்புப் படையினருக்கு சீன மக்களை 'தொழில் முகாம்களில்' -LABOUR CAMPS- தடுத்து வைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரம் நீதி மன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டுமென்று சீன மனித உரிமை ஆர்வலர்கள் விரும்புகின்றனர் தொழில் முகாம்களில் அடைக்கப்பட்டோர் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். இது சோவியத் ஒன்றியத்திடம் சீனா கடன் வாங்கியதொரு கொடூரமான நடைமுறை. பொல் பொட் காலத்து கம்போடியாவில் இறக்கும்வரை வேலைவாங்கும் தடுப்புக் காவல்முறை நடப்பில் இருந்தது. இப்போதைய பர்மாவிலும் அது நடைமுறையில் இருக்கின்றது.



Scanned by CamScanner

# நெருக்கமாக அடைப்பதற்கு உதவும் கைதி முகாம்கள்
## CONCENTRATION CAMPS

போர் கைதிகள், பொது மக்கள், அரசியல் கைதிகள், வேண்டப்படாத அகதிகள் போன்றோரை அடைத்து வைக்கும் முகாம்கள் ஆங்கிலத்தில் 'கொன்சன்ற்றேஷன் காம்ப்ஸ்' என்று அழைக்கப்படுகின்றன. இந்தச் சொற்பிரயோகம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாவனைக்கு வந்தது. 1899 இல் தென் ஆபிரிக்காவின் சிறிய நாடுகளான ஒறேன்ஜ் பிறீ ஸ்ரேற் - ORANGE FREE STATE, திரான்ஸ்வால் - TRANSVAAL என்பனவுடன் பிரித்தானியா போரிட்டது. இப்போர் 1902 வரை தொடர்ந்தது. இருபதாம் நூற்றாண்டைத் தொடக்கி வைத்த போர் என்று இது அழைக்கப்படுகின்றது. தென் ஆபிரிக்காவில் தங்கமும் வைரமும் கண்டுபிடித்த காரணத்தால் இப்போர் மிகவும் தீவிரமாக நடத்தப்பட்டது.

பிரித்தானியப் படைகளை எதிர்த்துப் போராடிய போவர் –BOER– இனப் போராளிகளுக்கு போவர் இனப் பொதுமக்கள் உதவுவதைத் தடுப்பதற்காக பிரித்தானியப் படைகளின் தளபதி கிச்செனர் பிரபு - LORD KITCHENER இந்தவகை முகாம்களை அமைத்தார். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதிக்குள் பொதுமக்களை நெருக்கமாக குடியிருத்தும் இராணுவ முறைமையை அவர் உருவாக்கினார். இருபதாம் நூற்றாண்டு வரலாற்றில் இது முன்னோடி முயற்சியாகக் கருதப்படுகின்றது.

ஸ்பேயின் நாட்டுக்கு எதிராகக் கியூபாத் தீவு நடத்திய விடுதலைப்போர் காலத்தில் (1866 - 97) ஸ்பேயின் நாட்டுத் தளபதி வெய்லர் - GENERAL WEYLER இந்தவகை முகாம்களை அமைத்துப் பொதுமக்களை தடுத்து வைத்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால் ஜேர்மனி நாசிகள் நிறுவிய முகாம்கள்தான் வரலாற்றில் மறக்க முடியாதவையாக அமைகின்றன. ஒறானியன்பூர்க், டச்சவ் - ORANIENBURG, DACHAU ஆகிய நகரங்களில் 1933 ஆம் ஆண்டில் நெருக்கமாக முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் மக்களை அடைத்து வைக்கும் முறைமையை ஐரோப்பாவில் முதன்முறையாக ஆரம்பித்தனர். ஜேர்மனிய படைகள் கைப்பற்றிய நாடுகளில் மேற்கூறியவை போன்ற முகாம்கள் திறக்கப்பட்டன. இவற்றுள் யூத இனத்தவர்களும், வேண்டப்படாதவர்களாக நாசிகள் கருதியவர்களும் அடைக்கப்பட்டனர்.

அவுஸ்விற்ஸ் - AUSCHWITZ போர்கன் - பெல்சன் - BERGEN - BELSEN, திரேபிளின்கா - TREBLINKA ஆகிய வதைமுகாம்களை வரலாறு மறப்பதற்கில்லை. இந்த முகாம்களில் 6 மில்லியன் யூதர்களும், 1 மில்லியனுக்கும் மேலான வேண்டப்படாதவர்களாகக் கணிப்பிடப்பட்டோரும் கொல்லப்பட்டனர். யூதர்கள் தமது பிரசார பலத்தால் தமது இழப்பை உலகம் மறவாத வகையில் கருமமாற்றுகின்றனர். கிப்சிகள் GYPSIES எனப்படும் புரதான காலத்தில் இந்திய



Scanned by CamScanner

உபகண்டத்தில் இருந்து ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்ந்து நாடோடி வாழ்க்கை நடத்திய மக்கள் ஹிற்லரின் வதை முகாம்களில் கொல்லப்பட்டனர். இவர்களுக்காகக் குரல் கொடுப்போர் யாருமில்லை. தடுப்பு முகாமைக் கொலை முகாமாக மாற்றிய பெருமை ஜேர்மனியரைச் சாரும்.

மலேசியாவிலும் கென்னியாவிலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மிகவும் கொடூரமான தடுப்பு முகாம்களை அமைத்தனர். 1948 – 1960 காலப்பகுதியில் கொமியூனிசப் புரட்சிக்கு எதிரான படைநடவடிக்கைகளில் பிரிட்டிஷ் படைகள் மலேசிய மக்களை சில குறிப்பிட்ட பகுதிகளுக்குள் தடுத்துவைத்தனர். இதனால் போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பு நிறுத்தப்பட்டது. தொடர்பு வைத்திருந்ததாகச் சந்தேகிக்கப்பட்ட கிராமங்களுக்கு உணவு வழங்கல் நிறுத்தப்பட்டது. அரை மில்லியனுக்கும் மேலான மலேசிய மக்கள் பலாத்காரமாகப் பிற இடங்களில் குடியிருத்தப்பட்டனர். இதை மீள்குடியேற்றம் (RESETTLEMENT) என்று பிரிட்டிசார் தெரிவித்தனர். இதே காலப்பகுதியில் வியற்நாமில் அமெரிக்கர்கள் செய்ததுபோல் பிரிட்டிசாரும் நச்சுத் திரவங்களையும் பொடிகளையும் குடியிருப்புக்கள்மீது தூவும் வழமையை மேற்கொண்டனர். ஆனால் அமெரிக்காகள் போன்ற அளவில் அல்ல.

கென்னியாவில் பிரிட்டிசார் உருவாக்கிய தடுப்பு முகாம்கள் மிகவும் கொடியவை. ஜுன் 1954 என்ற ஒருமாதத்தில் மாத்திரம் 402 தடுப்புக் கைதிகள் இறந்தனர். சித்தரவதைகள், கட்டாயக் கூலியற்ற அரசபணி, உணவு வழங்காமை, பெண்கள்மீது பலதரப்பட்ட கொடுமைகள், சிறுவர் பராமரிப்புக் குறைபாடுகள் என்பனவற்றால் இறப்புக்கள் தொடர்ந்தன. இவற்றை நியாயப்படுத்துவதற்காக பலதரப்பட்ட சட்டங்கள் இயற்றப்பட்டன. கென்னியா விடுதலைப் போரில் 10,000 வரையிலான கறுப்பர்கள் பிரிட்டிஷ் படைகளால் கொல்லப்பட்டனர். பிரிட்டிசார் அமர்த்திய கூலிப்படையினருக்கு ஒரு கறுப்பனைக் கொன்றால் ஐந்து பவுண்டு பணம் ஊதியமாக வழங்கப்பட்டது.

## போர் நடவடிக்கையின் போது பொதுமக்கள் உயிரிழப்பு

### COLLATERAL DAMAGE

போரின்போது இரு அணிகளும் பொருதுகின்றன, பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லை என்ற மாயை இருபதாம் நூற்றாண்டுடன் மறைந்தவிட்டது. பொது மக்கள் உயிரிழப்பு தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது. இந்தவகை உயிரிழப்பைக் குறிக்கும் 'கோலாற்றறல் டமேஜ்' என்ற கலைச்சொல்லும் உருவாகிவிட்டது. ஆனால் இந்த இழப்பிற்கு முதலிடம் கொடுபடுவதில்லை. போர் முதலிடமும், பொதுமக்கள் உயிரிழப்பு இரண்டாம் இடமும் வகிக்கின்றன. ஏதோ நடந்துவிட்டது என்ற விதத்தில் பொதுமக்கள் உயிரிழப்பு தட்டிக்கழிக்கப்படுகின்றது. சிறிலங்காவில் இந்த உயிரிழப்பிற்கு 'துப்பாக்கிச் சூட்டிற்கு இடையில் அகப்பட்டவர்கள்' –CAUGHT IN THE CROSSFIRE– என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.



Scanned by CamScanner

பொதுமக்கள் மீதான தாக்குதல்களும் உயிரிழப்புக்களும் இருபதாம் நூற்றாண்டில்தான் தொடங்கியதாக நாம் ஒருபோதும் எண்ணக்கூடாது. ஆதிகாலம் தொட்டு பொதுமக்களுக்கு பசி, பட்டினி, நோய், சாக்காடு என்பவற்றை ஏற்படுத்தும் வகையில் நகரங்களையும் கோட்டைகளையும் முற்றுகையிடும் உத்தி ஓர் போர் தந்திரோபாயமாகப் பயன்படுகின்றது. மக்கள் உயிரிழப்பு படையினர் மன உறுதியை உலுக்கும் என்பதே பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கு அடிப்படைக் காரணம். இன்றும் இது நிலைத்து நிற்கும் உண்மை. றோம் சாம்ராச்சியத்திற்கு முற்பட்ட ஆட்சியாளர்கள்தொட்டு சோவியத் சாம்ராச்சியம் வரையிலானோர் மக்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு இதைக் கடைப்பிடித்தனர்.

இரண்டாம் உலகப்போரின் இறுதிக் கட்டத்தில் மக்கள் செறிந்து வாழும் ஜேர்மன் நகரங்கள்மீது அமெரிக்க, பிரிட்டிஷ் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. இதை இராணுவ வல்லுநர்கள் 'கேந்திர குண்டு வீச்சு' -STRATEGIC BOMBING- என்று அழைக்கிறார்கள். அர்த்தம் என்னவென்றால் பொதுமக்கள் உயிரிழப்பு ஒரு விபத்தல்ல, அது திட்டமிட்டுச் செய்யப்படும் காரியம். 1999 மார்ச்சு 24 நள்ளிரவில் கொசோவோ மீது ஆரம்பிக்கப்பட்ட விமானக் குண்டுவீச்சுக்கள் 78 நாட்களின்பின் ஜூன் 9 ஆம் நாள் நிறுத்தப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அதை ஆய்வாளர்கள் பெரிதுபடுத்துவதில்லை, ஏனென்றால் இலக்கு எட்டப்பட்டு விட்டது.

ஹிரோஷிமா, நாகசாக்கி உயிரிழப்புக்களை போர் நடவடிக்கையின்போது நடந்த உயிரிழப்புக்களாக சில நோக்கர்கள் கருதுகின்றனர். பொதுமக்களின் உயிரிழப்பை ஏற்படுத்துவது மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் அணுகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் சொல்கின்றனர். பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்பட்டாலும், பொதுமக்களின் உயிரிழப்பை ஏற்படுத்துவதை போரை முன்னெடுக்கம் ஒரு முக்கிய தந்திரோபாயமாகத்தான் பார்க்கமுடியும். COLLATERAL DAMAGE என்ற சொற்றொடர் மறைமுக இழப்பைக் குறிக்கும், ஆனால் உண்மையில் அதை நேரடி இழப்பு DIRECT DAMAGE என்று திருத்தம் செய்யவேண்டும்.

## கூட்டுத் தண்டனை
## COLLECTIVE PUNISHMENT

ஒட்டுமொத்தமாகச் சுட்டுக்கொல்லுதல், நாடு கடத்துதல், புல்டோசர் போன்ற இடிப்புக் கருவிகள் கொண்டு வீடுகளை இடித்துத் தள்ளுதல் போன்ற செயற்பாடுகள் கூட்டுத் தண்டனை என்ற தலைப்பின் கீழ் வரும். ஒருவர் செய்ததாகக் கருதப்படும் குற்றத்திற்காக அவர் சார்ந்த சமூகத்தினருக்கு மேற்கூறியவை போன்ற கூட்டுத் தண்டனை வழங்கலை COLLECTIVE PUNISHMENT என்று அழைக்கிறார்கள். வரலாற்றில் கூட்டுத் தண்டனைச் சம்பவங்கள் ஏராளம் காணப்படுகின்றன. ஜெனீவா கொன்வென்ஷன் கூட்டு தண்டனை வழங்கலைத் தடைசெய்கின்றது. ஆனால் அமெரிக்க ஆதரவுபெற்ற

இஸ்ரேயில் ஹாமாஸ் தற்கொடைக் குண்டுதாரிகளின் உறவினர்கள், நண்பர்கள், அனுதாபிகள், உதவி வழங்குவதாகச் சந்தேகிக்கப்படுவோர் போன்றவர்களின் உயிரையும், இருப்பிடத்தையும் அழிக்கின்றது.

முன்னாள் செக்கோசுலோவாக்கியா மாநிலங்களான பொகீமியா, மொறாவியா - BOHEMIA, MORAVIA - என்பனவற்றை ஆட்சிசெய்த நாசி அதிகாரி றைன்காட் ஹெய்டிறிச் எதிர்ப்பாளர்களால் 1942 ஆம் ஆண்டு கொல்லப்பட்டார். இதற்கு லிடிஸ் (LIDICE) என்ற அந்த நாட்டுக் கிராமத்திற்கு ஜேர்மனிய படைகள் கூட்டுத் தண்டனை வழங்கின. அந்தக் கிராமத்தில் வாழ்ந்த ஆண்கள் யாவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர், 82 சிறுவர்கள் ஒரு சிறிய அறையில் அடைக்கப்பட்டு நச்சு வாயு மூலம் கொல்லப்பட்டனர். பெண்கள் யாபேரும் படையினரால் ஏற்றிச் செல்லப்பட்டு சிறிது காலத்தின்பின் உயிரிழந்தனர். அந்த கிராமத்து வீடுகள் யாவும் புல்டோசர் மூலம் தரைமட்டமாக்கப்பட்டன.

ஏப்பிறில் 2002 இல் ஜெனின் அகதிகள் முகாம்மீது இஸ்ரேயில் படைகள் தாக்குதல் தொடுத்தன. கவசம் தரித்த கற்றர்பில்லர் ரக புல்டோசர்கள் 140 கற்கட்டிடங்களை இடித்துத் தள்ளின. அமெரிக்கத் தயாரிப்பு கோபிறா (COBRA) தாக்குதல் உலங்கு வானூர்திகள் றொக்கெற் தாக்குதல் நடத்தின. பொதுமக்கள் பலர் வயது வேறுபாடின்றிக் கொல்லப்பட்டனர். அமெரிக்கா மேற்கொண்ட தடுப்பு இராசதந்திரத்தால் ஐநா அனுப்பவிருந்த விசாரணைக் குழு இடைநிறுத்தப்பட்டது. புல்டோசர் மூலம் கட்டிடங்களைத் தகர்க்கும் நடைமுறையை அனைத்துலக அமைப்புக்கள் கண்டித்துள்ளன. "அளவுக்கு மிஞ்சிய பாகுபாடற்ற பலம் பிரயோகித்ததற்காக" இஸ்ரேயில் கண்டனத்திற்கு உட்பட்டது. -EXCESSIVE AND INDISCRIMINATE USE OF FORCE.

யேல் பல்கலைக்கழகம், ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் சர்வதேச சட்டப் பேராசிரியையாகப் பணியாற்றும் றுத் வெட்ஜ்வூட் -RUTH WEDGEWOOD, PROFESSOR OF INTERNATIONAL LAW, YALE AND JOHNS HOPKINS UNIVERSITY போரில் ஈடுபடுவோர் இருவகைக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார்:

1. வித்தியாசம் காணுதல் - DISCRIMINATION.
2. (தாக்குதல்) விகிதம் பேணுதல் - PROPORTIONALITY.

வித்தியாசம் காணுதல் என்பது சிவிலியன்களையும் அவர்கள் வாழ்விடங்களையும் இனங்கண்டு, இராணுவத் தாக்குதல் நடத்துவதைத் தவிர்ப்பதைக் குறிக்கும். விகிதம் பேணுதல் என்பது எதிரியின் ஆயுதத்திற்குச் சம அளவிலான ஆயுதத்தைத் தாக்குதலுக்குப் பயன்படுத்த வேண்டும். அத்தோடு எதிரி மீது தாக்குதல் நடத்தும்போது சிவிலியன் உயிரிழப்பு நடவாவண்ணம்

Scanned by CamScanner

பார்த்துக் கொள்ளவேண்டும். இதற்கு அவர் தரும் உதாரணம்: மக்கள் வாழும் மாடிக் கட்டிடத்தின் மேற்பகுதியில் நின்று ஒருவன் ஸ்னைப்பர் தாக்குதல் நடத்தினால் அவனைச் செயலிழக்கச் செய்வதற்கு அந்த மாடிக் கட்டிடத்தின்மீது விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தக்கூடாது. இழப்புக்களற்ற வேறு மார்க்கத்தை நாடவேண்டும். இதுபோன்ற தார்மீகப் பார்வை போர் முகத்திற்குக் கிடையாது. இதன்காரணமாக மறைமுக உயிரிழப்புக்களும் (COLLATERAL DAMAGE) கூட்டுத் தண்டனைகளும் நடக்கத்தான் செய்கின்றன, என்கிறார் பேராசிரியை றுத் வெட்ஜ்வூட்.

பண்டுதொட்டு நிலவும் போரியல் வரலாற்றில் கூட்டுத் தண்டனை நிகழ்ச்சிகள் ஏராளம் காணப்படுகின்றன. இது வழமையான போரியல் நடைமுறை என்று சொல்லுமளவுக்கு அவை மலிந்துள்ளன. இருப்பினும் ஒரு சில கூட்டுத் தண்டனை நிகழ்ச்சிகள் மறவா வரம் பெற்றவையாக இருக்கின்றன. 1944 ஜூன் 09 ஆம் நாள் பிரான்சின் தல் (TULLE) நகரில் ஜேர்மன் படையினர் அந்த நகரில் வாழ்ந்த 99 ஆண்களைப் பகிரங்கமாகத் தூக்கிலிட்டுக் கொன்றனர். யாபேரும் இளம் பராயத்தினர். இவர்கள் மரங்களில் கையிற்றில் தொங்கவிடப்பட்டனர். நகர மக்கள் தூக்கிலிடுவதைப் பார்ப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். சடலங்கள் தொங்கிக் கொண்டிருந்த மரங்களின்கீழ் ஜேர்மன் படையினர் அமர்ந்திருந்து உணவருந்தினர். இசைமீட்டிக் கொண்டாடினர். ஒரு ஜேர்மன் அதிகாரியைக் கொன்றதற்காக இத்தண்டனை வழங்கப்பட்டது.

அமெரிக்க இராணுவ வரலாற்றின் கறைபடிந்த அத்தியாயமாக மைலாய் - MYLAI- அமைகின்றது. தலைநகர் சைகோனுக்கு 335 மைல் தூரம் வடகிழக்கிலுள்ள மைலாய் குக்கிராமத்தில் 525 வியற்நாமியர்கள் வாழ்ந்தனர். 1968 மார்ச்சு 16ஆம் நாள் அமெரிக்க இராணுவத்தின் 11 ஆம் பிறிகேற் படையாட்கள் நடத்திய 20நிமிடத் துவக்குச் சூட்டில் 504 கிராமவாசிகள் கொல்லப்பட்டனர் இதைச் செய்த படையினர் இச்சம்பவம் வெளிவராமல் பார்த்துக் கொண்டனர். ஆனால் 23வயதினரான றிச்சாடு றிடன் ஹாவர் என்ற படையாள் மனச்சாட்சியின் சுமை தாங்கமுடியாமல் படுகொலையை வெளியுலகிற்கு அறிவித்தார். படுகொலைக்குத் தலைமைதாங்கி கட்டளையிட்ட லெப்.கலே (LT.CALLEY) அமெரிக்க இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு சிறிய தண்டனையோடு தப்பிக்கொண்டார்.

இந்தியாவின் மைலாயாக இந்திய இராணுவம் நடத்திய வல்வெட்டித்துறைப் படுகொலைகள் அமைகின்றன. 1989 ஆகஸ்து 2,3,4 ஆம் திகதிகளில் இந்திய இராணுவத்தின் சூட்டில் 63 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் படுகாயமடைந்தனர். 123 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டன, 45 கடைகள் எரியூட்டப்பட்டன. பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். 176 வள்ளங்கள் எரித்தழிக்கப்பட்டன. இது போதாதென்று மூன்று நாட்கள் நீடித்த ஊரடங்கு உத்தரவையும் போட்டார்கள். இதனால் இறந்தவர்களின் ஈமக்கடன் செய்வதும் தடைப்பட்டது. படுகொலை சம்பந்தமான தகவல் வெளியுலகிற்கு



Scanned by CamScanner

எட்டக்கூடாது என்பதற்காகவே ஊரடங்கு போடப்பட்டதாக அறியப்படுகின்றது. கொழும்புப் பத்திரிகைகள் மௌனம் சாதித்தன. த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் கொழும்பு நிருபர் றீற்றா செபஸ்தியன் முதன்முதலாக வெளியுலகிற்கு அறிவித்தார்.

கூட்டுத் தண்டனையை வழங்கும் இராணுவத்தினரின் மனோநிலையைப் படம்பிடித்துக் காட்டும் விதத்தில் இச்சம்பவ காலத்தில் வடமராட்சியில் பணியாற்றிய இந்திய இராணுவ பிரிகேடியர் சங்கர் பிரசாத் என்பவரின் கூற்று அமைகின்றது. படுகொலைக்கு சில மாதங்களுக்கு முன் பிரசைகள் குழுவினரை நோக்கி அவர் கூறினார், "இந்திய இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டால், வடமராட்சியின் முழுக்கிராமங்களையும் எரிப்பேன்..... நூற்றுக்கணக்கில் சுட்டுத்தள்ளுவேன். இராமர் - இராவண யுத்தத்தில் லங்கா எரிந்ததுபோல் மீண்டும் இலங்கை எரியும்.... எங்களை எவரும் எதுவும் செய்துவிட முடியாது...... நாங்கள் உலகின் நான்காவது பெரிய இராணுவம்"

ஆதாரம் - வல்லைப் படுகொலைகள், ந.அனந்தராஜ்.

வல்வெட்டித்துறைப் படுகொலைகள், புலிகள் சுட்டுக்கொன்ற, ஆறு இந்திய இராணுவத்தினருக்காக நடத்தப்பட்டது. சிறிலங்கா இராணுவம் பல்வேறு கூட்டுத் தண்டனைகளை தமிழர்களுக்கு வழங்கியுள்ளது. அவற்றுள் செம்மணி படுகொலைகள் உலகப் பிரசித்தமானவை. இது 1996 இல் நடைபெற்றது. அதைவிட பொத்துவில் அகதி முகாமில் தங்கியிருந்த 150 ஆண் பெண், சிறுவர்கள் 1990 ஆகஸ்து 02 ஆம் நாள் சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். ஒரு மாதத்தின் பின் 1990 செப்பரம்பர் 05ஆம் நாள் கிழக்கு மகாகாண பல்கலைக்கழக அகதிமுகாமில் வாழ்ந்த 158 தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். ஓயாத அலைகள் -1 மூலம் முல்லைத்தீவு இராணுவ முகாமைப் புலிகள் தாக்கி அழித்ததற்குப் பதிலடியாகவே யாழ் தீபகற்பத்தில் வாழ்ந்த 700 வரையிலான அப்பாவித் தமிழர்கள் செம்மணி மண்ணில் புதைக்கப்பட்டனர்.

ஜாலியன் வாலா பூங்காவில் பிரித்தானியப் படைகள் 1919 ஏப்பிறில் 13 ஆம் நாள் நடத்திய படுகொலைகள் கூட்டுத் தண்டனை வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துள்ளன. இப்படுகொலைகள் நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் இந்தியர்கள் மூன்று ஆங்கிலேயர்களைக் கொலைசெய்ததோடு ஒரு ஆங்கிலப் பெண்ணையும் தாக்கினர். பஞ்சாப் மாநிலத்தின் அமர்தசரசிலுள்ள பூங்காவில் பிரித்தானியாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இராணுவம் சரமாரியாகச் சுட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர், ஆயிரத்து இருநூறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதலை நடத்திய பிரிட்டிஷ் ஜெனரல் டையருக்கு பிரித்தானிய அரசு விருது வழங்கிக் கௌரவித்தது.



Scanned by CamScanner

ஒப்பரேஷன் பார்ப்ரோசா (OPERATION BARBAROSSA) என்று பெயரிடப்பட்ட சோவியத் ருஷ்யா மீதான ஹிற்லரின் படையெடுப்பின்போது சிவிலியன்களின் பாதுகாப்பு உரிமைகளைப் பறிக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மே 13, 1941 என்ற திகதியுடன் பீல்ட் மார்ஷல் கைற்றல் (FIELD MARSHALL KEITEL) கைச்சாத்திட்ட இந்த உத்தரவு 'கொலை, பாலியல் வல்லுறவு, சூறையாடுதல்' போன்ற குற்றங்களில் இருந்து ஜேர்மன் படையினருக்கு பாதுகாப்பு அளித்தது. சிவிலியன்களுக்கு எதிரான கூட்டுத் தண்டனைகளை இந்த உத்தரவு ஊக்குவிக்கின்றது. இராணுவச் சட்டத்தின்படி சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் தடை செய்யப்படுகின்றன. பீல்ட் மார்ஷல் கைற்றலின் உத்தரவு அனைத்துலக இராணுவச் சட்டத்தை நிராகரிக்கின்றது. நடைமுறையில் சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் சர்வசாதாரணமாக நடக்கின்றது. ஒரு உயர் இராணுவ அதிகாரியின் ஒப்பத்தோடு எழுத்துமூலம் செய்யப்படும் இது சம்பந்தமான உத்தரவு மிகவும் அரிது.

ஒரே சமயத்தில் பல குண்டுவீச்சு விமானங்கள் மூலம் குண்டுமாரி பொழிதலை CARPET BOMBING என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். தரையில் கம்பளம் விரித்தாற்போல் குண்டுவீசுதல் என்று பொருள். விமானப்படை வரலாற்றில் இந்தவகை குண்டுவீச்சை கண்டுபிடித்தவர் பாரன் வொல்ப்பிறம் பொன் றிச்ற்ஹோவென் (BARON WOLFRAM VON RICHTHOVEN) என்ற ஜேர்மன் விமானப்படைத் தலைமை அதிகாரியாவர். ஸ்பேயின் நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் (1936-1939) இவர் கொன்டோர் (CONDOR) ரக ஜேர்மன் குண்டுவீச்சு விமான அணிக்குத் தலைமை தாங்கினார். அப்போது குண்டுமாரி பொழியும் இத் தொழில்நுட்பத்தை இவர் உருவாக்கினார்.

1937 இல் இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இவர் கேணிக்கா (GUERNICA) என்ற ஸ்பேயின் நகரை முற்றாக அழித்தார். இரண்டாம் உலகப் போரின்போது இவருடைய விமானப் படையணிகள் யூகோசுலாவியாவின் பெல்கிறேட் (BELGRADE) நகர்மீது ஏப்பிறில் 1941 இல் குண்டுவீச்சு நடத்தின. இதில் 17,000 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர்.

இந்தவகை தாக்குதல்கள் இன்றும் நிறுத்தப்படவில்லை. இரண்டாம் உலகப் போரில் பிரித்தானியா-அமெரிக்கா ஆகியவற்றிற்குச் சொந்தமான விமானங்கள் ஜேர்மன் சிவிலியன்களைக் கொன்றுகுவித்தன. அமெரிக்கர்கள் கோரியப் போர், வியற்நாம் போர், பாலைவனப்புயல் போர், கொசோவோ போர் போன்றவற்றில் அதையே செய்தனர். பாதுகாப்பான போர்முறை என்று விமானத்தில் இருந்து குண்டுவீசி உயிரழிவை ஏற்படுத்தும் தாக்குதல் முறைமையை குறிப்பிடுவார்கள். நவீன போர்முறையில் சிவிலியனுக்கும் போர்வீரனுக்கும் வித்தியாசம் பாராட்டாத விமானக் குண்டுவீச்சுத்தான் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது.



Scanned by CamScanner

விமானத் தாக்குதல்கள் நடைமுறைக்கு வந்தபின் கூலிக்கு விமானமோட்டும் கூலிப்படையினரும் உருவாகிவிட்டனர். தமிழர்களுக்கு எதிரான போரில் ருஷ்ய, உக்கிரேனிய கூலிப்படை விமானமோட்டிகளை சிறிலங்கா பயன்படுத்தியது. ஒரே நடையில் பெருந்தொகை குண்டுகளை ஏற்றிச்சென்று பாதுகாப்பான உயரத்தில் நெடுநேரம் நின்று குண்டுவீசும் பி 52 ரக இராட்சத விமானம் அமெரிக்காவுக்குச் சொந்தமானது. நாள் ஒன்றுக்கு ஆயிரம் வரையிலான குண்டுவீச்சு விமானங்கள் பாலைவனப்புயல் பேரில் தாக்குதல் நடத்தின. கம்பளவிரிப்பு குண்டுவீச்சின் கொடூரத்தை உணர்த்த இது போதுமானது.

ஹிற்லரின் நாசி அரசு யூதர்களைப் பெரும் எண்ணிக்கையில் கொலை செய்ததை நாம் அறிவோம். ஆனால் அதே யூதர்கள் பிற இனங்கள்மீது நடத்தும் தாக்குதல்களைக் கண்டுகொள்ள உலகம் தவறுகின்றது. சிறிலங்காப் படைகள் தமிழர்களுக்கு கூட்டுத் தண்டனை வழங்குவதற்கு இஸ்ரேயில் ஆலோசகர்கள் உதவி புரிந்தனர். எல்ரிரிஈ பெறும் மக்கள் ஆதரவை இல்லாதொழிப்பதற்கு மக்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டும் என்ற உத்தியை சிறிலங்கா வந்த மொசாட் உளவுப் பிரிவினர் பரிந்துரை செய்தனர். தமிழ்மக்கள் மீது சிறிலங்கா ஆயுதப் படைகள் நடத்திய தாக்குதல்கள் எதிர்பார்த்த பலனளிக்கவில்லை.

## இனத் துவேஷம்
## RACIAL PREJUDICE

அடிமனதில் படிந்திருக்கும் விருப்பு வெறுப்புக்கள் எமது சிந்தனையும் செயலுமாக உருவெடுக்கின்றன. இவற்றை அரசியல் மற்றும் இராசதந்திரத் துறைகளில் நன்கு அடையாளம் காணமுடியும். ஒரு நாட்டின் அரசியல் மற்றும் இராசதந்திரத்தில் அந்த நாட்டிற்கே உரித்தான தனித்துவ முத்திரை புலப்படும் என்கிறார்கள். அந்த நாட்டின் சிந்தனைப் பாரம்பரியம், மத நம்பிக்கை, மரபு மற்றும் வரலாற்று அனுபவங்கள் என்பனவற்றின் மொத்த வடிவமாக மேற்கூறிய முத்திரை அமைகின்றது. நாடொன்றுடன் உறவாடும்போது அந்த நாட்டின் இத்தனித்துவத்தை முன்கூட்டியே ஐயந்திரிபற அறிவதால் நல்ல பயன்பெறமுடியும். இவ்வகைத் தனித்துவத்தில் அந்த நாட்டு மக்கள் மனதில் நிலவும் காழ்ப்பு உணர்ச்சிகள், துவேஷங்கள் என்பன பெரும் பங்கு வகிக்கின்றன.

இனத்துவேசஷம் என்பது மறைக்கமுடியாது நீக்கமற நிலவும் தீய உணர்வு என்பது அறிஞர்கள் முடிவு. நாடுகள் எடுக்கும் தீர்மானங்கள், உருவாக்கும் திட்டங்கள், அமுலாக்கும் நடவடிக்கைகள் என்பனவற்றில் இனத் துவேஷம் பெரும்பங்கு வகிக்கின்றது. இந்தியர்கள்மீது சிறிலங்கா அரசு காட்டும் வெறுப்பு வரலாற்றில் ஊறியது. பாண்டியர்கள், சோழர்கள் நடத்திய படையெடுப்புக்கு சிங்கள இனம் காட்டும் வெறுப்பு முழு இந்தியாவுக்கும் எதிரானதாக மாற்றப்பட்டுள்ளது. சீனா, பாகிஸ்தானுடனான சிறிலங்காவின் நட்பு மிகவும் இயல்பானது. சிங்களத் தலைமை இந்தியாவுடன் கொண்டுள்ள நட்புறவு



Scanned by CamScanner

செயற்கையானது, குறிப்பிட்ட தேவைகருதி உருவானது. 1962 இல் நடந்த இந்திய – சீன எல்லைப்போர், 1971 இல் நடந்த இந்தியா கிழக்கு பாகிஸ்தான் போர் ஆகியவற்றில் சிறிலங்கா எடுத்த நடுநிலைப்பாட்டிற்கு இது விளக்கமாக அமைகின்றது.

நிறத் துவேஷமும் உலக அரசியலில் பெரும்பங்கு வகிக்கின்றது. ஜேர்மனியர்களைவிட ஜப்பானியர்களை வெறுப்பது அமெரிக்க அதிபர் ஹரி ட்ரூமனுக்கு எளிதாக இருந்தது. 'அவர்கள் எங்களிலும் பார்க்க வித்தியாசமானவர்கள்' என்றார் ட்ரூமன். –THEY LOOKED DIFFERENT FROM US 'ஜப்பானியக் காட்டுமிராண்டிகள்' –JAP SAVAGES– என்று அவர் ஜப்பானியர்களை தூஷித்தார். ஹிரோஷிமா மீது அணுகுண்டுத் தாக்குதல் நடந்த செய்தி வந்தவுடன் அவர் 'வரலாற்றில் இதுதான் மிகப்பெரிய சம்பவம்' – THIS IS THE GRATEST THING IN HISTORY என்று கொக்கரித்தார்.

அண்மைக்கால ஆய்வுகளின்படி அணுகுண்டுத் தாக்குதலுக்கு முன்பாகவே சரண்புகுவதற்கு தயாராக ஜப்பான் இருந்தது. அமெரிக்க முப்படைத் தலைவன் அட்மிறல் வில்லியம் லீகீ -ADMIRAL WILLIAM.LEAHY தனது வாழ்க்கை நூலில், "ஜப்பானுக்கு எதிரான எமது போரில் அணுகுண்டு போடவேண்டிய அவசியமில்லை. அவர்கள் மானத்தோடு சரண்புகும் வழிமுறைகளைத் தேடிக் கொண்டிருந்ததை அதிபர் ட்ரூமன் நன்கு அறிவார். இருந்தும் அவர் குண்டபோடும் தீர்மானத்தை எடுத்தார்" பேர்ள் துறைமுகத்தில் கொல்லப்பட்ட இரண்டாயிரம் அமெரிக்கப் படையினரின் உயிர்களுக்கு மாற்றீடாக அவர் இரண்டு இலட்சம் ஜப்பானியப் பொதுமக்களின் உயிர்களைப் பறித்தார். அணுகுண்டுத் தாக்குதலைவிட வேறு உபாயங்கள் அமெரிக்காவிடம் அப்போது இருந்தது. இவற்றையெல்லாம் மீறியபடி அணுகுண்டுத் தாக்குதலை நடத்துவதற்கு எடுத்த தீர்மானம் துவேஷத்தின் பால் பட்டது.

அரசியல் மற்றும் இராசதந்திர முன்னெடுப்புக்கள், போர் மற்றும் அமைதி நடவடிக்கைகளின் பின்னணியில் இனத்துவேஷம், நிறத்துவேஷம், மதவெறி, போன்றவை இடம்பெறுகின்றன. ஒரு ஞானியின் உடற்தோலை சுரண்டிப் பாருங்கள். அங்கேயொரு காட்டுமிராண்டி மறைந்திருப்பான் என்ற பழமொழியை இவ்விடத்தில் நினைவுகூரலாம். மனித நாகரீகங்கள் பிறக்கமுன்பே துவேஷ உணர்வுகள் பிறந்துவிட்டன.

சிங்கள இனத்தவர் மத்தியில் தோன்றிய தலைசிறந்த கல்விமான்களில் ஒருவரான லலித் அத்துலத்முதலி, ஜெயவர்த்தனா அரசின் தேசிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவிவகித்த காலத்தில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுத்த நடவடிக்கைகள் இனத் துவேஷத்தின் எல்லையைத் தொடுகின்றன. கழிப்பறைக் கழிவுகளைப் பொதிசெய்து தமிழர் பகுதிகளின் வீடுகள், குடிநீர்கிணறுகள் மீது விமானம் மூலம் போடும் இழிசெயலை அவர் தொடக்கினார். தமது கிணறுகளை மூடிவைக்கவேண்டிய நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர். பாரிய மரக் குற்றிகளை தமிழர் வீடுகள்மீது போடும் முன்னர் கேள்விப்படாத விமானத் தாக்குதல் முறையையும் அவர் ஆரம்பித்தார்.



Scanned by CamScanner

அத்துலத்முதலி கொள்வனவு செய்த சியாமார்செட்டி ரக பொம்பர் விமானங்கள் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் குண்டுவீச்சு நடத்தியபோது விமானமோட்டிகள் தமக்கிடையில் பேசியதை தரையிலிருந்து கேட்கக்கூடியதாக இருந்தது. எமது வானொலி பண்பலை வரிசையில் விமானிகளின் உரையாடல்கள் நன்றாகக் கேட்டன. 'சார்ளி பப்பா' என்ற சங்கேத மொழிப் பெயருக்குரிய விமானமோட்டி இன்றுமோர் விமானத்தை ஓட்டும் சகாவுக்கு பின்வருமாறு உத்தரவிட்டார். "அந்த அழகான வீடுமீது ஒரு குண்டைப் போடு" DROP ONE ON THAT BEAUTIFUL HOUSE. இந்த வரி ஈழத்தமிழர் நெஞ்சிலும் ஒலி நாடாவிலும் பதியப்பட்டுள்ளது.

நெப்போலியன் தலைமையில் பிரான்சுடன் பிரித்தானியா அரசு போரிட்டபோது துவேஷத்திற்கு உதாரணமாக இன்னுமோர் சம்பவம் நடைபெற்றது. நெப்போலியன் மீதான தமது வெறுப்பை காட்டுவதற்காக அவருடைய படங்களைத் தமது கழிப்பறைகளில் ஆங்கிலேயர்கள் தொங்கவிட்டனர். இதைக் கேள்விப்பட்ட நெப்போலியன் "மலச் சிக்கலால் பீடிக்கப்பட்டுள்ள அவர்களுக்கு எனது படம் சிறந்த நிவாரணம் அளிக்கும்" என்று நகைச்சுவை ததும்பக் கூறினார்.

சில துவேஷக் குறயீடுகள் நிலைத்து நிற்பதும் உண்டு. ஜப்பானின் பூர்வக்குடிகளான அயினு மக்களுக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன தெரியுமா? ஜப்பானிய மொழியில் அயினு என்றால் 'சொறிநாய்கள்' என்று அர்த்தம். இன்றுவரை அந்த மக்களுக்கு ஜப்பானியர்கள் இட்ட பெயர்தான் நிலைத்து நிற்கின்றது.

## போர்
## WAR

ஆயுதப் படைகளின் பங்களிப்போடு இரு நாடுகள் நடத்தும் மோதலைப் போர் என்பார்கள் – ஒரு நாட்டின் இருவேறு பகுதியினருக்கு இடையில் நடக்கும் மோதலும் போர் எனப்படும். போர் நடக்கும்போது சாதாரண சட்டங்களின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படுகின்றன, போருக்குரிய சட்டதிட்டங்கள் நடைமுறைக்கு வருகின்றன. போர் ஆரம்பிக்கப்பட முன் உத்தியோகபூர்வமான போர்ப் பிரகடனம் செய்யப்படவேண்டும். இதை DECLARATION OF WAR என்ற ஆங்கிலச் சொற்கள் சுட்டுகின்றன. பிரகடனப்படுத்தப்படாத போரை UNDECLARED WAR என்று அழைப்பார்கள்.

போர் என்றால் என்ன, அதன் தன்மை யாது, போரின் இலட்சணங்கள் என்ன போன்றவற்றிற்கு திருப்திகரமான விடை கிடையாது. சட்டவல்லுநர்கள், ஆய்வாளர்கள் என்போர் மத்தியில் இதுபற்றிக் கருத்தொற்றுமை கிடையாது. போருக்குரிய இலட்சணங்கள் இருப்பின் அதுவும் போர் நிலவரமாகக் கருதப்படுகின்றது. ஒரு குழு இன்னுமோர் குழுமீது தாக்குதல் தொடுக்கும்போது அதுவும் போராகக் கணிப்பிடப்படுகின்றது. போரின் பரிமாணங்களும்



Scanned by CamScanner

அளவீடுகளும் வேறுபடுகின்றன. பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களுடன் நடத்தப்படும் போரை ALL-OUT WAR என்கிறார்கள் அதாவது ஆயுதக் களஞ்சியத்தில் உள்ளதெல்லாவற்றையும் பயன்படுத்தி நடத்தப்படும் போர் என்று அர்த்தம். இதில் அணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள், நச்சுக்கிருமி மற்றும் விஷவாயு ஆயுதங்கள் உள்ளடங்கும். தாக்குதல் தரை,வான், கடல் என்பனமூலம் நடத்தப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட போர்-LIMITED WAR-என்ற இன்னுமோர் வகை உண்டு. இதில் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் பயன்படுத்தப்படமாட்டாது. எறிகணை வீச்சு, கையெறிகுண்டு, துப்பாக்கிகள் சகிதம் மட்டுப்படுத்தப்பட்ட போர் நடத்தப்படுகின்றது. இரண்டு விதப் போர் முறைக்குமிடையில் எல்லை வித்தியாசம் குறைவு, உயிரிழப்புக்கள் முதல் ரகத்தில் கூடியும் இரண்டாம் ரகத்தில் குறைந்தும் காணப்படுகின்றது. எனினும் எதிரியை வெற்றிகொள்வது என்ற இலக்கு இருவகைக்கும் பொதுவாக இருக்கின்றது.

இன்னுமோர் வகை வேறுபாடு இருக்கிறது. ஒருநாட்டை அல்லது மக்கள் கூட்டத்தை முற்றாக அழிப்பதற்கு நடத்தப்படும் போர் ஒரு வகைப்படும். ஒரு துண்டு நிலத்தை மாத்திரம் கைப்பற்றுவது அல்லது குறிப்பிட்ட எல்லையை விஸ்தரிப்பது, அல்லது ஒரு பாதையைக் கைப்பற்றுவது போன்ற இலக்கின் அடிப்படையில் நடத்தப்படும் போர் இன்னுமோர் வகைப்படும்.

சீருடை தரித்த இரு அணிகளுக்கிடையில் போர் நடைபெறலாம். அல்லது இரண்டில் ஒரு அணி கெரில்லாப் படையாகவும் இருக்கலாம். சீருடை தரித்து சமராடும் முறையை CONVENTIONAL WAR என்பார்கள். இதற்கு எதிரானது GUERRILLA WAR என்ற கெரில்லாப் போர் முறையாகும். சீருடை தரித்துப் போரிடும் முறைமையை மரபுவழிப் போர்முறை என்றும் அழைப்பார்கள். மரபு வரண்முறைகளுக்கு உட்படாத போர்முறை (IRREGULAR WARFARE) என்றும் கெரில்லாப் போர்முறை என்றும் அழைக்கப்படுவதுண்டு. இது தரத்தில் குறைந்த போர்முறையல்ல. விவேகமாக நடத்தப்படும் கெரில்லாப் போர்முறையை மரபுவழிப் போர்முறையால் முறியடிப்பது மிகவும் கடினம். போரின் இலக்குகள் பலதரப்படும்-அரசியல், சித்தாந்தம், பொருளாதாரம், மதம், உளவியல், இன அழிப்பு. ஆனால் எந்த நவீன ஆயுதம் வருகைதந்தாலும் ஒரு முக்கிய அடிப்படை விடயம் ஒருபோதும் மாறாது : தரைப்பகுதியை முற்றாகக் கைப்பற்றி எதிர்ப்பைத் துடைக்கும்வரை வெற்றி நிட்சயமல்ல.

போரை நடத்துதல் இறமை நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளில் ஒன்றாகும். இதை அனைத்துலகச் சட்டம் ஏற்றுள்ளது. அமைதி காப்பதே ஐநாவின் பிரதான நோக்கம். இதை எட்டுவதற்காக மூவகை நடவடிக்கைகளில் ஐநா ஈடுபடுகின்றது : முரண்பாடுகளை அமைதிவழியில் தீர்த்தல், ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான கூட்டு நடவடிக்கை எடுத்தல், பொருளாதார,சமூக, மனித உரிமைத் திட்டங்கள் மூலம் ஒழுங்கான உலகைக் கட்டியெழுப்புதல்.



Scanned by CamScanner

# பிரகடனப்படுத்தப்படாத போர்

## UNDECLARED WAR

ஒரு நாட்டை அல்லது நாட்டின் பகுதியைத் தண்டிப்பதற்காகவும் சட்டபூர்வ உரிமையை நிலைநாட்டுவதற்காகவும் பிரகடனப்படுத்தப்படாத போர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பிரகடனப்படுத்தப்படாத போரின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு :

- இராசதந்திர உறவுகளை முறித்துக்கொள்ளல்;
- நட்புறவை முறிக்கும் சட்ட நடவடிக்கை எடுத்தல்;
- சட்டத்திற்குப் புறம்பான தாக்குதலை மேற்கொள்ளுதல்;
- பொருளாதார மற்றும் போக்குவரத்துத் தடைகளை விதித்தல்;
- சுற்றி வளைப்பு போன்ற நடவடிக்கை மூலம் கட்டுப்பாட்டில் கொண்டுவருதல்;
- முகாம் அமைத்து அந்த நாட்டில் நிலைகொள்ளுதல்;
- திடீர் தாக்குதலை நடத்திவிட்டு வேகமாக வெளியேறுதல்;

அனைத்துலகச் சட்டம் மேற்கூறியவற்றைப் 'பதிலடி'- COUNTERATTACK- என்று வகைப்படுத்துகின்றது. இந்த நடவடிக்கைகளுக்கு சட்டபூர்வ அங்கீகாரம் உண்டு. தனுக்குதவி தனது படைபலம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் இந்தவகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாடுகளுக்கிடையில் நிலவும் முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு திருப்திகரமான அமைப்புக்கள் இல்லாதபடியால் பலமுள்ள நாடுகள் பிரகடனப்படுத்தப்படாத போரை நடத்துகின்றன. ஐநா சாசனம் இவற்றைக் கண்டித்துள்ளது, இருப்பினும் இந்தவகைப் போர் நடவடிக்கை நின்றபாடில்லை.



Scanned by CamScanner

# போர் பிரகடனம்
## DECLARATION OF WAR

போர் தொடக்கப்படுவதாகக் கொடுக்கப்படும் பகிரங்க அறிவித்தலின் அவசியத்தை 1907 ஆம் ஆண்டின் ஹேக் மாநாடு வலியுறுத்துகின்றது. 1907இன் பின் தோன்றிய உலக நாடுகள் இதை ஏற்கவில்லை இவ்வகைப் போர்ப்பிரகடனம் எதிரி நாட்டிற்குக் கொடுக்கப்படும் எச்சரிக்கையாகவும் போருடன் தொடர்பில்லாத நடுநிலை நாடுகளுக்கு கொடுக்கப்படும் அறிவித்தலாகவும் அமைகின்றது. திடீரென்று முன்னறிவித்தலின்றி நடத்தப்படும் போர்முறையை இது தள்ளி வைக்கின்றது. போர் பிரகடனத்தைத் தவிர்ப்பதற்காகத் தாம் நடத்தும் போர் தற்காப்புப் போர் என்றும், சட்டம் ஒழுங்கு நடவடிக்கை என்றும் பிரகடனத்தை செய்ய விரும்பாத நாடுகள் விளக்கம் தருகின்றன.

போர்ப் பிரகடனம் செய்வதால் எதிரிக்கு முன்பு இல்லாத தகுதி அல்லது அந்தஸ்து கிடைத்துவிடும் என்ற அச்சம் முன்னறிவித்தல் கொடுக்காததற்குக் காரணமாக அமைகின்றது. இரண்டாம் உலகப் போரின்பின் நடைபெற்ற பெரும் பாலான போர் நடவடிக்கைகளில் முன்னறிவித்தல் கொடுக்கப்படவில்லை. பிரகடனம் செய்வதுமூலம் எதிரிக்கு வரக்கூடிய உதவிகளை ஊக்குவிப்பதாகவும் கருதப்படுகின்றது. கொரியத் தீபகற்பப் போர், வியற்நாம் போர், அப்கான் நாட்டுப் (சோவியத் ஒன்றியப் படைகளின் உள்நுழைவு) போர் என்பன போர்ப் பிரகடனம் செய்யாது தொடங்கப்பட்ட போர்களாகும். பேர்ள் துறைமுகத்தின்மீது 1941 இல் ஜப்பான் படைகள் பிரகடனம் செய்யாத போரைத் தொடுத்தனர். இருபதாம் நூற்றாண்டின் பிரகடனம் செய்யப்படாத படைநடவடிக்கைக்கு முன்னுதாரணமாக இத்தாக்குதல் விளங்குகின்றது.

# உள்நாட்டுப் போர்
## INTERNAL CONFLICTS

நாடுகளின் எல்லைகளுக்குள் நடக்கும் மோதல்கள் - INTERNAL CONFLICTS - அதாவது உள்நாட்டு மோதல்கள் என்று வகைப்படுத்தப் படுகின்றன. வெளிநாட்டு உதவிகள், அழுத்தங்கள், தூண்டுதல்கள் இருப்பினும் உள்நாட்டில் வாழ்பவர்களால் தமது மண்ணிலேயே இவ்வகை மோதல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வகை மோதல்கள் ஆட்சிப் பகிர்வு, இன அடையாள அங்கீகாரம், வளப்பங்கீடு போன்ற முக்கிய காரணிகளுக்காக நடத்தப்படுகின்றன. எல்லைக்குட்பட்ட ஒரு சாரரின் கோரிக்கைகளை நிறைவேற்ற அந்த நாட்டின் அரசு மறுக்கும்போது அல்லது வழங்குவதற்கு இயலாதிருக்கும்போது மோதல்கள் தொடங்குகின்றன. வழமையான அரசியலின் எல்லைகளை கடந்து மோதல் என்ற அடுத்த கட்டத்தை அந்த நாட்டின் விவகாரம் சென்றடைகின்றது.



Scanned by CamScanner

நாடுகளுக்கிடையிலான போரிலும் பார்க்க உள்நாட்டுப் போர் இரு வகையில் வித்தியாசப்படுகின்றது. உரிமை மறுப்பு, உரிமைக் கோரிக்கைக்கு எதிர்ப்பு, பாதுகாப்பின்மை, அடையாளங்களுக்கு அச்சுறுத்தல் என்பன உள் நாட்டுப் போரில் அடையாளம் காணப்படுகின்றன. உள்நாட்டு மோதல்கள் போராக விரிவடைவதற்கு அரசு மேற்கொள்ளும் கொடூரமான எதிர் நடவடிக்கை முக்கிய காரணமாக அமைகின்றது. அமைதி நடவடிக்கைளை மேற்கொள்ளும் வெளி நாடுகள் போரில் ஈடுபடும் இருபகுதியினரும் போரில் ஒருமுக்கிய கட்டத்தை அடையும்வரை காத்திருக்கின்றன. பெரும்பாலும் சோர்வும் தேக்க நிலையும் ஏற்படும்போது அமைதி நடவடிக்கையை அந்த நாடுகள் மேற்கொள்கின்றன.

ஒரு நாட்டில் உள்நாட்டுப் போர் நடப்பதாக வெளிநாடுகள் ஏற்றுக்கொண்டால் அரசை எதிர்த்துப் போரிடும் அமைப்பிற்கு அது பெறுமதிமிக்க அங்கீகாரமாக அமைகின்றது. அவர்கள் நடத்தும் போர் சட்ட அங்கீகாரம் பெறுகின்றது. அவர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலப்பரப்பிற்கு உரித்துள்ள வர்களாகவும் அதை ஆட்சி செய்யும் வலு உள்ளவர்களாகவும் மதிப்பிடப்ப டுகின்றனர். அமைதி முன்னெடுப்புக்கள் இந்த அடிப்படையில் நடத்தப் படுகின்றன.

# போரைத் தீவிரப்படுத்தல்
## ESCALATION

போர் நடவடிக்கைகளை அதிகரித்தல், போரின் பரப்பளவைப் புவியியல் ரீதியாக விரிவாக்குதல் போரைத் தீவிரப்படுத்தும் இரண்டு நடைமுறைகளாகும். மட்டுப்படுத்தப்பட்ட போரை புதிய ஆயுதங்கள், கூடுதல் எண்ணிக்கையில் துருப்புக்கள் என்பன மூலம் தீவிரப்படுத்தலாம் அத்தோடு இலக்குகளைக் கூட்டுவது முலமாகவும் தீவிரப்படுத்தலாம். தீவிரப்படுத்தப்பட்ட போரின் இறுதி இலக்குகளாக எதிரியின் நிபந்தனையற்ற சரணாகதி, அல்லது அழித்தொழித்தல், அல்லது போரைக் கைவிட்டு இணக்கப்பாட்டிற்கு வரச்செய்தல் என்பன அமைகின்றன.

பலம் பலத்தைச் சந்திக்கும் அல்லது உருவாக்கும். என்ற இராணுவக் கோட்பாட்டிற்கு அமைவாக ஒரு பகுதி போரைத் தீவிரப்படுத்தும்போது அதற்கு நிகரான பதிலடியையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தாக்கப்பட்ட பகுதியினருக்கு வெளிஉதவிகள் கிடைக்கலாம் அல்லது தனது முழுப்பலத்தையும் ஒன்றுதிரட்டிப் பதிலடி கொடுக்கும் நிலைக்கு அது தள்ளப்படலாம். தீவிரமாக்கப்பட்ட போரை எதிர்கொள்வதற்கு வேண்டிய புதிய உத்திகளையும் தாக்கப்பட்ட பகுதியினர் உருவாக்கலாம். போரைத் தீவிரப்படுத்தும்போது அவதானமாகச் செயற்படவேண்டும், வெற்றி நிட்சயம் என்றும் கூறுவதற்கில்லை.



Scanned by CamScanner

# இராணுவச் சட்டம்
## MARTIAL LAW

இராணுவச் சட்டம் மூன்று சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் அமுலாக்கப்படுகின்றது: போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, போர்முடிந்தபின் தொடரும் காலப்பகுதியில், அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்படும் காலத்தில். இராணுவச் சட்டம் அமுலாகும் பகுதியில் வாழும் மக்கள் இராணுவச் சட்டங்களுக்கு உட்படுகின்றனர். சிவில் சட்டங்கள் கிடப்பில் போடப்படுகின்றன. அல்லது வலுவிழந்து போகின்றன. நீதி நிர்வாகம் இராணுவ நீதிமன்றங்களுக்கு கையளிக்கப்படுகின்றன. போர் நடைபெறும் காலத்தில் அல்லது அதைத் தொடர்ந்து வரும் காலத்தில் சிவில் சட்டங்கள் மௌனம் அடைகின்றன என்பது அனைத்துலகக் கோட்பாடு. இது இலத்தீன் மொழியில் SILENT ENIM LEGES INTER ARMA என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட காலங்களில் இராணுவ அதிகாரிகள் மிக உயர்ந்த நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்படாத பகுதிகளிலும், அங்கு இராணுவம் முகாமிட்டு நிலைகொண்டிருப்பின் சிவில் சட்டங்கள் ஓரளவு மந்தகதி அடைகின்றன. இராணுவச் சட்டங்களை அரசியல்வாதிகள் மிகவும் முன்யோசனையுடன் பிறப்பிக்கவேண்டும், ஏனென்றால் அவர்கள் இருப்புக்கே அது ஆபத்தாக முடியலாம்.

போரில் தோல்விகண்ட நாட்டில் ஆரம்பகட்டமாக இராணுவ ஆட்சி நடைபெறுகின்றது. வெற்றிபெற்ற இராணுவம் சட்டங்களையும், நிர்வாகக் கட்டளைகளையும் பிறப்பிக்கின்றது. அடுத்தகட்டமாக சிவில் நிர்வாகம் நடப்பதாகக் காட்ட மறைவில் இருந்துகொண்டு சிவில் அதிகாரிகள் ஊடாகச் செயற்படுவார்கள். தமக்குச் சாதகமான குழுவினரை பொதுமக்கள் மத்தியில் இருந்து பொறுக்கியெடுத்து அவர்கள் ஊடாகவும் இராணுவத்தினர் ஆட்சி செய்கின்றனர். இராணுவம் அதிரடிப் புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றியபின், இராணுவச் சட்டத்தின் மூலம் ஆட்சி செய்வது ஒரு வழமையான முறைமை. இராணுவ ஆட்சி MILITARY GOVERNMENT என்று வகைப்படுத்தப்படுகின்றது.



Scanned by CamScanner

# இராணுவப் பாவனையிலுள்ள பொருள்கள் மீதான தடை

## CONTRABAND

போரில் ஈடுபடும் ஒரு பகுதியினருக்கோ அல்லது இருபகுதியினருக்குமோ இராணுவ ஆயுத தளபாடங்கள், உபகரணங்கள், கருவிகள் போன்றவற்றை மூன்றாம் பகுதியினர் விநியோகிப்பதைத் தடைசெய்யும் உரித்து போரில் ஈடுபடும் இருபகுதியினருக்கும் உண்டு. விநியோகத் தடை விதிக்கப்பட்ட பொருள்கள் 'கொன்றாபான்ட்' எனப்படுகின்றன. தடைவிதிக்கும் உரித்தை அனைத்துலகச் சட்டம் ஏற்றுக்கொண்டுள்ளதாயினும் போருக்குப் பயன்படும் பொருள்கள் எவை என்று இதுவரை வரையறை செய்யப்படவில்லை. சட்ட வல்லுநர்கள் மத்தியில் இது பற்றிய கருத்தொற்றுமை கிடையாது.

போரில் ஈடுபடுவோர்கள் தடைசெய்யப்பட்ட பொருள்களை விநியோகப் பாதையில் வைத்துப் பறிமுதல் செய்யலாம். உதாரணத்திற்கு தடைசெய்யப்பட்ட பொருள் கப்பலில் ஏற்றிவரப்பட்டால் கப்பலை மறித்துப் பறிமுதல் செய்யச் சட்டம் அனுமதிக்கின்றது. பறிமுதலாகும் பொருள் போரில் ஈடுபடும் ஒரு பகுதியினரை நோக்கிச் செல்கின்றது என்பது பறிமுதலை அங்கீகரிக்கும் சட்டத்தின் அடிப்படை. போரில் ஈடுபடும் இருபகுதியினருக்கும் மறுபகுதிக்கு வரும் தடைசெய்யப்பட்ட பொருளைப் பறிமுதல் செய்யும் சட்டவுரித்து உண்டு.

நுகர்ச்சிப் பொருள்களும் இன்று தடைசெய்யப்பட்டுப் பறிமுதலாகின்றன. உணவு போர்க் கருவியாகக் கணிப்பிடப்படுகின்றது. உண்ணாமல் போரிட இயலாது, உணவைத் தடைசெய்வதால் போரிடும் வலு குறைந்துவிடும். சிவிலியன்களின் உளவலிமையை உணவுத் தடைமூலம் தகர்க்கலாம். தடைசெய்யப்படும் பொருள், தடைக்கு அப்பாற்பட்ட பொருள் என்ற அடிப்படையில் வித்தியாசம் காண்பது கடினம். பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களை கடலில் சோதனை செய்யும் உரித்து கடற்பயணச் சுதந்திரத்தை மீறும் செயலாகும். இருப்பினும் அது நடைமுறையில் இருக்கின்றது.

கப்பல்கள் மூலம் ஏற்றி இறக்கும் செயற்பாட்டைத் தடைசெய்யும் நடைமுறை 'எம்பார்கோ' -EMBARGO எனப்படும். EMBARGAR என்ற ஸ்பானிஷ் மொழிச்சொல் 'சிறைப்பிடித்தலைக்' – TO ARREST குறிக்கும். ஒரு நாட்டின் துறைமுகம் அல்லது துறைமுகங்களுக்குள் அந்நிய நாட்டுக் கப்பல்கள் நுழைவதையோ, அல்லது துறைமுகத்தை விட்டு வெளியேறுவதையோ தடுக்கும் நடைமுறையை எம்பார்கோ என்பார்கள். போருக்கு உதவும் பொருள்களை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்காக எம்பார்கோ தடைவிதிக்கப்படுகின்றது. ஒரு நாட்டின்மீது விதிக்கப்படும் தண்டனையாகவும் இத்தடை விதிக்கப்படுகின்றது. கியூபாத் தீவுமீது பல்வேறு எம்பார்கோ தடைகள் விதிக்கப்படுகின்றன. அமெரிக்கா உருவாக்கிய ஹெல்ம்ஸ் – பேட்டன் (HELMS-BURTON) சட்டம் பல்வேறு எம்பார்கோ தடைகளை கியூபாமீது விதிக்கின்றது. பொருளாதாரத் தடை இராசதந்திரத்தின் ஒரு அங்கமாக எம்பார்கோ தடை இடம்பெறுகின்றது.



Scanned by CamScanner

# கடற்படை முற்றுகை
## NAVAL BLOCKADE

கடற்பாதையூடாக எதிரிக்கு ஆயுததளபாடம், எரிபொருள்,உணவு, வேறு அத்தியாவசிய நிவாரணங்கள் சென்றடைவதை கடற்படையின் உதவியோடு தடுக்கும் முற்றுகை 'நேவல் புளக்கேட்' எனப்படும். இத்தடை ஆயுதம் ஏந்தியோரக்கு எதிராகவும் பொதுமக்களுக்கு எதிராகவும் சமகாலத்தில் மேற் கொள்ளப்படுகின்றது. வேறுபாடு காட்டுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. தரைப் பரப்பில் முடக்கப்பட்ட எதிரி தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக முற்றுகையை உடைக்கவேண்டும். அல்லது வேறு மாற்று வழிகளை உருவாக்க வேண்டும். தோல்வியைத் தவிர்ப்பதற்கு இது மிகவும் அவசியம்.

போர் நடவாத காலத்திலும் இந்தவகை முற்றுகையை மேற்கொள்ளலாம். அது ஒருவிதமான தண்டனையாக அமையும். ஒரு நாட்டிற்குச் சொந்தமான கடற்கலங்களுக்கு எதிராக மாத்திரம் முற்றுகை நடவடிக்கை எடுக்கப்படலாம். அப்போது பிறநாட்டுக் கப்பல்கள் மீது முற்றுகைத்தடை விதிக்கப்படமாட்டாது. அனைத்துலக கடல்வலயச் சட்டத்தின் கீழ் கடற்படை முற்றுகையை மீறும் கடற்கலங்களையும் அவை ஏற்றிச்செல்லும் சரக்குகளையும் பறிமுதல் செய்யும் உரித்து வழங்கப்பட்டுள்ளது.

போரியலில் 'புளெக்கேட்' என்ற நடவடிக்கை பின்வருமாறு வரையறை செய்யப்பட்டுள்ளது: ஒரு நாட்டின் கடற்கரையையோ, துறைமுகத்தையோ போர்க் கப்பல்களின் உதவியுடன் முற்றுகையிடுவது. எதிரி நாட்டின் எல்லைகளில் படை குவிப்புச்செய்து நடத்தும் தரை முற்றுகையும் இதிலடங்கும். முற்றுகையிடப்பட்ட எல்லைக்கப்பால் கப்பல்கள் வெளியேறுவதையும், எல்லைக்குள் புகுவதையும் தடுக்கும் நோக்கில் முற்றுகை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. எதிரியைத் தனிமைப்படுத்தி அவனுடைய வர்த்தகம், வழங்கல்கள் மற்றும் வெளித் தொடர்புகளைத் துண்டிப்பதே முற்றுகையின் முழுநோக்கம். இது போர்ப் பிரகடனத்திற்குச் சமமானது.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் பிரித்தானியாவின் அத்திலான்திக் மாகடற் போக்குவரத்தை முடக்குவதற்கு ஜேர்மனியக் கடற்படை முனைந்தது. நாசகாரிக் கப்பல்களையும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் பயன்படுத்தி ஜேர்மன் கடற்படை தனது முற்றுகை முயற்சியை முன்னெடுத்தது. இதனால் பலகோடி பெறுமதியான பொருள்களையும், கடற்கலங்களையும் பெறுமதிமிக்க உயிர்களையும் பிரித்தானியா இழக்க நேரிட்டது. இதன்பின் 'கொன்வோய்' CONVOY- முறையில் அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான கடற்பயணம் ஆரம்பிக்கப்பட்டது. போர்க் கப்பல்களின் பாதுகாப்புடன் நெடிய சரக்குக் கப்பல் அணிகள் அத்திலாந்திக் கடலைக் கடக்கத் தொடங்கின. முற்றுகை உடைப்பில் கொன்வோய் அணிகள் முக்கியபங்கு வகிக்கின்றன.

ஒரு காலகட்டத்தில் சிறிலங்கா தரைப்படை, கடற்படை, விமானப்படை என்பன யாழ்குடாவை முற்றுகை இட்டது நினைவுக்கு வரலாம். இதை உடைப் பதற்காக புலிகளின் பாதுகாப்போடு கிளாலிக் கடலேரி ஊடாகத் தமிழ் மக்கள் போக்குவரத்துச் செய்யும் நிலை தோன்றியது.



Scanned by CamScanner

# தலையீடு
## INTERVENTION

படைபலத்துடன் அல்லது படைபலம் பிரயோகிக்கும் மிரட்டலுடன் நாடொன்றின் விவகாரங்களில் தலையிடுதல் இராசதந்திரத்தில் 'இன்ரர்வீன்ஷன்' எனப்படும். அரசியல் நோக்கை எட்டுவதற்காக இவ்வகைத் தலையீடு பெரும்பாலும் நடத்தப்படுகின்றது. வர்த்தகச் சலுகைகளைப் பெறுவதற்காகவும், நாட்டின் வளங்களை மலிவாக ஏற்றிச் செல்வதற்காகவும் தலையீடுகள் நடத்தப்படுகின்றன. தனது நாட்டின் தனியார் நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் நோக்கில் தென்அமெரிக்க நாடுகளின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவது வழமை.

தலையீட்டிற்கு முக்கிய உதாரணமாக இந்திய ஆயுதப் படைகளின் 1987 உள்நுழைவு அமைகின்றது. சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் தனது பாரிய இராணுவ எந்திரத்தை இந்தியா எமது பகுதிக்குள் புகுத்தியதை அது பெற்ற மிகப்பெரிய இராசதந்திர வெற்றியாகக் கருதலாம். அமைதிப்படை என்று பெயரிடப்பட்டாலும் இந்தியப் படைகள் போரிடும் பிரதான நோக்குடன் எமது மண்ணில் கால்பதித்தன. இந்தோ-சிறிலங்கா ஒப்பந்தத்தைப் படிக்கும்போது இந்த உண்மை புலப்படும். போரிட நேர்ந்தாலும் எல்ரிரிஈ அமைப்பின் ஆயுதங்களைக் களைய உதவுவோம் என்று இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா உறுதிமொழி வழங்கியது.

ஆயுதம் தாங்கிய தலையீடு உள்நாட்டுப் போரின் தன்மையை மாற்றுகின்றது. வெளியார் தலையீட்டினால் வலுச்சமநிலைப் பிறழ்ச்சி ஏற்படுகின்றது. எமது விடுதலைப்போர் வரலாற்றில் வெளியாரின் நேரடித் தலையீடு, ஆயுத தளபாட மற்றும் தொழில்நுட்பத் தலையீடு பெரும் சவாலாக அமைகின்றது. தார்மீக உதவிகள், பிரசார அனுசரணைகள் என்பனவும் தலையீட்டின் வேறு பரிமானங்களாகும்.

**அனைத்துலகச் சட்டம், பின்வரும் சந்தர்ப்பங்களில் தலையீட்டை அனுமதிக்கின்றது:**

1. தலையீட்டிற்கு உட்படும் நாட்டுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை.
2. கொடுத்த எழுத்துமூல வாக்குறுதியை மீறும்போது, வாக்குறுதியை நிலை நாட்டுவதற்கு.
3. தலையீட்டிற்கு உட்படும் நாட்டில் வாழும் தனது மக்களின் பாதுகாப்பிற்கு தலையீடு மிகவும் அவசியம்.
4. தலையிடும் நாட்டின் பாதுகாப்பிற்கு நடத்தப்படும் தலையீடு அவசியம்.
5. அனைத்துலகச் சட்டங்களை மீறும் நாட்டில் தலையிடலாம்.



Scanned by CamScanner

ஐநா சாசனம் இக்காரணங்களுக்காக நடத்தப்படும் தலையீட்டை அனுமதிக்கின்றது. அனைத்துலக நாடுகள் ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காகவோ, அமைதிச் சீர்குலைவை நிறுத்துவதற்காகவோ தலையிடமுடியும். என்று ஐநா சாசனம் கூறுகின்றது. குவெய்த்மீது ஈராக் நடத்திய ஆக்கிரமிப்பை தடுப்பதற்காக ஐநா இதன் அடிப்படையில் அனுமதி வழங்கியது.

6. இன்றைய உலக ஒழுங்கில் பாரிய மனித உரிமை மீறல்கள் நடைபெறும் நாடுகளில் தலையிடலாம் என்ற கருத்து நிலவுகின்றது. பொஸ்னியாவில் நேற்றோ படைகளின் தலையீடு இந்த அடிப்படையில் நடத்தப்பட்டது.

பெரும்பாலான தலைமீடுகள் பலமற்ற நாடுகள்மீது வல்லரசுகள் நடத்தும் ஆக்கிரமிப்புக்களாக அமைகின்றன. தமது ஆதிக்க வலயத்திற்கு அப்பால் ஒரு நாடு நழுவிச் செல்லும்போது தலையீட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கடனாக வழங்கப்பட்ட தொகையை மீளப் பெறுவதற்காகவும், தலையீடும், தலையீடு மிரட்டல்களும் பயன்படுத்தப்படுகின்றன.

## போருக்கு தயார்படுத்தல்
## MOBILIZATION

போருக்குத் தயார்படுத்தல் நான்கு முக்கிய பரிமாணங்களைக் கொண்டது, அவையாவன:

1. போருக்கான ஆதரவை மக்கள் மத்தியில் உருவாக்குதல்.
2. இராணுவம் சம்பந்தமான ஆயத்தங்களை கொள்வனவு செய்தல்.
3. நட்பு நாடுகளுடன் இராசதந்திர மட்டத்திலான நட்புறவுகளை உருவாக்கிப் பலப்படுத்துதல்.
4. உணவு, மூலப் பொருள்கள், உதிரிப்பாகங்கள் போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் களஞ்சியப்படுத்துதல்.

ஊடகத்துறையின் ஆதரவோடு மக்கள் மத்தியில் போரைத் தவிர்க்க முடியாது, போரை எதிர்கொண்டேயாக வேண்டும், போருக்குரிய தியாகங்களைச் செய்யத் தயாராக இருத்தல் வேண்டும் என்ற பரவலான கருத்தை உருவாக்க வேண்டும். 'போர்ப்பறை முழங்குதல்' – BEATING THE WAR DRUMS என்று விவரிப்பார்கள். போருக்கு எதிரானவர்களுக்கு மேற்கூறிய நடவடிக்கைகளை விவரிப்பார்கள். போருக்கு எதிரானவர்களுக்கு ஊடகங்கள் மூலம் தேசத்துரோகப் பட்டம் சூட்டுவதும் இந்த முழக்கத்தின் ஒரு அங்கமாகும்.

இராணுவத்திற்கு ஆட்சேர்த்தல், தொண்டர் படைகளை நிறுவுதல் என்பன முதற்கட்ட நடவடிக்கைகளாகும். இதில் ஆயுதக் கொள்வனவும் அடங்கும். மருத்துவ சேவைகளை விரிவாக்குதல் முக்கியமாகக் கவனிக்கப்படுகின்றது. எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்துதல், எதிரி நாட்டவர் இருந்தால்



Scanned by CamScanner

வெளியேற்றுதல் அல்லது சிறையில் இடுதல் அடுத்தகட்ட நடவடிக்கையாக அமைகின்றது. நாட்டு நிர்வாகம், பொருளாதாரம் என்பனவற்றை போருக்கு அனுசரணையாக மாற்றுதல் மிகவும் தேவையானதொரு முன்யோசனையாக அமைகின்றது.

தனித்து நின்று போரிடுவதிலும் பார்க்க ஒரு நட்பு வலயத்தை உருவாக்கி அதன் உதவியோடு போரிடுவது காலம் காலமாக பின்பற்றப்படும் உத்தியாகும். இதைப் பிரெஞ்சு மொழியில் 'ஒன்தொன்த் கொர்டியால்' ENTENTE CORDIAHL என்பார்கள். நட்பு அடிப்படையில் புரிந்துணர்வு என்பது பொருள். 1904 ஆம் ஆண்டு பிரித்தானியாவும் பிரான்சும் செய்துகொண்ட கூட்டு ஒப்பந்தம் ஒன்தொன்த் கொர்டியால் எனப்படும். 1907 இல் இந்த இரு நாடுகளுடன் ருஷ்யா இணைந்து கொண்டது. அதன்பின் 'திரிப்பிள் ஒன்தொன்த்' TRIPLE ENTENTE என்று மூன்று நாடுகளின் கூட்டு அழைக்கப்பட்டு, முதலாம் உலகப்போர் தொடங்கியபோது அலைஸ் -ALLIES நேச நாடுகள்- என்ற மறுநாமம் பூண்டது. போருக்கான தயார்ப்படுத்தலில் இராசதந்திரப் பின்னணி மிகவும் கவனமாக நோக்கபடவேண்டியதாகும்.

மருத்துவ வசதிகள் திருப்திகரமாக அமையாவிட்டால் வீண் உயிரிழப்பு நேரிடும். கள மருத்துவப் பிரிவு, மருத்துவ வாகனங்கள், மருந்தகங்கள், மத்திய சிகிச்சைப் பிரிவு என்பன உசார் நிலையில் வைக்கப்படல் வேண்டும். இறுதியாக தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள், எரிபொருள் என்பனவுடன் மக்களுக்குத் தேவையான உணவு வகைகளும் சேமிக்கப்பட வேண்டும். இந்தவகைச் சேமிப்பு STOCKPILING எனப்படும்.

போருக்குத் தயார்படுத்தல் ஒரு அசாதாரண நிகழ்ச்சி, இதை மறைத்து வைப்பது கடினம். வெளிநாட்டு இராசதந்திர அதிகாரிகளும் புலனாய்வுத் துறையினரும் தயார்படுத்தலின் ஒவ்வொரு கட்டத்தையும் அவதானித்தபடி இருப்பார்கள். தங்கள் அவதானிப்புக்களை உடனுக்குடன் தமது நாடுகளுக்கு அனுப்பி வைப்பார்கள். இது அவர்களுடைய முக்கிய கடமையாகும். அடுத்த நாட்டில் வதியும் இராசதந்திரிகளும் அயல்நாட்டு நடவடிக்கைகளை கூர்ந்து கவனிப்பர். சுவிற்சர்லாந்நதிற்கான அமெரிக்கத் தூதுவர் ஹோவாட் எற்லிங் (HOWARD ETLING) ஜேர்மன் நாசிகள் யூத இனத்தை அழிக்கும் திட்டத்தை அமுலாக்கப்போகிறார்கள் என்று தனது நாட்டிற்கு 1942 இல் அறிவித்தார். இதை இராஜங்க செயலகம் நம்ப மறுத்தது.

போர் சம்பந்தமான செய்திகள் முழுவதும் நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை. தயார்படுத்தலுக்கும் இது பொருந்தும். தெரிந்தெடுத்த செய்திகளையும், திருத்தம் செய்யப்பட்ட செய்திகளையும் மக்களுக்குத் தெரிவிக்கிறார்கள் ஜூலை 16, 1945 இல் நடைபெற்ற பரீட்சார்த்த அணுகுண்டுவெடிப்பு சம்பந்தமான செய்திகள் அமெரிக்க மக்களுக்குச் சென்றடையவில்லை. மக்கள் முழு விவரத்தையும் அறியக்கூடாது என்பதில் போர்த் தயாரிப்பில் ஈடுபடும் அரசுகள் மிகவும் கவனமாக இருக்கின்றன.



Scanned by CamScanner

தோல்விக்கும் வெற்றிக்கும் இடையிலான நிர்ணய சக்தியாக, அத்தியாவசியப் பொருள்களின் சேமிப்பு இடம்பெறுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எதிரி சோர்வடையும்வரை தாக்குப்பிடிப்பதற்கு சேமிப்புக்கள் உதவுகின்றன. 1945 இல் ஜேர்மனி தோல்வி கண்டதற்கு தட்டுப்பாடுகள் பல காரணிகளில் ஒன்றாக இடம்பெற்றது. பனிப்போரின் உச்சக்கட்டத்தில் எண்ணை உட்பட உலக வளங்கள் யாவற்றிலும் முக்கால் பங்கை அமெரிக்கா சேமித்து வைத்திருந்தது. அதற்கான நிதிவளம் அதனிடம் இருந்தது. இன்றும் அமெரிக்க இராசதந்திரத்தின் முக்கிய குறிக்கோளாக மேற்காட்டிய ரகச் சேமிப்பு அமைகின்றது.

## ஊரடங்கு உத்தரவு
## CURFEW

குடியிருப்பாளர்கள், பயணிகள், காரணமின்றி நடமாடுவோர் போன்றோர்களைக் கட்டுப்படுத்தும் உத்தரவு மத்தியகாலம் தொட்டு (கி.பி 8) உலக நாடுகள் பலவற்றுள் நிலவுகின்றது. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மக்களின் சுதந்திர நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுகின்றது. மத்திய காலத்தில் நிலவிய ஊரடங்கு உத்தரவுப்படி குடியிருப்பாளர்கள் யாபேரும் தங்கள் சமையலறை அடுப்புக்களை மாலைநேரத்தில் கட்டாயமாக அணைத்துவிட வேண்டும். இதற்கான நேரகாலம் இச்சட்டத்தின்மூலம் விதிக்கப்பட்டிருந்தது. தீ பரவிக் குடியிருப்புக்களை அழிக்கலாம் என்பதற்காக இத்தடுப்புச் சட்டம் போடப்பட்டது. தீயணைக்கும் நேரத்தை குறிக்கும் மணி ஒலிக்கும்போது யாபேரும் வீட்டிலுள்ள நெருப்பை அணைக்கவேண்டும். அடுத்த நாள் காலைவரை அடுப்பு மூட்டுவதற்குத் தடை விதிக்கப்படுகின்றது. இன்றும் ஐரோப்பாவின் சில குக்கிராமங்களில் இந்த நடைமுறை வழக்கில் இருக்கின்றது.

கிளர்ச்சிகளை அடக்குவதற்காகவும், வீடு வீடாகச் சென்று குடியிருப்பாளர்கள் பற்றிய சோதனைகளைச் செய்வதற்காகவும், உள்நாட்டுப் போரில் மக்களையும் போராளிகளையும் வேறுபடுத்துவதற்காகவும் இராணுவத்தினர் இன்று ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கின்றனர். இயல்பு நிலைக்கு மாறான செயலாக இது கருதப்படுகின்றது. பெரும்பாலும் மாலை தொடக்கம் காலைவரை மக்களைத் தமது வீட்டுக்குள் முடக்கும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது. நாள் முழுவதும் மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் சட்டம் தேவைப்பட்டால் பிறப்பிக்கப்படலாம். இடையே சில மணிநேரம் நடமாட்டத் தடை அகற்றப்பட்டு அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

படைகளின் நிலைகள், ஆயுதக் களஞ்சியங்கள், மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றிற்கு அருகாமையில் நடமாடுவதற்கு நிரந்தர நடமாட்டத் தடை விதிக்கப்படுவதுண்டு. கேர்பியூ உத்தரவு நாடு முழுவதற்கும் அல்லது நாட்டின் ஒரு பகுதிக்கு மாத்திரம் பிறப்பிக்கப்படலாம். நாட்டு மக்களில் ஒரு சாரரை மாத்திரம் கட்டுப்படுத்தும் இவ்வுத்தரவு சிலசமயங்களில்

வெளியிடப்படலாம். அமெரிக்காவின் மேற்குக் கரையில் வாழ்ந்த ஜப்பானியர்கள் இரவு 8 மணி தொடக்கம் காலை 6 மணிவரை தத்தம் வீட்டுக்குள் முடங்கியிருக்க வேண்டும் என்ற சட்டம் இரண்டாம் உலகப்போர் காலத்தில் அமுலாக்கப்பட்டது. இதை எதிர்த்து அமெரிக்காவின் ஜப்பானியப் பிரசைகள் குடியுரிமை வழக்குத் தொடுத்தனர். அமெரிக்க உயர் நீதிமன்றம் அரசுக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கியது. நேரத்தோடு நெருப்பை அணைக்கவும் என்ற உத்தரவும், நேரத்தோடு வீட்டுக்குள் முடங்கவும் என்ற உத்தரவும் ஊரடங்கு உத்தரவுகளாகக் கணிப்பிடப்படுகின்றன. ஆனால் நெருப்பை அணைத்தபின் வெளியே நடமாடுவதற்கு யாதொரு தடையும் விதிக்கப்படவில்லை.

## இராசதந்திரம்
## DIPLOMACY

நாடுகளுக்கிடையிலான உறவுப் பாலமாக இராசதந்திரம் இடம்பெறுகின்றது. தூதுவர் பரிமாற்றத்தின் மூலம் நாடுகள் தமக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துகின்றன. தூதர்களின் உத்தியோகபூர்வ அலுவலகம் தூதரகம் எனப்படும். தூதுவர், தூதரகம் சம்பந்தமான பாரம்பரியங்களும், மரபுகளும் வழக்கிலுள்ளன. காலத்திற்குக்காலம் இவை சம்பந்தமான சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. இராசதந்திர நடவடிக்கைகள் பலதரப்படும்.அவை திறந்த அல்லது இரகசிய, இருதரப்பு அல்லது பலதரப்பு, தூதுவர் மட்ட அல்லது அரசியல் தலைவர்கள் மட்டத்திலான நடவடிக்கையாக அமையலாம். இலத்திரனியல் தொடர்புசாதனங்கள் பல்கிப்பெருகினாலும் இராசதந்திரத்தில் தனி மனிதர்கள்தான் முதலிடம் வகிக்கின்றனர்.

தகவல் சேகரிப்பையே ஒரு இராசதந்திரத் தூதுவன் தனது முதற்பணியாகக் கொள்கிறான். தான் வதியும் நாடுபற்றிய அனைத்துத் தகவல்களையும் திரட்டி தன்னை அனுப்பிய நாட்டிற்கு அனுப்புவது அவனுடைய தொழிலாகும். தகவல் என்ற பதத்தில் உளவுத் தகவலும் அடங்கும். தனது நாட்டின் நிதி வளத்தைப் பெருக்குவதற்கு உகந்த சந்தை வாய்ப்புக்களையும், வர்த்தக சலுகைகளையும், இலாபகரமான மூலப்பொருள் கொள்வனவுகளையும். தனது நாட்டின் முப்படைகளுக்குத் தேவையான தரிப்பிட வசதிகளையும் பெற்றுக்கொடுப்பது தூதுவனின் பல பணிகளில் ஒரு சிலவாக அமைகின்றன. தனது நாட்டின் தேசிய நலனுக்காக உழைப்பதே அவனது முழுமுதற் பொறுப்பு.



Scanned by CamScanner

சிறிலங்கா தூதுவன் பிற நாடுகளில் வதியும்போது பின்வரும் பணிகளை தனது நாட்டிற்காகச் செய்கிறான்:

1. தனது நாட்டின் பாதுகாப்புச் சேவையினருக்குத் தேவையான ஆயுத தளபாடங்கள், இராணுவப் பயன்பாட்டிற்குரிய உபகரணங்கள், வாகனங்கள், இராணுவப் பயிற்சிக்கான ஒழுங்குகள் போன்றவற்றைப் பெற்றுக்கொடுத்தல்.

2. வதியும் நாட்டின் தலைவர்கள் மத்தியில், சிறிலங்காவுக்குச் சாதகமான கருத்தை உருவாக்குதல். பிறநாட்டுத் தலைவர்கள் சிறிலங்கா பற்றி என்ன நிலைப்பாடு எடுக்கிறார்கள் என்பதை இரகசியமாக அறிதல்.

3. வதியும் நாட்டின் ஊடகத்துறையினருடன் நட்புறவை ஏற்படுத்துதல். இதற்காகத் தேவைப்பட்டால் இலஞ்சம் கொடுத்தல். சிறிலங்கா பற்றிய விம்பத்தை (IMAGE) இதன் மூலம் கட்டியெழுப்புதல். சிறிலங்காவுக்குச் சாதகமான பிரசாரத்தையும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான எதிர்பிரசாரங்களையும் மேற்கொள்ளல்.

4. நிதி நன்கொடை, சலுகை அடிப்படையிலான கடனுதவி, இலவப் பொருளுதவி, நெடுஞ்சாலை, மருத்துவமனை போன்றவற்றை பிறநாடுகளின் செலவில் அமைப்பித்தல் போன்ற வாய்ப்புக்களை சிறிலங்காவுக்குப் பெற்றுக்கொடுத்தல்.

5. சிறிலங்காவின் தேயிலை, தெங்குப் பொருள், தைத்த ஆடைகள் போன்றவற்றிற்கு சந்தை வாய்ப்புக்களைத் தேடிக் கொடுத்தல்.

6. உல்லாசப் பயணத்துறை, மத்தியகிழக்கு வேலை வாய்ப்பு போன்றவற்றை விரிவாக்குதல்.

7. மக்கள் தொடர்பு நடவடிக்கைகள் (PUBLIC RELATIONS), கலாசார உறவுகள் (CULTURAL RELATIONS) போன்றவற்றில் ஈடுபடுதல்.

8. விருந்து வழங்கல், பிற தூதுவரகங்கள் வழங்கும் விருந்து வைபவங்களில் பங்குபற்றல். அங்கு சிறிலங்கா பற்றி என்ன பேசுகிறார்கள் என்பதை அறிந்து தனது நாட்டிற்கு அறிவித்தல்.

இவற்றைவிடப் பிறிதோர் முக்கிய பணியை சிறிலங்காத் தூதுவர்கள் நிறைவேற்றுகின்றனர். புலம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களையும் அவர்கள் நிறுவிய பலதரப்பட்ட அமைப்புக்களையும் இரகசியமாகக் கண்காணித்தல். சிறிலங்காவின் தூதுவர்கள் இவர்கள்மீது பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றனர். சம்பந்தப்பட்ட நாடுகளின் பாதுகாப்புப் பிரிவினருக்கும் பாதுகாப்பு அமைச்சகத்திற்கும் முறைப்பாடுகள் செய்கின்றனர்.



Scanned by CamScanner

பிறநாடுகளில் எல்ரிரிஈ இயக்கத்தினர் நடைமுறைப்படுத்தும் எல்லாவகை நடவடிக்கைகளையும் அவதானிப்பதோடு கொழும்பிற்கு அறிக்கையும் சமர்ப்பிக்கின்றனர். எல்ரிரிஈ யின் ஆயுதக் கொள்வனவு, கடற்போக்குவரத்து, வர்த்தகம், நிதிதிரட்டல் போன்ற நான்கு விடங்களை பிறநாட்டு அதிகாரிகளின் உதவியோடு சிறிலங்கா இராசதந்திரிகள் துருவித்துருவி ஆராய்கின்றனர்.

(இராசதந்திரம் பற்றிய மேலதிக விவரங்களை எமது நவீன இராசதந்திரம் பாகம் I, II நூல்களில் படித்தறியவும்.)

# இராசதந்திர சம்பிரதாயங்கள்
## DIPLOMATIC GESTURES

எமக்கு மிகச்சிறிய விடயங்களாகத் தோன்றுபவை பிறர் கண்ணுக்கு மிகவும் பெரியதாகத் தோன்றும் சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. குறிப்பாக இராசதந்திர உலகில் சிறிய தவறுகள் பூதாகரமாக வளர்ந்து இருதரப்பு உறவுகளைப் பாதிக்கின்றன. சந்திப்புக்கள் நடத்துவதற்காக நேரம் விதிக்கப்படும்போது விதிக்கப்பட்ட நேரத்திற்கு வராமல் பிந்தி வரும் இராசதந்திரிகளை ஒருவரும் மன்னிப்பதில்லை. ஒரு சொற்பநேரத் தாமதம் என்று தட்டிக்கழிக்க இயாலாது, நேரத்திற்குப் பிரசன்னமாக இருத்தல் வேண்டும். அரசியல்வாதிகள் போலல்லாது இராசதந்திரிகள் வாக்குறுதிகளை அள்ளி வீசமாட்டார்கள். வாக்குறுதிகளை அரிதாக வழங்கினால் அதன்படி நடப்பார்கள். சுடுசொல் பேசமாட்டார்கள், பிறர் மனம் நோகாமல் இரசதந்திர மொழியில் கடுமையாகச் சாடுவார்கள்.

நாட்டின் மதிப்பிற்குரிய பெருமக்களின் கல்லறைக்கு மலர் வளையம் சாற்றுதல் இன்னுமொரு நெடுங்காலப் பாரம்பரியம். சிங்கப்பூருக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையில் நிலவிய பகைமை "மலர் தூவி" முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக வரலாறு தெரிவிக்கின்றது. மூன்று இந்தோனேசியப் படைவீரர்கள் சிங்கப்பூர் தீவுக்குள் அத்துமீறி நுழைந்து சில சிங்கப்பூர் பிரசைகளைக் கொன்றனர். சிங்கப்பூர் நீதிமன்றம் இந்தோனேசியாவின் ஆட்சேபனையைப் பொருட்படுத்தாது அவர்களுக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. மரணதண்டனை நிறைவேற்றப்பட்டபின் இருநாட்டு உறவுகள் கசப்படைந்தன. சிங்கப்பூர் தலைவர் சிறிது காலத்தின்பின் இந்தோனேசியாவுக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது அவர் ஒரு கூடையில் எடுத்துச் சென்ற மலர்களை அந்த மூவரின் கல்லறை மீதும் தூவினார். அதன்பின் உறவுகள் சீரடைந்தன.

கைகுலுக்குதல் மிகவும் முக்கியமான இராசதந்திரச் சம்பிரதாயம். நீட்டிய கையை ஒருபோதும் உதாசீனம் செய்யக்கூடாது. இந்தோ-சீனா என்று அப்போது அழைக்கப்பட்ட வியற்நாம் பற்றிய ஜெனிவா மாநாடு 1954 இல் நடைபெற்றது. சீனப்பிரதமர் சூ என்லாய் உலக அரங்கில் முதன்முறையாகத் தோன்றினார்.



Scanned by CamScanner

மாநாட்டு மண்டபத்தில் அவர் ஒவ்வொரு மாநாட்டுப் பிரதிநிதியையும் தேடிச்சென்று கைகுலுக்கினார். அமெரிக்காவின் இராஜங்க செயலர் ஜோன் பொஸ்ரர் டல்லஸ் முகத்தில் அறைந்தாற் போல் கைகொடுக்க மறுத்துவிட்டார். சூவிற்கு வீழ்ந்த பலமான அடியாக இது கருதப்படுகின்றது.

இந்த வரலாற்றுத் தவறைச் சரிசெய்ய அமெரிக்க அதிபர் நிக்சன் உறுதிபூண்டார். இருபத்தியெட்டு வருடங்களுக்குப்பின் 1972 பெப்பிரவரி 21 ஆம் நாள் அதிபர் நிக்சன் சீன மண்ணில் காலடி பதித்தார். தான் சூவுடன் கைகுலுக்கி முடியும்வரை ஒருவரும் விமானத்தைவிட்டு இறங்கக்கூடாது என்ற கடும் உத்தரவை நிக்சன் பிறப்பித்தார். விமானம் ஓடுபாதையில் ஒளிவெள்ளத்தில் நின்றது. நிக்சன் தன்னந்தனியே விமானத்தை விட்டு இறங்கித் தரையில் நின்றார். விமானத்தின் வாயிலை அடைத்துக்கொண்டு ஒரு அமெரிக்கப் போர்வீரன் நின்றான். சூ என்லாய் விமானத்தை நோக்கி தன்னந்தனியாக வந்தார். நீட்டிய கையோடு நிக்சன் வேகமாகச் சென்று அவரை அணுகினார். ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கைகுலுக்கில் இருவரும் ஈடுபட்டனர். அது முடிந்தபின் விமானத்தைவிட்டு வெளியே வருவதற்கு கிசிங்கர், திருமதி நிக்சன் போன்ற பயணிகள் அனுமதிக்கப்பட்டனர்.

## இராணுவ இராசதந்திரத் தூதுவர்கள்
## MILITARY-DIPLOMATS

முன்னொரு காலத்தில் உயர்குடிப்பிறப்பு, அரசியல் செல்வாக்கு, பள்ளி நட்பு போன்ற காரணங்களுக்காக தூதுவர் பதவிகள் வழங்கப்பட்டன. தேர்தல் நிதி வழங்கும் செல்வந்தர்களுக்கு இராசதந்திரத் தூதுவர்பதவி வழங்கும் பாரம்பரியம் அமெரிக்காவில் உண்டு. இப்போது இது அருகி வருகின்றது. உலக அரங்கில் பேரும்புகழும் பெற்ற இராணுவத் தளபதிகளுக்கு இப்பதவி வழங்கப்படுவதுண்டு. இது அனுப்பும் நாட்டிற்கும், வதியும் நாட்டிற்கும் சமகாலத்தில் கிடைக்கும் அதியுயர் கௌரவமாகக் கருதப்படுகின்றது.

சிறிலங்கா நடைமுறை வித்தியாசமாக அமைகின்றது. தமிழர்களுக்கு எதிரான போரில் பலமனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தளபதிகளுக்கு ஒருவகைப் பரிசாக அவர்கள் இளைப்பாறியபின் இராசதந்திரத் தூதுவர் பதவிகள் வழங்கப்படுகின்றன. சிறிலங்காவைப் பொறுத்தளவில் இதுவொரு மரபாக உருவெடுத்துள்ளது. தேர்தல் தோல்வி அடைந்த அரசியல்வாதிகளை தூதுவர்களாகப் பிறநாடுகளுக்கு அனுப்புவது சிறிலங்காவின் இன்னுமோர் மரபு.

இராசதந்திரத் தூதுவர் நியமனத்தை கேலிக் கூத்தாக்கியவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனா. இவர் நாட்டை இராணுவமயப்படுத்தினார். இராணுவத்தை அரசியல்மயப்படுத்தினார். இராசதந்தரச் சேவையை இராணுவத்திற்கு ஒதுக்கினார். தமிழர்களை வகைதொகையாக கொன்றுகுவித்த 'புல்' (BULL) வீரத்துங்கா, சேபால அட்டியகல, டெனிஸ் பெறேரா போன்றோரை இவர் கனடா



Scanned by CamScanner

அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குத் தூதுவர்களாக அனுப்பினார். ஒருவிதத்தில் இதை நியாயப்படுத்த முடியும். ஒரு தூதுவன் தனது நாட்டையும், மக்களையும், பண்பாட்டியல்புகளையும் பிறநாட்டில் பிரதிநிதித்துவப்படுத்துகிறான், இந்த மட்டில் இவர்கள் பொருத்தமானவர்களே.

1979இல் யாழ்ப்பாணத்திற்கு “பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும்” ஜெயவர்த்தனாவின் உத்தரவோடு அவருடைய மருமகன் நாம்பன் - BULL என்ற செல்லப் பெயர்பூண்ட ஜெனரல் வீரதுங்கா அனுப்பப்பட்டார். இவரை கனடாவுக்கான தூதுவராக ஜெயவர்த்தனா அனுப்பியபோது கனடா வாழ் தமிழர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர், சிலகாலத்தின்பின் அவர் நாடு திரும்பினார். செபால அட்டியகல இலண்டனுக்குத் தூதுவராகச் சென்றார். லெப் ஜென் டெனிஸ் பெறேரா அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராக 1982 – 1986 காலப்பகுதியில் பதவிவகித்தார். பொலிஸ் மாஅதிபர் ருத்திரா இராஜசிங்கம் இந்தோனேசியாவுக்குத் தூதுவராகச் சென்றார்.

வடமராட்சிமீது படையெடுத்த சிறில் றணதுங்கா 90 களின் நடுப்பகுதியில் அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராக நியமனம் பெற்றார். அங்குள்ள தமிழர்கள் காட்டிய கடும் எதிர்ப்பால் இவர் சிறிது காலத்தின்பின் சிறிலங்கா திரும்பினார். செம்மணிப் படுகொலைகளுடன் நெருங்கிய தொடர்புடைய இரு இராணுவத் தளபதிகள் தூதுவர் நியமனம் பெற்றுள்ளனர். யாழ்குடாவின் பொறுப்பதிகாரி சிறிலால் வீரசூரியா பாகிஸ்தானுக்கும், ஜானாகா பெறேரா அவுஸ்திரேலியாவுக்கும் சென்றுள்ளனர். ஜானாகா பெறோராவின் நியமனம் பெரும் சர்ச்சைக்குரியது. படுகொலைகள், ஆட்கடத்தல்கள், தமிழர் மண்ணில் இராணுவ உதவியோடு சிங்களக் குடியேற்றங்கள் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகிய ஜானாகா பெறெரா இன்றும் தூதுவர் பதவியில் இருக்கிறார். அண்மையில் இளைப்பாறிய கூட்டுத்தளபதி றோகான் டலுவத்த பிறேசில் நாட்டிற்கு சிறிலங்காத் தூதுவராகச் சென்றுள்ளார். இன்னும் எத்தனை நியமனங்கள் எதிர்காலத்தில் நடக்விருக்கின்றனவோ தெரியவில்லை.



Scanned by CamScanner

# உளவுச் சேவைகள்
## THE SECRET SERVICE

உளவு என்ற சொல்லிற்கு இரகசியம், இரகசியமாக அறிந்த செய்தி என்ற அர்த்தமுண்டு. உளவுச் சேவைகளின் கட்டமைப்பு, நோக்கம், நிர்வாகக் கட்டுப்பாடு சம்பந்தமான மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இதை ORGANIZATION, FUNCTION, CONTROL என்று வகைப்படுத்துகிறார்கள். இரகசியமாகச் செயற்படவேண்டும் என்பது மாற்றமுடியாத பொது விதியாகக் காணப்படுகின்றது. இதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

இரகசியம் எத்தகையது, எது தொடர்பானது பற்றிப் பார்ப்போம் :

1. செயற்படும் முறைகள், உத்திகள் இரகசியம் - OPERATION.
2. ஈடுபடுவோர் பற்றிய இரகசியம் - IDENTITY OF OPERATORS.
3. தகவல் வழங்குவோர், முகவர்கள் பற்றிய இரகசியம் - SAFETY OF INFORMANTS AND AGENTS.

உளவுப் பணியில் ஈடுபடும் அமைப்பின் பெயர், முகவரி போன்ற விவரங்கள் இரகசியமாகப் பேணப்படுவதில்லை. இதை மறைப்பதில் பயனில்லை. உலக நாடுகள் யாவற்றிலும் உளவுப் பணியகங்கள் காணப்படுகின்றன. உளவமைப்பின் பெயர், முகவரி விவரங்கள் வெளியிடப்படுவதில் ஆபத்தில்லை. என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பலநாடுகள் தமது உளவமைப்புக்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கியுள்ளன. 1966ஆம் ஆண்டில் நிறைவேறிய தகவல் சுதந்திரச் சட்டத்தின்கீழ் - THE FREEDOM OF INFORMATIONS ACT - தமது நாட்டின் உளவு நிறுவனங்களின் மேற்கண்ட விவரங்களை உத்தியோகபூர்வமாகப் பெறுவதற்கு அமெரிக்கப் பிரசைகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

1911ஆம் ஆண்டில் பிரித்தானியா பாராளுமன்றம் உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தை - OFFICIAL SECRETS ACT OF 1911 (THE OSA) நிறேவேற்றியது. பிரித்தானிய அரசு தேசிய இரகசியங்களைப் பாதுகாக்க உதவும் சட்டமாக ஓ எஸ் ஏ எனப்படும் இச்சட்டம் உதவுகின்றது. மேற்கு நாடுகளுடன் ஒப்பிடும்போது இது மிகவும் சக்திவாய்ந்த சட்டமாக இடம்பெறுகின்றது. வெளிவரக்கூடாது என்று அரசு விரும்பும் தகவல்களை மறைத்து வைப்பதற்கு இச்சட்டம் உதவுகின்றது. காலம் கடந்தபின் வெளியிடப்படலாம், என்று அரசு தீர்மானிக்கும் தேசிய இரகசியங்கள் இச்சட்டத்தின்கீழ் வெளியிடப்படுகின்றன. அமெரிக்காவில் இரகசியமாகப் பேணப்படும் இரகசியங்களை CLASSIFIED INFORMATION என்று வகைப்படுத்தியுள்ளனர். (இது பற்றிப் பிறிதோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளோம்)

1990 களின் நடுப்பகுதியில் பிரித்தானியா பாராளுமன்றம் இரகசிய சேவைகள் சட்டத்தை நிறைவேற்றியது - THE INTELLIGENCE SERVICES BILL இதைத் தொடர்ந்து பிரித்தானியாவின் இரகசிய உளவமைப்பின் SECRET INTELLIGENCE SERVICE (THE BRITISH SIS) ஒரு தலைவர் - SECRET INTELLIGENCE SERVICE (THE BRITISH SIS) ஒரு



Scanned by CamScanner

பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டினார். அவர், "எமது தொழிலுக்கு இரகசியக் கட்டுப்பாடு தேவைப்படுகின்றது. எம்முடன் பணியாற்றுவோரின் உயிரை நாம் பாதுகாக்கவேண்டும்" என்றார்.

பிரித்தானியாவின் அரசுத் தொடர்பாடல் தலைமைச் செயகலம் - THE GOVERNMENT COMMUNICATION HEADQUARTERS (GCHQ) இன்னுமோர் உளவமைப்பு. இது பத்திரிகையாளர்கள் மாநாடு நடத்துவதற்குப் பின்னடிக்கின்றது. அது வெளியிட்ட கருத்துப்படி தங்களுடைய செயற்படும் முறைமைகள், உத்திகள் மற்றும் ஈடுபடுவோர் பற்றிய இரகசியம் வெளிவந்துவிடும் என்ற அச்சத்தால் பத்திரிகையாளர் மாநாடுகள் தவிர்க்கப்படுகின்றன.

பிரித்தானியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பு உளவமைப்பின் தலைவி திருமதி ஸ்ரெல்லா றெமிங்ரன் - MRS.STELLA REMINGTON, HEAD OF M15 - வித்தியாசமானவர். இவர் பத்திரிகையாளர் மாநாடு நடத்துவதோடு தனது தொழில் சம்பந்தமான மேடைப் பேச்சுக்களையும் நடத்துகிறார். எம்ஐ5 அமைப்பின் பணிநோக்கங்கள் பின்வருமாறு :

- நாட்டிற்கு எதிரான சதி வேலைகளுக்கு எதிர்நடவடிக்கை.
  – ANTI-SUBVERSION.
- பிறநாட்டு உளவு நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கை
  – ANTI ESPIONAGE.
- பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள்
  – ANTI - TERRORISM.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இருவகை உளவமைப்புக்களை பிரித்தானியா இயக்குகின்றது:

பாதுகாப்பு சேவை - THE SECURITY SERVICE என்றழைக்கப்படும் எம்ஐ 5. பிரித்தானியப் பொலிஸ் சேவையின் விசேட கிளையுடன் இணைந்து எம்ஐ 5 செயற்படுகின்றது. பிரித்தானியப் பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் எம்ஐ 5 உள்நாட்டுப் பாதுகாப்பில் ஈடுபடுகின்றது.

வெளிநாட்டு உளவுப் பணிகளில் எஸ்ஐஎஸ் எனப்படும் இரகசிய உளவமைப்புச் சேவை – SECRET INTELLIGENCE SERVICE (SIS) ஈடுபடுகின்றது. இது எம்ஐ 6 (MI 6) என்றும் அழைக்கப்படுகின்றது. வெளிவிவகார அலுவலகத்தின் - FOREIGN OFFICE கட்டுப்பாட்டில் இது இயங்குகின்றது.

எம்ஐ 5 எனப்படும் உள்நாட்டு உளவுச் சேவையில் 2000 வரையிலானோர் பணியாற்றுகின்றனர். மிக அண்மைக் காலம்வரை எம்ஐ 5 அமைப்பின் தலைவியாகத் திருமதி ஸ்ரெல்லா றெமிங்ரன் பணியாற்றினார். இவர் எழுதிய



Scanned by CamScanner

வாழ்க்கை நூலின் தலைப்பு 'திறந்த இரகசியம்' புத்தகதின் மிகுதித் தலைப்பு 'சலிப்பான இல்லத்தரசி வாழ்விலிருந்து இரகசிய சேவையின் தலைவி ஆகும்வரை' –FROM BORED HOUSEWIFE TO HEAD OF THE SECRET SERVICE: OPEN SECRET BY STELLA REMINGTON.

"உளவுத் தகவல் சேகரிப்பது எளிதல்ல. சின்னச்சின்ன தகவல்களைச் சேகரித்து நுட்பமாக ஒன்றிணைக்க வேண்டும்" என்கிறார் ஸ்ரெலா. பிரித்தானியாவின் பெண்கள் உளவுச் சேவையில் திறம்படச் செயற்படுகின்றனர். இரண்டாம் உலகப்போர் காலத்தில் எதிரியின் கட்டுப்பாட்டில் இருந்த ஐரோப்பாவுக்குள் நுழைந்து பல அரிய சாதனைகளை அவர்கள் நிகழ்த்தியுள்ளனர். ஒரு சிலர்தான் உயிரோடு திரும்பியுள்ளனர். எம்ஐ 5 அமைப்பின் முதலாவது பெண்தலைவி என்ற சிறப்பு ஸ்ரெலாவுக்கு உண்டு. 2001 இல் இவர் எம்ஐ 5 இன் இயக்குநர் நாயகம் பதவியிலிருந்து இளைப்பாறினார்.

பிரித்தானியாவின் வோசெஸ்ரர் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணக்காப்பாளராகப் பணியாற்றிய ஸ்ரெலா 1963 இல் றெமிங்ரனைத் திருமணம் செய்தார். புதுடில்லியின் பிரித்தானியத் தூதரகத்தில் றெமிங்ரன் ஒரு கடைநிலைப் பணியாளராகப் பதவி வகித்தார். ஸ்ரெலாவுக்குப் பகுதி நேரத் தட்டச்சு எழுத்தாளராக தூதரகத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தநேரத்தில் எம்ஐ 5 அமைப்பின் இரகசிய முகவராக ஸ்ரெலா இணைக்கப்பட்டார். 1969 இல் கணவன் மனைவி இருவரும் நிரந்தரமாக இங்கிலாந்து திரும்பினர். அதன்பின் முழுநேர எம்ஐ 5 ஊழியராக ஸ்ரெலா உருவானார். கணவனும் மனைவியும் பின்பு பிரிந்துவிட்டனர்.

எம்ஐ 5 அமைப்பு 1909 ஆம் ஆண்டு வேர்னன் கெல் – VERNON KELL – என்ற அதிகாரியால் உருவாக்கப்பட்டது. உள்நாடு, வெளிநாடு வாரியாக உலக நாடுகளின் உளமைப்புக்கள் வகுக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் பத்து வரையிலான உளவமைப்புக்களில் சிஐஏ வெளிநாட்டு உளவுப் பணிகளைக் கவனிக்கின்றது. இரண்டாம் உலகப் போரின் தேவைக்காக ஜூன் 13, 1942 இல் அதிபர் ரூஸ்வெல்ற் கேந்திர சேவைகளுக்கான அலுவலகத்தை நிறுவினார் – OFFICE OF STRATEGIC SERVICES என்று அது அழைக்கப்பட்டது. ஜெனரல் வில்லியம் டொனோவன் (GEN. WILLIAM DONOVAN) இயக்குநராக நியமிக்கப்பட்டார். இதன்பின் அமெரிக்க இராணுவம் நுழையும்முன்பே 1,500 வரையிலான இந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பிய ஆசிய நாடுகளுக்குள் ஊடுருவியுள்ளனர். போர் முடிந்தபின் இவ்வலுவலகம் கலைக்கப்பட்டது. மத்திய உளவு முகவரகம் என்று பெயரிடப்பட்ட – CENTRAL INTELLIGENCE AGENCY – என்ற சிஐஏ உளவமைப்பை உருவாக்கும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் – NATIONAL SECURITY ACT – அதிபர் ட்ரூமன் ஜூலை 26, 1947 இல் கைச்சாத்திட்டார்.

இன்று இலத்திரனியல் கருவிகள், விண்ணில் உலாவரும் செய்மதிகள் உதவியுடன் உளவுப் பணிகள் நடக்கும் காரணத்தால் இவற்றிற்குப் பொறுப்பான உளவமைப்புக்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சில நோக்கர்கள் பார்வையில்



Scanned by CamScanner

எம்ஐ 6 அமைப்பிலும் பார்க்க GCHQ அமைப்பு ஆற்றும் பணி கூடுதல் பெறுமதி வாய்ந்தது. சிஐஏ அமைப்பு ஆற்றும் பணியிலும் பார்க்க அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு முகவரகம்-NATIONAL SECURITY AGENCY (NSA) கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்தது. இது இலத்திரனியல் உளவுக்குப் பொறுப்பாக இருக்கின்றது.

உளவமைப்புக்களை உள்நாட்டு,வெளிநாட்டு அமைப்புக்கள் என்று பகுப்பது பல சந்தர்ப்பங்களில் கடினமாக இருக்கின்றது. எப்.பிஐ வெளிநாடுகளில் பணியாற்றச் செல்கின்றது. சோவியத் ஒன்றியத்தின் உள்நாட்டு உளவமைப்பான கேஜீபி-KGB வெளிநாடுகளில் தனது பணிகளைத் தொடர்கின்றது. எனினும் உளவுத்துறை பற்றிய கற்கையில் உள்நாட்டு, வெளிநாட்டுப் பாகுபாடு தள்ளி வைக்கப்படுவதில்லை. சோவியத் ஒன்றியத்தின் வெளிநாட்டு உளவுச்சேவை குறூ (GRU) என்ற சுருக்கப் பெயரில் இயங்கியது. இன்று கேஜீபி, குறூ என்பன வேறு பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அவை ஆற்றும் பணிகளில் மாற்றமில்லை.

உளவுத்துறையில் முன்னணி இடம் வகிக்கும் இஸ்ரேயிலின் உள்நாட்டு உளவுச்சேவை ஷின் பெத்-SHIN BETH என்றும் வெளிநாடுட்டுச் சேவை மொசாட்-MOSSAD-என்றும் அழைக்கப்படுகின்றன. இங்கும் வெளிநாட்டு, உள்நாட்டுப் பாகுபாடு இறுக்கமாகப் பேணப்படுவதில்லை. தமிழர்களுக்கு எதிரான போரில் இரு அமைப்பைச் சேர்ந்தவர்களும் சிறிலங்காவுக்கு உதவவந்து திரும்பியுள்ளனர்.

இஸ்ரேயிலின் இராசதந்திரச் சேவைக்கும் மொசட் அமைப்பிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. இது வியப்பிற்குரியதல்ல, உலக வழக்கு அதுதான். இன்றைய (2002) மொசாட் தலைவர் எபிரேயிம் ஹலேவி, வயது 67 பிரித்தானியாவில் உயர்குடிப் பிறந்தவர். இவருடைய மாமனார் இசைமேதை சேர் இசையா பேர்லின்-SIR ISAIYAH BERLIN- ஹலேவி இஸ்ரேயிலில் குடியேறிய பின்பு இராசதந்திரச் சேவையிலும் மொசாட் பணிகளிலும் ஈடுபட்டார். இரண்டிலும் திறம்படச் செயற்பட்டார்.

ஜோர்தான் இஸ்ரேயில் நட்புறவு ஒப்பந்தம் நிறைவேறுவதற்கு ஹலேவியின் திரைமறைவுப் பணிகள் உதவின. இவர் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இஸ்ரேயில் இராசதந்திரத் தூதுவராகச் சிலகாலம் பணியாற்றியபின் 1968 இல் மொசாட்டின் தலைவராக நியமனம் பெற்றார். இவர் அண்மையில் வெளியிட்ட முக்கியமான கருத்து, "நான் அரசியல்வாதிகளுக்கு உண்மையைத்தான் சொல்வேன், அவர்கள் கேட்க விரும்புவதை சொல்ல மறுக்கிறேன்" இஸ்ரேயிலில் மாத்திரமல்ல உலகின் வேறுபல நாடுகளிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



Scanned by CamScanner

இந்தியாவின் வெளிநாட்டு உளவுப்பணிகளை றோ அமைப்பும், உள்நாட்டு உளவுப்பணிகளை ஐபி - IB - எனப்படும் INTELLIGENCE BUREAU அமைப்பும் கவனிக்கின்றன. ஐரோப்பா, அமெரிக்கா, சிறிலங்கா பாகிஸ்தான் மத்திய கிழக்கு, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் முக்கிய நகரங்களில் றோ பணியாற்றுகின்றது. றோவும் சிஐஏ யும் தகவல் பரிமாற்றம் செய்கின்றன. றோவின் முன்னாள் தலைவர் சக்சனா இப்போது காஷ்மீர் மாநில ஆளுநராகப் பதவி வகிக்கிறார். இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் அமைப்பில் - NATIONAL SECURITY COUNCIL - பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், உள்நாட்டமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோகசர், திட்டமிடல் ஆணையத் தலைவர், முப்படைத் தலைவர்கள், றோ மற்றும் ஐபி தலைவர்கள், மற்றும் நிதி அமைச்சர் ஆகியோர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

உள்துறை அமைச்சின் கட்டுப்பாட்டில் ஐபி எனப்படும் உள்நாட்டு உளவமைப்பு செயற்படுகின்றது. டிஜிஎஸ் (DGS) எனப்படும் பொது பாதுகாப்பு இயக்குநரகம் - DIRECTORATE GENERAL OF SECURITY ஐபி, றோ என்பனவுடன் இணைந்து செயற்படுகின்றது. உளவுத் தகவல்களை மதிப்பீடு செய்யும் பிறிதோர் அமைப்பு கூட்டு புலனாய்வு குழு - JOINT INTELLIGENCE COMMITTEE - என்ற பெயருடன் இயங்குகின்றது. றோ அமைப்பின் தலைவர் எப்போதும் 'செயலர் எஸ்' (SECRETARY S ) என்று அழைக்கப்படுகிறார். இதே அதிகாரி DGS அமைப்பின் இயக்குநராகச் செயற்படும்போது டீஜீ (DG) என்ற பெயரால் அழைக்கப்படுகிறார்.

பாகிஸ்தானின் வெளிநாட்டு உளவமைப்பு ஐஎஸ்ஐ - ISI - என்றழைக்கப் படுகின்றது - INTER-SERVICES INTELLIGENCE DIRECTORATE மொசாட் அமைப்பின் திறமை இதற்கு இருப்பதாக தகவலறிந்தோர் கூறுகின்றனர். மத்திய கிழக்கு, மத்திய ஆசியா, அப்கானிஸ்தான், வட - கிழக்கு இந்தியா ஆகிய பகுதிகளில் ஐஎஸ்ஐ நன்கு கால்பதித்துள்ளதாக நம்பப்படுகின்றது. பிரான்சில் டிஜிஎஸ்ஈ (DGSE), டிஎஸ்ரி (DST) என்று இரு அமைப்புக்கள் காணப்படுகின்றன. முதலாவது வெளிநாட்டு உளவுப்பணியையும், இரண்டாவது உள்நாட்டு உளவுப் பணியையும் மேற்கொள்கின்றன.

அனைத்துலக இராணுவ சேவை - INTERNATIONAL MILITARY SERVICE என்ற நிழல் அமைப்பு பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது. எம்ஐ 6 இந்த அமைப்புடன் நெருங்கிச் செயற்படுகின்றது. ஈராக் போன்ற தடைவிதிக்கப்பட்ட நாடுகளுக்கு இரகசியமாக ஆயுதம் விற்பதற்கு இது பொறுப்பேற்கின்றது. பிறநாடுகளிலும் இதுபோன்ற இரகசிய அமைப்புக்கள் காணப்படுகின்றன.

பென்ரகன் எனப்படும் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலகம் தனது சொந்த உளவுச் சேவையை வைத்திருக்கின்றது. DEFENCE INTELLIGENCE AGENCY - பாதுகாப்பு உளவு முகவரகம் என்பது அதன் பெயர். திரைமறைவு நடவடிக்கைகளை நடத்துவதற்காக அமெரிக்க விசேட படையணிகளையும் பென்ரகன் பயன்படுத்துகின்றது. வழமையாக இவ்வகை நடவடிக்கைகள் சிஐஏ அமைப்பினால் மேற்கொள்ளப்படுகின்றன.

# சிறிலங்கா உளவுச்சேவை
## SRI LANKA INTELLIGENCE SERVICE

1865 ஆம் ஆண்டின் பொலிஸ் சட்டம் இலக்கம் 16 இன் 56ஆம் சரத்து (ஈ) பிரிவு - S 56 (e) OF POLICE ORDINANCE NO. 16 OF 1865 - பொலிஸ் படையின் விசேட கிளையின் பணி, "பொது அமைதியைப் பாதிக்கும் உளவுத் தகவல்களைச் சேகரித்து அனுப்புவதே" –TO COLLECT AND COMMUNICATE INTELLIGENCE AFFECTING THE PUBLIC PEACE" என்று தெரிவிக்கின்றது. காலனித்துவ காலத்தில் இலங்கையில் உள்நாட்டு உளவமைப்பு மாத்திரம் இருந்தது. ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் இயங்கிய பொலிஸ்படையின் விசேட கிளை- SPECIAL BRANCH உளவுத் தகவல் சேகரிப்பிற்குப் பொறுப்பாக இருந்தது. மிக அண்மைக்காலம்வரை சிறிலங்காவின் பொலிஸ்படை பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டில் இயங்கியது. இது காலனித்துவ காலத்தின் எச்சமாகும்.

1984இல் சிறிலங்கா பொலிசின் விசேட கிளை மூடப்பட்டது. உளவுத் தகவல் திரட்டும் பொறுப்பு பொலிசாரிடமிருந்து பறிக்கப்பட்டு தேசிய பாதுகாப்பு அலுவலகம் - NATIONAL INTELLIGENCE BUREAU (NIB) என்ற அமைப்பிடம் கொடுக்கப்பட்டது. என்ஐபி என்ற பெயரால் அழைக்கப்பட்ட இந்த அமைப்பு பாதுகாப்பு அமைச்சின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கியது. விசேடகிளை பொலிஸ் மாஅதிபரின் கட்டுப்பாட்டில் இயங்கியதை இங்கு குறிப்பிடலாம். பொலிஸ் படையின் மாவட்டப் பொலிஸ் உளவுப் பணியகங்கள் - DISTRICT INTELLIGENCE BUREAU- தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டன. இப்பணியகங்கள் சேகரித்த உளவுத் தகவல்களை என்ஐபி கூடுதலாகப் பயன்படுத்தியது.

பொலிசார் தரப்பில் 1995 ஆம் ஆண்டுவரை தமது விசேட கிளையை மீளத்திறக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. பொலிஸ்மா அதிபராகப் பதவிவகித்த பிறாங்க் த சில்வா (FRANK DE SILVA) விசேட கிளை அலுவலகத்தைத் திறந்து செப்ரம்பர் 1995 வரை பணிசெய்ய அனுமதித்தார். அதன்பின் விசேடகிளை நிரந்தரமாக மூடப்பட்டது. ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில் உளவுத் தகவல் மற்றும் பாதுகாப்பிற்கான அமைப்பு திறக்கப்பட்டது- INTELLIGENCE AND SECURITY BUREAU. இதன் இயக்குநராக மெறில் குணவர்த்தனா பதவிவகித்தார். இப்போது இவர் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக நியமனம் பெற்றுள்ளார். என்ஐபி அமைப்பும் மூடப்பட்டு இப்போது வெளிநாட்டு உள்நாட்டு தேவைகளுக்காக இருவேறு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. வெளிநாட்டு உளவு இயக்குநரகம் - DIRECTORATE OF FOREIGN INTELLIGENCE.
2. உள்நாட்டு உளவு இயக்குநரகம் - DIRECTORATE OF INTERNAL INTELLIGENCE.



Scanned by CamScanner

சிறிலங்காவின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமர், ஜேன் டிபன்ஸ் வீக்கிலி சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியில் (ஜூன் 16,1999) "கடதாசியில் எல்லாம் நன்றாகத்தான் இருக்கின்றன, வெளிநாட்டு உளவு இயக்குநரகம் திருப்திகரமாக இயங்கவில்லை" என்றார். மேற்கூறியவற்றில் முதலாவது DFI என்றும், இரண்டாவது DII என்றும் அழைக்கப்படுகின்றன. முப்படைகளும் தத்தம் உளவமைப்புக்களை இயக்குகின்றன. சிறிலங்கா தரைப்படையின் உளவமைப்பு DIRECTORATE OF MILITARY INTELLIGENCE DMI என்று அழைக்கப்படுகின்றது.

## இரகசிய நடவடிக்கை
## COVERT ACTION

எதிரியின் நாட்டிற்குள் அல்லது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் தனிமனிதராகவோ அல்லது சிறு குழுவாகவோ ஊடுருவிச் சென்று நடத்தும் தாக்குதல்கள் COVERT ACTION எனப்படுகின்றது. கொவேட் என்றால் மறைவான அல்லது இரகசியமான என்று பொருள். இது ஓவேட் OVERT என்பதின் எதிர்ச்சொல்லாகும். ஓவேட் என்றால் திறந்த அல்லது வெளிப்படையான என்று பொருள். COVERT ACTION ஒரு கலைச்சொல் பிரயோகம். அது குறிப்பிட்டதொரு அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

கிட்டத்தட்ட மூன்று அம்சங்களைக் கொண்டதாக இந்தரக நடவடிக்கை மதிப்பிடப்படுகின்றது :

1. அரசியல் அல்லது இராணுவத் தலைவரை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல், இந்த நடவடிக்கை ஒரு குறிப்பிட்ட நபருக்கு எதிராக மாத்திரம் எடுக்கப்படுகின்றது. இதற்கும் கலைச்சொல் உருவாகியுள்ளது, அதாவது TARGETED KILLING - குறிவைத்துக் கொலை செய்தல்.

2. இராணுவ நிலைகள், தொழிற்சாலைகள், போக்குவரத்துச் சாதனங்கள், நிர்வாக மையங்கள், அணு உலைகள் போன்றவற்றை தாக்கி அழித்தல், இது நாசவேலை SABOTAGE - என்று வகைப்படுத்தப்படுகின்றது.

3. ஆட்கடத்தல் அல்லது தொழில் இரகசியங்களைக் கடத்திச் செல்லல். ஆட்கடத்தல், ABDUCTION என்றும் தொழில் இரகசியத் திருட்டு TECHONOLOGY THEFT என்றும் வகைப்படுத்தப்படுகின்றன.

இந்வகைத் தாக்குதல் நவீன போர்முறையில் மிகவும் சக்திவாய்ந்த தந்திரோபாயமாகக் கருதப்படுகின்றது. இப்போர் முறையில் ஈடுபடுவோருக்கு பலமான "தசைநாரும் திறமையான மூளையும்" இருக்கவேண்டும் என்கிறார்கள். நவீன வரைபடங்களும் GPS போன்ற தொழில்நுட்பமும் ஊடுருவலை எளிதாக்கியுள்ளது. GPS கருவிகள் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது, ஆயிரத்திற்கும் மேற்பட்ட GPS கருவிகள் பாலைவனப் புயல் போரில் பயன்படுத்தப்பட்டன.



Scanned by CamScanner

இரகசிய நடவடிக்கைப் போர்முறையைப் பெரும்பாலான உலகநாடுகள் நடைமுறைப்படுத்துகின்றன. சிஐஏ மொசாட் போன்ற உளவமைப்புக்கள் குறிவைத்துத் தாக்குதல் நடத்துவதில் பிரசித்தமானவை. ஹமாஸ் அமைப்பின் இராணுவப் பிரிவின் நிறுவுனர் சலா ஷெகாடா (SALAH SHEHADA) ஜூலை 2002இல் இஸ்ரேயில் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டார். இவருடைய வீட்டின் மீது ஒருதொன் எடையுள்ள லேசர் கதிர்மூலம் செலுத்தப்பட்ட குண்டு போடப்பட்டது. TARGETED KILLING என்று வர்ணிக்கப்பட்டாலும் இப்படுகொலை 13 பொதுமக்களைக் கொன்றதோடு இரு தொடர்மாடிக் கட்டிடங்களையும் தரைமட்டமாக்கியுள்ளது.

இரகசிய நடவடிக்கைளுக்கு பின்வருவன இருக்கவேண்டியது மிகவும் அவசியம்:

1. நன்கு பயிற்றப்பட்ட, அர்ப்பணிப்பு உணர்வுமிக்க திறமைசாலிகள்.
2. நவீன கருவிகள்.
3. மறைவிடம் - SAFE HOUSE.
4. தகவல் வழங்குவோர் - INFORMANTS
5. உளவுப் படையினருக்காக ஒதுக்கப்பட்ட இரகசிய நிதியம் - SECRET FUND.

மறைவிடங்கள் எதிரியின் நாட்டிற்குள் அல்லது ஆள்புலத்திற்குள் பெரும்பாலும் அமைக்கப்படுகின்றன. இயலாவிட்டால் எல்லைப் பகுதியிலும் அமைக்கப்படுகின்றன. கண்ணைக் கவராத சாதாரண வீடாக மறைவிடம் இடம்பெறுவது வழமை. இதற்குரிய வாடகை இரகசிய நிதியத்தில் இருந்து கொடுக்கப்படுகின்றது. இராணுவப் பதிவேடுகளில் இந்த வீடு பற்றிய குறிப்புக்கள் பதியப்படுவதில்லை. ஒட்டுக்கேட்கும் கருவிகள், ஆயுதங்கள், வெடிப் பொருள்கள் உடனடிப் பாவிப்பிற்குத் தயாராக இந்த வீடுகளில் வைக்கப்பட்டிருக்கும்.

முகவர்கள், தகவல் வழங்குவோரைச் சந்திப்பதற்காகவும், கடத்திக் கொண்டு வருபவர்களை விசாரிப்பதற்காகவும் இந்த வீடுகள் பயன்படுத்தப் படுகின்றன. தகவல் வழங்குவோர் தமது சொந்த வீடுகளில் இலைமறைகாய் போல் வாழ்வார்கள். ஆபத்து நெருங்கினால் இராணுவ முகாமிற்குள் தஞ்சம் புகுவார்கள். தாக்குதல் வெற்றி அடைந்தாலென்ன, தோல்வி அடைந்தாலென்ன தங்குமிடங்கள் குறிப்பிட்ட காலத்தின்பின் கைவிடப்படுகின்றன.

இந்தவகைத் தாக்குதல்களில் ஈடுபடும் உளவமைப்புக்கள் ஊடகத்துறையுடன் நெருங்கிய தொடர்புகளை இரகசியமாகப் பேணுகின்றன. திட்டமிட்ட கசிவுகள், திசைதிருப்பும் செய்திகள், மறுப்புக்கள் போன்றவற்றை வெளியிடுவதற்கும் பத்திரிகையாளர்கள் போன்றோர் மூலம் தகவல் திரட்டுவதற்கும் இத்தொடர்பைப் பேணுகின்றனர்.



Scanned by CamScanner

ஆட்கடத்தல் மற்றும் தேடப்பட்டோரைத் தப்பிச்செல்ல உதவுதல் இந்தவகை நடவடிக்கைகளில் முக்கிய இடம்பிடிக்கின்றன. கடந்த கால்நூற்றாண்டிற்கு முன் வடகோரிய உளவுத்துறையினர் ஜப்பானியத் தீவுகளுக்குள் புகுந்து பத்துக்கும் பதினைந்திற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையினரை கடத்திச் சென்றனர். 2002 செப்ரம்பரில் ஜப்பானியப் பிரதமர் கொயிசுமி வடகோரியாவுக்கு விஜயம் மேற்கொண்டபோது வடகோரியத் தலைவர் கிம்ஜுங்இல் இதை ஒத்துக்கொண்டார். வடகோரிய உளவுத்துறையினருக்கு ஜப்பானிய மொழி, நடை, உடை பாவனை போன்றவற்றில் பயிற்சி வழங்குவதற்காக இக்கடத்தல் நடத்தப்பட்டதாக இப்போது அறியப்படுகின்றது.

கடத்தப்பட்டோரில் ஐவர் மாத்திரம் தற்சமயம் உயிரோடு உள்ளனர். இவர்கள் ஜப்பான் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வடகோரியாவில் பிறந்த பிள்ளைகள் ஜப்பான் செல்ல அனுமதிக்கப்படவில்லை. தமது பிள்ளைகளைத் தம்மிடம் சேர்க்கும்படி ஜப்பானில் தங்கியிருக்கும் இந்த ஐவரும் கோரிக்கை விடுத்துள்ளனர். அதேபோல் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தென்கோரிய மீனவர்களை வடகோரியக் கடற்படை கடத்திச் சென்றுள்ளது. கடந்த முப்பது வருடங்களாக வடகோரியா இதைச் செய்கின்றது. இதற்கான காரணம் யாதென்று துல்லியமாகத் தெரியவில்லை. தென்கோரியப் பிரசைகள் வாயினூடாக வடகோரியாவுக்குச் சாதகமான பிரசார வாக்குமூலங்களை பெறுவதற்காக இக்கடத்தல் செய்யப்பட்டதாக சில நோக்கர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்தோ–சிறிலங்கா ஒப்பந்தத்துடன் தொடங்கிய ஜேவீபியின் இரண்டாவது ஆயுத கிளர்ச்சியின்போது ஜேவீபி தலைவர் சோமவன்ச அமரசிங்க (SOMAWANSA AMARASINGHE) அப்போதைய யூஎன்பி அரசினால் தேடப்பட்டு வந்தார். இக்கிளர்ச்சி காலத்தில் இந்தியத் தூதுவராக ஜே.என்.டிக்சிற், துணைத் தூதுவராக நிருபம் சென் பதவி வகித்தனர். இருவருக்கும் இடையில் கடுமையான கருத்துமோதல் நிலவியது. ஜேவீபியுடன் இரகசியத் தொடர்புகளைப் பேணவேண்டும் என்று நிருபம் சென் விரும்பினார், தொடர்பு வைக்கக்கூடாது என்று டிக்சிற் அடம் பிடித்தார். சென்றவருடம் சோமவன்ச அமரசிங்க சிறிலங்கா வந்தார். (2001). தான் தப்பிச் செல்வதற்கு இந்தியாதான் உதவியது என்று அவர் பகிரங்கமாக ஒத்துக் கொண்டார். நிருபம் சென் நிலைப்பாடு வெற்றிபெற்றதாகக் கொள்ள வேண்டும் இப்போது இவர் சிறிலங்காவின் இந்தியத் தூதுவராகப் பதவி வகிக்கிறார்.

சென்ற நூற்றாண்டு எண்பதுகளில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்தவேண்டும் என்று அப்போதைய தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி விரும்பினார். ஜெயவர்த்தனாவின் பாதுகாப்பு ஆலோசகராகப் பதவிவகித்த அவருடைய மகன் ரவி ஜெயவர்த்தனா இதை ஆமோதித்தார். சிறிலங்காவுக்கு உதவும் நோக்கில் இங்குவந்த இஸ்ரேயிலின் ஷின் பெத் உள்நாட்டு உளவமைப்பு மற்றும் இங்கிலாந்தின் கூலிப்படையினர் இதற்கான திட்டங்களை வகுத்தனர். குறிப்பிடத்தக்க பலன் கிட்டவில்லை.



Scanned by CamScanner

2001 ஆம் ஆண்டு மேற்கூறிய நடவடிக்கைக்கு புத்துயிரளிக்கப்பட்டது. வெளிநாட்டுப் பயிற்சியாளர் உதவியுடன் எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நெடும்தூரம் ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்தும் LONG RANGE RECONNAISSANCE PATROL அல்லது LRRP என்ற நடவடிக்கை ஆரம்பமானது. அமெரிக்கப் பயிற்சியாளர்களின் சங்கேத மொழியில் இத்தாக்குதல் முறை 'லேர்ப்ஸ்'- LURPS என்று அழைக்கப்படுகின்றது. உளவுத்துறையினர் நடமாடும் உலகை ஆயிரம் முகம் பார்க்கும் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட சிறிய அறைக்கு ஒப்பிடுகின்றனர். முழுவடிவம் தெரிவதில்லை, ஆள் அடையாளம் காணமுடியாது, உண்மையான நிழல் உலகம் இதுதான்.

## இறைபணி-கத்தோலிக்க மத அமைப்பிற்குள் ஒரு இரகசியப் பிரிவு

## OPUS DEI (THE WORK OF GOD)

இலத்தின் மொழியில் 'ஒப்புஸ்' என்றால் பணியென்றும் 'டெய்' என்றால் இறைவன் என்றும் பொருள். இரண்டும் இணைந்து இறைபணி என்ற சொல்லாக உருவெடுத்துள்ளது. ஒப்புஸ் டெய் (OPUS DEI) என்பது கத்தோலிக்க மத அமைப்பிற்குள் விளம்பரம் யாதொன்றும் இல்லாமல் மிகவும் இரகசியமாக இயங்கும் ஒரு மதப்பிரிவு. இது கத்தோலிக்க மதத் துறவிகளின் அமைப்பல்ல. இதில் அங்கத்துவம் வகிப்போர் கத்தோலிக்க மதம்சார்ந்த பொதுமக்கள். இவர்கள் திருமணம் செய்யவும் குடும்ப வாழ்வு நடத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். கத்தோலிக்க மதகுருமார் விரும்பினால் ஒப்புஸ் டெய் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கமுடியும்.

அனைத்துலக மட்டத்தில் ஒப்புஸ் டெய் அங்கத்தவர்கள் எண்ணிக்கை 84,000ஆக இருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகின்றது. மிகவும் இரகசியமாகச் செயற்படும் அமைப்பு என்ற காரணத்தால் எண்ணிக்கையைத் துல்லியமாக கூறமுடியவில்லை. உலக வாழ்வில் ஈடுபடுவோரில் துறவு மனப்பான்மை கொண்டோர் அங்கத்துவம் வகிப்பதாகவும் விடயம் அறிந்தோர் கூறுகின்றனர். அங்கத்தவர்களின் நிர்வாக உட்கட்டமைப்பு பற்றிய தகவல்களும் சரியாகக் கிடைக்கவில்லை. ஒவ்வொருநாட்டிலும் ஒப்புஸ் டெய் நிர்வாகக் கிளைகள் காணப்படுகின்றன. ஆனால் கிளைகள் ஒவ்வொன்றும் தனித்து இயங்குகின்றன. கிளைகளுக்கிடையில் தொடர்புகள் பேணப்படுவதில்லை.

ஸ்பேயின் நாட்டில் வாழ்ந்த ஜோசேமாரியா எஸ்கிறிவா தீ பெலாகுவர் (JOSEMARIA ESCRIVA DE BELAGUER) இந்த அமைப்பை உருவாக்கினார். அது உருவாகிய காலத்தில் ஸ்பேயின் நாட்டின் உள்நாட்டுப் போர் நடைபெற்றது - 1936 - 1939. ஸ்பேயின் நாட்டின் குடியரசுக்கு எதிராக இத்தாலிய ஜேர்மன் அரசுகளின் ஆதரவுபெற்ற பாசிச சக்திகள் அரசைக் கைப்பற்றும் நோக்கில் போரிட்டன. ஒரு இலட்சம்பேர் கொண்ட தரைப்படையை இத்தாலியும், போர் தாங்கிகள், ஆட்டிலறி மற்றும் விமானங்கள் என்பனவற்றையும் அவற்றை இயக்கும் படையினரையும் ஜேர்மனி அனுப்பியது. பிரான்சிஸ்கோ பிறான்கோ தலைமையிலான பாசிச சக்திகள் இறுதி வெற்றிபெற்றன.



Scanned by CamScanner

இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பணியை முன்னெடுக்கும் ஒரு இயக்கம் தேவை என்பதை பெலாகுவர் உணர்ந்தார். இதன் காரணமாக இந்த அமைப்பு தோன்றியது. ஸ்பேயின், தென்அமெரிக்க நாடுகள், அமெரிக்கா, ஐரோப்பா போன்றவற்றில் ஓப்புஸ் டெய் ஒரு சக்திவாய்ந்த பின்னணிச் சக்தியாக இன்று இயங்குகின்றது. மத அமைப்பிலும் கூடிய பொருளாதார மற்றும் அரசியல் வீச்சு இந்த அமைப்பிற்கு உண்டு. ஸ்பேயின் நாட்டின் அமைச்சரவையில் இந்த அமைப்பின் உறுப்பினர்கள் இருப்பதாக நம்பப்படுகின்றது. அமெரிக்காவின் உள்நாட்டு உளவமைப்பான எப்பிஐயின் தலைவர் லூயி பிறீ (LOUIS FREEH) ஓப்புஸ் டெய் அமைப்பைச் சார்ந்தவர். ருஷ்யாவுக்கு இரகசியத் தகவல் வழங்கிய குற்றத்திற்காக சிறைவாசம் அனுபவிக்கும் றொபேட் ஹான்சன் (ROBERT HANSSEN) ஓப்புஸ் டெய் உறுப்பினர். இவர் எப்பிஐ யில் முன்பு பணியாற்றியவர்.

கல்வி, வர்த்தகம், அரச நிர்வாகம் போன்ற துறைகளில் உயர்பதவிகளைப் பெறும் வகையில் மேம்பாட்டுத் திட்டங்களை ஓப்புஸ் டெய் தனது உறுப்பினர்களுக்கு வழங்குகின்றது. மத அடிப்படையில் உலக வாழ்வில் முன்னேற்றம் காணும்படி ஓப்புஸ் டெய் அமைப்பு ஊக்குவிப்பு வழங்குகின்றது. ஓப்புஸ் டெய் கிளைகளின் நிர்வாகச் செலவுக்குத் தேவையான நிதியை அந்தந்த கிளையில் அங்கத்துவம் வகிப்போர்களே வழங்குகின்றனர்.

கத்தோலிக்க மத அமைப்பின் நிர்வாகக் கட்டமைப்பினுள் ஓப்புஸ் டெய் இடம்பெறுவதில்லை. ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒரு ஆயரும் அவருடைய ஆளுமையின் கீழ் பல உட்பிரிவுகளும் வழமையாகக் காணப்படுகின்றன. ஆனால் ஓப்புஸ் டெய் வழமையான ஆயர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குவதில்லை. ஓப்புஸ் டெய் அமைப்பிற்கு ஒரேயொரு ஆயர் மாத்திரமே. அவர் வத்திக்கானில் ஓப்புஸ் டெய் ஆயர் என்ற பதவிப் பெயருடன் அங்கு வதிகின்றார். இந்தவகையில் ஓப்புஸ் டெய் கத்தோலிக்க மதத்தினுள் ஒரு விசேட பிரிவாக இயங்குகின்றது.

ஓப்புஸ் டெய் அமைப்பின் உறுப்பினர்கள் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் வழிபாட்டு ஒன்றுகூடல்களின்போது இருபாலரும் ஒன்றாக ஆராதனைகளில் கலக்க முடியாது. ஆண்களுக்குத் தனியாக ஆராதனை நடைபெறும், பெண்களுக்கும் அப்படியே இந்தவகையிலும் ஒரு பாரிய வித்தியாசம் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஓப்புஸ் டெய் அமைப்பிற்கே உரித்தான பிற விசேட அடையாளங்களாவன: பெயர், முகவரி போன்ற விவரங்கள் அறியமுடியாத முகம்தெரியாத உறுப்பினர்கள்; கணக்கு ஆய்வுகளுக்கு உட்படாத பெரும் செல்வம்; இரகசியமாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள்; அரச மட்டத்திலுள்ள எல்லாவகைப் பிரிவுகளுடனும் நெருங்கிய தொடர்பு.



Scanned by CamScanner

மேற்கூறிய நான்கு இலட்சணங்களும் இணைந்து ஓப்புஸ் டெய் அமைப்பிற்கு மேற்கு நாடுகளின் அரசியல், இராணுவ, உளவுத்துறை மற்றும் பொருளாதாரத் துறைகளில் பெருமளவு செல்வாக்கைக் கொடுத்துள்ளது. குறைந்தளவு எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்டதொரு அமைப்பிற்கு கிடைக்கும் வலு மதமும் அரசியலும் இணைந்ததால் ஏற்படுகின்றது.

அண்மையில் கிடைத்த தகவற்படி புனிதர் (SAINT) என்ற கத்தோலிக்க மதத்தின் அதியுயர் விருது ஓப்புஸ் டெய் நிறுவனர் பெலாகுவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 06, 2002இல் வைபவரீதியாக இப்பட்டமளிப்பை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் நடத்தினார். கத்தோலிக் மதத்தினரின் 468ஆம் புனிதராக பெலாகுவர் உயர்த்தப்பட்டுள்ளார்.

டொமினிக், பிரான்சிஸ், இக்னேசியஸ் போன்ற பிரபலமான புனிதர்கள் மக்கள் மத்தியில் மிகவும் வெளிப்படையாக உலாவிப் பணியாற்றினர். அனைத்துலக மட்டத்தில் மிகவும் இரகசியமாக இயங்கும் கத்தோலிக்க மதப்பிரிவுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரமாக பெலாகுவரின் புனிதர் பட்டம் கருதப்படுகின்றது.

## வத்திக்கான் நிர்வாக அமைப்பு
## THE CURIA

பாப்பரசரையும் அவர்தம் நிர்வாக அமைப்பையும் கூட்டாகப் 'பேப்பசி'- PAPACY- என்று அழைப்பார்கள். நிர்வாக அமைப்பு 'கியூறியா'-CURIA- என்று குறிப்பிடப்படும். 900 மில்லியன் கத்தோலிக்க மதத்தினரின் தலைமைபீடமாக வத்திக்கான் நிலவுகின்றது. உலகின் பல பாகங்களில் வாழும் இப்பெருந்தொகை மக்களையும் அவர்களோடு தொடர்புடைய பலதரப்பட்ட விடயங்களையும் கியூறியா நிர்வாகம் செய்கின்றது. உலக அரசுகள், அரசுகளாக அமையாத நிறுவனங்கள், பல்தேய வர்த்தக அமைப்புக்கள், அரசுசாரா நிறுவனங்கள் போன்றவற்றுடனான அரசியல், இராசதந்திர மற்றும் பொருளாதார விவகாரங்களை கியூறியா மூலம் வத்திக்கான் நிர்வாகம் செய்கின்றது.

வத்திக்கான் நிர்வாகம் பல திணைக்களங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இத்திணைக்களங்கள் யாவும் கூட்டாக கியூறியா என்ற சொல்லில் அடங்குகின்றன. உலகின் பல பாகங்களில் இருந்து வந்தோர் கியூறியா நிர்வாக அமைப்பில் பணியாற்றுகின்றனர். இதனால் 'மினி ஐநா' என்றும் கியூறியா அழைக்கப்படுகின்றது. முழு அளவு இராசதந்திர அந்தஸ்துடன் வத்திக்கான் இடம்பெறுகின்றது. உலகின் மிகவும் சிறிய நாடாக இருப்பினும் அதனுடைய அதிகாரவீச்சு மிகவும் வலுவானது. சில விமர்சகர்கள் வத்திக்கான் ஒரு நாடல்ல, ஒரு சில கட்டடிங்கள் மாத்திரமே என்று சாதிக்கின்றனர். இது சரியல்ல.



Scanned by CamScanner

அதற்குரிய கௌரவம் அளிப்பது மூலம் பல நாடுகள் பயனடைகின்றன. அறுபதிற்கும் மேற்பட்ட உலக நாடுகள் வத்திக்கானில் தமது தூதரகங்களைத் திறந்துள்ளன. வத்திக்கான் நாட்டின் தூதர்கள் பலநாடுகளில் பணியாற்றுகின்றனர். உலக நாடுகளில் நடக்கும் முக்கிய பேச்சுவார்த்தைகளில் வத்திக்கான் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் உதவுகின்றது. வழமையான அரசியல் மற்றும் இராசதந்திர மையநீரோட்டங்களிலும் பார்க்க வத்திக்கானின் நகர்வுகள் வித்தியாசமானவை.

வத்திக்கானும் அதனுடைய நிர்வாக அமைப்பான கியூறியாவும் உலகின் சக்தி மையங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாக வத்திக்கானுக்குப் பெருமளவு மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படுகின்றது. வத்திக்கான் ஆரம்பித்த கத்தோலிக்க வங்கி படுதோல்வி அடைந்தாலும், உலகின் பொருளாதார வலுமிக்க நாடுகளில் ஒன்றாக அது கணிப்பிடப்படுகின்றது. ஏற்றுமதி இறக்குமதி, தொழில்வளம் போன்றவை ஒன்றும் அதனிடம் இல்லை, இருப்பினும் வத்திக்கானில் தேங்கிக் கிடக்கும் செல்வம் அளப்பரியது. இப்படியானதொரு நாட்டுடன் தொடர்புகளைப் பேணாமல் விடுவது புத்தியல்ல.

வத்திக்கான் நாட்டை உலகின் அதியுயர் செல்வந்த நாடாக சில பொருளாதார நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர். வத்திக்கானின் நிர்வாகத்தில் உள்ள அரும்பொருள் காப்பகங்களில் கிடக்கும் கலைப்பொருள்கள் விலைமதிப்பற்றவை. ஆதி கிரேக்க, ரோம, எகிப்திய, சீரிய ஓவியங்களும், சிற்பங்களும், சுவரோவியங்களும், ஏடுகளும் பிறிதோர் நாட்டில் காண்பதரிது. புராதனகால உலக வரைபடங்களும் வத்திக்கானில் சேமிக்கப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றையும்விட வத்திக்கான் ஒரு தகவல் மையம் என்பதுதான் மிகவும் முக்கியமான விடயம்.

## விடுதலை இறையியல்
## LIBERATION THEOLOGY

மக்கள் எதிர்நோக்கும் நாளாந்திரப் பிரச்சனைகளில் இருந்து மத அமைப்புக்களினால் விலகிநிற்க இயலாது என்ற அடிப்படைத் தத்துவம் 'விடுதலை இறையியல்' என்ற விடயத்தின் கருப்பொருளாக அமைகின்றது. தியோலொஜி என்ற சொல்லின் வழமையான அர்த்தம் 'கடவுளைப் பற்றியதும் அவர் சம்பந்தமாக மனிதனது கடமையைப் பற்றியதுமான கற்கை' என்பதாகும். மதங்கள் பற்றிய ஒப்புநோக்குக் கற்கையும் தியொலொஜி என்ற கற்கையின் இன்னுமோர் பகுதியாகும். தியோ (THEO) என்ற கிரேக்க மொழிச்சொல் கடவுளையும் லொஜி (LOGY) கற்கையையும் குறிப்பிடுகின்றன.

விடுதலை இறையியல் என்ற சொற்தொடருக்கு விசேட அர்த்தமுண்டு. ஏழை பங்காளனாகவும் அவனுடைய துயர் துடைக்கும் தோழனாகவும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருக்கவேண்டும் என்று விடுதலை இறையியல் தத்துவம்



Scanned by CamScanner

எடுத்துக் கூறுகின்றது. நசுக்கப்படுவோருக்காகக் குரல் கொடுப்பது மாத்திரமின்றி அவர்களுக்காக ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய கட்டாயம் உண்மையான கிறிஸ்தவனுக்கு உண்டு என்பதையும் விடுதலை இறையியல் வலியுறுத்துகின்றது.

ஏழைகளும் அவர்களை நசுக்கிப் பிழிவோரும் நிறைந்த தென்அமெரிக்க நாடுகளில் விடுதலை இறையியல் முதன்முதலாகத் தோன்றியது. தோற்றிய காலம் 1960 களின் இடைப்பகுதி. விடுதலை இறையியலின் நிறுவனராக குஸ்தாவோ குட்டிரஸ் (GUSTAVO GUTIERREZ) அடையாளம் காணப்படுகிறார். இந்த இயக்கத்தைத் தான் தொடக்கிய காரணத்தை அவர் பின்வருமாறு விளக்கிக் கூறுகிறார்,

"கிறிஸ்தவனின் சமூகக் கடமையைக் கருத்தில் கொண்டு பைபிள் நூலை விளங்கிக் கொள்ளவேண்டும்" குட்டிரசின் இந்த நிலைப்பாட்டில் மூன்று முக்கிய அம்சங்கள் இணைந்துள்ளன:-

1. சமகால நிகழ்வுகளையும், அரசியல் சமூக நிர்வாகக் கட்டமைப்புக்களையும் நசுக்கப்படுவோரின் கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும்.

2. ஏழைகளுக்காக் குரல் கொடுப்பதோடு அவர்களுக்காக ஆயுதமேந்திப் போரிடவும் தயாராகவேண்டும்.

3. விடுதலை இறையியல் பைபிள்நூலைத் தனது பிறப்பிடமாகக் கொண்டுள்ளது. கத்தோலிக்க மதத்தின் காலத்திற்கேற்ற வளர்ச்சியாக அது அமைகின்றது.

விடுதலை இறையியல் கிறிஸ்தவ மதத்தில் ஒரு பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், இராணுவ அடக்குமுறைகளுக்கு உட்படுவோர், உயிரழிவைச் சந்திப்போர் போன்றோருக்காக வாதிடும், போரிடும் சக்தியாகக் கிறிஸ்தவ மதம் தன்னை 1960கள் தொடக்கம் இனங்காட்டுவதற்கு குட்டிரசின் விடுதலை இறையியல்தான் காரணமாக அமைகின்றது. ஆன்மீகத்திற்கும் புரட்சிக்குமிடையிலான உடன்பாடுகளை குட்டிரஸ் பரிசோதனை செய்தபின் கிடைத்த முடிவாக விடுதலை இறையியல் கருதப்படுகின்றது. 1960களின் பின் தென்அமெரிக்க நாடுகளில் நடைபெற்ற ஆயுதக் கிளர்ச்சிகளில் விடுதலை இறையியலுக்குச் சாதகமான போக்குடைய கத்தோலிக்க மதகுருமார் சிலர் பங்குபற்றி உயிரிழந்துள்ளனர்.



Scanned by CamScanner

# ஐந்தாம் படை
## FIFTH COLUMN

மக்களோடு மக்களாக வாழ்ந்துகொண்டு இரகசியமாக உளவுத் தகவல்களைத் திரட்டி எதிரிக்கு வழங்குவோரை INFORMANTS என்று வர்ணிக்கிறார்கள். அயர்லாந்தின் சுதந்திரப் போர் வரலாறு பற்றிய உத்தியோகபூர்வ நூலில் "INFORMANTS ARE THE CURSE OF THE IRISH FREE MOVEMENT" ஐரிஷ் விடுதலை இயக்கத்தின் சாபக்கேடாக (எதிரிக்குத்) தகவல் வழங்குவோர் அமைகின்றனர் - என்ற வாசகம் காணப்படுகின்றது.

ஐந்தாம் படையினரும் இந்தரகத்தைச் சேர்ந்தவர்களே. ஆனால் ஒரு பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது. தகவல் வழங்குவோர் எண்ணிக்கையில் குறைந்தவர்கள், ஐந்தாம் படையினர் ஒரு அணியாக, எண்ணிக்கையில் கூடியவர்களாக அமைகின்றனர். இந்த அணியினர் எதிரியின் வருகையைக் காத்திருக்கின்றனர். அவனுடன் இரகசியத் தொடர்புகளை பேணியபடி ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

போரியலில் ஐந்தாம் படை பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது. தனது நாட்டிற்குள் இருந்தவாறே தாக்குதல் நடத்தும் எதிரிக்குச் சார்பாக நடக்கும் படையணி. ஐந்தாம் படைகள் போர் நடக்கும்போது ஒழுங்கு செய்யப்படுகின்றன. எதிரியின் வெற்றிக்காகவும், எதிரியின் வரவை எளிதாக்குவதற்காகவும் ஐந்தாம் படையினர் செயற்படுகின்றனர்.

ஐந்தாம் படை என்ற குறியீட்டுப் பெயர் எப்படி உருவாகியது என்பதைப் பார்ப்போம். ஸ்பேயின் நாட்டின் தலைநகர் மட்றிட் (MADRID) 1936 - 1939 காலப்பகுதியில் நடந்த உள்நாட்டுப் போரில் ஜெனரல் மோலாவின் படைகளால் சுற்றி வளைக்கப்பட்டது. ஜெனரல் மோலாவின் படைகள் நான்கு அணிகளாகப் பிரிந்து நின்று தாக்குதல் தொடுத்தன. எனக்கு மட்றிட் நகருக்குள்ளும் இன்னுமொரு படையணி உண்டு என்றார் மோலா -MOLA. அன்றுதொட்டு ஐந்தாம் படை என்ற இழிசொல் வழக்கில் இருக்கின்றது.

ஐந்தாம் படைகள் உருவாவதற்கு இன, மத, மொழிக் காரணங்களும் அப்பட்டமான சந்தர்ப்பவாதமும் காரணங்களாக அமைகின்றன. அரசியல் சித்தாந்த நம்பிக்கைகளும் தூண்டுகருவிகளாக அமைவதுண்டு. வெற்றிபெற இயலாது எதிரியுடன் இணைந்து அவன்தரும் சலுகைகளை அனுபவிப்பதே மேல் என்ற தீய எண்ணமும் ஐந்தாம் படையின் சிந்தனைக்குத் தூபமிடலாம். 1940 இல் நாசிப் படைகள் நோர்வேயைத் தாக்கியபோது நோர்வே இராணுவ மேஜர் விட்குன் குயிஸ்லிங் தலைமையிலான ஐந்தாம் படை எதிரிக்கு ஒத்துழைப்பு வழங்கியது.



Scanned by CamScanner

# ஆயுதக் கிளர்ச்சி
## INSURGENCY

முழு அளவு ஆயுதப் புரட்சிக்கும் - FULL - SCALE REVOLUTION குறைவான அரசு எதிர்ப்பு நடவடிக்கை இன்சோர்ஜன்சி என்று அழைக்கப்படுகின்றது. உள்நாட்டு மோதல்களில் இதுவோர் ரகம். அனைத்துலகச் சட்டத்தின்படி 'இன்சோர்ஜன்சி' என்று வகைப்படுத்தப்படும் மோதல் உள்நாட்டுப் போராக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இன்சோர்ஜன்சி என்று அழைக்கப்படும் உள்நாட்டு மோதல்கள் நடைபெறும் நாடுகளுக்குச் செல்வதைத் தவிர்க்கும்படி வெளிநாடுகள் தமது குடிமக்களுக்கு அறிவுறுத்தல் செய்கின்றன. இருப்பினும் இன்சோர்ஜன்சி அது நடைபெறும் நாட்டின் உள்விவகாரம் என்பதை உலக நாடுகள் ஏற்றுக் கொள்கின்றன.

ஆயுதக் கிளர்ச்சிகள் வலுப்பெற்று விரிவடையும்போது பிறநாடுகள் உள்நாட்டுப்போர் நடப்பதாக ஏற்றுக்கொள்கின்றன. இந்த நிலையில் அரசுக்கு எதிராகப் போரிடும் மக்கள் குழுவுக்கு சட்டபூர்வ அந்தஸ்து கிடைக்கின்றது. சட்டபூர்வமாக நிறுவப்பட்ட எந்தவொரு அரசுக்கும் எதிரான ஆயுதக் கிளர்ச்சி ஆரம்ப கட்டத்தில் இன்சோர்ஜன்சி என்று அழைக்கப்படுவது வழமை. அது விரிவடைந்து உள்நாட்டுப் போராக வளர்ச்சி பெற்றபின்பும் தொடர்ச்சியாக இன்சோர்ஜன்சி என்று பாதிக்கப்பட்ட அரசுகள் அழைக்கின்றன. கிளர்ச்சியைச் சிறுமைப்படுத்துவதற்காகவே இப்படியாக அழைக்கப்படுகின்றது.

வெளிநாடுகள் உள்நாட்டுப் போர் நடப்பதாக ஏற்றுக்கொண்டால் "STATE OF BELLIGERENCY" என்ற சட்டபூர்வ அங்கீகாரம் அந்த மோதலுக்கு வழங்கப்படுகின்றது. இந்த வழங்கல் பெரும்பாலும் ஒரு அரசியல் நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. சட்டபூர்வமான போரில் ஈடுபடும் ஒரு அமைப்பு என்ற அங்கீகாரம் கிளர்ச்சியாளர்களுக்கு இந்த வழங்கல் மூலம் கிடைக்கின்றது. இதன்பின் இருபகுதியினரும் போர் சம்பந்தமான சட்டங்களுக்கும் மரபுகளுக்கும் - RULES AND CUSTOMS OF WARFARE - கட்டுப்படுகின்றனர்.

STATE OF BELLIGERENCY எனப்படும் 'போரில் ஈடுபடும் நிலமை' இருப்பதாக உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும்போது அரசை எதிர்த்துப் போரிடும் அமைப்பிற்கு அது கைப்பற்றிய நிலப்பரப்பை ஆட்சிசெய்யும் உரிமை சட்டபூர்வமாகக் கிடைக்கின்றது. அத்துடன் போரில் ஈடுபடும் ஒரு பகுதி என்ற காரணத்திற்காக அது அரசியல் மற்றும் தார்மீக உதவிகளையும், ஆயுத தளபாட வழங்கல்களையும் பெறும் வாய்ப்பு ஏற்படுகின்றது. போர் நடப்பதாக ஏற்றுக்கொள்ளும் அங்கீகாரம் காலம் முந்தி வழங்கப்பட்டால் வழங்கும் நாட்டிற்கும் எதிர்த்துப் போரிடும் அரசுக்குமிடையில் முறுகல் நிலையையும் இராசதந்திர முறிவுகளையும் ஏற்படுத்தும். காலம் பிந்தினால் அந்த அங்கீகாரம் பயனற்றதாகிவிடும். இன்சோர்ஜன்சி உள்விவகாரமாக இருப்பினும் அனைத்துலக மட்டத்தில் அதன் தீர்வுக்குத் தீவிர கவனம் செலுத்தப்படுகின்றது.



Scanned by CamScanner

# இன்திபாடா எனப்படும் வெகுசனக் கிளர்ச்சி

**INTIFADA**

இன்திபாடா என்பது அரபு மொழிச் சொல். அது இன்று விசேட அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது. ஆயுதம் தாங்கிய சீருடை தரித்த இராணுவத்தினருக்கு எதிராக வயது, பால் வேறுபாடின்றிப் பொதுமக்கள் நடத்தும் போர் என்று இன்திபாடா விளக்கிக் கூறப்படுகின்றது. மேற்குகரை, காசாப் பிரதேசங்களில் வாழும் பாலஸ்தீன மக்கள் இஸ்ரேலிய இராணுவத்திற்கு எதிராக நடத்தும் போர்முறையை இது குறிப்புணர்த்துகின்றது. இந்தரகப் போர்முறை கடும் பதிலடி காரணமாக அர்த்தமற்றதாகி விடுகின்றது. இன்திபாடா பயனற்றதாகவும் தோல்வி கண்டதாகவும் கருதப்படுகின்றது.

உலகின் கவனத்தை ஈர்ப்பதற்கு இன்திபாடா உதவுகின்றது. அதற்குமேல் அதைப் பயனுள்ள போர் உத்தியாகக் கொள்வதற்கில்லை. கல்லெறியும், கூச்சலும் இரக்கமற்ற படையினருக்கு எதிராக என்னதான் செய்யமுடியும். இன்திபாடாவை எதிர்கொள்வதற்கு இறப்பர் ரவைகள் தொடக்கம் விமானக் குண்டுவீச்சு வரையிலான உத்திகளை இஸ்ரேலியர்கள் பயன்படுத்துகின்றனர். ஒரு சிலகாலம் இந்திபாடா நடத்தும் மக்களுக்கு உலகின் இரக்கப்பார்வை கிடைத்தது உண்மை. ஆனால் இன்று நிலமை வித்தியாசமாகிவிட்டது. இந்திபாடா கைவிடப்பட்டு ஆயுதப் போராட்டம் தொடங்கிவிட்டது. இந்திபாடாவை சுதந்திரப் போராட்டத்தின் ஒரு கட்டமாக மாத்திரம் பார்க்க முடியும். ஆயுதப் போராட்டத்திற்கு மாற்றீடாக இந்திபாடா ஒருபோதும் அமையமாட்டாது.

பாலஸ்தீனத்தில் இந்திபாடா தோல்வி கண்டதுபோல், 1990 களில் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக காஷ்மீர் மக்கள் நடத்திய வெகுசனக் கிளர்ச்சியும் பிசுபிசுத்துப் போய்விட்டது. 1990-1995 ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இந்தியப் படைகளின் சூட்டிற்கு இலக்காகி 11,500 வரையிலான காஷ்மீர் இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். உயிரிழப்புக்கள் தொடர்கின்றன.



Scanned by CamScanner

# மக்கள் போர்முறையில் கெரில்லாப் போர்
## PEOPLE'S WAR AND GUERILLAS

ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிரான மக்கள் போர் முறையில் கெரில்லா போர்முறை முதலிடம் வகிக்கின்றது. கெரில்லாப் போர்வீரன் மக்களில் ஒருவன். நீரில் மீன்போல மக்கள் மத்தியில் வாழ்பவன். கெரில்லாப் போர்முறை மரபுப் போர்முறைக்கு வித்தியாசமானது. அரசு பெற்றெடுத்த இராணுவ எந்திரத்திற்கு எதிராகச் சிறு குழுக்களாக சென்று கெரில்லாக்கள் தாக்குதல் நடத்துவர். தாக்குதலுக்கு வேண்டிய உளவுத் தகவல்களை மக்கள் வழங்குகின்றனர். பெரும்பாலும் அந்தநாட்டில் பிறந்தவர்களானபடியால் அவர்களுக்கு வருவதும் தாக்குதல் நடத்துவதும், வெளியேறுவதும் எளிதாக அமைகின்றது.

ஒருங்கிணைந்த பலம் வாய்ந்த தலைமைத்துவம், சீரான கட்டமைப்பு, வலுவான குறிக்கோள், மாறாத மக்கள் ஆதரவுப் பின்னணி என்பன ஒரு கெரில்லா இயக்கத்தின் வெற்றிக்கு அத்தியாவசியமாக அமைகின்றன. ஒரு விடுதலைப் போராட்டம் வெற்றிபெற வேண்டுமானால் மக்கள் அமைப்பு, நிரந்தர இராணுவம், சரியான சித்தாந்தம், பொருளாதாரம், சர்வதேச அங்கீகாரம், தொடர்பு சாதனங்கள் போன்ற ஆறு அம்சங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். கெரில்லாக்கள் இவற்றைத் தமது இலக்காகக் கொண்டிருப்பர்.

ஒன்றிணைந்த அரசியல் மற்றும் இராணுவக் குறிக்கோள் இருக்குமாயின் கெரில்லாப் பாணியில் நடத்தப்படும் இனவிடுதலைப் போர் திறம்பட இயங்கும் வாய்ப்பைப் பெறுகின்றது. அரச நிர்வாகத்தை ஓரங்கட்டும் அதேவேளையில் தமது திறமான நிர்வாகக் கட்டமைப்பை நிறுவும் திறன் கெரில்லாக்களுக்கு இருக்கவேண்டும். மக்களின் பண்பாட்டியல்புகளோடு விடுதலை இயக்கக் குறிக்கோள் ஒத்துப்போக வேண்டும். நீடித்த கெரில்லாப் போருக்கு வெளியிட நிதி உதவியும், பிற அனுகூலங்களும் இருப்பதை உறுதி செய்யவேண்டும்.

கெரில்லாக்களுக்கு உறுதியான தளம் கட்டாயமாகத் தேவைப்படுகின்றது. இது நடமாட்டப் பிற்புலமாகவும், மறைவிடமாகவும், ஆயுத மற்றும் உணவுச் சேமிப்பு நிலையமாகவும், ஓய்விடமாகவும் பயன்படுகின்றது. வெளிநாடுகளுக்குச் சென்று வரவும், அத்தியாவசியப் பொருள்களையும், ஆயுதங்களையும் இறக்குமதி செய்வதற்குகந்த சீரான போக்குவரத்துப் பாதையை கெரில்லாக்கள் அமைக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இனங்காணமுடியாத பலம்வாய்ந்த வெளிநாட்டின் உதவி கெரில்லாக்களுக்கு இருக்குமாயின் மிகவும் உயர்ந்த சிறப்பம்சமாக அமையும்.

டாக்டர் கிரிஷ் பிஜாரி எழுதிய 'சிவில் ஆயுதக் கிளர்ச்சியும் புலனாய்வு நடவடிக்கைகளும்' –CIVIL INSURGENCY AND INTELLIGENCE OPERATIONS BY DR GIRISH BIJARI: LANCERS PUBLIS HERS, NEW DELHI, (1982) என்ற ஆய்வுநூலுக்கு அணிந்துரை வழங்கிய லெப்.ஜென்.



Scanned by CamScanner

ஜக்ஜித் சிங் அவுறோரா (LT.GEN. JAGJIT SINGH AURORA) "நன்கு பயிற்றப்பட்டு, வழிநடத்தப்படும் உத்வேகமுள்ள கெரில்லாப் போர்வீரன், மிகவும் சக்திவாய்ந்ததொரு போராயுதம் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று கூறுகிறார்.

மலையாள மனோரமா பத்திரிகை நிறுவனம் பிரசுரிக்கும் 'த வீக்' (THE WEEK) என்ற சஞ்சிகையில் இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலர் ஏ.பி.வெங்கடேஸ்வரன் எல்ரிரிஈயின் போரிடும் திறன்பற்றி இவ்வாறு கூறுகிறார். "போர்க் குணமிக்க இனங்கள் என்ற வகைப்படுத்தல் இருக்குமாயின், அதில் தம்மை சந்தேகத்திற்கு இடமில்லாமல் சிறிலங்கா தமிழர்கள் நிலைநிறுத்தியுள்ளனர்" த வீக், ஜூன் 18, 1989.

## அரச பயங்கரவாதம்
## STATE TERRORISM

அரசும் அதன் அங்கத்துவ அமைப்புக்களும், அரசுடன் கூட்டுச் சேர்ந்தோர்களும் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நாட்டு மக்கள்மீது நடத்தும் வன்முறைகள் அரச பயங்கரவாதமாக அமைகின்றன. தனது பயங்கரவாத நடவடிக்கைகளுக்குச் சாதகமான சட்டங்களை அரசு இயற்றுகின்றது. தனது படைகளும் தனது உறுப்பு அமைப்புக்களும் புரியும் பயங்கரவாதச் செயல்களைக் கட்டுப்படுத்தாமல், பதவிஉயர்வு போன்ற ஊக்குவிப்புக்களை வழங்குகின்றது. இவை அரச பயங்கரவாதத்தின் முக்கிய அம்சங்களாகும்.

அரச பயங்கரவாதம் சம்பந்தமான கற்கைக்கு சிறிலங்கா சிறந்த உதாரணமாக இடம்பெறுகின்றது. அரசு தனது படைகள் மூலம் தமிழ் மக்கள்மீது தாக்குதல் தொடுக்கின்றது. தொடர்ச்சியான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. பல்வேறு குற்றச்செயல்களை முப்படைகளும் பொலிசாரும் செய்கின்றனர். குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. மாறாக குற்றச் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் அதியுயர் பதவிகளும், இராசதந்திரத் தூதுவர்கள் நியமனங்களும் ஒருவகை வெகுமதிபோல் பெறுகின்றனர்.

படைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் சட்டத்தின் மூலம் அரச பயங்கரவாதம் சிறிலங்காவில் விரிவுபடுத்தப்படுகின்றது. 1979 ஜூலை மாதம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்-PREVENTION OF TERRORISM ACT 1979 நிறைவேறியது. இது முதலில் மூன்று ஆண்டுகளுக்கு அமுலில் இருந்தது, பின்பு 1982 இல் நிரந்தர சட்டமாக்கப்பட்டது. அரச பயங்கரவாதத்தின் மொத்த வடிவமாக இச்சட்டம் அமைகின்றது. காரணமின்றிக் கைது செய்தல், விசாரணையின்றித் தடுத்து வைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு இச்சட்டம் அனுமதி வழங்குகின்றது.



Scanned by CamScanner

மேற்குலக நாடுகள் தமது தேசியநலன் தேவைகளுக்காக அரச பயங்கரவாதத்தை ஆதரிக்கின்றன. 1973 இல் சிலி நாட்டின் அதிபர் சல்வடோர் அலன்டே அமெரிக்க ஆதரவுடன் பதவி கவிழ்க்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். அமெரிக்க வர்த்தக நிறுவனங்களின் சுரண்டல்களுக்குத் தடையாக இருந்தது இவர் செய்த குற்றம். அமெரிக்க ஆதரவுடன் ஜெனரல் அகுஸ்தோ பினோஷே சிலி அதிபராகப் பதவியேறினார். இவருடைய 17 வருடகால சர்வாதிகாரத்தில் 130,000 சிலி மக்கள் கொல்லப்பட்டனர். அல்லது காணாமற்போயினர். அமெரிக்காவும் பிரதமர் மாகரேற் தச்சர் தலைமையிலான பிரித்தானியாவும் இவருக்கு போட்டி போட்டுக்கொண்டு ஆயுத விற்பனை செய்தன.

கிழக்கு தீமோரில் இந்தோனேசியப் படைகள் நடத்திய படுகொலைகளுக்கு அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா ஆகியநாடுகள் பூரண ஆதரவு வழங்கின. ஒக்ரோபர் 16,1975 இல் இந்தோனேசியப் படைகள் கிழக்கு தீமோரில் படப்பிடிப்பு நடத்திக் கொண்டிருந்த அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஐந்து தொலைக்காட்சி நிருபர்களைச் சுட்டுக் கொன்றனர். இதை அவுஸ்திரேலிய அரசு மூடிமறைத்தது. பெரிய நோக்கத்திற்காக சிறிய விடயங்களைப் பெரிதுபடுத்தக்கூடாது என்று அவுஸ்திரேலிய அரச தரப்பினர் கூறினர். இந்தோனேசியாவுடன் கூட்டுச்சேர்ந்து கிழக்கு தீமோர் கடலின் எண்ணை வளத்தை சூறையாடுவது அவுஸ்திரேலியாவின் பொரிய நோக்கம். கிழக்கு தீமோர் படுகொலைகளுக்கு உதவும் விதத்தில் ஆயுதம் வழங்கிய நாடு பிரித்தானியா.

சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்தை மேற்கு நாடுகளோ அயல் நாடுகளோ தட்டிக் கேட்டது கிடையாது. 1988 இல் குர்திஷ் மக்களை நச்சுவாயு மூலம் சதாம் ஹுசேயின் கொன்றார் என்று மேற்கு நாடுகள் குற்றம் சுமத்துகின்றன. ஆனால் 1980 இன் ஈரான்–ஈராக் போரின்போது அதே நச்சுவாயுவை ஈரான் சிவிலியன்கள்மீது சதாம் பாவித்தபோது மேற்குலகம் வாய்திறக்கவில்லை. இதே நச்சுவாயு மூலப்பொருள்களை அமெரிக்காதான் ஈராக்கிற்கு வழங்கியது என்பது வேறுவிடயம்.

பயங்கரவாதம் பற்றிய கற்கையில் ஒன்றை மாத்திரம் அவதானிக்க வேண்டும். தனிமனிதர்களும் குழுக்களும் செய்யும் பயங்கரவாதச் செயல்கள் மாத்திரம் கணக்கில் எடுக்கப்படுகின்றன. அரச பயங்கரவாதம் விதிவிலக்காக அமைகின்றது. 9–11 நிகழ்ச்சிக்குப்பின் அரசுக்கு எதிரான ஆயுதப்போரை மேற்குலகம் பொறுத்துக் கொள்ளமாட்டாது. அரச பயங்கரவாதம் அனுமதிக்கப்படுகின்றது. ஜனநாயக வரையறைக்குள் எதிர்ப்புக் காட்டுங்கள் என்று அறிவுரை கூறுவோர் அது எப்படி என்று விளக்கிக் கூறுவதில்லை. ஆயுதப் போருக்கு மாற்றீடாக நியாயமான நிவாரணம் தரப்படாவிட்டால் உலக அமைதியைக் காண இயலாது.



Scanned by CamScanner

# இனக்கலப்பு
## ASSIMILATION

அசிமிலேஷன் என்ற ஆங்கிலச் சொல் பல அர்த்தங்களை உள்ளடக்கியது. உள்வாங்குதல், ஒன்றுபடுத்தல், கலப்புச்செய்தல் என்பன அதிலடங்கும். எமது கற்கையின் தேவைகளுக்கு இனக்கலப்பு என்ற அர்த்தம் மிகவும் பொருத்தமாக அமைகின்றது. தாம் வாழும் நாட்டை ஆளும் பெரும்பான்மை இனத்துடன் ஒன்றிணைந்து அதன் பயனாய்ப் பல அனுகூலங்களைப் பெறமுயல்வது. சிறுபான்மை இனங்களின் இயல்பு. வாழ்க்கையை இடையூறின்றி ஓட்டவேண்டும் என்ற நோக்கம் இந்த இயல்பின் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. காலப்போக்கில் இது அடையாள இழப்போடு கூடிய பெரும்பான்மையுடன் இரண்டறக் கலக்கும் நிலைக்கு இட்டுச்செல்கின்றது. இதையொரு வரலாற்று நியதி என்றுகூடச் சொல்லலாம்.

இனக்கலப்பு இருவகைப்படும், ஒன்று தானாகவே நடக்கும் செயல், தூண்டுதலின்றி சிறிய இனம் பெரிய இனத்துடன் நாளடைவில் கலக்கும் செயல். அடுத்தது பெரிய இனம் திட்டமொன்றை உருவாக்கி அதன் அடிப்படையில் சிறிய இனத்தின் தனித்துவ அடையாளங்களை அழித்துத் தன்னோடு இணைக்கும் செயல். இரண்டில் ஒன்று ஒவ்வொரு உலக நாட்டிலும் நடைபெறுவதை அவதானிக்கலாம். இரண்டுமே ஒரே நாட்டில் சமகாலத்தில் நடைபெறுவதையும் அவதானிக்க முடியும்.

அசிமிலேஷன் பற்றிய கற்கைக்கு அமெரிக்க அனுபவம் சிறந்த பாடமாக விளங்குகின்றது. 'ASSIMILATION, AMERICAN STYLE' என்ற ஆய்வுநூலை எழுதிய PETER SALINS பின்வருமாறு சொல்கிறார். "அமெரிக்கா சிறந்த பாடநூல் உதாரணமாக விளங்குகின்றது" - AMERICA IS A GOOD TEXTBOOK EXAMPLE. அமெரிக்காவை ஒரு "கூழ் பானைக்கு"-MELTING POT - ஒப்பிடுவது மேற்கூறிய பீற்றர் சலின்ஸ் போன்றோர் வழமை.

அமெரிக்கா உண்மையில் ஒரு கரையும் கூழ்பானைதானா? அமெரிக்காவின் முதலாவது கறுப்பின உயர்நீதிமன்ற நீதியரசர் தேர்கூட் மார்ஷல் - THURGOOD MARSHALL-1978 இல் பின்வருமாறு எழுதினார், "நாங்கள் இன்னும் வெள்ளையர்களுக்குச் சமமானவர்களாக வளரவில்லை. கரையும் கூழ்பானையைப் பற்றிக் கூறுவதாயின் நாங்கள் அதற்குள் இன்னும் இறங்கவில்லை அல்லது அதற்குள் இறங்கினாலும் இன்னும் கரையத் தொடங்கவில்லை" நீதிபதி மார்ஷல் ஒரு கறுப்பின அடிமையின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது இழந்த அடையாளத்தை மீளப்பெறும் நோக்கில் பல கறுப்பின அமெரிக்கர்கள் இஸ்லாம் மதத்திற்கு மாறியதோடு அரபுப் பெயர்களையும் தமக்குத் தாமே சூட்டியுள்ளனர். இயலாமையின் வெளிப்பாடு என்று சில பார்வையாளர்கள் கருதுகின்றனர். சில கறுப்பர்கள் யூத மதத்திற்கும் மாறியுள்ளனர்.



Scanned by CamScanner

இவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைந்தவர்கள். பொதுவாக இன்று கறுப்பினத்தவர்கள் தம்மை 'ஆபிரிக்க – அமெரிக்கர்கள்' – AFRICAN AMERICANS என்று அழைக்கின்றனர். அரபு இனத்தவர்களும் அமெரிக்காவில் பெரும் எண்ணிக்கையில் குடியேறியுள்ளனர். அரபு – அமெரிக்கர்கள் என்று அழைக்கப்படும் இவர்களின் எண்ணிக்கை மூன்று மில்லியனுக்கும் சற்றுக் கூடியது. அமெரிக்க முஸ்லிம்களின் கூட்டுத்தொகை ஆறு மில்லியனைக் கடந்துவிட்டது. அரபு அமெரிக்கர்களில் கிறிஸ்தவ அரபுக்களும் அடங்குவர். ஆனால் அமெரிக்க முஸ்லிம்களில் அமெரிக்காவின் கறுப்பர்கள், அண்மையில் ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்கா வந்த கறுப்பர்கள், ஆசியா மற்றும் ஐரோப்பிய முஸ்லிம்கள் போன்றோர் இடம்பெறுகின்றனர். 9 – 11 நிகழ்சிசிக்குப்பின் அமெரிக்க முஸ்லிம்களின் நிலைமை கவலைக்கு இடமளிப்பதாக உள்ளது.

வெள்ளைத் தோல் இல்லாதவர்களுக்கு அமெரிக்காவில் முதல் மரியாதை கிடையாது. இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்து குடியேறிய மண்நிற மாந்தர்களுக்கும் அவ்வளவு பெரிய மதிப்புக் கிடையாது. எந்தப்பெரிய பதவி வகித்தாலும் வெள்ளைத் தோலனுக்கு கிடைக்கும் அந்தஸ்து கிடைப்பதில்லை. வெள்ளையர் அல்லாதோர் அண்டிப் பிழைப்பதையே தமது உயர்வுக்கு வழியாகத் தெரிவு செய்துள்ளனர். அத்தோடு தமது கல்வி மற்றும் தொழிற் சிறப்பால் தம்மை உயர்த்தியுள்ளனர். இருப்பினும் எந்த நேரத்திலும் தாம் அவமதிக்கப்படலாம் என்ற அச்சம் அவர்களுக்கு உண்டு.

**அமெரிக்க வாழ்வின் நீரோட்டத்தில் கலப்பதற்கு மூன்று முக்கிய தகுதிகள் இருக்கவேண்டும்:**

1. ஆங்கில மொழி அறிவு.
2. தமது அமெரிக்க அடையாளத்தை சொல்லிலும் செயலிலும் தொடர்ச்சியாகக் காட்டவேண்டும்.
3. புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தினராக இருந்தால் மிகவும் விரும்பத்தக்கது.

அமெரிக்காவின் தலைமைப் பதவிகளை தமது குடும்பங்களுக்கிடையில் அடக்கி வைத்திருப்போரை வாஸ்ப் – WASP – என்ற சுருக்குப் பெயரால் அழைப்பார்கள். இதன் விரிவு பின்வருமாறு: W=WHITE, AS=ANGLOSAXON, P=PROTESTANT. அதாவது இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா வந்த அங்கலோசக்சன் முதற்குடிகள். இவர்கள் நிறம் வெள்ளை, மதம் புரட்டஸ்தாந்து.

அமெரிக்கா ஒரு வந்தேறு குடிகளின் நாடு. உலகின் இனங்கள் யாவும் இங்கு சங்கமித்துள்ளன. ஆனால் நிட்சயமாக அமெரிக்கா ஒரு பல்லினங்களின் குடியிருப்பு அல்ல. அப்படியிருப்பின் இந்த நாடு ஒரு பலமற்ற, அதிகார வீச்சு குறைந்த நாடாக இருக்கும். அமெரிக்காவின் பலம் அசிமிலேஷனில், அதாவது இனக்கலப்பில் இருக்கிறது. இயல்பாகவும் திட்டமிட்டபடியும் இனக்கலப்பு நடைபெறுகின்றது.



Scanned by CamScanner

இத்தொடர்பில் ஜப்பானையும் நோர்வேயையும் ஆய்வுக்கு எடுக்கவேண்டும். ஜப்பானிய மக்கள் மஞ்சள் நிறத்தவர்கள், மொழி, மதப் பண்பாட்டியல்புகளால் ஜப்பானியர்கள் சீன இனத்துடன் தொடர்புடையவர்கள், ஆனால் ஐரோப்பாவின் கொக்காசோயிட் -CAUCASOID- மனிதக் குடும்பத்தவர்களான அயினு இன மக்கள்-AINU ஜப்பானில் காணப்படுகின்றனர். என்பதை உலகம் அறியமாட்டாது. இவர்கள் ஜப்பானிலும் ருஷ்யாவிலும் மாத்திரம் காணப்படுவதால் இவர்களைப் பற்றிய தகவல் வெளியுலகை எட்டுவதில்லை. இவர்கள் பேசும் அயினு மொழியையும் கலாசார அடையாளங்களையும் அழிப்பதற்கு ஜப்பானிய அரசுகள் பெருமுயற்சி எடுக்கின்றன. அவர்களுடைய வாழ்விடங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இன்று அயினு மக்கள் ஜப்பானின் ஹொக்கைடோ தீவின் ஒரு மூலையில் ஒதுங்கி வாழ்கின்றனர். அவர்கள் எண்ணிக்கை 15,000 ஆக குறைந்துள்ளது.

அயினு மக்கள்தான் ஜப்பானின் பூர்வ குடிகள், பிற இனங்களோடு கலப்பு இல்லாதவர்கள். நான்கு வகை இனங்களின்-சீன, கொரிய, மலே, தென்பசுபிக்-கூட்டுத்தான் ஜப்பானியர்கள். ஜப்பானிய மொழி சீன மொழியைச் சார்ந்தது. அயினு மக்களை உள்வாங்கும் முயற்சிகள் தோல்வி அடைந்த நிலையில் இப்போது இறுதிக் கட்டமான ஓரங்கட்டி அழித்தல் நடைபெறுகின்றது. தனி அடையாளங்களுடன் வாழும் ஒரேயொரு ஜப்பானிய இனம் என்றால் அது அயினு என்பதில் ஐயமில்லை. அவர்களுடைய தோல்நிறம் வெள்ளை, தடித்த கறுப்பு அலை அலையாகத் தலைமயிர் வைத்தவர்கள். இவர்கள் சைபீரியாவில் இருந்து ஜப்பானின் வடக்குத் தீவுகள்வரை குடிபெயர்ந்திருக்கலாம் என்று வரலாறு கூறுகின்றது. ருஷ்யாவின் வொல்கா நதி ஓரத்தில் அயினு இனத்தவர்கள் இன்றும் காணப்படுகின்றனர்.

வட நோர்வே, சுவீடன், பின்லாந்து ருஷ்யா ஆகிய நாடுகளின் பனிபடர்ந்த பிரதேசங்களில் வாழ்ந்த லாப்-LAPP- மக்கள் வடதுருவ வட்டத்திற்குள்-THE ARTIC CIRCLE- தள்ளப்பட்டுள்ளனர். ஒரு காலத்தில் அவர்கள் மத்திய நோர்வே, மத்திய பின்லாந்து, சுவீடன், டென்மார்க் ஆகிய பகுதிகளில் வாழ்ந்தனர். இவர்களைப் பலப்பிரயோகத்தின் மூலம் வெளியேற்ற இந்த நாடுகளால் முடிந்தது. தமது வாழ்க்கை முறைகளை மாற்றாமல், சுய கௌரவத்தோடு லாப் மக்கள் கடும் குளிரில் கலைமானின் துணையோடு வாழ்கின்றனர். லாப் மக்களின் எண்ணிக்கை 5,000 வரை இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இனக்கலப்பும், இனங்கள் மறைவும் தொடர்ச்சியாக நடக்கும் வரலாற்று நிகழ்ச்சிகள். தொழிற் புரட்சிக்குப் பின் 300 வரையிலான ஐரோப்பிய பழங்குடிகள் பிற இனங்களில் மறைந்துள்ளன. ஒரு இனம் மறைவதற்கு முதற்கட்டமாக மொழியின் அழிவு நடைபெறுகின்றது. பிற இனத்தை உள்வாங்கத் திட்டமிடுவோர், மொழி அழிப்பை முதற்கட்ட நடவடிக்கையாக எடுக்கின்றனர். எழுத்து வடிவம் இல்லாத மொழிகள் முதற் பலியாகின்றன. மொழியை இறுக்கமாகப் பற்றும் இனங்கள் அழிவிலிருந்து தப்புவதற்கு வாய்ப்பு உண்டு.



Scanned by CamScanner

ஆங்கில எழுத்தாளர் ஏச்.ஜீ.வெல்ஸ் (H.G.WELLS 1866-1945) சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் பின்வருமாறு எழுதியும் பேசியும் வந்தார்: உலக நெருக்கத்தால் உலக மக்கள் தமது சுய அடையாளங்களை இழந்து தனியொரு உலகக் குடும்பமாக மாறிவிடுவர். வெல்சின் இக்கருத்து பொய்த்துவிட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இனங்கள் தமது அடையாளங்களை இழக்கத் தயாரில்லை என்பதுதான் பேருண்மை.

# இன அழிப்பு
## GENOCIDE

இன அழிப்பை குறிக்கும் ஜெனோசைற் என்ற ஆங்கிலச் சொல் றப்பேயல் லெம்கின் - RAPHAEL LEMKIN - என்ற சட்டவியலாளரால் முதன்முதலாக உருவாக்கப்பட்டது. ஜெனோசைற் என்ற சொல்லின் அகராதி விளக்கம் 'ஒரு இனத்தை அழித்தல்' - EXTERMINATION OF A RACE - என்று இருக்கின்றது - OXFORD ENGLISH DICTIONARY (1981) ஜெனோசைற் என்ற பதத்திற்கு கோட்பாட்டு வடிவத்திலான வரைவிலக்கணமோ விளக்கமோ, அனைவரும் ஏற்கும் விதத்தில் இதுவரை வெளிவரவில்லை.

1995 இல் இன அழிப்புச் சட்டத்தை ஐநா நிறைவேற்றியது - THE GENOCIDE CONVENTION OF 1995. இச்சட்டத்தின்படி இன அழிப்பு என்பது "ஒரு இன அல்லது தேசிய அல்லது மதக்குழுவைப் பகுதியாகவோ முழுமையாகவோ அழிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை" இது திருப்தியான வரைவிலக்கணமல்ல என்ற பொதுவான கருத்து நிலவுகின்றது. யூத இன அழிப்பு போன்ற வரலாற்று சம்பவங்களைக் கருத்தில் கொண்டு அது தயாரிக்கப்பட்டதாகக் குறை கூறப்படுகின்றது.

GENOCIDE ARE ACTS "COMMITTED WITH INTENT TO DESTROY, IN WHOLE OR IN PART A NATIONAL, ETHNICAL, RACIAL OR RELIGIOUS GROUP" என்று கூறும் 1995 இன் சட்டம் குறுகிய பார்வையுடன் உருவாக்கப்பட்டது. இது உயிர்ப் பறிப்பை மாத்திரம் கருத்தில் கொள்கின்றது. ஒரு மக்கள் கூட்டத்தின் அடையாளத்தை நன்கு திட்டமிட்ட முறையில் அழிக்கும் செயலை இச்சட்டம் கருத்தில் எடுக்கவில்லை. ஐநா சட்டத்தை உருவாக்கும் பணிக்குப் பொறுப்பான நாடுகள் தமது இத்தொடர்பான குற்றச் செயல்களை மறைப்பதற்காக உயிர் பறிப்பை மாத்திரம் வலியுறுத்தின என்று சொல்வதில் தவறில்லை.

ஐநா நிறைவேற்றிய இன அழிப்புச் சட்டத்தின் வரலாறு பின்வருமாறு: ஐநா பொதுசபை 1948 இல் ஜெனோசைற் குற்றத் தடுப்பு மற்றும் அதற்கான தண்டனை வழங்கும் அனைத்துலகச் சட்டத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இருபது அங்கத்துவ நாடுகள் அங்கீகாரம் வழங்கியபின் 1951 இல் அது அமுலுக்கு வந்தது. இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஜெனோசைற் குற்றங்களாவன: படுகொலை, உடல் உள ரீதியான தீங்கு, தரம் குறைந்த வாழ்வுக்குத் தள்ளுதல்,

கட்டாயக் கருத்தடை நடைமுறைகள், சிறுவர்களைப் பெற்றோரிடமிருந்து பறித்து வேறிடம் சேர்த்தல் போன்றவை. இக்குற்றங்களைச் செய்யும் பொதுப் பணியாளர்கள் மற்றும் தனிமனிதர்கள் தண்டனைக்கு உட்படுவர் என்று இச்சட்டம் கூறுகின்றது. அவுஸ்திரேலியா வாழ் பழங்குடியினரின் இளம் சிறார்களை பெற்றோரிடமிருந்து பறித்தெடுத்து வெள்ளையர் குடும்பங்களிடமோ நிறுவனங்களிடமோ ஒப்படைக்கும் கொள்கையை 1971 ஆம் ஆண்டுவரை அவுஸ்திரேலிய அரசு நடைமுறைப்படுத்தியது. இதை GENOCIDE BY ASSIMILATION என்று ஆய்வாளர்கள் வகைப்படுத்துகின்றனர். அதாவது இனக்கலப்பு மூலம் இனப்படுகொலை என்று பொருள்படும். சிறிலங்கா மலையகத் தமிழ்ப் பெண்கள் கட்டாயக் கருத்தடைக்கான சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இது இன அழிப்பு நோக்குடையது.

1971 இல் நடந்த வங்காள தேச விடுதலைப்போரில் ஒன்பது மாத இடைவெளிக்குள் மூன்று மில்லியன் பொதுமக்கள் பாகிஸ்தான் படைகளால் கொல்லப்பட்டனர். இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் படைகளால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். பாலியல் வல்லுறவு மூலம் ஒரு இனத்தின் தனித்துவ அடையாளங்களை அழிக்கும் முயற்சியாக இந்த வன்செயல் கருதப்படுகின்றது.

றப்பேயல் லெம்கின் தரும் விரிவான விளக்கம், உயிர் பறிப்பிற்கு அப்பால் சென்று பின்வரும் அம்சங்களை உள்ளடக்குகின்றது :

1. இன அழிப்பு என்பது உடனடியாக ஒரு இனத்தை அழித்து விடுவது என்று அர்த்தமல்ல. அப்படியாயின் அந்த இனத்தவர் எல்லோரையும் கொன்றொழிக்க வேண்டும்.

2. தேசிய இனங்களின் மொழிப் பண்பாடு, தேசிய உணர்வு, மதம், அரசியல் நிறுவனங்கள், பொருளாதார வளங்கள் போன்ற வாழ்வாதாரங்களின் திட்டமிட்ட அழிப்பு இன அழிப்பின் பரந்த அர்த்தமாகும்.

3. தனிமனிதர்களின் சுதந்திரம், உடல் நலம், கௌரவம், தனிப்பட்ட பாதுகாப்பு, உயிர்வாழ்வு ஆகியவற்றை அழிப்பதும் இன அழிப்புத் திட்டத்தின் பிறிதோர் அங்கமாகும்.

4. இன அழிப்பு ஒரு இனத்தின் தேசிய வாழ்வை அழிப்பதை நோக்காகக் கொண்டது. தனி மனிதர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் அத்தனிமனிதருக்காக அல்ல, அவர் அந்த இனத்தின் உறுப்பினர் என்ற காரணத்திற்காகவே. மேற்கோள் காட்டப்படும் நூல்:

REF: THE WILL TO FREEDOM,ADELE BALASINGHAM P 283
FAIRMAX PUBLICATIONS, LONDON.



Scanned by CamScanner

இருபதாம் நூற்றாண்டை 'படுகொலை நூற்றாண்டு' என்று ஆய்வாளர்கள் வர்ணிப்பதுண்டு – THE CENTURY OF MASSACRES ஹிற்லர் நடத்திய யூதப் படுகொலைகளுக்கு முன்பே ஜோர்ஜியா, ஆர்மீனியா வாழ் கிறிஸ்தவர்களை துருக்கி, ஈரான், அசர்பைஜான் முஸ்லிம் அரசுகள் படுகொலை செய்துள்ளன. மத்திய ஆசியாவின் மிகப் பழமைவாய்ந்த கிறிஸ்தவர்களான ஆர்மீனிய மக்களை துருக்கி மிகப் பரந்தளவில் படுகொலை செய்தது. இது ஹிற்லருக்குச் சிறந்த முன்னுதாரணமாக அமைந்தது. தனது மேடைப் பேச்சின்போது, 'ஆர்மீனியர்களுக்காக இவ்வுலகில் யார் குரல் கொடுத்தார்கள்? ஒருவரும் இல்லை' என்று பேசினார். யூதப் படுகொலைக்கு ஆர்மீனியப் படுகொலை தூண்டு கருவியாக அமைந்தது.

யூதப் படுகொலையை இன அழிப்பிற்கு உதாரணமாகக் காட்டுவோர் சோவியத் ஒன்றியம், நவசீனா ஆகிய நாடுகளில் நடந்தவற்றைக் கணக்கில் எடுப்பதில்லை. சோவியத் ஒன்றியத்தின் மீதான படையெடுப்பின்போது ஜேர்மனிய இராணுவம் 26 மில்லியன் ருஷ்யப் படையினரையும் சிவிலியன்களையும் கொன்றொழித்தது, கொன்றொழிக்கப்பட்ட 6 மில்லியன் யூதர்களைவிட யூதர்கள் அல்லாத 3 மில்லியன் போலாந்து மக்களும் ஜேர்மன் படைகளால் கொல்லப்பட்டனர். இரண்டாம் உலகப் போரில் மொத்தம் 6 மில்லியன் ஜேர்மன் படையினரும் ஜேர்மன் பொதுமக்களும் கொல்லப்பட்டனர். இதே போரில் இத்தாலிய மற்றும் ஜப்பானிய இராணுவங்களால் கொல்லப்பட்டோர் கூட்டுத்தொகை 55 மில்லியனைத் தாண்டுகின்றது.

சீனாவில் நடந்த 1949ஆண்டிற்குப் பிந்திய படுகொலைகளின் கூட்டுத்தொகை 65 மில்லியன் என்று மதிப்பிடப்படுகின்றது. சிறையில் அடைக்கப்பட்ட பின் இறந்தோர் எண்ணிக்கை 20 மில்லியனாகவும், 1959 – 1961 இடைப்பட்ட காலத்தின் முன்னோக்கிப் பாய்ச்சல் – GREAT LEAP FORWARD மற்றும் கலாசாரப் புரட்சியின்போது 20க்கும் 43க்கும் இடைப்பட்ட மில்லியன் சீன மக்கள் கொல்லப்பட்டதாகவும் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

1917 – 23 காலப்பகுதியில் நடந்த ருஷ்யப் புரட்சி, பின்பு நடந்த ருஷ்ய உள்நாட்டுப் போர், அதன்பின் ஸ்ராலின் நடத்திய படுகொலைகள், 1937 – 1938 காலப்பகுதியின் உயிரிழப்புக்கள் என்பனவின் கூட்டுத்தொகை 20 மில்லியனிலும் பார்க்கக் கூடுதலாக அமைகின்றது. ருஷ்யாவையும் சீனாவையும் விட தொடர்ச்சியான வியற்நாம் போரில் 1 மில்லியன், கம்போடியாவில் 2 மில்லியன், கிழக்கு ஐரோப்பாவில் 1 மில்லியன், ஆபிரிக்க நாடுகளில் 1.7 மில்லியன், தென் அமெரிக்க நாடுகளில் 150,000, அப்கானிஸ்தானில் 1.5 மில்லியன், கிழக்கு தீமோரில் 200,000 என்று கொலைக் கணக்கு நீண்டு செல்கின்றது. பிரித்தானியா, பிரான்சு, அமெரிக்கா ஆகியவற்றின் படையினர் மற்றும் பொதுமக்களின் உயிரிழப்பு எண்ணிக்கை இதில் அடங்கவில்லை.



Scanned by CamScanner

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் இன அழிப்புக் குற்றச் செயல்களை விசாரணை செய்கின்றது. பொஸ்னியா போரின்போது 7,000 வரையிலான முஸ்லிம் பொது மக்களைக் கொன்றொழித்த குற்றச்சாட்டின் பேரில் சேர்பிய முன்னாள் தலைவர் சுலோபோதன் மிலோசோவிச் இப்போது (2002) குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளார்.

## அவுஸ்திரேலிய பழங்குடியினரின் துயர் பற்றிய புதிய தகவல்கள்

## NEW LIGHT ON THE SORROWS OF AUSTRALIA'S ABORIGINES

பரிதாபத்திற்குரிய இந்த அப்பாவி மக்கள் மீது அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் சில பாரதூரமான ஆராய்ச்சிகள் செய்ததற்கான சான்றுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. கறுப்பு நிறத்தவர்களான இந்த மக்கள் வெள்ளை நிறத்தவர்களின் மூதாதையர் என்ற தவறான கருத்தின் அடிப்படையில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இவர்கள் "புராதனகால கோக்கேசியன் இனத்தவர்கள் அல்லது கறுப்பு நிற கோக்கேசியர்கள்" என்று 1920,1930 களில் அவுஸ்திரேலிய விஞ்ஞானிகளால் நம்பப்பட்டது.

அவுஸ்திரேலிய அரசின் "வெள்ளை அவுஸ்திரேலியா" (WHITE AUSTRALIA) குடியேற்றக் கொள்கையை நியாயப்படுத்துவதற்காக இந்த விஞ்ஞான நிலைப்பாடு எடுக்கப்பட்டது. 1910 தொடக்கம் 1970 வரை கறுப்பினச் சிறுவர் சிறுமிகளை அவர்களுடைய பெற்றாரிடமிருந்து பறித்தெடுத்து வெள்ளையர் குடும்பங்கள் மற்றும் பராமரிப்பு நிறுவனங்களில் ஒப்படைக்கும் அரசின் கொள்கைக்கு நியாயம் கற்பிப்பதற்காகவும் போலி விஞ்ஞானம் உதவிக்கு அழைக்கப்பட்டது.

அறுபது வருடங்களாக அவுஸ்திரேலிய அரசு நடத்திய சிறுவர் பறிமுதல் கொள்கையை நியாயப்படுத்த கிறிஸ்தவ மதமும் உதவி வழங்கியது. கறுப்பர்களாக மாறிவிட்ட பூர்வீக வெள்ளையர்களை மீண்டும் வெள்ளையர்களாக மாற்றி நாகரீகத்தின் எல்லைக்குள் கொண்டுவருவதை மதக்கடமையாக சில பிரபல மதகுருமார் எழுதியும் பேசியும் வந்தனர். அவுஸ்திரேலியக் கண்டம் முழுவதும் சுற்றித்திரிந்த அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சிகள் பற்றிய விவரங்களும் வெளிவந்துள்ளன.

கறுப்பர்களின் உயரம், பருமன் பற்றிய அளவீடுகள் முதற்கண் செய்யப்பட்டன. அதன்பின் குருதிப் பரிசோதனை, இதயத்துடிப்பு, சுவாச ஓட்டம், உடல் வெப்பம், சம்பந்தமான ஆய்வுகள் நடத்தப்பட்டன. இறுதிக் கட்டமாக அவர்களுடைய உடலின் வலியைத் தாங்கும் ஆற்றல் பரிசோதிக்கப்பட்டது. குளிர் மற்றும் வெப்ப ஏற்றத் தாழ்வுகளை அவர்களுடைய உடல் எப்படிச் சமாளிக்கின்றது என்பது பற்றிய ஆராய்ச்சி நடத்தப்பட்டது. உடல் வலியைத் தாங்கும் ஆற்றல் பற்றிய ஆராய்ச்சிகளின்போது சில தெரிவுசெய்யப்பட்ட ஆண்களும் பெண்களும் ஆணி படுக்கைகள் மேல் கிடத்தப்பட்டனர். இன்னுமொருவிதப் பரிசோதனையின்போது அவர்களுடைய செவி மடல் துளையிடப்பட்டது.



Scanned by CamScanner

குருதிப் பரிசோதனைகளை அவர்கள் தொடர்ச்சியாகச் செய்ததற்கு ஒரு முக்கிய காரணமுண்டு. அக்காலப் பகுதியில், குருதி ரகம்தான் இன அடையாளத்தைக் குறிக்கும் முக்கிய தரவாக ஐரோப்பிய விஞ்ஞானிகள் கருதினர். பெரும்பாலான ஐரோப்பியர்கள் A ரகக் குருதி உடையவர்களாகவும், ஆபிரிக்க–ஆசிய மக்களிற் பெரும்பாலானோர் B ரகக் குருதி உள்ளவர்களாகவும் காணப்பட்டனர். அவுஸ்திரேலியப் பழங்குடியினரின் குருதி O அல்லது A ரகங்களைச் சேர்ந்ததாக ஆய்வுமூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இது விஞ்ஞானிகளுக்கு மிகவும் உற்சாகம் அளித்தது. இவர்களை வெள்ளை நிறத்தவர்களாக எளிதில் மாற்றமுடியும் என்ற நம்பிக்கை தோன்றியது.

ஆராய்ச்சிகளுக்கு உதவும் கறுப்பினத்தவர்களுக்கு இனிப்பு வகைகள், மதுபானம், சிகரற் போன்றவை இலஞ்சமாக வழங்கப்பட்டன. ஆராய்ச்சிகள் ஒருபக்கம் நடந்து கொண்டிருக்கையில் அவுஸ்திரேலிய ஆளும்வர்க்கமும் இனவெறிபிடித்த குடியேற்றவாசிகளும் பெருமளவானோரைச் சுட்டுக்கொன்றனர். பொலிசார் ஒருபடி மேலேபோய் சிறிய குற்றங்களுக்காகக் கைது செய்வோரையும் தடுப்புக்காவலில் வைத்து படுகொலை செய்தனர். மதகுருமார் இதற்கெல்லாம் பின்னணி ஆதரவு கொடுத்தனர்.

வெள்ளையர்களோடு இந்த மக்களை இனக்கலப்பு செய்வது மூலம் அவர்களை வெள்ளை நிறத்தவர்களாக மாற்றலாம் என்று அவுஸ்திரேலிய விஞ்ஞானி நோர்மன் ரின்டேல் (NORMAN TINDALE) நம்பினார். சில காலத்தின்பின் அவர் தனது கருத்துக்களை மாற்றிக்கொண்டார். 1970 களின் பின் விஞ்ஞான ஆராய்ச்சிகளும் சிறுவர்களை பறித்தெடுக்கும் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டன. அதன்பின் கறுப்பர்களுக்காகக் குரல்கொடுப்பவராக நோர்மன் ரின்டேல் மாறினார்.

பழங்குடியினருக்கு ஏதோவொரு வகை சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு அரசு மன்னிப்புக் கோரவேண்டும் என்று அவர் பிரசாரம் செய்து வருகிறார். அவருடைய குரலுக்கு ஒருவரும் மதிப்பளிப்பதில்லை. மாறாக ஏற்கனவே கறுப்பர்களுக்கு வழங்கப்பட்ட அற்பசொற்ப உரிமைகளையும் சலுகைகளையும் அவுஸ்திரேலிய அரசுகளும் நீதிமன்றங்களும் அண்மைக் காலமாக மீளப்பெறுவதில் ஈடுபடுகின்றன.

**காணாமற்போன தலைமுறை சம்பந்தமான தரவுகள்:**

**1910–1937:** வெள்ளையர்களுடன் இனக்கலப்பு செய்தபின் பிறந்த கறுப்பினத்தவர்களின் கலப்பினச் சிறுவர்களை பிரித்தெடுத்து வெள்ளையர்களிடம் ஒப்படைக்கும் கொள்கை ஆரம்பம்.

**1940:** எல்லாவகை கறுப்பினச் சிறுவர்களும் பறித்தெடுக்கப்படும் நடைமுறையின் தொடக்கம்.

**1950–1960:** மிகவும் தீவிரமாக பறித்தெடுக்கும் நடைமுறை அமுலாக்கம்.



Scanned by CamScanner

**1967:** பறித்தெடுக்கும் கொள்கையில் தளர்வு. இனத் தனித்துவத்தை ஏற்கவேண்டும், அவர்கள் தம்வழியில் அவுஸ்திரேலியர்களாக வாழ விடவேண்டும் என்ற அபிப்பிராயம் மேலோங்குகின்றது.

**1970:** பறித்தெடுக்கும் கொள்கை கிடப்பில் போடப்படுகின்றது.

**1972:** தொழிற்கட்சி அரசு கறுப்பர்களுக்குச் சாதகமான நிலைப்பாடு எடுக்கின்றது. சிறுவர்களைப் பறித்தெடுக்கும் நடைமுறையை நீதிமன்றம் மூலம் விசாரணை செய்வதற்கு கறுப்பர்களுக்கு நிதிஉதவி வழங்குகின்றது.

**1995:** முடிக்குரிய விசாரணைக் குழு நியமனம். (ROYAL COMMISSION)

**1997:** விசாரணை அறிக்கை வெளியிடப்படுகின்றது. பெற்றாரிடமிருந்து பிரிக்கப்பட்டோரை பெற்றோரிடம் ஒப்படைக்கும் திட்டத்தை உருவாக்கும்படி பரிந்துரை செய்கின்றது. சம்பந்தப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கும்படியும் அரசு பகிரங்க மன்னிப்பு கோரவேண்டுமென்றும் ஆணையிடுகின்றது.

**2002:** இன்றுவரை ஒரு பரிந்துரையாவது நிறைவேற்றப்படவில்லை. பழங்குடியினருக்கு எதிரான அவுஸ்திரேலிய அரசின் போக்கு தீவிரமடைகின்றது.

அவுஸ்திரேலிய பழங்குடியினர்மீது நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் உண்மை நோக்கத்தையும் விவரங்களையும் டாக்டர் வார்விக் அன்டோர்சன் என்ற மருத்துவர் தனது ஆய்வுநூல் மூலம் விளக்கியுள்ளார். THE CULTIVATION OF WHITENESS, SCIENCE, HEALTH AND RACIAL DESTINY IN AUSTRALIA BY DR.WARWICK ANDERSON இவர் அவுஸ்திரேலியாவில் பிறந்தவர், தற்சமயம் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். யூதர்கள்மீது ஜேர்மனியர்களும் சீனர்கள்மீது ஜப்பானியர்களும் அவுஸ்திரேலியர்கள் செய்த ஆராய்ச்சிகளுக்கு நிகரானவற்றையும் அதற்கும் மோசமானவற்றையும் செய்துள்ளனர். யாவும் இனஅழிப்பு நோக்குடையவை.

# மனித உரிமைகள்
## HUMAN RIGHTS

உலக நாடுகள் யாவற்றிலும் குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைகளின் தன்மை நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்தபோதிலும் குடிமக்கள் அனைவரையும் சரிசமனாக நடத்தவேண்டும் என்று பொதுவாக வலியுறுத்தப்படுகின்றது. தனி மனிதனின் உயிர், உடல், பொருள் என்பனவற்றைப் பாதுகாக்கவேண்டும் என்பது மனித உரிமைகளின் அடிப்படைக் கோட்பாடாகும்.

மனித உரிமைகள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் அமைகின்றன:

1. சமத்துவ உரிமை - RIGHT OF EQUALITY.
2. சுதந்திர உரிமை - RIGHT OF FREEDOM.
3. மத உரிமை - RIGHT TO RELIGION.
4. கல்வி மற்றும் பண்பாட்டுரிமை - EDUCATIONAL AND CULTURAL FREEDOM.



Scanned by CamScanner

5. சொத்துரிமை - RIGHT TO OWN PROPERTY

6. சாசன நிவாரணத்தின் மூலம் உரிமைகளைப் பாதுகாக்கும் உரிமை - RIGHT TO CONSTITUTIONAL REMEDIES.

ஐநா சாசனத்தின் முதலாம் வாசகம் யாவர்க்கும் இன, பால், மொழி அல்லது மத வித்தியாசமின்றி, மனித உரிமைகளும் அடிப்படை விடுதலையும் இருப்பதை உறுதிப்படுத்துகின்றது. இவற்றை ஊக்கப்படுத்தவும் அவற்றிற்கு மதிப்பளிக்கவும் சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுவதற்கு அது வழிகோலுகின்றது.

1948 டிசம்பர் 10ஆம் திகதி ஐநா பொதுச்சபை மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது - UNIVERSAL DECLARATION OF HUMAN RIGHTS (UDHR) - இதன்கீழ் மனித வரலாற்றில் முதன்முறையாக மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், பின்பற்றவும் சர்வதேச சமுதாயம் பொறுப்பேற்றுக் கொண்டது. அவ்வாறு பொறுப்பேற்பது ஒரு நிரந்தரக் கடப்பாடு என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்கூறிய பிரகடனம் குடிசார், அரசியல் உரிமைகள் : பொருளாதார, சமூக பண்பாட்டு உரிமைகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய முப்பது சரத்துக்களைக் கொண்டது. 1,2 ஆம் சரத்துக்கள் பொது வாசகங்களாக அமைகின்றன. மனிதர்கள் யாவரும் விடுதலையுடன் பிறந்தவர்கள் என்றும், மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள் என்றும் அது கூறுகின்றது. இப்பிரகடனத்தில் சொல்லப்பட்ட உரிமைகள், விடுதலைகள் யாவற்றிற்கும் இனம், நிறம், பால் மொழி, மதம், அரசியல் அல்லது வேறுகருத்து, தேசிய அல்லது சமூகப் பிறப்பிடம், சொத்து, பிறப்பு அல்லது வேறு மதிப்புநிலை போன்ற எத்தகைய வித்தியாசமுமின்றி உருத்துடையவராவர் என்று கூறுகின்றது.

**3 - 21** வரையான வாசகங்களில் பின்வருவன அடங்கும்:

- மனித உயிர், விடுதலை, பாதுகாப்பு ஆகியவற்றிற்கு உரிமை;
- அடிமை நிலை, அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து விடுதலை;
- சித்திரவதையிலிருந்து அல்லது கொடிய மனிதத் தன்மையற்ற அல்லது இழிவுபடுத்தும் முறையில் நடத்துவதிலிருந்து அல்லது தண்டனையிலிருந்து விடுதலை;
- சட்டத்தின் முன் நிறுத்தப்படும் ஒருவர் நிரபராதி என்று வாதிடும் உரிமை;
- சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுதல்;
- பயன்தரத்தக்க நீதிமுறைப் பரிகாரம் தேடும் உரிமை;
- தன்னிச்சையாகச் சிறைப்பிடித்தல், மறித்துவைத்தல், அல்லது நாடுகடத்தல் ஆகியவற்றிலிருந்து விடுதலை;



Scanned by CamScanner

- சுதந்திரமானதும் நடுநிலையானதுமான முறைப்படி நிறுவப்பட்ட நீதிமன்றினால் விசாரணை செய்யப்படுவதற்கு உரிமை;
- குற்றவாளியென நிரூபிக்கப்படும்வரை குற்றமற்றவரென ஏற்றுக்கொள்ளப்படும் உரிமை;
- அந்தரங்கமான விடயம், குடும்பம், இல்லம் அல்லது கடிதத் தொடர்பு ஆகியவற்றில் தலையிடப்படுவதில் இருந்து பாதுகாப்பு;
- பெயர்ந்து செல்லும் உரிமை;
- அடைக்கலம் புகும் உரிமை;
- ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்திருக்கும் உரிமை;
- திருமணம் செய்து ஒரு குடும்பத்தை உருவாக்கும் உரிமை;
- சொந்தமாகச் சொத்து வைத்திருக்கும் உரிமை;
- சிந்தனை, உளச்சான்று, மதம் ஆகியன பற்றிய விடுதலை;
- ஒரு கருத்தைக் கொண்டிருப்பதற்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் சுதந்திரம்;
- மற்றையோருடன் சேருவதற்கும், கூடுவதற்கும் உரிமை;
- அரசாங்கத்தில் பங்குபற்றுவதற்கும் அரசசேவையில் சேர்வதற்கும் உரிமை ஆகியன;

**22 – 27** வரையான வாசகங்களில் பின்வருவன அடங்கும்:

- பொருளாதார, சமூக பண்பாட்டு உரிமைகள்;
- சமூகப் பாதுகாப்பு உரிமை;
- வேலை செய்யும் உரிமை;
- இளைப்பாறும் மற்றும் ஓய்வெடுக்கும் உரிமை;
- சுகாதாரத்திற்கும் நல்வாழ்வுக்கும் போதிய வாழ்க்கைத் தரத்திற்கும் உரிமை;
- கல்விகற்கும் உரிமை;
- சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்வில் பங்குபற்றும் உரிமை; ஆகியன.

முடிவிலுள்ள 28 – 30 வரையான வாசகங்கள் இந்த உரிமைகளையும் விடுதலைகளையும் முழுமையாகப்பெற உதவக்கூடிய ஒரு சர்வதேச ஒழுங்குமுறைக்கு ஒவ்வொருவரும் உரித்துடையவராவர் என்பதை ஒத்துக்கொள்கின்றன. அத்துடன் ஒவ்வொருவருக்கும் சமுதாயத்துடனான கடமைகளையும் பொறுப்புக்களையும் இவை வலியுறுத்துகின்றன. சரத்து 29 இன் இரண்டாம் பந்தியில் "உரிமைகளையும் விடுதலைகளையும் அங்கீகரிக்கும் நோக்கிலும், தார்மீகம், பொது ஒழுங்கு, ஜனநாயக சமுதாயத்தின் பொது நன்மை



Scanned by CamScanner

ஆகியவற்றின் நோக்கிலும் செய்யப்பட்ட சட்டங்களால் இவை மட்டுப்படுத்தப்படுகின்றன" என்று கூறுகின்றது. சட்டபூர்வமான மட்டுப்படுத்தல்களை இது அனுமதிக்கின்றது. சமுதாய மற்றும் பொருளாதார மேம்பாடு கருதி இதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

மனித உரிமைகள் பற்றிய வேறு விடயங்களிலும் ஐநா கவனம் செலுத்துகின்றது. அடிமைநிலை, அடிமைத்தனம், பலாத்காரமாக வேலை செய்வித்தல் போன்ற நடத்தைகளும், அவற்றை நடத்தும் நிறுவனங்களை ஒழித்தல், இன அழிப்புக் குற்றம் செய்வதைத் தடுத்தல் அதற்குத் தண்டனை விதித்தல் என்பனவோடு நாடற்ற நிலையைக் குறைத்தல், மதப் பொறுமை இன்மையை அகற்றல், இன ஒதுக்கலுக்கு முற்றாக முடிவுகட்டல் ஆகியன உள்ளடங்கும்.

பிடித்த ஆள்புலங்களிலும், படைக்கருவி தாங்கிய சண்டைகளின் போதும் கவனிக்கப்படவேண்டிய மனித உரிமைகளிலும் ஐநா கவனம் செலுத்துகின்றது. 1993 இன் வியன்னா மனித உரிமை மாநாடு - VIENNA CONFERENCE ON HUMAN RIGHTS-1993 பெண் உரிமைகள், மனித உரிமைகளில் அடங்கும் என்று அறுதியிட்டுக் கூறுகின்றது.

## புவிசார் அரசியல்
## GEOPOLITICS

இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் எல்லாம் சௌக்கியமே என்று சொல்கிறார்கள். ஒரு நாட்டின் சிறப்பும் முக்கியத்துவமும் அதன் அமைவிடத்தில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அமைவிடம் அரசியலின் கருப்பொருள் என்றும் கூறுவார்கள். ஒரு நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையின் பிறப்பிடம் அந்த நாட்டின் அமைவிடம் என்றும் வாதிடுவோர் உள். இவை யாவும் உண்மை, என்றாலும் அமைவிடக் கோட்பாட்டை முற்றுமுழுதாக உணர்வதற்கு அந்த நாட்டின் பரப்பளவு, கடற் தொடர்பு, தட்பவெப்பம், தரை அமைப்பு, பொருளாதார பலம், மனித வளம், இயற்கை வளங்கள், நாட்டின் தலைமைத்துவம் போன்ற பலதரப்பட்ட விடயங்களையும் கணக்கில் எடுக்கவேண்டும்.

நிக்கொலஸ் ஜே.ஸ்பைக்மன் என்ற அமெரிக்கப் புவியியல் நிபுணரும் பாதுகாப்பு விவகாரக் கோட்பாட்டாளருமான இவர் தனது அமைதியின் புவியியல் என்ற நூலில் - THE GEOGRAPHY OF PEACE BY NICHOLAS J.SPYKMAN (1944) பின்வருமாறு கூறுகிறார். "யூரேசியாக் கண்டத்தின் மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, தெற்குஆசியா, தூரகிழக்குக் கரையோரங்கள் அமெரிக்காவின் பாதுகாப்பிற்குத் திறவு கோல்களாகும்"

இவருக்கு முன் சேர் ஹல்போட் மெக்கின்டர் என்ற பிரிட்டிஷ் புவியியலாளர் - SIR HALFORD MACKINDER - உலகின் இருதயம் மத்திய ஆசியா என்று கூறினார். இந்த இருதயம் இருக்குமிடம் யூரேசியா கண்டத்தின் நடுப்பகுதியில் என்றும் யூரேசியா கண்டத்தை (ஐரோப்பா+ஆசியா) அவர் 'உலகின் தீவு' என்றும் வர்ணித்தார். - "THE ISLAND OF THE WORLD"

இருதயத்தை எவன் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறானோ அவன் முழு உலகையும் ஆட்சி செய்கிறான் என்றார் மெக்கின்டர். ஸ்பைக்மன் மெக்கின்டரின் வழிவந்தவர் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். புவியியல் காரணிகள் வெளிவிவகாரங்களை உருவாக்குகின்றன என்பது ஸ்பைக்மனின் அசைக்க முடியாத நம்பிக்கை. தொடர்ச்சியான ஐரோப்பிய ஆசியத் தரைப்பரப்பை யூரேசியா என்று அழைப்பது புவியியலாளர்களின் வழமை.

புவிசார் அரசியலை கடற்பலம் தீர்மானிக்கின்றது என்பது அமெரிக்க கடற்படை அட்மிரல் அல்பிறெட் தாயர் மாகன் கோட்பாடு. –US ADMIRAL ALFRED THAYER MAHAN 1840-1914. உலகின் மாகடல்கள் கண்டங்களைப் பிரித்து வைக்கவில்லை, மாறாக ஒன்றிணைக்கின்றன என்பது மாகன் நிலைப்பாடு. கரிபியன் கடலிலும் பசுபிக் மாகடலிலும் அமெரிக்கக் கடற்படை ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பது மகான் கொள்கையின் சாரம்சம். தனது பலத்தை தூரக் கடலில் வெளிக்காட்டும் திறன் அமெரிக்காவுக்கு இருக்கவேண்டிய அவசியத்தையும் அவர் இடைவிடாது வலியுறுத்தினார்.

ஆசியாவின் புவிசார் அரசியல் பற்றிய நிபுணரான அலெச்சான்திரோ குரொசாட்டோ - ALEXANDRO GROSSATO பின்வரும் ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளார்: இப்புவியின் இருதயம் யூரேசியா. எவன் இதைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருகிறானோ அவன் முழு உலகையும் ஆட்சி செய்கிறான். உலகின் மொத்த மக்கள் தொகையில் 75% வீதமானோர் யூரேசியாவில் வாழ்கின்றனர். உலகின் மொத்த வருவாயில் 69% வீதம் யூரேசியாவில் பெறப்படுகின்றது. உலகின் மொத்த எரிபொருள் வளத்தில் 75% வீதம் யூரேசியாக் கண்டத்தில் செறிந்துள்ளது.

வளைகுடாப் போர் முடிந்த கையோடு 'பாதுகாப்பு கொள்கை வழிகாட்டல்கள் 1992 – 1994' - DEFENCE POLICY GUIDELINES 1992 – 1994 – என்ற ஆவணத்தைப் பென்ரகன் தயாரித்து.

இதில் மூன்று முக்கிய பாதுகாப்பு விவகாரங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன:

1. அமெரிக்காவின் முக்கிய தேவைகளுக்கு உதவும் வளங்களைப் பிறிதோர் நாடு கைப்பற்றுவதை அனுமதிக்கக்கூடாது.

2. அமெரிக்கத் தலைமைத்துவத்தை வீழ்த்த முனையும் எந்தவொரு நாட்டையும் விட்டுவைக்ககூடாது. இப்போதிருக்கும் அரசியல் மற்றும் பொருளாதார ஒழுங்கில் மாற்றம் ஏற்படுவதைத் தடுக்கவேண்டும்.

3. அனைத்துலக மட்டத்தில் அமெரிக்காவுக்குப் போட்டியாக யாதொரு நாட்டையும் வளரவிடக்கூடாது.



Scanned by CamScanner

அதிபர் ஜிம்மி காட்டரின் பாதுகாப்பு ஆலோசகராகப் பதவிவகித்த சிபீக்நியூ பிரேசின்ஸ்கி - ZBIGNIEW BREZINSKI - எழுதிய பெரிய சதுரங்க விளையாட்டு - THE GREAT CHESS GAME - என்ற பாதுகாப்பு சம்பந்தமான ஆய்வு நூலில் உலக ஆதிக்கம் யூரேசியா கண்டத்தை அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதில் தங்கியிருப்பதாகக் கூறுகின்றார். அப்கானிஸ்தான் ஒரு மத்திய ஆசியநாடு. அதன் எல்லைகளில் ருஷ்யா, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் சந்திக்கின்றன. கஸ்பியன் கடலோரத்தில் ஆரம்பிக்கும் எண்ணை நதி மத்திய கிழக்கில் தேங்கியுள்ளது.

அமெரிக்கப் படைகள் இப்போது உஸ்பெக்கிஸ்தான், தஜிக்ஸ்தான், கிரிகிஸ்தான், கசக்ஸ்தான் விமான தளங்களில் காலூன்றியுள்ளன. இது சீனா, இந்தியா, ருஷ்யா ஆகியவற்றை கண்காணிப்பதற்கும் தேவைப்பட்டால் சுற்றி வளைப்பதற்கும் வசதிசெய்யும். நிரந்தரமாக அமெரிக்கா மத்திய ஆசியாவில் காலூன்றி விட்டதாகக் கூறுவதில் தவறில்லை. தரை, கடல், விண்வெளி ஆதிக்கம் அமெரிக்காவின் பிடியில் வந்துள்ளதை மறுப்பதற்கில்லை. தெற்கு ஆசியாவையும், இந்து மாகடலையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நோக்கில் அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் இப்போது செயற்படுகின்றனர்.

## புவிசார் அரசியல், இந்தியா, சீனா
## GEOPOLITICS, INDIA, CHINA

அனைத்துலகத் தலைமைத்துவத்திற்கான அணிவகுப்புக்களை அமெரிக்கா செய்யும் அதேவேளையில் சீனாவும் இந்தியாவும் ஆசியக் கண்டத் தலைமைத்துவத்திற்காக கடும்போட்டியில் இறங்கியுள்ளன. அத்திலாந்திக் மற்றும் பசுபிக்மாகடற் பிராந்திய வல்லரசாகத் தன்னை அமெரிக்கா பார்க்கின்றதோடு இந்திய மாகடலிலும் கால்பதிக்கும் நோக்குடன் செயற்படுகின்றது. தூரகிழக்கு ஆசியா மற்றும் தெற்கு ஆசியாவின் தரை மற்றும் கடலில் பிரசன்னமாக இருக்கவேண்டும் என்ற அபிலாசை அமெரிக்காவுக்கு அண்மைக்காலமாக உண்டு. இதனால் நிலைமை மேலும் சிக்கல் அடைந்துள்ளது. அதே சமயத்தில் இப்போதைய ருஷ்யாவின் மூன்றில் இரண்டு தரைப்பகுதி ஆசியா கண்டத்தினுள் காணப்படுகின்றது. இந்தியா, சீனா, ருஷ்யா ஆகிய மூன்று நாடுகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அமெரிக்காவின் நீண்டதூர இலக்காகும்.

உலகின் மிகவும் சக்திவாய்ந்த கடற்படையை உருவாக்கும் தீர்மானத்தை சீனாவின் மத்திய ஆணையம் - CHINESE CENTRAL COMMISSION - 1992 இல் எடுத்தது. விமானம் தாங்கிகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்றவற்றை இணைக்கவேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது. 1993 இல் இன்னுமோர் முக்கிய தீர்மானம் 'ஆழ்கடல் பாதுகாப்பு' - HIGH SEA DEFENCE - என்ற தலைப்பின்கீழ் நிறைவேறியது. இந்து மாகடல் இந்தியர்களின் கடல் என்பதை சீனா ஒருபோதும் இனிமேல் ஏற்றுக்கொள்ளாது என்ற கருத்து ஆழ்கடல் பாதுகாப்பு என்ற கோட்பாட்டின் சாரம்சம்.



Scanned by CamScanner

1996 இல் அமெரிக்க விமானம் தாங்கிகள் தாய்வான் நீரிணைக்குள் பிரவேசித்தபின் சீனா விழித்துக்கொண்டது. வெறும் தீர்மானங்களை நிறைவேற்றுவதோடு நில்லாது காரியத்தில் இறங்கவேண்டும் என்ற முனைப்பு தோன்றியது. ஒரு கடலாதிக்க சக்தியாக வரவேண்டுமாயின் மலாக்கா நீரிணைக்கு இருபுறமும் சீனா ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்ற நோக்குடன் திட்டம் வகுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஸ்ப்ிறாற்லி தீவுத் தொகுதி ஒன்றில் சீனா பாரிய கடற்படைத் தளமொன்றை நிறுவியது. இதனால் மலாக்கா நீரிணைக்கு கிழக்குப் புறமாக சீனா வலுவான தங்குமிடத்தைப் பெற்றது.

இரு கொக்கொஸ் தீவுகள், ஹன்கீ தீவு (COCOS ISLANDS, HANGGYI ISLAND) ஆகியவற்றில் சீனா பாரிய கடற்படைத் தளங்களை அமைத்து வருகின்றது. கொக்கொஸ் தீவுகளும், ஹ்ன்கீ தீவும் பிறெப்பாரி கால்வாய்க்கு -PREPARI CHANNEL- இருபுறமும் காணப்படுகின்றன. இந்தியாவுக்குச் சொந்தமான அந்தமான் தீவுகளின் வடக்கில் 15 கி.மீ தொலைவில் கொக்கொஸ் தீவுகள் அமைந்துள்ளன. 1994 தொடக்கம் இத்தீவுகள் பர்மாவினால் சீனாவுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மலாக்கா நீரிணையை அவதானிப்பதற்கும் இந்தியா மீது தீவிர கவனம் செலுத்துவதற்கும் கொக்கொஸ் தீவுகளில் சீனா அமைத்துள்ள கடற் கண்காணிப்பு மற்றும் இலத்திரனியல் புலனாய்வு நிலையங்கள் உதவுகின்றன. இத்தீவுகளில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தை சீனா ஆழமாக்கியுள்ளது. 4,200 தொன் எடையுள்ள நாசகாரிக் கப்பல் வந்துபோகக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஹன்கீ தீவில் சீனா அமைத்துள்ள பாரிய கடற்படைத் தளத்தினுள் விமானம் தாங்கிக் கப்பல் தரிக்கும் வசதி ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. சீனாவிடம் தற்சமயம் விமானம் தாங்கிக் கப்பல் கிடையாது. ஆனால் கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் பணிகள் முடக்கி விடப்பட்டுள்ளன. ஏவுகணைகள் பொருத்தப்பட்ட, அதாவது கண்டம்விட்டு கண்டம்பாயும் ஏவுகணைகள் பொருத்தப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்கள் தங்கிச் செல்வதற்கும் ஹன்கீ தீவில் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த ரக நீர்மூழ்கிக் கப்பல்கள் இப்போது சீனாவிடம் இல்லை.

திபெத்தின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான செங்டு இராணுவ டிவிசன் - CHENGDU MILITARY DIVISION - பர்மாவின் தரைப்பரப்பில் பல பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்துள்ளது. தென் சீனாவின் குன்மிங் நகரிலிருந்து பர்மாவின் துறைமுகங்கள் வரையிலான பெருந்தெருக்களையும் றயில் பாதைகளையும் அது செப்பனிட்டு மேம்படுத்தியுள்ளது. வட பர்மிய நகரான மன்டேலேயின் விமான தளம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. பர்மாவுக்கு வேகத்தாக்குதல் கடற்கலங் களையும், ஏவுகணைத் தொகுதிகளையும் சீனா வழங்கியுள்ளது. ஆனால் சீன அதிகாரிகளின் பொறுப்பில் மாத்திரம் அவை இயக்கப்படுகின்றன.



Scanned by CamScanner

மிகவும் சுருக்கமாகச் சொல்லப்போனால் பர்மாவின் இராணுவப் பொறுப்பும் அது சம்பந்தமான நிர்வாகமும் கட்டுமானமும் சீனாவின் கைகளுக்குச் சென்றுள்ளன. பர்மாவைச் சீன இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் காலனித்துவ நாடு என்று சில ஆய்வாளர்கள் வர்ணிக்கின்றனர். பர்மாவின் தென் - கிழக்கு தீவு செடெற்கி கியூன் - ZEDETKYI KYUN - மலாக்கா நீரிணைக்கு நேர் எதிராக இருக்கின்றது. இங்கும் சீனா பாரிய தளத்தை அமைத்துள்ளது. இந்து மாகடலில் சீனா நன்கு கால்பதித்துள்ளதை ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதன் எதிரொலியாக இந்தியா படுவேகமாக தனது கடற்பலத்தையும் இராணுவப் பலத்தையும் பெருக்கி வருகின்றது.

கலாசார ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் கிழக்கு ஆசியாவுக்கும் தெற்கு ஆசியாவுக்கும் இடையில் ஒரு வரம்புபோல் மியன்மார் எனப்படும் பர்மா இடம்பெறுகின்றது. 1885 தொடக்கம் 1930 வரை அது பிரிட்டிசாரினால் இந்தியாவுடன் இணைத்து ஆட்சி செய்யப்பட்டது. 1942 தொடக்கம் 1945 வரை பர்மா ஜப்பானிய இராணுவத்தால் ஆட்சி செய்யப்பட்டது. 1948 இல் பர்மா சுதந்திர நாடாகியது. 14 வருடங்களின்பின் பர்மிய இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. உலக விவகாரங்களில் கலக்காமல் பர்மா அன்றுதொட்டு தனித்து இயங்க ஆரம்பித்தது. இக்காலப்பகுதியில் பர்மா - சீனா உறவுகள் வலுப்பெற்றன. பர்மாவின் வர்த்தகப் பங்காளனாகவும், இராணுவ உபகரணங்களை வழங்கும் தனியொரு நாடாகவும் சீனா இடம்பெற்றது.

சீனாவுக்கும் பர்மாவுக்கும் இடையிலான எல்லைப்பகுதி 2,000 கி.மீ நீளம் வாய்ந்தது (1,242 மைல்கள்) ஹன்கீ தீவு மற்றும் கொக்கொஸ் தீவுகளில் சீனா கட்டிய கடற்தளங்கள் சீனக் கடற்படையின் தேவைகளைக் கருத்தில் கொண்டே நிர்மாணிக்கப்பட்டன. இந்தியாவின் இந்து சமுத்திரக் கடலாதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடனேயே இத்தளங்கள் அமைக்கப்பட்டன. இந்த நோக்குடன் மலாக்கா நீரிணையைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் எதிர்காலத் திட்டமும் சீனாவிடம் உண்டு.

உலகின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த கேந்திர நீரிணைகளில் மலாக்கா நீரிணை முதலிடம் வகிக்கின்றது. தூரகிழக்கு நாடுகளை நோக்கிச் செல்லும் கடற்கலங்கள் இதனூடாகப் பயணிக்கவேண்டும். ஜப்பான், சீனா போன்ற நாடுகளுக்குத் தேவையான எண்ணை மலாக்கா நீரிணை ஊடாக எடுத்துச் செல்லப்படுகின்றன. இப்பகுதியில் மிகப்பெரிய துறைமுகமாக இடம்பெறும் சிங்கப்பூர் தனது முக்கியதுவத்தை இழந்து பின்னிலைக்குத் தள்ளப்படும், அதாவது இப்பகுதி சீனாவின் கட்டுப்பாட்டில் வந்தபின்பு.

இந்தியாவின் ஒறிசா மாநிலக் கரையோரத்திலுள்ள பலசோர் (BALASORE) ஏவுகணைத் தளத்தை பெரிய கொக்கொஸ் தீவு வசதிகள் மூலம் சீனா கண்காணிக்கின்றது. மீன்பிடித் துறைமுகமாக இருந்த கொக்கொஸ் தீவுகள் மற்றும் ஹன்கீ, துறைமுகங்களை தனது எதிர்காலத் திட்டங்களுக்கு அமைவாகச் சீனா உலக தரத்திற்கு உயர்த்தியுள்ளது.



Scanned by CamScanner

பர்மாவின் வடமேற்கு எல்லையில் வங்காள தேசமும் இந்தியாவும் இடம்பெறுகின்றன. இந்தியாவின் திரிபுரா, மணிப்பூர், மிசோராம், நாகலாந்து மாநிலங்களில் அமைதியின்மை நிலவுகின்றது. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெடுங்கால எல்லைப் பிரச்சனை உண்டு. பூகோள வரைபடத்தைப் பார்ப்பீர்களானால் இந்தியா உரிமைகோரும் காஷ்மீரும் சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் திபெத்தும் ஒன்றுக்கொன்று குறுகிய இடைவெளியில் இருக்கின்றன.

தனது கட்டுப்பாட்டிலுள்ள அசாத் காஷ்மீரின் ஷாக்சாம் பள்ளத்தாக்கை (SHAKSAM VALLEY) 1965 இல் பாகிஸ்தான் சீனாவுக்கு வழங்கிவிட்டது. இதனுடைய பரப்பளவு 15,000 சதுர கி.மீ. இந்த வகையில் வழங்குவதற்கு பாகிஸ்தானுக்கு உரிமை இல்லை. சற்றுக் கிழக்கில் அக்சாய் சின் (AKSAI CHIN) வடக்கு லடாக்கில் இருக்கின்றது. 1959 இல் சீனா இதைத் தனதாக்கியுள்ளது. இதனுடைய பரப்பளவு 25,000 சதுர கி.மீ. திபெத்தையும் சின்ஜியாங் பகுதியையும் தொடுக்கும் நெடுஞ்சாலை கட்டப்பட்டபின் அக்சாய் சின் நிரந்தரமாக சீனாவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

1912 ஆம் ஆண்டு தொடக்கம் சீனா – இந்தியா நாடுகளுக்கிடையில் ஒரு பாரிய எல்லைப்பிரச்சனை இருந்துவருகின்றது. 1914 இல் சீனப் பேரரசு நலிவுற்றிருந்தபோது இந்தியாவின் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் 'மெக் மாகொன் லைன்' (MC MAHON LINE) என்ற எல்லைக்கோடு சம்பந்தமான உடன்படிக்கையைத் திபெத்தோடு செய்தனர். பூட்டானில் தொடங்கி பர்மாவரை இந்த எல்லைக்கோடு 1,360 கி.மீ தூரம்வரை செல்கின்றது. இவ்வெல்லைக் கோட்டின் தெற்கில், இப்போது இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் தனக்குரிய நிலம் இருப்பதாகச் சீனா உரிமை கோருகின்றது.

1996 இல் உருவாக்கப்பட்ட அருணாசலப் பிரதேசத்தின் பெரும்பகுதி சீனா கோரும் நிலப்பரப்புக்குள் அடங்குகின்றது. மெக் மாகொன் எல்லைக் கோட்டை ஒரு நிரந்தர சர்வதேச ஒழுங்காக ஏற்க மறுக்கும் சீனா அதை கைவிடும்படி இந்தியாவை வற்புறுத்துகின்றது. அத்தோடு திபெத்து மீதான தனது இறைமை ஆதிக்கத்தை வெளிப்படையாக அங்கீகரிக்கும்படியும் சீனா கோருகின்றது.

சீனாவின் உரிமைக் கோரிக்கைகள் அவ்வளவோடு நிற்கவில்லை. கரக்கோரம் கணவாய்ப் பகுதியில் (KARAKORUM PASS) தனக்குச் சேரவேண்டிய 10,000 சதுர கி.மீ பரப்பைத் தரும்படி அது வலியுறுத்துகின்றது. அத்தோடு தான் கைப்பற்றிய பகுதிகளை அங்கீகரிக்கும்படி அது கோருகின்றது. மேலும் அருணாசலப் பிரதேசம் தனக்குச் சொந்தம் என்றும் சீனா கூறுகின்றது. இந்தியாவின் ஆளுகைக்கு உட்பட்ட சிக்கிம் (SIKKIM) பகுதியை இந்தியாவுக்குச் சொந்தம் என்று ஏற்க சீனா மறுக்கின்றது.



Scanned by CamScanner

பாகிஸ்தானின் தென்மேற்கு மக்ரன் (MAKRAN) கரையோரத்தின் குவதர் (GWADAR) மீன்பிடித் துறைமுகத்தை பாரிய கடற்படைத் தளமாக கட்டியெழுப்பும் பணியைச் சீனா ஆரம்பித்துள்ளது. ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான வேலைத்திட்ட ஒப்பந்தம் சென்ற வருடம் (2001) கைச்சாத்தாகியுள்ளது. குவதர் ஆழ்கடற் துறைமுகப் பணிக்கான செலவில் 80% வீதத்தை சீனாவும் மிகுதியைப் பாகிஸ்தானும் செலவிட ஒத்துக்கொண்டுள்ளன. குவதர் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கின்றது.

மத்தியகிழக்கின் கிழக்கு வாசல் எனப்படும் ஹோர்முஸ் நீரிணை (STRAIT OF HORMUZ) குவதரில் இருந்து 400 கி.மீ தொலைவில் காணப்படுகின்றது. இந்து சமுத்திரத்தின் மேற்கையும் அரேபியன் கடல் முழுவதையும் குவதர் தளத்தில் இருந்து கண்காணிக்கலாம். பெரிய கொக்கொஸ் தீவிலுள்ள ஒழுங்குகள் இங்கும் அமைக்கப்படும் என்பது உறுதி. அரேபியன் கடலில் நிரந்தரமாகக் கால்பதிக்கும் வாய்ப்பை குவதர் சீனாவுக்கு வழங்குகின்றது. இந்தியாவின் கவலைகள் இப்போது பன்மடங்காகியுள்ளன. பர்மாவின் கரையோரத்தில் சீனா நிறுவிய பல்வேறு கடற்தளங்களுக்கு ஒப்பானவை பாகிஸ்தானின் கரையோரத்திலும் நிறுவும் பணி பூர்த்தியாகும்போது இந்தியாவின் கடலாதிக்கம் கேள்விக்குரியதாகும்.

## சீனாவின் விரிவடையும் கடலாதிக்கம்
## EXPANDING CHINESE NAVAL PRESENCE

சீனக் கடலாதிக்க விரிவு இரு நோக்குகளைக் கொண்டது. முதலாவது ஒரு வளர்ந்துவரும் வல்லரசின் வலு வெளிக்காட்டலாக அது அமையும். இரண்டாவதாக சீனாவின் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு அது உறுதுணையாக நிற்கும். உதாரணத்திற்கு இதன்மேல் கூறப்பட்ட குவதர் கடற்தளம் ஐரோப்பாவுக்கு சீனா கடல்மூலம் அனுப்பும் ஏற்றுமதிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதோடு 'வைத்து எடுத்துச்' செல்லும் மையமாகவும் அமையும். சீனா இறக்குமதி செய்யும் மத்திய கிழக்கின் எண்ணைப் பாதையில் குவதர் இருப்பது கண்கூடு. மத்திய ஆசியாவில் காலூன்றிய அமெரிக்கா சீனாவைச் சுற்றிவளைக்க எண்ணுகின்றது. இதை உடைப்பதற்கும் பர்மா, பாகிஸ்தான் கடற்தளங்கள் உதவுகின்றன.

சீனாவின் தனியார்துறையினர் உலகின் பல பாகங்களில் துறைமுகச் சேவை வழங்கும் முதலீடுகளைச் செய்துள்ளனர். ஹச்சின்சன் போட் ஹோல்டிங்ஸ் (HUTCHINSON PORT HOLDINGS) என்ற நிறுவனத்திற்குச் சொந்தக்காரரான பெரும் தனவந்தர் லீ காஷிங் (LI KASHING) வெளிநாட்டுத் துறைமுகங்களில் ஒரு பில்லியன் டாலருக்கும் கூடுதலான தொகையை முதலீடு செய்துள்ளார். மெக்சிக்கோ, ஆர்கென்றீனா, சவுதி அரேபியா, பாகிஸ்தான், தன்சானியா, தாய்லாந்து ஆகிய நாட்டுத் துறைமுகங்களில் கொள்கலன் சேவை (CONTAINER SERVICE) வழங்கும் ஏகபோக உரிமையை 600 மில்லியன் டாலர் செலவில் தனது நிறுவனத்திற்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்.



Scanned by CamScanner

பனாமா கால்வாய் அமெரிக்காவின் பிடியிலிருந்து விலகியபின் தோன்றிய வெற்றிடத்தை லீ காஷிங் நிரப்பியுள்ளார். பனாமா கால்வாயின் இரு முனைகளிலுள்ள கொள்கலன் சேவை வழங்கும் மையங்களை அவர் ஐம்பது வருடக் குத்தகைக்கு 1997 ஆம் வருடம் பெற்றுள்ளார். அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது சீனாவின் கடலாதிக்கம் ஏறத்தாள இருபத்தைந்து வருடம் பின்தங்கி நிற்கின்றது. ஆனால் இந்தியாவுடன் ஒப்பிடும்போது சீனா வெகுதூரம் முன்னோக்கிப் பாய்ந்துவிட்டது எனலாம்.

## திருகோணமலை
## TRINCOMALEE

1987 இல் செய்யப்பட்ட இந்தோ - சிறிலங்கா ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்ட கடிதங்களில் பின்வரும் முக்கிய வாசகம் காணப்படுகின்றது: இந்தியாவின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் விதத்தில் திருகோணமலை அல்லது சிறிலங்காவின் பிறிதோர் துறைமுகம் பிற நாட்டின் இராணுவப் பாவனைக்குக் கொடுபடமாட்டாது.

அதே கடிதங்களில் திருகோணமலை சம்பந்தமான இன்னுமோர் வாசகம் காணப்படுகின்றது: திருகோணமலை எண்ணைக் குதங்களைத் திருத்தி இயக்கும் பணி இந்தியா - சிறிலங்கா ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக மேற்கொள்ளப்படும்.

பனிப்போர் காலத்தில் அனைத்துலக மற்றும் பிராந்திய மட்டத்தில் திருகோணமலை அதியுயர் முக்கியத்துவம் பெற்றது. "எவன் தனது கட்டுப்பாட்டில் திருகோணமலையை வைத்திருக்கிறானோ அவன் இந்து மாகடலைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான்" என்பது இது சம்பந்தமான கோட்பாடு. பனிப்போர் முடிவிற்குப்பின் சிலகாலம் திருகோணமலை பற்றிய கரிசனை குறைந்தது உண்மைதான். ஆனால் மீண்டும் தெற்கு ஆசியச் சதுரங்க மேடையில் திருகோணமலை தனது ஆதிக்கத்தைச் செலுத்தும் நிலைக்கு வந்துள்ளது.

1987 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தில் திருகோணமலை பற்றிய சிந்தனைதான் இந்தியர் தரப்பில் மேலோங்கி நின்றது. மற்றதெல்லாம் இரண்டாம் பட்சமே. திருகோணமலை சம்பந்தமான மேம்பாட்டுத் திட்டங்களை இந்தியத் தரப்பினர் அப்போது உருவாக்கினர். சீனாவுடன் இணையும் ஹொங்கொங் தீவுகளில் இருந்து வெளியேறும் இந்திய முதலீட்டாளர்கள் திருகோணமலையில் காலூன்றுவர் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. வட - கிழக்கின் தலைநகரமாக திருகோணமலை அனுமதிக்கப்படும் ஆனால் அது இந்தியாவின் கட்டுப்பாட்டில் இயங்கும் என்று திட்டமிடப்பட்டது.

சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினாலும் திருகோணமலை தனது முக்கியத்துவத்தை இழக்கமாட்டாது. கேந்திர மற்றும் இராணுவ முக்கியத்துவம் அதற்கு எப்போதும்போல் தொடர்ந்து இருக்கும். நவீன போர்முறைகளின் வருகையால் திருகோணமலை தரம்குறையும் வாய்ப்புக்கள் அரிது. இந்து



Scanned by CamScanner

மாகடலில் கால்பதிக்க விளையும் அமெரிக்கா திருகோணமலையில் நிரந்தர இருப்பிடம் பிடிக்க ஆவலாகவுள்ளது. "மத்திய கிழக்கிற்கும் தூர கிழக்கிற்கும் நடுப்பகுதியில் அமைந்துள்ள சிறிலங்காவில் கால்பதிப்பதை அமெரிக்கா தனது வெளிவிவகாரக் கொள்கை நோக்குகளில் ஒன்றாகக் கொண்டுள்ளது" என்று ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் அடிப்படைவாதிகள் மிகவும் குறைந்த நாடான சிறிலங்கா இந்தியாவைக் கண்காணிப்பதற்கும் வசதியளிக்கின்றது. போர்க் கப்பல்கள் தங்கிச் செல்வதற்கும், எண்ணை நிரப்புவதற்கும் திருகோணமலையின் ஆழமான இயற்கைத் துறைமுகம் இடம்தருகின்றது. சிறிலங்கா இனப்போர் தீர்க்கப்பட்டவுடன் அமெரிக்கா தனது நகர்வுகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு அரசியல் அவதானிகள் கணிப்பிடுகின்றனர். இன்னுமோர் சாரரின் கருத்துப்படி இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து திருகோணமலையைப் பயன்படுத்தும் வாய்ப்புக்கள் தென்படுகின்றன. இந்தியாவின் இந்து வலதுசாரி தேசிய அரசு அமெரிக்காவின் நெருங்கிய தோழன் என்று தன்னைக் காட்டுவதில் ஆர்வமாகவுள்ளது. திருகோணமலை சம்பந்தமான அமெரிக்கா, இந்தியா, சிறிலங்கா முக்கோண ஒழுங்கு பிறக்கலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

1987-90 காலப்பகுதியில் இந்தியா முன்னெடுத்த சிறிலங்கா சம்பந்தமான அரசியல், இராணுவ, இராசதந்திர முன்னெடுப்புக்கள் கடும் தோல்வி கண்டன. இதன்பின் சிறிதுகாலம் ஒதுங்கி இருந்த இந்தியா பொருளாதார ஒத்துழைப்பு வாயிலாக மீண்டும் நுழைந்துள்ளது. கொழும்பில் இந்தியா செய்துள்ள முதலீடுகள் மிகப்பெரியனவாக அமைகின்றன. இந்தியாவோடு பொருளாதார ரீதியாக இணைவதைவிட நலிவுற்ற இந்த நாட்டிற்கு மாற்றுவழி இல்லை.

திருகோணமலை எண்ணைத் தாங்கிகள் மீண்டும் பேரம் பேசும் கருவியாக மாறிவிட்டன. இரண்டாம் உலகப்போர் காலத் தாங்கிகளின் எண்ணிக்கை 99. இவற்றுள் 15 ஏற்கனவே இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியவை படிப்படியாகக் கையளிக்கப்படும். ஒவ்வொரு தாங்கியும் 12,250 கிலோ லீற்றர் கொள்திறன் கொண்டவை. இந்தியா-சிறிலங்கா பொருளாதார ஒத்துழைப்பின் முக்கிய சின்னமான உடன்படிக்கை இவ்வருட முற்பகுதியில் (2002) செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனமும் (CEYLON PETROLEUM CORPORATION) இந்தியன் ஓயில் கூட்டுத்தாபனமும் (INDIAN OIL CORPORATION) ஒன்றிணைந்து லங்கா இந்தியன் ஓயில் கோப்பரேஷன் (LANKA INDIAN OIL CORPORATION) என்ற கூட்டு நிறுவனத்தை உருவாக்கியுள்ளன. இது LIOC என்ற சுருக்குப் பெயரால் அழைக்கப்படும். புதிதாக முத்துறாஜவெல மற்றும் கட்டுநாயக்கா விமான நிலையங்களில் அமைக்கப்படும் நிரப்பு நிலையங்களையும் லங்கா இந்தியா ஓயில் கோப்பரேஷன்



Scanned by CamScanner

பொறுப்பேற்கும். திருகோணமலை எண்ணைக் குதங்கள் யாவும் இந்த அமைப்பால் திருத்தி இயக்கப்படும். இந்தோ-சிறிலங்கா ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்ட கடிதங்களில் எண்ணைக் குதம் சம்பந்தமாகக் கூறப்பட்ட விடயம் இப்போது நிறைவேறும் தறுவாயில் இருக்கின்றது.

இந்தியாவிலிருந்து சிறிலங்காவுக்கு எண்ணை கொண்டுவரும் பாரிய குழாய் இரு நாடுகளையும் தொடுக்கும் விதத்தில் அமைக்கப்படும் என்று இதன்மேல் கூறப்பட்ட உடன்படிக்கை கூறுகின்றது. பாலம் கட்ட முடியாவிட்டாலும் குழாயையாவது போடுவோம் என்று இரு நாடுகளும் தீர்மானித்துள்ளன. திருகோணமலைத் துறைமுகமும், சீனன்குடா எண்ணைக் குதமும் சிறிலங்கா அரசாங்கம் முன்னெடுக்கும் இராசதந்திரத்தின் இரு முக்கிய கூறுகளாகும். 1987 இல் இந்தியத் துருப்புக்கள் சிறிலங்காவுக்கு வந்தபோது புத்த குருமார் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனையிறவு வீழ்ச்சிக்குப்பின் புலிகள் யாழ்நகர் வாயிலில் நின்றபோது அதே புத்த குருமார் இந்திய உதவியை நாடினர். இந்தியத் தூதரகம் சென்ற குருமார் குழு 'திருகோணமலையைத் தருகிறோம், புலிகளை விரட்ட உதவுங்கள்' என்று கோரிக்கை விடுத்தனர்.

சிறிலங்கா, இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனங்களின் ஒன்றிணைவு புவிசார் அரசியலின் முக்கிய அம்சமாகும். உலகின் அரசியல் மற்றும் பொருளாதார நகர்வுகளை எண்ணை தீர்மானிக்கின்றது. அமெரிக்க வெளியுறவு கொள்கையின் மறுபெயர் எண்ணை என்றால் மிகையாகாது. சிறிலங்காவை இந்தியாவோடு இணைப்பதற்கு எண்ணை மிகவும் சிறந்த உபாயமாகும். எல்.ஐ.ஓ.சி என்ற சுருக்குப் பெயரால் வழங்கும் சிறிலங்கா, இந்திய கூட்டுத் தாபனத்தின் மொத்தப் பெறுமதி 100 மில்லியன் அமெரிக்க டாலர். இதில் மூன்றில் ஒரு பங்கை இலங்கை எண்ணைக் கூட்டுத்தாபனமும், அதேயளவை இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனமும் முதலீடு செய்கின்றன. மிகுதியை சிறிலங்கா அரசு முதலீடு செய்கின்றது.

எல்.ஐ.ஓ.சி சில்லறை விற்பனையையும் ஆரம்பிக்கவிருக்கின்றது. சிறிலங்காவில் 1,064 பெற்றோல் நிரப்பு நிலையங்களும், இந்தியாவில் 9,423 அதேரக நிலையங்களும் காணப்படுகின்றன. இவையாவும் எல்.ஐ.ஓ.சி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்றன. முதற்கட்ட நடவடிக்கையாக சிறிலங்காவில் உள்ள நூறு பெற்றோல் நிரப்பு நிலையங்கள் எல்.ஐ.ஓ.சி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும். கொழும்பு நகரில் இன்று 48 பெற்றோல் நிரப்பு நிலையங்கள் உள்ளன. இவற்றுள் பதின்மூன்றை எல்.ஐ.ஓ.சி முதற்கட்டமாகப் பொறுப்பேற்கும்.

ஆசியா பசுபிக் பிராந்தியத்தின் மிகப்பெரிய அரசுடமை நிறுவனமாக இந்தியன் ஓயில் கோப்பரேஷன் கணிப்பிடப்படுகின்றது. உலகின் மிகப்பெரிய 500 வர்த்தக நிறுவனங்களில் இதுவொன்றுதான் இந்தியாவைச் சேர்ந்தது. இந்தியாவில் நான்கு அரசுடமை எண்ணை நிறுவனங்கள் உள்ளன. இதில் இந்தியன் ஓயில் கோப்பரேஷன்தான் மிகப்பெரியது. இந்தியாவுக்கு வெளியே அது



Scanned by CamScanner

செய்யும் மிகப்பெரிய முதலீடு சிறிலங்காவில் செய்யப்படுகின்றது. சிறிலங்காவில் அது செய்யவிருக்கும் மொத்த முதலீடு 100 மில்லியன் அமெரிக்க டாலர்களைத் தாண்டுமென்று எல்ஐஓசி இன் முகாமைத்துவ இயக்குநர் (MANAGING DIRECTOR LIOC) மகாதேவன் நகுலேஸ்வரன் கூறுகிறார். இவர் ஒரு இந்தியர்.

மொறீசியஸ் தீவுகளில் ஏற்கனவே இந்தியன் ஓயில் கோப்பரேஷன் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டது. சிறிலங்காவுடன் ஒப்பிடும்போது அவை மிகச்சிறியன. தென்-கிழக்கு ஆசிய நாடுகளான தாய்லாந்து, மலேசியா, பிலிப்பீன்ஸ் ஆகியவற்றிலும் அது கால்பதிக்க இருக்கிறது. எண்ணை சம்பந்தமான மிகப்பெரிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (RESEARCH AND DEVELOPMENT) ஆய்வுகூடம் அதனிடம் உண்டு.

மதுரையில் தொடங்கி மன்னாரைத் தொடும் எண்ணைக் குழாய்க்கான கடனுதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது. எல்ஐஓசி யும் நிதி வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 6.500 கி.மீ நீளமான எண்ணைக் குழாய்கள் இந்திய மாநிலங்களை ஒன்றிணைக்கின்றன. 2000 கி.மீ நீளமான எண்ணைக் குழாய் குஜராத்தையும் மதுரையையும் தொடுக்கின்றது. மதுரை-மன்னார் குழாய் கடலடியில் புதைக்கப்படும். சிறிலங்கா முழுவதையும் குழாய் மூலம் இணைக்கும் திட்டம் வரையப்பட்டுள்ளது. இக்குழாய்கள் தரையின் மேற்பகுதியில் அமைக்கப்படும். மன்னாரையும் திருகோணமலை எண்ணைக் குதங்களையும் இணைக்கும் குழாயும், தெற்கை நோக்கிய குழாயும் இவற்றுள் முக்கிய மானவையாகக் கருதப்படுகின்றன. குழாய்களை கட்டிமுடிப்பதற்கு 80 மில்லியன் அமெரிக்க டாலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தனது மூக்குப் போனாலும் எதிரியின் சகுனம் பிசகவேண்டும் என்ற தீர்மானம் சிறிலங்கா அரசால் திருகோணமலை, சீனன்குடா சம்பந்தமாக எடுக்கப்படுகின்றது. இந்தியர்களை உள்நுழைய அனுமதித்தால் புலிகள் கட்டுப்பாட்டில் இருப்பார்கள் என்ற சிந்தனை மேலோங்கி நிற்கின்றது. இதைச் சிறிலங்கா அமைக்கும் 'பாதுகாப்பு வலை' என்று வர்ணிக்கலாம்.

திருகோணமலைத் துறைமுகமும் அதனை அண்டிய பகுதியும் தனது அரவணைப்பில் இருக்கவேண்டும் என்ற நோக்கில் இப்பகுதிகளில் முதலீடு செய்யும்படி இந்திய தனியார்துறைக்கு இந்தியா ஊக்குவிப்பு வழங்குகின்றது. வெங்கடேஷ் தொழிலகம் - VENKATESH INDUSTRIES - என்ற பாரிய இந்திய நிறுவனம் ரூபா 21 பில்லியன் செலவில் நிலக்கரியில் இருந்து கோக் (COKE) எனப்படும் உயர்வெப்ப எரிபொருள் தயாரிக்கும் தொழிற்சாலையை திருகோணமலையில் நிறுவுவதற்கு சிறிலங்காவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது (2002).

தனது சொந்தத் தேவைகளுக்காக ஒரு இறங்குதுறையை திருகோணமலைக் கடற்கரையில் இந்த நிறுவனம் அமைக்க இருக்கிறது. கடல் நீரில் இருந்து நன்னீர் தயாரிக்கும் தொழிற்சாலையையும், மின்சாரம் தயாரிக்கும் மின்சக்தி நிலையத்தையும் கட்டியெழுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறிலங்காவுக்கு 110 மெகாவாற்ஸ் மின்சாரத்தை வெங்கடேஷ் இன்டஸ்டிறிஸ்



Scanned by CamScanner

தொழிற்சாலை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. நாளொன்றுக்கு அது 2400 $M_3$ நன்னீரைத் தயாரிக்கும் என்றும், தனது தேவைகள் போக எஞ்சியதை திருகோணமலை மக்களுக்கு வழங்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்சாலை மற்றும் இருப்பிடங்கள் கட்டும் முதற்கட்டப் பணியின்போது 3000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்றும் தொழிற்சாலை இயங்கத் தொடங்கியபின் 300 பேருக்கு நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படுமென்றும் சுற்றறிக்கைகள் அறியத்தருகின்றன. உலோகத் தொழிலுக்குப் பயன்படும் கோக் எரிபொருள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நிலக்கரியை இறக்குவதற்கும் கோக் போன்ற தயாரிப்புக்களை ஏற்றுமதி செய்வதற்கும் பொருத்தமான இறங்குதுறை வசதிகளை இந்த நிறுவனம் பிரத்தியேகமாக அமைக்கவுள்ளது.

# சிறிலங்கா-அமெரிக்கா, கொள்வனவு மற்றும் பரஸ்பர சேவை ஒப்பந்தம்

## ACQUISITION AND CROSS-SERVICING AGREEMENT-ACSA

ஜூன் 2002 இல் அமெரிக்க அரசும் சிறிலங்கா அரசும் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இரு நாட்டு இராணுவத்தின் நெருக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி சிறிலங்காவின் கடற்கலங்கள் அமெரிக்கத் துறைமுகங்களில் தரித்து நிற்கும்போது அந்த நாட்டின் உள்நாட்டு விலையில் தேவையான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்கின்றது. அதேபோல் சிறிலங்கா துறைமுகங்களில் தரித்து நிற்கும் அமெரிக்கக் கடற்கலங்கள் சிறிலங்கா விலையில் தமது எரிபொருள் தேவைகளைக் கொள்வனவு செய்வதற்கும் இந்த ஒப்பந்தம் உதவுகின்றது.

இந்த அடிப்படையில் இராணுவத் தேவைகளுக்கான உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கும் இந்த ஒப்பந்தம் வகை செய்கின்றது. அதாவது அமெரிக்க உள்நாட்டு விலையில் சிறிலங்கா இராணுவமும் சிறிலங்கா உள்நாட்டு விலையில் அமெரிக்க இராணுவமும் தமக்கு வேண்டிய உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்யமுடியும்.

சிறிலங்காவில் நிரந்தரமாக இராணுவதளம் அமைக்கும் திட்டம் அமெரிக்காவிடம் உண்டு என்பது தெரிந்த விடயம். இதற்கான முதற்கட்ட இராசதந்திர நகர்வாக இந்த ஒப்பந்தம் நோக்கப்படுகின்றது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சில வாரங்களின்பின் அதுபற்றி சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவரிடம் விளக்கம் கோரப்பட்டது. இது தளம் அமைப்பதற்கு வகை செய்யும் ஒப்பந்தம் அல்லவென்று தூதுவர் ஆஷ்லி வில்ஸ் கூறினார். அமெரிக்கா இதுபோன்ற பரஸ்பர ஒப்பந்தங்களை உலகின் அறுபது நாடுகளுடன் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இராணுவத் தேவைகளைக் குறைந்த செலவில் பூர்த்தி செய்யும் ஒரு உபாயம்தான் இவ்வொப்பந்தம் என்றார் வில்ஸ். இல்லாததையும் பொல்லாததையும் கற்பனை செய்யாதீர்கள் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.



Scanned by CamScanner

# செலுத்தவேண்டிய கடன் தொகைக்குப் பதிலாக இயற்கை வளங்களை நிர்வகிக்கும் திட்டம்

## NATURAL RESOURCES IN LIEU OF LOAN REPAYMENT

அமெரிக்காவுக்குச் சிறிலங்கா செலுத்தவேண்டிய கடன்தொகைக்கு மாற்றீடாக சிறிலங்காவின் வளங்களை ஒப்படைக்கும் திட்டம்பற்றி உயர்மட்டப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. வெப்பமண்டல காடுகள் பாதுகாப்புச் சட்டம் (THE TROPICAL FORESTS CONSERVATION ACT) என்ற அமெரிக்கச் சட்டத்தின் கீழ் இதை நடைமுறைப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப் படுகின்றது. சிறிலங்காவிடமிருந்து கிடைக்கவேண்டிய கடன் தொகையின் ஒரு பகுதிக்காக சிறிலங்காவும் அமெரிக்காவும் இணைந்து இங்குள்ள காடுகளைப் பொது நிர்வாகத்தின்கீழ் கொண்டுவருவதற்கு இச்சட்டம் வகை செய்கின்றது. ஏற்கனவே வங்காள தேசம் செலுத்தவேண்டிய கடன் தொகையின் ஒரு பகுதிக்காக இந்தவகை ஒப்பந்தத்தை அந்த நாடும் அமெரிக்காவும் கைச்சாத்திட்டுள்ளன.

காடுகளின் பொது நிர்வாக அமைப்பில் அமெரிக்கத் தூதுரக அதிகாரிகள், சிறிலங்கா அரசின் அதிகாரிகள், சில குறிப்பிட்ட என்ஜிஓ தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள், இத்துறைசார் தனியார் அமைப்பினர் அங்கத்துவம் வகிப்பார்கள். இந்த நிர்வாகத்தின் மூலம் கிடைக்கும் இலாபம் கடன்தொகையைக் குறைக்க உதவும் என்பது திட்டத்தின் அடிப்படை நோக்கம். இது இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கத்தையும் உள்ளடக்குகின்றது என அமெரிக்கா தரப்பில் கூறப்படுகின்றது. ஆனால் இயற்கைச் சூழல் பாதுகாப்பில் அக்கறையுடையோரின் கருத்துப்படி, இயற்கை வளங்களைச் சூறையாடுவதே அமெரிக்காவின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டிய அழுத்தங்களை அமெரிக்கா கொடுக்கமாட்டாது என்ற உத்தரவாதத்தை அமெரிக்க தூதரகம் வழங்குகின்றது.

தென்மேற்கு ஈரவலயப் பிரதேசத்தில் அமைந்துள்ள சிங்கராஜவனப் பிரதேசம் 9,000 ஹெக்ரர் நிலப்பரப்பைக் கொண்டது. சிறிலங்காவின் ஒரேயொரு ஈரவலயக் கன்னிக்காடாக அது 1936 இல் பிரடகனப்படுத்தப்பட்டது. உலக மானுடத்தின் பொதுச் சொத்துப் பட்டியலில் அது 1988 இல் சேர்க்கப்பட்டது. 337 வரையான தாவரங்கள் இக்காட்டில் அடையாளங் காணப்பட்டுள்ளன. இவற்றுள் 192 தாவரங்கள் இப்பகுதியில் மாத்திரம் வளர்பவை. அதேபோன்ற 21 பிரத்தியேக பறவை இனங்களும் அடையாளங் காணப்பட்டுள்ளன. அரிய பூச்சி, தவளை, ஊர்ந்து செல்லும் உயிரினங்களும் இக்காட்டில் உள்ளன.

சிங்கராஜவனப் பிரதேசத்தில் வளரும் மூலிகைகளில் அமெரிக்க மருந்துத் தயாரிப்பாளர்கள் காட்டும் ஆர்வத்திற்கு அளவில்லை. அமெரிக்கா செயற்படுத்த விளையும் காட்டுப் பாதுகாப்புத் திட்டம் உள்நோக்கம் கொண்டதாக இருக்கலாம் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. சிறிலங்காவில் கால்பதிக்கும் பரந்த நோக்கின் ஒரு பகுதியாகவும் இது அமைகின்றது.



Scanned by CamScanner

பெரிய நாடுகளின் இழுவை ஈர்ப்புக்குள் சிறியநாடுகள் சிக்குவது புவிசார் அரசியலின் அடிப்படைக் கோட்பாடு. சிறிலங்கா என்ற சிறிய நாடு படிப்படியாக இந்தியாவின் இழுவைக்குள் செல்கின்றது. இதை அமெரிக்காவும் சீனாவும் அனுமதிக்குமா என்பதே முக்கிய கேள்வி. இந்திய மாகடலின் கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ள சிறிலங்காவின் எதிர்கால வரலாறு இந்த வினாவுக்கு விடையாக அமையும்.

## மேலாதிக்கம்
## HEGEMONY

ஒரு நாடு பிறிதோர் நாடு அல்லது பிராந்தியத்தின் மீது ஆதிக்கம் செலுத்துதல் ஹெஜிமொனி என்று அழைக்கப்படுகின்றது. இது காலனித்துவ ஆட்சியைக் குறிக்கவில்லை மாறாக ஆதிக்கம் செலுத்தப்படும் நாடு அல்லது பிராந்தியம் இறைமை, சுயாதீனம் போன்ற வெளித் தோற்றத்துடன் காணப்படும். ஆனால் அதனுடைய சுய இயக்கத்திறன் பாதிப்படையும். அந்த நாடு எடுக்கும் முக்கிய தீர்மானங்கள் பிறிதோர் நாட்டில் உருவாக்கப்படும். அந்த நாட்டின் தேசிய நலனுக்கு அமைவான கருமங்களை பாதிக்கப்பட்ட நாடு முன்னெடுக்கும்.

பரப்பளவில் கூடிய நாடுகளுக்கு அருகாமையிலுள்ள சிறிய நாடுகள் இவ்வாறான பாதிப்பிற்கு உட்படுகின்றன. பொருளாதார வலு மற்றும் இராணுவ பலம் நலிவுறும்போது நிலமை மோசமடைகின்றது. சர்வதேச சட்டத்தின் முன்னிலையில் இறைமை பெற்ற நாடுகள் யாவும் சமம் என்ற கோட்பாடு நிலவுகின்றது. ஆனால் நடைமுறையில் இது சாத்தியமற்றதாக இருக்கின்றது. பரப்பளவு, நிதிவலு, இராணுவபலம், இயற்கைவளங்கள், மக்கள்தொகை, அமைவிடம் போன்ற காரணங்கள் ஏற்றத் தாழ்வுகளுக்கு வழிவகுக்கின்றன.

தனது உள்நாட்டுப் பிரச்சனையை தீர்க்க இயலாமையால் அயல் நாடு அல்லது வெளி நாடொன்றின் உதவியை நாடும்போது மேலாதிக்க நிலை உருவாகின்றது. பலமிக்க நாடு பலமற்ற நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பு தோன்றுகின்றது. செலுத்தப்பட்ட ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளும்போது இறைமை கேள்விக்குறியாகின்றது. உலக நாடுகளிடம் கையேந்திக் கடன்வாங்கி காலம்போக்கும் நாடுகள் கடன்வழங்கும் நாடுகள் அல்லது அமைப்புக்களின் ஆதிக்கப்பிடிக்குள் அகப்படுகின்றன. கடன் வாங்கும் நாட்டின் இறைமை ஏட்டுச் சுரைக்காயாக மாறுகின்றது.

சிறிலங்கா விவகாரங்களில் தொடர்ச்சியாக ஆதிக்கம் செலுத்திவரும் அயல்நாடான இந்தியா தனது ஆதிக்கப் பிடியிலிருந்து இலங்கை நழுவக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கின்றது. அதே சமயத்தில் உதவிகள் வழங்குவது மூலம் இலங்கை மீது ஆதிக்கம் செலுத்தும் நோக்குடன், உலக மேலாதிக்கத்தை தனது குறிக்கோளாகக் கொண்டு அமெரிக்கா செயற்படுகின்றது. தனது பன்னெடுங்கால நட்புறவையும் சமயாசமய உதவிகளையும் மூலதனமாக்கிச் சீனாவும் தன்பங்கிற்கு ஆதிக்கம் செலுத்த விளைகின்றது.



Scanned by CamScanner

ஜூலை 27,1946 இல் கொழும்பின் அமெரிக்கத் தூதரகம் திறக்கப்பட்டது. அன்றுமுதல் அமெரிக்க ஆதிக்கம் வலுப்பெற்று வருகின்றது. 1950 இல் சிறிலங்கா சீனாவுக்கு முழு அளவு இராசதந்திர அங்கீகாரத்தை வழங்கியது. 1957 இல் இரு நாடுகளும் தமது தூதரகங்களை முறையே கொழும்பு, பைஜிங் ஆகிய நகரங்களில் திறந்தன. அமெரிக்காவின் அழுத்தங்களை மீறிச் சிறிலங்கா சீனாவுடன் இராசதந்திர உறவுகளை ஏற்படுத்தியது, ஆசிய வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாகும்.

## பிரிந்து போதல்
## SECESSION

ஒரு நாட்டின் பகுதி அல்லது பகுதிகள் பிரிந்துசென்று தனி நாடாகவோ, நாடுகளாகவோ இயங்குவதைப் பிரிந்துபோதல் என்று அரசியல் விஞ்ஞானம் குறிப்பிடுகின்றது. SECEDE என்ற வினைச் சொல்லிலிருந்து SECESSION என்ற கலைச்சொல் பிறந்தது. பிரிந்து செல்லுதல் அல்லது இணைப்பை மீளப்பெறல் என்ற அர்த்தத்தில் அது பயன்படுத்தப்படுகின்றது. 1861 - 65 காலப்பகுதியில் நடைபெற்ற அமெரிக்க உள்நாட்டுப் போர் பிரிந்துபோதல் பற்றிய கற்கைக்கு சிறந்த உதாரணமாக அமைகின்றது. அமெரிக்க சமஷ்டிக் கூட்டமைப்பில் இணைந்திருந்த தென் மாநிலங்கள் பிரிந்து போகும் உரிமையை நிலைநாட்டப் போரிட்டன. சமஷ்டிக் கூட்டமைப்பை உடையவிடாமல் தடுப்பதற்காக வட மாநிலங்கள் எதிர்த்துப் போரிட்டன. தென் மாநிலங்கள் தோல்வி கண்டதால் பிரிந்து போகும் முயற்சி கைவிடப்பட்டது.

பிரிவினை கோரும் இயக்கங்கள் சமஷ்டிக் கூட்டமைப்பு அல்லது சமஷ்டி அடிப்படையிலான அரசமைப்புக்களில் கூடுதலாகக் காணப்படுகின்றன. வித்தியாசங்களைச் சமரசம் செய்வதற்காகவே சமஷ்டி முறை அரசமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. பிரிதலுக்கான கருப்பொருள் ஏற்கனவே அங்கு இருப்பது கண்கூடு. ஒரு நாட்டின் புவியியல் அமைப்பு இணைப்புக்குச் சாதகமாக அமையாவிட்டால் பிரிந்து செல்லுதல் தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாக நடைபெறுகின்றது.



Scanned by CamScanner

# சுய நிர்ணய உரிமை

## THE RIGHT OF SELF DETERMINATION

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் -THE INTERNATIONAL COVENANT ON CIVIL AND POLITICAL RIGHTS முதலாம் சரத்து, முதல் பாகத்தில் சுயநிர்ணய உரிமை பற்றிய வரைவிலக்கணம் தரப்பட்டுள்ளது: "எல்லா மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. அவ்வுரிமை காரணமாக அவர்கள் தங்கள் அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாகத் தீர்மானிக்கின்றனர், தங்கள் பொருளாதார, சமூக, கலாசார மேம்பாட்டை சுதந்திரமாக முன்னெடுக்கின்றனர்''

ARTICLE 1: 1 ALL PEOPLE HAVE THE RIGHT OF SELF-DETERMINATION. BY VIRTUE OF THAT RIGHT THEY FREELY DETERMINE THEIR POLITICAL STATUS, AND FREELY PURSUE THEIR ECONOMIC, SOCIAL AND CULTURAL DEVELOPMENT.

இந்த உடன்படிக்கை 1976 மார்ச்சு 23ஆம் நாள் அமுலுக்கு வந்தது. சுயநிர்ணயக் கோட்பாட்டுடன் அமெரிக்க அதிபர் வூட்றோ வில்சனின் பெயர் பரவலாகத் தொடர்புபடுகின்றது. 1918 இல் இவர் உருவாக்கிய 14 அம்ச அமைதித் திட்டத்தில் சுயநிர்ணய உரிமை பிறப்பெடுக்கின்றது. 1919 இல் நடைபெற்ற அமைதித் தீர்வுகளின்படி அல்பேனியா, அவுஸ்திரியா, செக்கோசுலோவாக்கியா, எஸ்தோனியா, பின்லாந்து, ஹங்கேரி, லற்வியா, லிதுவேனியா, போலாந்து, றொமேனியா, யூகோசுலாவியா ஆகிய நாடுகள் விடுதலை பெற்றன.

அதிபர் வில்சன் நிர்வாகத்தில் இராஜாங்கச் செயலர் பதவி வகித்த றொபேட் லான்சிங் (ROBERT LANSING) அத்தருணத்தில் சுயநிர்ணய உரிமை பற்றிப் பின்வருமாறு கூறினார், "பல நாடுகளில் நிறைவேற்றப்பட முடியாத கோரிக்கைகளுக்கும், பிரச்சனைகளுக்கும் அது வழிவகுக்கும். இச்சொற்றொடர் உருவாக்கப்பட்டதால் குழப்பங்கள் தோன்றும்."

இன்று உலக சமுதாயம் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை வெறுப்புடன் நோக்குகின்றது. 1999 இல் கேம்பிறிஜ் பல்கலைக்கழகம் பதிப்பித்த தனது நூலில் ஆசிரியை வீவா பார்ட்குஸ், பிரிந்துபோதல் தத்துவம் பற்றி "இப்போதிருக்கும் அரசியல் ஒழுங்கு எண்ணற்ற பகுதிகளாக உடைவதைக் குறிக்கும்'' என்றார். - DYNAMIC OF SECESSION BY VIVA BARTKUS, CAMBRIDGE UNIVERSITY PRESS, 1999.

ஆள்புல ஒருமைப்பாட்டுடன் சுயநிர்ணய கோட்பாடு முரண்படுகின்றது. 1960 இன் ஐ.நா தீர்மானம் இல:1514 சுயநிர்ணயக் கோட்பாட்டை அங்கீகரிப்பதோடு ஆள்புல ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தியுள்ளது. "தேசிய மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டை பகுதியாகவோ முழுமையாகவோ பின்னப்படுத்தும் எந்தவொரு முயற்சியும் ஐநா சாசனத்தின் நோக்கத்திற்கும்



Scanned by CamScanner

கொள்கைக்கும் முரணானது" என்று 1514 இலக்கத் தீர்மானம் கூறுகின்றது. வீவா பார்ட்குஸ் சுட்டிக் காட்டுவதைப்போல் 1960ஆம் ஆண்டுக்குப்பின் சுயநிர்ணய கோட்பாட்டின் தொழிற்பாடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

1960 - 61 இல் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் கொங்கோவின் ஒரு பகுதியான கதங்கா (KATANGA) எடுத்த முயற்சி ஐநாவினால் தடுக்கப்பட்டது. நைகீரியாவின் பயாபிறா பிரச்சனையின் போதும் 1966 - 70 ஐநா அதே நிலைப்பாட்டை எடுத்தது. கினி நாட்டின் 1960 இன் முற்பகுதித் தலைவர் செக்கூ தூரே - SEKOU TOURE OF GUINEA - இதுபற்றிப் பின்வருமாறு சொன்னார்: இப்போதுள்ள நாடுகள் தொடர்ந்து தேசங்களாக நிலவும்.

ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பிற்கான ஹெல்சிங்கி மாநாடு 1975 இன் தனது இறுதிச் சட்டத்தின் எட்டாம் பாகத்தில் - PART VIII OF THE FINAL ACT OF THE HELSINKI CONFERENCE ON SECURITY AND COOPERATION IN EUROPE - ஆள்புல ஒருமைப்பாட்டின் மேலாதிக்கம் வலியுறுத்தப்பட்டுள்ளது. சிறுபான்மை இனங்கள் தமது வாழ்வுரிமை என்ற அடிப்படையில் சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டைக் கோரமுடியாது. என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆனால் சர்வதேச உறவுகள் சஞ்சிகை பாகம் பதினைந்தில் அனைத்துலகச் சட்ட நிபுணர் வொல்ப்காங் டான்ஸ் பெக்குருபர் கூறும் கருத்து - INTERNATIONAL RELATIONS, VOL XV, WOLFGANG DANSPECK GRUBER - சற்று வித்தியாசமானதாக அமைகின்றது. "சுய நிர்ணய உரிமையும் தன்னாட்சி உரிமையும் கட்டாயமாக இறைமை நாடுகளின் பிளவுக்கு வழிவகுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதிகாரப் பகிர்வையும் சுயாட்சியையும் கூடுதலாக்கி தீர்வுகாணுவதில் இப்போது அக்கறை காட்டப்படுகின்றது" இப்போதைய இறைமை நாடுகளில் எல்லை மாற்றம் ஏற்படாமல் சுயநிர்ணய உரிமைக்கு நிகரான உரித்துக்களை வழங்க முடியுமென்பது டான்ஸ் பெக்குருபரின் நம்பிக்கை. சுயநிர்ணயக் கோட்பாட்டின் தாக்கத்தை மென்மையாக்கி காலத்தின் தேவைக்கு ஏற்றவிதத்தில் அதைப் பயன்படுத்த முடியுமென்றும் அவர் நம்புகிறார்.

சமஷ்டி அடிப்படையிலான அரசமைப்புக்கள் இருவகைப்படுகின்றன. முதல்வகையில் மாநிலங்கள் படிப்படியாக நெருங்கி வருகின்றன. இந்த வகை சமஷ்டிகள் CENTRIPETAL எனப்படுகின்றன. இரண்டாவது வகையில் மாநிலங்கள் காலப்போக்கில் எட்டச் செல்கின்றன. இவை CENTRIFUGAL சமஷ்டிகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட அரசமைப்பு எந்த வகையானது என்பதை அரசியல் சாசனம் தீர்மானிக்க உதவுகின்றது. முதலாவது வகையின் உதாரணமாக இந்தியாவையும் இரண்டாவது வகையின் உதாரணமாக கனடாவையும் எடுத்துக்காட்ட முடியும்.



Scanned by CamScanner

நவீன இராசதந்திர மற்றும் அரசியல் வளர்ச்சிப் போக்கின் காரணமாக சுயநிர்ணய உரிமையில் இருமுக்கிய அம்சங்கள் இன்று அடையாளம் காணப்படுகின்றன. அவையாவன:

- உள்ளான சுயநிர்ணயம் – INTERNAL SELF-DETERMINATION.
- வெளியான சுயநிர்ணயம் – EXTERNAL SELF-DETERMINATION.

உள்ளான சுயநிர்ணயத்திற்குச் சிறந்த விளக்கமாக எமது தேசியத் தலைவர் ஆற்றிய 2002ஆம் ஆண்டின் மாவீரர்தின உரையின் ஒரு பகுதியை எடுத்துக்காட்டலாம். மேதகு பிரபாகரன் அவர்கள் பின்வருமாறு உரை நிகழ்த்தினார். "தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி, சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாசை. உள்ளான சுயநிர்ணயத்தின் அர்த்த பரிமாணம் இதில்தான் அடங்கியிருக்கிறது".

வெளியான சுயநிர்ணயம் என்பது முற்றுமுழுதாகப் பிரிந்துசென்று தனிநாடாக இயங்குவதைக் குறிக்கும். இதற்குரிய சந்தர்ப்ப சூழலைத் தலைவர் அவர்கள் இவ்வாறு தனது உரையில் விரித்துக் கூறினார், "தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுயாட்சி அதிகாரமுடைய ஆட்சியை நிறுவி, தம்மைத் தாமே ஆளுவதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கக்கூடாது. தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றி தமிழர்களை பிரிந்து செல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்கள தேசத்தின் அரசியல் போக்கில்தான் தங்கியிருக்கின்றது."

## பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள்
## MULTINATIONAL CORPORATIONS

1970 களின் பின் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் வரலாறு காணாத வளர்ச்சி காரணமாக நாடுகளின் தரைப்பரப்பு எல்லைகள் முன்னைய முக்கியத்துவத்தை இழந்துள்ளன. எம்.என்.சி – MNC எனப்படும் இந்தரக நிறுவனங்களின் தலைமைச் செயலகம் ஒருநாட்டிலும் அதனுடைய கிளை நிறுவனங்கள் உலகின் பல பாகங்களிலும் பரவிக்கிடக்கின்றன. தலைமைச் செயலகத்தில் நிர்வாகம் தவிர்ந்த வேறு தயாரிப்புக்கள் நடைபெறுவதில்லை.

அரசுகளின் கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல் இயங்கும் அமைப்புக்களாக எம்என்சிக்கள் அமைகின்றன. தங்களுடைய முதலீடுகளை வேகமாக இடமாற்றம் செய்வது மூலம் பொருளாதார வலுக்குறைந்த நாடுகளின் வீழ்ச்சியை எம்என்சிக்கள் உருவாக்கமுடியும். தொழிலாளர் சம்பந்தமான சட்டங்களை



Scanned by CamScanner

அமுலாக்குவது மிகவும் கடினம். தமக்கு வசதியில்லாவிட்டால் எம்என்சிக்கள் இடம் மாறிவிடுவர். தொழிலாளர்களின் அடிப்படை நலன் பேணுவதில், எம்என்சிக்களின் ஆதிக்கம் காரணமாக, மூன்றாம் உலகநாடுகள் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றன.

ஒரு நாட்டில் நிலைகொண்டுள்ள எம்என்சி இலாபத்தில் இயங்குவதால் அந்த நாட்டிற்கு நன்மை ஏற்படப்போவதில்லை. இலாபத்தை வெளியேற்றும் திறன் அவர்களிடம் உண்டு. இன்ரர்நெற் போன்ற வசதிகள் ஏற்பட்டபின் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. மூன்றாம் உலக நாடுகளின் வருடாந்த வருவாயிலும் கூடுதலான இலாபத்தை எம்என்சிக்கள் ஈட்டுவதால் அவை ஆதிக்க நிலையில் இருக்கின்றன. இதன் காரணமாக எம்என்சிக்களுடன் தகராறுகள் ஏற்படும்போது மூன்றாம் உலக நாடுகள் பின்னடைவை எதிர்நோக்குகின்றன.

எம்என்சிக்களுக்கு இப்போது கெட்டகாலம் ஆரம்பித்துவிட்டது. அமொக்காவின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான என்றொன் கோப்பரேஷன் (ENRON CORPORATION) 2001 இல் வங்குரோத்து அடைந்தது. இந்த நிறுவனத்தின் வீழ்ச்சி காரணமாக 32-42 பில்லியன் டாலர் பெறுமதியான இழப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் எம்என்சிக்களின் வரலாற்றில் இது மிகப்பெரிய இழப்பாகக் கருதப்படுகின்றது. கணக்குப் புத்தகங்கள் வேண்டுமென்றே, பங்குதாரர்களை ஏமாற்றும் நோக்கில் சோடிக்கப்பட்டதன் காரணமாக என்றொன் வீழ்ந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் அரசியல் கட்சிகளுக்கு பெருவாரி தேர்தல் நிதி வழங்கியதாலும் இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் ஒழுங்கு கேள்விக்குரியதாகி விட்டது. இந்த அமைப்புக்களின் இயக்குநர்கள் பெருமளவு பணத்தை கணக்காய்வாளர்களின் அனுசரணையோடு மோசடி செய்துள்ளனர். என்றொனைத் தொடர்ந்து வேறு பல நிறுவனங்களும் இழுத்து மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. தராசு முள்ளின் நடுநிலை வகித்த கணக்காய்வாளர்களை இன்று உலகம் சந்தேகத்துடன் பார்க்கின்றது. பன்னாட்டு வர்த்க நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படும் கட்டத்தில் இப்போது இருக்கின்றன.

சுதந்திரமான, தங்குதடையற்ற உலக வர்த்தகம் நடைபெறுவதாகப் பிரசாரம் செய்யப்படுகின்றது. அனைத்துலக மக்களின் சுபீட்சத்திற்கு சுதந்திர வர்த்தகம் வழிவகுக்கும் என்று கூறப்படுகின்றது. ஆனால் உலக வர்த்தகம் தனிநாடுகளுக்கிடையில் அல்லது தனிமனிதர்களுக்கிடையில் நடத்தப்படு வதில்லை. உலக வர்த்தகம் என்பது 180 பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களுக்கிடையில் நடக்கும் கொடுக்கல்வாங்கலாக பெரும்பாலும் நடைபெறுகின்றன. இந்த நிறுவனங்கள் அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டிஷ், பிரெஞ்சு, ஜேர்மன், சுவிஸ் ஆகிய நாடுகளுக்குச் சொந்தமாக இருக்கின்றன. உலக தானிய வர்த்தகத்தின் 70 வீதமானவற்றை அமெரிக்க நிறுவனங்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன.



Scanned by CamScanner

பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் நிர்வாக அமைப்பு சர்வாதிகார ரகத்தைச் சேர்ந்த முதலாம் உலக நாடுகளின் அதிரடிப் படைகள் என்றும் எம்என்சிக்கள் வர்ணிக்கப்படுகின்றன. அவற்றின் பின்னணியில் முதலாம் உலக நாடுகள் இயங்குகின்றன. இந்த நிறுவனங்களுக்குத் தேவையான பாதுகாப்பையும், இலாபம் ஈட்டும் வழிவகைகளையும் இந்த நாடுகள் வழங்குகின்றன. பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் நலனைக் கருத்தில் கொண்டு மேற்கூறிய நாடுகள் தமது வர்த்தகம் சம்பந்தமான இராசதந்திர நகர்வுகளை மேற்கொள்கின்றன. பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் ஆபத்தை எதிர்நோக்குமாயின் அவற்றின் சார்பில் போருக்குச் செல்லவும் முதலாம் உலக நாடுகள் தயாராக இருக்கின்றன.

தத்தம் நாட்டு பன்னாட்டு பாரிய வர்த்தக நிறுவனங்களுடன் மோதுவதற்கு மேற்குலக நாடுகளும்சரி பிற உலக நாடுகளும்சரி அஞ்சுகின்றன. அரசுகளுடன் நெருக்கமாக இந்த நிறுவனங்கள் உறவாடுகின்றன. தேர்தல் நிதி வழங்குவதன் மூலம் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் தமது நாட்டின் அரசைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. வர்த்தகத்துறையோடு நெருக்கமானவர்கள் அரசில் உயர்பதவி வகிக்கின்றனர். இதனால் அரசியலுக்கும் வர்த்தகத்திற்கும் இடையில் ஒருவகை "விசேட உறவுகள்" நிலவுகின்றன எனலாம்.

பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு உதாரணமாக கொக்கா–கோலா (COCA-COLA) எனப்படும் மென்பான வர்த்தக நிறுவனம் பற்றிப் பார்ப்போம். தென் அமெரிக்காவில் தேயிலைச்செடி போன்றதொரு தாவரம் வளர்கின்றது. இச்செடியின் பெயர் கோக் எனப்படும். இதன் இலையை வாயில்போட்டு மெல்லும்போது பசி இராது, கடினமாக உழைக்கமுடியும். உலர்ந்த இலையிலிருந்து கொக்கேயின் (COCAINE) என்ற சக்திவாய்ந்த போதை பொருள் தயாரிக்கப்படுகின்றது. இப்போதைப் பொருள் 'கோக்' (COKE) என்ற சுருக்கமான பெயராலும் அழைக்கப்படுகின்றது. ஒரு வீதம் கொக்கேயின் போதைப் பொருளும் வேறு இரகசிய மூலப்பொருள்களும் கலந்து கொக்கா கோலா தயாரிக்கப்படுகின்றது. கொக்கா கோலா கோக் என்றும் அழைக்கப்படுவதுண்டு.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் ஜேர்மன் பாசிசத்தை எதிர்த்துப் போராடும் அமெரிக்கப் பானமாக கொக்கா–கோலா விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் உண்மை வித்தியாசமானது. ஜேர்மன் தலைநகரில் நிலைகொண்டிருந்த கொக்கா கோலாவின் விற்பனை முகவர், மாக்ஸ் கீத் (MAX KEITH) ஜேர்மன் நாசி அரசுடன் நெருங்கி உறவாடித் தனது நிறுவனத் தயாரிப்பை பெருமளவில் விற்பனை செய்தார். ஜேர்மன் படைகள் கைப்பற்றிய பிரான்சு உட்பட்ட ஐரோப்பிய நாடுகளிலும் இவர் எல்லாவகை மென்பானங்களுக்கும் விற்பனை முகவராக நியமிக்கப்பட்டார். ஆனால் திடீரென்று கொக்கா கோலா தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்கள் அமெரிக்காவில் இருந்து வருவது நின்று போய்விட்டது.



Scanned by CamScanner

இதன்பின் ஐரோப்பாவில் கிடைத்த மூலப்பொருள்களைப் பயன்படுத்தி மாக்ஸ் கீத் 'பன்ரா' (FANTA) என்ற மென்பானத்தைத் தயாரித்தார். இன்றுவரை பன்ராவுக்கு சர்வதேசப் புகழ் உண்டு. உலகின் அதிசக்திவாய்ந்த பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான கொக்கா கோலா அமெரிக்காவுக்காக உளவு பார்க்கும் பணியிலும் ஈடுபடுகின்றது. கொக்கா கோலா நிறுவனத்திற்கு இருக்கும் உயர்மட்ட ஆதரவுக்கு உதாரணமாக மே 12, 1943 இற்குப்பின் நடந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். இத்திகதியில் வட ஆபிரிக்காவில் நிலை கொண்டிருந்த ஜேர்மன் - இத்தாலியப் படைகள் லெப்.ஜென்.ஐசன் ஹோவர் தலைமையிலான அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்தன. உடனடியாக எட்டு கொக்கா - கோலா தொழிற்சாலைகளை வட - ஆபிரிக்காவில் நிறுவும்படி ஐசன் ஹோவர் (பிற்கால அமெரிக்க அதிபர்) கட்டளை பிறப்பித்தார்.

நோய்களைக் குணப்படுத்தும் மேற்கு நாட்டு மருந்துகளைத் தயாரிக்கும் உலகின் மிகப்பெரிய நிறுவனமாக 'கிளாக்சோ, சிமித் கிளைன்' (GLAXO, SMITH KLINE) என்ற அமைப்பு இடம்பெறுகின்றது. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இதில் பணியாற்றுகின்றனர். இதன் வருடாந்த வருமானம் 26.3 பில்லியன் அமெரிக்க டாலர்கள். எயிட்ஸ் நோய்க்கான மருந்துகளை இந்த நிறுவனம் மிகக் கூடுதலாகத் தயாரிக்கின்றது. இந்த மருந்துகளின் விலையைக் குறைக்கும்படி பல நாடுகளும் தொண்டர் அமைப்புக்களும் மன்றாடிக் கேட்டும் அது உறுதியாக மறுத்துவிட்டது.

## அரசசார்பற்ற நிறுவனங்களை வகைப்படுத்தல்
## NGO CLASSIFICATION

என்ஜி ஓக்கள் செயற்படாத நாடுகள் கிடையாது என்பது ஆய்வாளர்கள் முடிவு. சர்வ வியாபியாக அவை நீக்கமற நிறைந்து காணப்படுகின்றன உலகில் எத்தனை என்ஜிஓக்கள் செயற்படுகின்றன என்பதைக் கணக்கெடுப்பது மிகவும் கடினம், இயலாது என்பதுதான் உண்மை.

நால்வகை அரச சார்பற்ற நிறுவனங்கள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன:

1. மேம்பாட்டு நிதி உதவி, பொருளுதவி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்கும் என்ஜிஓக்கள். இவை ஆங்கிலத்தில் டென்கோஸ் என்று அழைக்கப்படுகின்றன.
   DEVELOPMENT+ NGOs=DENGOS.

2. நன்கொடை வழங்கும் நிறுவனங்கள். நிதியாகவும் பொருளாகவும் வழங்குவதையே இந்த ரகம் தனது குறியாகக் கொண்டுள்ளது. இவை டொன்கோஸ் என்று அழைக்கப்படுகின்றன.
   DONATION+ NGOs =DONGOS.



Scanned by CamScanner

3. அனைத்துலக மட்டத்தில் கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இன்னுமோர் வகைப்படும். இவை இன்கோஸ் என்று அழைக்கப்படுகின்றன.
INTERNATIONAL+ NGOs =INGOS.

4. உதவிகளைப் பெறுவதற்கென்றே உருவாக்கப்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் நான்காவது வகையாக அமைகின்றன. இவை றென்கோஸ் எனப்படுகின்றன.
RECEIVER+NGOs=RENGOS.

உலக வங்கி/ நாணய நிதியம், ஆசிய மேம்பாட்டு வங்கி போன்ற கடனுதவி வழங்கும் நிறுவனங்கள் போலி றென்கோசுகளை அடையாளம் காண்பதற்காக டென்கோசுகளின் உதவியை நாடுகின்றன. ஐநாவின் பொதுநல அலகுகள் அண்மைக்காலமாக டென்கோசுகளின் நெருக்கமான உறவுகளைப் பேணுகின்றன. இதனால் அவற்றின் முக்கியத்துவம் உயர்ந்துள்ளது. சோவியத் ஒன்றியம் நிலவிய காலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு என்ஜிஓக்கள் இருவகையும் தடைசெய்யப்பட்டிருந்தன. இன்றைய ருஷ்யாவில் சிறிதும் பெரிதுமாகப், போலியும் அசலுமாக 300,000 என்ஜி ஓக்கள் இருப்பதாக மதிப்பிடப்படுகின்றது.

**நவீன அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மூன்று இலக்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன:**

1. அவை வறிய மக்களுக்கு உதவும் நடவடிக்கைகளைத் தமதாக்கியுள்ளன. அதாவது வறிய மக்கள் நலனைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளன. இவை வெளியார் நிதி உதவியுடன் செயற்படுவதால் உதவி வழங்கும் நாட்டின் நலனுக்குப் பொருத்தமான திட்டங்களை வகுத்துள்ளன. இயங்கும் நாட்டின் அடையாளங்களை அழிப்பதிலும் குறியாகவுள்ளன.

2. முதலாளித்துவ நாடுகளின் நீண்ட கரமாகச் செயற்படுகின்றன. வெளிநாடுகளின் மதம், கலாசாரம், வாழ்க்கைமுறைப் பரப்பலுக்குத் துணைபோகின்றன.

3. உண்மையான சேவை நோக்குடன் செயற்படுபவை மூன்றாம் வகையாக அமைகின்றன.



Scanned by CamScanner

## சமுதாய ஆராய்ச்சியும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பும் SOCIAL RESEARCH &OPINION POLLS

போதைப் பொருள் பாவிப்பு, பாலியல் நோய்கள், அடிமை வர்த்தகம், நிதி மோசடிகள் போன்ற சமுதாயப் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்குப் பொருத்தமான திட்டங்களை வகுப்பதற்கு இவை சம்பந்தமான புள்ளி விவரங்கள் திரட்டப்படவேண்டும். புள்ளிவிவரங்கள், சமுதாய ஆராய்ச்சிப் பாதைகள் ஊடாகவும் மக்கள் மத்தியில் நடத்தப்படும். கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு மூலமாகவும் திரட்டப்படுகின்றன. இவற்றைவிட வேறு திருப்திகரமான உபாயங்கள் இதுவரை உருவாக்கப்படவில்லை. உள்நாட்டு இரகசியங்கள் வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாது என்ற காரணத்திற்காக சில நாடுகள் புள்ளிவிவரம் திரட்டும் முயற்சிகளைத் தடுக்கின்றன. இது மிகவும் ஆபத்தனா நடைமுறை.

பெரிய அனர்த்தங்கள் நாட்டில் நடக்கும்போது உடனடி நிவாரணம் வழங்குவது, புள்ளிவிவரத் தரவுகள் இல்லாத பட்சத்தில் கடினமாகின்றது. தரவுத் திரட்டலுக்குத் தடை விதிப்பது நாட்டையும், மக்களையும், தடைவிதித்த ஆட்சியாளர்களையும் இக்காட்டான நிலைக்கு இட்டுச்செல்லும். இதற்காக தரவு திரட்டும் நோக்குடன் உள்வரும் எல்லாவகை தொண்டர் அமைப்புக்களுக்கும் அனுமதி வழங்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சில என்ஜியோக்கள் வெளிப்படையாக ஒரு நோக்கையும் பிறிதோர் உள்நோக்கையும் கொண்டிருக்கின்றன. உள்நோக்கின் போர்வையாக வெளிநோக்கு அமைகின்றது. இதை இனங்காண்பது கடினம் ஆனால் உசாராக இருப்பது அவசியம்.

தொண்டர் அமைப்புக்களின் கைகளில் பெருமளவு பணம் புரளுகின்றது. இப்பணத்தின் பெரும்பகுதி ஆடம்பரச் செலவுகளிலும் சுய தேவைகளைப் பூர்த்திசெய்யும் வீண் விரயங்களிலும் முடக்கப்படுகின்றன. இந்தவகை என்ஜியோக்கள் தங்கள் வீண் விரயங்களை மறைப்பதற்காக பெரும் பொருட்செலவில் கணக்குப் புத்தகங்களைச் சோடிப்பதில் கைதேர்ந்த கணக்காய்வாளர்களைக் கூலிக்கு அமர்த்துகின்றன. இதனால் உண்மை வெளியுலகை எட்டுவதில்லை. ஐநாவின் விசேட அலகுகளில் பணிபுரிவோர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் இது முதலிடம் வகிக்கின்றது.

தொண்டர் அமைப்புக்கள் தங்கள் மாநாடுகளை ஐந்து நட்சத்திர விடுதிகளில் மிகவும் ஆடம்பரமாக நடத்தவேண்டிய காரணம் தெரியவில்லை. இந்த அமைப்புக்களின் பணியாளர்கள் தம்மை தொண்டர்களாக நினைப்பதில்லை. தமது மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு இவர்கள் பொதுப் பணிக்கு வந்துள்ளனர். இவர்கள் வெளியிடும் அறிக்கைகளும் சாதனைப் பட்டியல்களும் உண்மைக்குப் புறம்பானவையாகக் காணப்படுகின்றன. அனைத்துலக அரசியல் மற்றும் இராசதந்திர மட்டத்தில் என்ஜீயோக்களுக்கு நிலையான இடம் கிடைக்க வேண்டுமாயின் அவை தமது நடைமுறைகளை மாற்றியமைக்க வேண்டும்.



Scanned by CamScanner

# ஆசியப் பெறுமானங்கள்
## ASIAN VALUES

தெற்கு ஆசியாவின் இரு முக்கிய நாடுகளின் தலைவர்களான மகாதீர் முகம்மதுவும் லீ குவான் யூவும் ஆசியப் பெறுமானங்கள் என்ற பெயருடன் ஒரு புதிய அரசியல் தத்துவத்தை முன்வைத்துள்ளனர். உண்மையில் இது சீனாவின் பழம்பெரும் சிந்தனையாளர்கள் முன்வைத்த சமுதாய அமைப்பு பற்றிய கருத்துக்களின் புதியவடிவம் என்றே சொல்லவேண்டும். ஆசியப் பெறுமானங்கள் என்ற அரசியல் தத்துவம் மேற்கு நாடுகள் முன்வைக்கும் தனிமனிதர் சுதந்திரத்தை வலியுறுத்தும் சித்தாந்தங்களுக்கு முரணானதாகும். இதனால் ஆசியப் பெறுமானங்கள் மனித உரிமை விழுமியங்களை நிராகரிக்கின்றன என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தனிமனிதர் சுதந்திரத்திலும் பார்க்க ஒரு சமுதாயத்தின் பொது நன்மைதான் மேலானது என்று ஆசியப் பெறுமானக் கோட்பாடு வலியுறுத்துகின்றது.

விசாரணையின்றித் தடுத்துவைக்கும் சட்டங்களை சிங்கப்பூர், மலேசியா ஆகிய இருநாடுகளும் கொண்டுள்ளன. "சிங்கப்பூர் ஒரு கொன்பூசியன் சமுதாயம்" என்கிறார். சிங்கப்பூரின் பிதாமகர் லீ குவான் யூ. விசாரணையின்றித் தடுத்து வைக்கும் சட்டத்தை அகற்றும்படி அமெரிக்கா கேட்டபோது சிங்கப்பூர் அதை மறுத்துவிட்டது. கொன்பூசியன் சிந்தனை சீனா, ஜப்பான், கோரியா வியற்நாம் ஆகிய நாடுகளில் காணப்படுகின்றது. இவை சீன எழுத்துக்களை தமது மொழியில் பயன்படுத்துவதோடு கொன்பூசியன் கருத்துக்களையும் தமது இலக்கியத்தில் வெளிப்படுத்துகின்றன. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 20 மில்லியனுக்கும் மேலான சீன வம்சாவழியினர் வாழ்கின்றனர்.

மேற்கு நாடுகளின் தனிமனிதர் பெறுமானங்களுக்கும் கொன்பூசியன் கருத்துக்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. தனிநபர் ஒரு குடும்பத்தின் அங்கத்தவர், குடும்பம் பெரும் சமுதாயக் குடும்பத்தின் அங்கம், குடும்பத்தின் அங்கத்தவர், குடும்பத்தின் இடத்தைப் பிடிக்க இடமளிக்கப்பட மாட்டாது, இடமளிக்கவும் கூடாது. இது கொன்பூசியன் தத்துவத்தின் சாரம்சம், இதில் குடும்பத்திற்கும் அது இடம்பெறும் சமூகத்திற்கும் முதலிடம் வழங்கப்படுகின்றது. தனிநபர் ஒரு பொருட்டல்ல.

மேற்கின் சிந்தனை வித்தியாசமானது. தனிநபர் முக்கியமானவன். அவனுடைய உரிமைகளும் அவனுடைய பாதுகாப்பும் மிகவும் முக்கியம். அரசு இதை உறுதி செய்யவேண்டும். குடும்பத்தின் கடமைகளையும் பொறுப்புக்களையும் அரசுதான் கவனிக்கவேண்டும். இரண்டிற்கும் இடையிலுள்ள அடிப்படை வித்தியாசத்தை இதிலிருந்து உணரலாம். இந்த அடிப்படையில் சட்டங்கள் இயற்றப்படுகின்றன, அரசியல் சாசனங்கள் உருவாக்கப்படுகின்றன.



Scanned by CamScanner

சமுதாயத்தை ஒழுங்காகவும், சீராகவும், கட்டுப்பாட்டுடனும் இயங்க வைப்பதற்கு குடும்பத்தின் உதவியை கொன்பூசியன் தத்துவத்தின் அடிப்படையில் இயங்கும் அரசுகள் எதிர்பார்க்கின்றன. சேமிப்பு, கடுமையான உழைப்பு, பெற்றாருக்கு மதிப்பு, வயதிற் கூடியோருக்கும் சமூக தலைவர்களுக்கும் மரியாதை, கல்வி மற்றும் தொழில் ஈடுபாடு, நாட்டின் முன்னேற்றத்தில் கரிசனை போன்ற விழுமியங்களைக் கொன்பூசியன் சமுதாயம் இன்றும் வலியுறுத்துகின்றது.

சீன மொழியில் 'லுவான்'- எனப்படும் குழப்பத்தை சீன மக்கள் வெறுக்கின்றனர். லுவான் தமது வரலாற்றில் பல வீழ்ச்சிகளையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் நம்புகின்றனர். சீனத் தலைவர்கள் மேற்குலகச் சிந்தனைகளை உள்வாங்குவதற்குக் காட்டும் தயக்கம் லுவான் சம்பந்தமான அச்சம்தான் முக்கிய காரணம். தாம் நன்கு அறிந்து வைத்திருக்கும் கொன்பூசியன் தத்துவத்தை நன்கு அறியாததொன்றுக்காக விட்டுக்கொடுக்க சீனத் தலைவர்கள் தயாரில்லை.

சட்டம் ஒழுங்கைச் சரிவரப் பேணும் சமுதாயத்தில் சுதந்திரம் வாழும் என்பது ஆசியப் பெறுமானங்களில் மிக முக்கியமான கொள்கை. தனி மனிதர்கள் குழப்பம்செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். சீரான சமுதாயத்தில் எல்லோருக்கும் அமைதியும் பொதுநன்மையும் கிடைக்கின்றது. இப்படியானதொரு சமுதாயத்தில் தொழில்வளம் பெருகும், பொருளாதார வளர்ச்சி ஏற்படும், என்பது இக்கோட்பாட்டாளர்கள் நம்பிக்கை. ஆசியப் பெறுமானங்கள் பற்றிய விழிப்புணர்வு தெற்குஆசிய நாடுகளின் எல்லையைக் கடந்து ஆபிரிக்கா வரை சென்றுள்ளது. ஆபிரிக்க நாடுகள் இணைந்து தயாரித்த ஆபிரிக்க சாசனத்தில்-THE AFRICAN CHARTER- தனிமனிதர் உரிமைகளிலும் பார்க்க சமுதாயத்தின் உரிமைகளுக்குத்தான் மேலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆசியப் பெறுமானங்களை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

1. தனிமனிதரிலும் பார்க்க சமுதாயம்தான் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்தது.
2. தனிமனிதர் சுதந்திரத்திலும் பார்க்கச் சட்டம், ஒழுங்கு, சமுதாயத்தின் சீரான இயக்கம் பன்மடங்கு முக்கியமானது.
3. ஒழுக்கத்திற்கும் சமுதாய நீதிக்கும் முதலிடம்.
4. அரச நிர்வாகத்திற்கும் தலைமைக்கும் உரிய மரியாதை.
5. குடும்ப விசுவாசம், குடும்பத் தலைவர்களுக்கு அடங்கி நடத்தல், வழிகாட்டலை ஏற்றல்.
6. அரசும், தொழிற்துறையும் குடும்பத்தின் பங்காளிகள்.
7. சேமிப்பு, கல்வி, நாட்டுச் சேவை, சமுதாய நோக்கு என்பனவின் முக்கியத்துவம் அறிந்த வாழ்வு,
8. திடீர் அரசியல் மாற்றங்கள் தேவையற்றவை. தேவையான மாற்றங்கள் குழப்பத்திற்கு இடமளிக்காமல் அமைதி முறையில் முன்னெடுக்கப்படவேண்டும்.



Scanned by CamScanner

கொன்பூசியஸ் (கி.மு 551 - 479) சீனாவின் தலைசிறந்த மெய்யியலாளராகக் கருதப்படுகிறார். இவர் ஒரு மதத்தை உருவாக்கவில்லை. ஆனால் அவருடைய போதனைகளுக்கு மதத்தின் வலிமை உண்டு. மண்ணில் எப்படி நன்கு வாழலாம் என்று கூறுவதையே அவர் தன்னுடைய கருப்பொருளாகக் கொண்டுள்ளார்.

சீன மரபுச் சிந்தனைகளை கொன்பூசியஸ் நான்கு புத்தகங்களாக வடித்தார். தனது சொந்தக் கருத்துக்கள் அடங்கிய ஐந்தாவது புத்தகத்தையும் இவர் ஆக்கினார். இவை சீனச் சிந்தனைப் பெட்டகங்களாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. குடும்பம் சமூகமாகி, ஊராகி, நாடாகி வளர்கின்றது, குடும்பப்பற்று நாட்டுப்பற்றாகின்றது என்பது அவருடைய கருத்துக்களில் மிகவும் முக்கியமானதொன்று.

கொன்பூசியசின் பிரதான சீடரான மெங் - சூ (கி.மு 372 - 289) தனது குருவின் கருத்துக்களைச் சீன ஆட்சியாளர்களுக்கு விளக்கிக் கூறினார். மக்களின் சமுதாய மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு உழைக்கவேண்டிய தார்மீகக் கடமை ஆட்சிபீடத்தில் இருப்போர்களுக்கு உண்டென அவர் வலியுறுத்தினார். அமைதியை நாட்டில் நிலைநாட்டுவதற்கு இதுதான் சிறந்தவழி என்பது மெங் - சூவின் நிலைப்பாடு.



Scanned by CamScanner